20482

குமரகுருபரசுவாமிக ளியற்றிய

# மதுரைக் கலம்பகம்.

இது,

கும்பகோணம்காலெஜ் தமிழ்ப்பண்டிதர்

திருவல்லிக்கேணி

வைத்தமாநிதி - முடும்பை -

சடகோபராமாநுஜாசாரியர்

இயற்றிய உரையுடன்

இரண்டாம் பதிப்பு.

சென்னை

கணேச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸௌம்ய வருஷம்.

விலை அணா ௮.

# குமரகுருபரசுவாமிகள்.

மதுரைக்கலம்பகநூலாசிரியராகிய குமரகுருபரசுவாமிகள், பாண்டிய நாட்டில், தாமிரபர்ணிநதிக்கரையிலுள்ளதும் திருநெல்வேலியைச்சார்ந்தது மாகிய ஸ்ரீவைகுண்டமெனவழங்குகிற கைலாசபுரத்தில், சைவவேளாளர் குலததில், சற்றேறக்குறைய இருநூற்றெண்பது வருஷங்களுக்குமுன், சண்முகசிகாமணிக்கவிராயரென்பவரது வேண்டுகோளுக்கு இரங்கிய திருச்செந்தூர்முருகக்கடவுளினது திருவருளினால், அவர்மனைவியாராகிய சிவகாமசுந்தரியாரிடம் பிறந்தவர்.

இவர் ஐந்துபிராயம்வரையில் அழுவது பேசுவது ஒன்றும் இல்லாதிருந்து, பின்பு அம்முருகக்கடவுளின் பெருங்கருணையினாற் பேசுந்திறம் பெற்று, உடனே திருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பாவென்னும் பிரபந்தத்தைப் பாடினார்.

இவர் இளமையிலேயே இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தில் விருப்பமுற்றுத் திருசசெந்தூர்முருகக்கடவுளைத் தரிசனஞ்செய்துகொண்டு அத்தலத்தில் வசித்திருந்தார். இருக்குநாட்களில் ஒருநாள் தமக்கு ஞானாசாரியர்கிடைக்கத திருவருள்புரியுமாறு அக்கடவுளைப் பிரார்ததிக்க, கடவுள் 'நீ இவ்விடம்விட்டு வடதிசைநோக்கிச செல்லுக; செல்லுகையில் எவரிடம் உன்வாக்குத் தடைப்படுகிறதோ, அவரையே ஞானாசிரியராகக் கொள்க' என்று அசரீரிவாக்குமூலமாக அனுக்கிரகித்தனர். அங்ஙனமே இவர், செந்தூரை விட்டு வடக்குநோக்கிப் பிரயாணம்புறப்பட்டுத் திருப் பரங்குன்றத்தில் வந்து தங்கினர்.

அப்பொழுது அக்காலத்தில் மதுரையில் அரசுசெலுத்திவந்த திருமலைநாயகரது சொப்பனத்தில் மதுரை அங்கயற்கண்ணம்மை எழுந்தருளி, சுவாமிகள் தம்விஷயமாகப்பாடியுள்ளபிள்ளைததமிழ்ப்பிரபந்ததைத் தமது சந்நிதியில் அரங்கேற்றுவிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டருள, உடனே அவர் விழிதது எழுந்து ஆனந்தித்துத் தமதுபரிவாரங்களுடன் பரங்குன்றததுச் சென்று சுவாமிகளைக்கண்டு வணங்கி அவரையும் அவர்பாடியுள்ள மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழையும் யானையின்மேல் ஏற்றி நகர்வலஞ்செய்வித்து மீனாக்ஷியம்மைசந்நிதியில் அந்நூலை அரங்கேற்றுவித்துச சுவாமிகளுக்குச சுவர்ணாபிஷேகம்முதலிய பலஉபசாரங்களைச் செய்து யானை குதிரை சிவிகைகளையும், குடை கொடி முதலிய பலவிருதுகளையுங் கொடுத்தனர்.

அதன்பின் திருமலைநாயகர்முதலியோர்வேண்டுகோளின்படி மீனாக்ஷியம்மைகுறம், மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம் என்னும் நூல்களை அத்தலததி லிருந்து இயற்றினா.

அப்பால் மதுரையை அகன்று மற்றும்பல இடங்களிலுள்ள அரசர்களையும் மடாதிபதிகளையுங் கண்டு தமதுகல்வித்திறத்துக்கு மெச்சி அவரவர்கள் வழங்கிய விருதுகளையும் பெற்றுத் திருவாரூரையடைந்து தியாகேசப் பெருமான்மீது திருவாரூர்நான்மணிமாலை யென்னும் பிரபந்தத்தைப் பாடி முடித்தார்.

அதன்பின்பு, தருமபுரமடாலயத்திற்குசசென்று அங்கே அக்காலத்திற் பண்டாரசந்நிதிகளாய் வீற்றிருந்த ஸ்ரீமாசிலாமணித்தேசிகரது திரு

முன்பே. தம்வழக்கப்படி திண்டுமுதலியன இட்டுக்கொண்டு உத்தரீயத்தைத் தோளில் தரித்துக்கொண்டு ஆசனத்தின்மீதிருந்து, அவர் கேட்குங் கேள்விகள் பலவற்றிற்கும் ஏற்ற விடைகள் கொடுத்துவந்தார். அப்பொழுது அவர் இறுதியில் திருத்தொண்டர்பெரியபுராணத்தில் ஓர் அருமைத் திருவிருத்தத்தை எடுத்துக்கொடுத்துப் பொருள்வினவ, அதற்குப்பொருள் சொல்ல அறியாது குருபரர்வாக்குத் தடைப்பட்டது. உடனே முருகக் கடவுள் அனுக்கிரகத்தின்படி வாய்த்ததென்று எண்ணி அவர் அச்சமும் மகிழ்ச்சியும் ஒருங்கேபெற்றுப் புளகாங்கிதராய் ஆசனமுதலியவற்றைத் தாமே எடுத்தெறிந்துவிட்டு உத்தரீயத்தை இடையிற்கட்டிக்கொண்டு தேசிகரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தமக்கு ஞானாசாரியராக வேண்டுமென்று பலவாறு வேண்டி, அதற்கு அரிதின் இசைந்த அவரது ஆஜ்ஞைப்படி சிதம்பரத்துக்குச் செல்லும் வழியிலே, திருப்புள்ளிருக்குவேளூரை அடைந்து அங்கு உள்ள முத்துக்குமாரசுவாமி நியமித்து அடியெடுத்துக்கொடுத்தபடி அவர்மீது ஒரு **பிள்ளைத்தமிழ்** பாடி அக்கடவுளது சந்நிதியில் அரங்கேற்றிச் சிதம்பரதலத்தை யடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வசிக்கும்நாளில் **சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மையிரட்டைமணிமாலை** யென்னும் நூல்களை இயற்றி அங்குஅரங்கேற்றி, அவ்வூரில் ஒருமண்டலகாலம் இருந்தபின்னர் மீண்டு தருமபுரத்தைஅடைந்து மாசிலாமணித்தேசிகர்மீது **பண்டாரமும்மணிக்கோவை** யென்னும் பிரபந்தத்தைப் பாடி அவர் சந்நிதானத்தில் அரங்கேற்றி, அவரிடத்து ஞானோபதேசமும் காஷாயவஸ்திரம் முதலிய துறவுக்கு உரிய சின்னங்களும் பெற்று, தமக்கு முன் ஆங்காங்குப் பரிசு ஆகக்கிடைத்த திரவியங்களனைத்தையுந் திருமுன்காணிக்கையாக ஆய்வாசிரியர்முன்னிலையில் வைத்து ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்க, அவர் 'இத்திரவியங்களைக்கொண்டு காசியிற் சென்று தருமம்புரிக' எனக் கட்டளையிட்டனர்.

அதனை இவர் சிரமேற்கொண்டு பிரஸ்தானமாகி இடையிலுள்ள பலசிவஸ்தலங்களிலுஞ் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு காசியையடைந்து கங்கையில் நீராடி விசுவநாதரை விசாலாக்ஷியம்மையோடுந் தரிசித்துக் **காசிக்கலம்பகம்** என்னும் பிரபந்தத்தைப் பாடினார்.

பின்பு டில்லிக்குச்சென்று பாதுஷாவைக்கண்டுபேசிக் காசியில்தருமமியற்றுதற்குவேண்டும் இடம்பெறவிரும்பி, அவனுக்குஉரிய இந்துஸ்தானி பாஷையைத் தமக்குத்தெரிவிக்கும்படி சரசுவதியின்மீது **சகலகலாவல்லிமாலை** என்னும் நூலைப் பாடிக் கலைமகள்கடாக்ஷத்தால் அப்பாஷையை அறியப்பெற்றுஅரசனைக்கண்டு அவனுக்குத்தமதுமகிமையைப்புலப்படுத்திப் பல பிரசங்கங்கள்செய்து அவனைத் தம்வசப்படுத்தி அவனுத்தரவுபெற்றுக் காசியையடைந்து அங்கே '**குமாரசாமிமடம்**' என இப்பொழுது வழங்குகிற பெரியமடாலயத்தையுந் திருமலைநாயகர்சத்திரத்தையுங் கட்டுவித்து, தாம் காடுகெடுத்துக் கண்டு வணங்கிப் பூசித்த கேதாரநாதருக்கும் ஆலயமமைப்பித்துச் சிவபூசையும் அடியார்பூசனையும் அந்நதானம்முதலிய தருமங்களுஞ் செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்து சிவபதம் அடைந்தனர்.

இவர்கைலைக்கலம்பகம் என்னும் ஒருநூலுஞ் செய்திருப்பதாகச் சிலர் கூறுவர்.

இவர் தம்பியார்பெயர், குமாரகவிகள் என்பதாம்.

ஸ்ரீ

# மதுரைக்கலம்பகம்.

மதுரையினது கலம்பகம் என விரியும்; இது, ஆறும்வேற்றுமைப் பொருளில் தொக்கு நின்ற தொகைநிலைத் தொடர்மொழி: விஷயமாகவுடைமை, வேற்றுமைப்பொருளாகிய சம்பந்தம்; விஷ்ணுபுராணம், விநாயகரகவல் என்பவற்றிற்போல:இனி, இத்தொடர்மொழியை இரண்டனுருபும்பொருளும் உடன்தொக்க தொகையாகவுங் கொள்ளலாம். மதுரை என்பது, பாண்டியநாட்டிலுள்ளதும் தன்பெயர்கேட்டமாத்திரத்தில் முத்திதருந் தன்மையது மாகிய தொரு தலம்; குலசேகரனென்னும் பாண்டியன் காடுகெடுத்து நகராக்கி அந்நகரத்திற்குச் சாந்திசெய்யக்கருதியபொழுது சோமசுந்தரக்கடவுள் திருவுளத்தறிந்து தமது திருச்சடையிலணிந்த சந்திரனிடத்தினின்றும் அமிருதத்தை உகுக்க அவ்வமுதஞ் சென்று அந்நகர்முழுதும் பரவிச்சாந்திசெய்து மதுரமயமாக்கியதனால், மதுரையெனப் பெயர்பெற்றது: இதனை "மணிமலர்த் தாமரோன் மாளிகைதனக்கம் மாநகர்வடகுணபாற்கண்,டணிநகர்சாந்திசெய்வதுகுறித்தா னண்ணலாரறிந்திது செய்வார்", "பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமுதுகுத்தன ரதுபோய்ச், சின்மயமான தம்மடி யடைந்தார்ச் சிவமயமாக்கிய செயல்போற், றன்மயமாக்கி யந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர, நன்மய மான தன்மையான் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்" என்னுந் திருவிளையாடற்புராணத்துச் செய்யுட்களால் அறிக.

கலம்பகமாவது - ஒருபோகும் வெண்பாவும் கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முதலிற் கூறி, புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் இப்பதினெட்டுறுப்புக்களும் காலத்தால் மருவிய பிச்சியார் கொற்றியார் இடைச்சியார் வலைச்சியார் முதலியனவும் இயையுமாறு, மருட்பா ஆசிரியப்பா கலிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை முதலியவற்றால், இடையிடையே வெண்பாவுங் கலித்துறையும் மடக்குடைச் செய்யுளும் விரவிவர, அந்தாதித்தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால், தேவர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும் அமைச்சர்க்கு எழுபதும் வணிகர்க்கு ஐம்பதும் வேளாளர்க்கு முப்பதுமாகப் பாடுவதொரு பிரபந்தம்; இக்கலம்பகவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கம் முதலியவற்றிற் காண்க: ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பதனால் 'விருந்துதானும் பழங்கதைமேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரத் தொடுக்கப்படுந் தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இக்கலம்பகம், அங்ஙனங் கூறிய விருந்தாமென்றுணர்க; இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். எனவே, திருமதுரை யென்னுந் திருப்பதியின் விஷயமாகப் பாடியதோர் பிரபந்தமென்று பொருள்; அத்திருப்பதியில் திருக்கோயில்கொண்டு மீனாட்சியம்மையோடு எழுந்தருளியிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளைப்பற்றிப் பாடியதோர் நூலென்பது கருத்து.

## காப்பு.

*காப்பு - காத்தல்; அது - இங்கு, காக்கின்ற கடவுள் விஷயமான வணக்கத்துக்குத் தொழிலாகுபெயர்: ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின்விஷயமாகச் செய்யுந் தோத்திர மென்பது கருத்து. இக்காப்பு, தம்மைச்சரணமடைந்தவர்கள் தொடங்குந் தொழில்களுக்கு வரும் விக்கினங்களை [இடையூறுகளை]ப் போக்குதலாலும் தம்மையடையாது அகங்கரித்தவர்களுக்கு விக்கினங்களை ஆக்குதலாலும் விக்கினேசுவரரென்னுந் திருநாமம் பெற்றுள்ளவரும் பரமசிவனது மூத்த திருக்குமாரருமான ஸ்ரீவிநாயகமூர்த்தியைப் பற்றியதென அறிக.*

> புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்
> தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணலர் தூய்
> வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
> சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.

(இதன்பொருள்) சித்தி விநாயகன் - சித்திவிநாயகக்கடவுளது, சே அடி-சிவந்த திருவடிகளை, தனி - தனியே, தண் அலர் தூய் - குளிர்ச்சியான புஷ்பங்களையிட்டு அருச்சித்து. வந்திப்பதும்-வணங்குவதும், வாழ்த்துவதும்-துதிப்பதும், முடி தாழ்த்து நின்று - தலைவணங்கி நின்று, சிந்திப்பதும் - தியானிப்பதும், அன்றி - (ஆகிய இவையே) அல்லாமல்,—புந்தி தடத்து - மனமாகிய இடத்திலே, புலம் களிறு - ஐம்புலன்களாகிய யானைகள், ஓட - அஞ்சியோடும்படி, பிளிறு - கர்ச்சிக்கின்ற, தொந்தி தந்திக்கு - பெருவயிற்றையுடைய யானைமுகக்கடவுளாகிய அவ்விநாயகரைக் குறித்து, தந்தை தமிழ்க்கு உதவு என்பது - '(உமது) தந்தையாகிய பரமசிவன் விஷயமாகப் பாடுந் தமிழ்ப்பிரபந்தத்துக்கு உதவிசெய்யும்' என்று பிரார்த்திக்க வேண்டுவது, என் - ஏன்? [வேண்டுவதில்லை யென்றபடி]; (என்றவாறு.)

மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களாலுந் தம்மை வழிபட்ட மெய்யடியார்களுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அவர்கள் கேளாமுன்னமே கருத்தையறிந்து கொடுத்து அருள்செய்கின்ற விநாயகமூர்த்திக்கு அவரது தந்தையைப்பற்றிப் பாடுந் தமிழ்நூலுக்கு உதவிசெய் என்று வேண்டுவது மிகையாம் என்பது கருத்து.

புந்தி - புத்தி; இது இங்கே இலக்கணையால் மனத்தை உணர்த்திற்று. பின்பு 'களிறு,' 'தந்தி' என்றவற்றிற்கு ஏற்ப 'தடம்' - மலையைச்சார்ந்தவிடமென்று கொள்க. புலங்களை ஆண்யானைகளாக உருவகப்படுத்தினது, அடக்குதற்கரிய வலிமைநிலைமையைக் கருதி யென்க. 'தடத்து' என்பதை 'ஓட' என்பதனோடும், 'பிளிறு' என்பதனோடுங் கூட்டுக. மனத்திற்பொருந்திய ஐம்புலவாசைகளெல்லாம் இருந்தஇடந் தெரியாமல் விளக்கின்முன் இருள்போல அழிந்து போம்படி உள்ளக்கமலத்தில் வந்து எழுந்தருளுகிற விநாயக ரென்று கருத்து. தேவர் மனிதர் அசுரர் மற்றுமுள்ள நாகர் முதலியோர் விலங்கு முதலிய அனைத்துயிர்களாலுந் தனித்தனி இறவாதபடி வரம்பெற்றுத் தேவர்களுக்குப் பலதுன்பமிழைத்துவந்த கஜமுகாசுரனைக் கொல்லும்பொருட்டுத் தேவரூபமும் பூதவடிவமும் யானையுருவமுங் கலந்ததொரு திருமேனியைக் கொண்டுசென்று அவனை அழித்த கருத்துத் தோன்ற, 'தொந்தித்தந்தி' என்றார். தந்தீ என்னும் வடசொல்லுக்கு-தந்தத்தையுடையதென்று பொருள். எல்லா அவயவங்களிலும் முதன்மையாகிய தலை யானைத்தலையா யிருத்தல்பற்றி, விநாயகக்கடவுளை 'தந்தி' என்றார். தந்தி என்பது, இங்கே சுட்டுப்பெயர்மாத்திரையாய் நின்றது. தமிழ்-

தமிழினாலாகிய நூலுக்குக் கருவியாகுபெயர். த்ரவிடம் என்னும் வடமொழி, தமிழ்எனச் சிதைந்தது; தனிமைப்பொருள்குறித்த தமி என்னும் வினையடியாப் பிறந்து வினைமுதற்பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகர எழுத்துப்பேறுபெற்றுத் தனக்கிணையில்லாப்பாஷையெனப் பொருள்தருவதென்பாரும், செவிக்கினிமைதருதலால் மதுரமென்னும் பொருளுடையதாகித் தமிழ்என வழங்கியதென்பாருமுளர். 'தண்ணளிதூய்' என்னும் பாடத்துக்கு - குளிர்ந்த பக்தியாகிய மலரைத் தூவி யருச்சித்து என்க. தனி என்பதற்கு - வேறொருதெய்வத்தை ஒருபொருளாகமதித்து வந்தித்தல் முதலியன செய்யாமல் என்றும் பொருள்கொள்ளலாம். முடி-முடியப்படுவது என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். சித்திவிநாயகன் என்பது - மதுரையிற் பொற்றாமரைக்குளத்தின் கரையிலுள்ள கணபதியின் பெயர்; வேண்டுவோர் வேண்டுவனவற்றையெல்லாம் அவரவர்க்குச் சித்திக்கும்படி அருள்செய்தலால் இந்தப்பெயர் வாய்த்தது. களிறு - ஆண்பாற்பெயர்; "வேழக் குரித்தே விதந்து களிறென்றல்" என்றதனால், களிறென்றார்.

இது - நேரசைமுதலாய் ஒற்றொழித்துப் பதினேழெழுத்துப் பெற்று வந்த கட்டளைக்கலித்துறை.

---

## நூல்.

மணிகொண்ட திரையாழி சுரிநிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைக்கிழவன் றிருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் றலைநிற்ப
வம்பொன்முடி முடிச்சூடி மபிடேக வல்லியொடுஞ்
செம்பொன்மதிற் றமிழ்க்கூடற் றிருநகரம் பொலிந்தோய்கேள்.

க. விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே.

உ. தேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்து நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே.

௩. வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த
மீனேற்றோ வானேறும் விடுத்தடிகளெடுப்பதே.

ச. மனவட்ட மிடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டந் தினவட்ட மிடக்கண்டு களிப்பதே.

ரு. விண்ணாறு தலைமடுப்ப நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணாறு குடைந்துவைகைத் தண்டுறையும் படிந்தனையே.

சு. பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே.

க. அவனவ ளதுவெனு மவைகளி லொருபொரு
ளிவ்வெனன வுணர்வுகொ டெழுதரு முருவினை.

உ. இலதென வுளதென விலதுள தெனுமவை
யலதென வளவிட லரியதொ ரளவினை.

௩. குறியில னலதொரு குணமில னெனநினை
யறிபவ ரறிவினு மறிவரு நெறியினை.

௪ இருமையு முதவுவ தெவனவ னெனநின
தருமையை யுணர்வுறி னமிழ்தினு மினிமையை.

௧. வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடிமண் சுமந்ததே.

௨. அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னையவ
டரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே.

௩. முலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னீ வளைகொண்டு சுமந்ததே.

௪. ஊன்வலையி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே.

௧. போகமாய் விளைந்தோய் நீ. ௩. ஏகமா யிருந்தோய் நீ.
௨. புவனமாய்ப் பொலிந்தோய் நீ. ௪. எண்ணிறந்து நின்றோய் நீ.

௧. வானு நீ. ௩. மதியு நீ. ௫. ஊனு நீ. ௭. உளது நீ.
௨. நிலனு நீ. ௪. கதிரு நீ. ௬. உயிரு நீ. ௮. இலது நீ.

எனவாங்கு.

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
யண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் டாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பசும்பொனசும் பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்றி
முரசுவீற் றிருந்த வாதியங் கடவுணின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுது
மைம்புல வழக்கி னருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வரின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக
பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉ
மிறைமையுண் டாயினு மாக குறுகினின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக்கொண்
டம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறாஉந் திறம்பெறற் பொருட்டே.

மணிகொண்ட * * * பொலிந்தோய்கேள்.— (இ - ள்.) **மணி** கொண்ட திரை ஆழி - இரத்தினங்களை உள்ளேகொண்ட அலைகளையுடைய கடலாகிய ஆடையை, சுரிநிமிர - மடிப்புக் கலையும்படி, மருங்கு அசைஇ - அரையிற் சுற்றிலும்உடுத்து, பணி கொண்ட முடி சென்னி அர

ங்கு ஆடும் - ஆதிசேஷனது உச்சிக்கொண்டையைக்கொண்ட தலையிடமாகின்ற நடனசாலையில் ஆடுகிற, பைந் தொடியும்-பசுமையான தொடியென்னுங்கைவளையையுடைய பூதேவியும், பூ தொத்து கொத்து அவிழ்ந்த - அழகிய பூங்கொத்துக்கள் முறுக்குமலரப்பெற்ற, புனம் துழாய்-கொல்லையிலுண்டாகிற (திருமாலின்மார்பிலணிந்த) திருத்துழாய்மாலையின், நீழல் - நிழலில், வளர் - பொருந்தியிருக்கிற, தேம் தத்தும் நறை கஞ்சத்து - வாசனை மிகுந்த தேனையுடைய தாமரைமலரில் வாழ்கிற, அம் சாயல் - அழகையும் மென்மையையுமுடைய, திருந்து இழையும் - அழகிய ஆபரணங்களையுடைய ஸ்ரீதேவியும். மனை கிழவன் திரு மார்பும் மணி குறங்கும் வறிது எய்த - (தங்கள்) கணவனாகிய திருமாலின் அழகிய மார்பும் அழகிய தொடையும் வறுமையாயிருக்குந்தன்மையை அடையும்படி, (அவற்றைவிட்டு), தனக்கு உரிமை பணி பூண்டு - தனக்கு உரிய அடிமைத்தொழிலை மேற்கொண்டு, முதல் கற்பின் தலை நிற்ப - முதன்மையாகிய கற்பொழுக்கத்தில் நிற்கும்படி, அம் பொன் முடி முடி சூடும்-அழகிய பொன்னாலாகிய கிரீடத்தைத் தலையிற் சூடிய, அபிடேகவல்லியொடும் - அபிஷேகவல்லியென்னும் ஒருதிருநாமமுள்ள மீனாட்சியம்மையுடனே, செம்பொன் மதில் தமிழ் கூடல் திரு நகரம் - சிவந்த பொன்மயமான மதில்கள் சூழ்ந்த செந்தமிழ் வழங்கும் மதுரையென்னும் அழகியபட்டணத்திலே, பொலிந்தோய் - எழுந்தருளிவிளங்குபவனே! கேள் - (அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக்) கேட்டருள்வாயாக; (எ - று.)

எல்லா நூல்களும் மங்கலமொழி முதல்வகுத்துக் கூறவேண்டுவது பெரு மரபாதலின், முதலில் 'மணி' என்று தொடங்கினார். பூமியைச் சுற்றிலுமுள்ள கடலைப் பூமியாகிய பெண் உடுக்கும் ஆடையாகக் கூறுதல், கவிசமயம். சுரி-முதனிலைத்தொழிற்பெயர். ஆடையாகக் கூறியதற்கேற்ப, 'சுரிகிமிர' என்றார். அசைத்து என்னும் இறந்தகாலவினையெச்சம், விகுதி முதலியனகெட்டு விகாரப்பட்டுப் பகுதிமாத்திரமாய்நின்று 'அசைஇ' என அளபெடுத்தது: இது, சொல்லிசையளபெடையின்பாற்படும். பணி - பணத்தையுடையது: பணம் - படம். பசும்பொற்றொடியென்பார், 'பைந்தொடி' என்றார். பைந்தொடி - பண்புத்தொகை யன்மொழி. துழாய் - துளஸீ என்னும் வடமொழியின் திரிபு; இது, இங்கே மாலைக்குக் கருவியாகுபெயர். சாயல் - உரிச்சொல்; "சாயல் மென்மை". திருந்திழை - வினைத்தொகை யன்மொழி. மனைக் கிழவன் - இல்லறவாழ்க்கைக்கு உரியவன். கிழவன் என்பதில், கிழமை - பகுதி: இதன் பெண்பால் - கிழத்தி: (வயது முதிர்ந்தவனென்னும் பொருளில், கிழம் - பகுதி; அப்பொழுது பெண்பால் - கிழவி.) திருமாலின் திருத்தொடையில் நிலமகள் வீற்றிருத்தலை, வராக புராணத்தால் அறிக. தனக்கு - அபிஷேகவல்லிக்கு. தங்கணவனைத் தொழுதல் மகளிர்க்குக் கற்பென்றும், அக்கணவனுக்கு வழிபடுகடவுளாகிய தெய்வத்தை அக்கணவனது க்ஷேமத்தின்பொருட்டு வணங்குதல் முதற்கற்பென்றுங் கொண்டு, 'முதற்கற்பின் தலைநிற்ப' என்றார்: "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" ஆதலால், அவனைவிட்டுப் பிறிதொரு தெய்வத்தை வணங்குதல் கற்பாமோ? எனின்;— தன் தலைமகனுக்குத் தொழுகுலமாகிய தெய்வம் இன்னதென்று அவனால் உணர்த்தப்பட்டு அதனைச்சுட்டியொழுகும் ஒழுக்கமும் அவனாலேயே கற்பிக்கப்பட்டு அத்தெய்வத்தை வழிபடுதல் கற்பேயாமென்க; "தெய்வமஞ்சல்" என்னும் மெய்ப்பாட்டியற்சூத்திரம் தன்குலதெய்வத்தை வணங்குதற்கு விதியாமாறு உணர்க; "விண்பொழி பூமழை வெல்கதிர் நேமிய, வண்புகழ் மாலடி வந்தனை செய்தாள்" எனச் சிந்தாமணியிற் கூறியவாறுங் காண்க. பைந்தொடி குற

ங்கு வறிதெய்தவும் திருந்திழை மார்பு வறிதெய்தவும் பணிபூண்டு என இயைந்து பொருள்கொள்ளுதலால், எதிர்நிரனிறைப் பொருள்கோள். திருமாலின் தேவிமாரிருவரும் அபிஷேகவல்லிக்குப் பணிபூண்கிறு ரென்றதனால், திருமால் அபிஷேகச்சொக்கருக்குப் பணிபூண்கிறு ரென்பதுங் கூறியதாம்.

மீனாக்ஷியம்மை மலயத்துவசபாண்டியன் மகளாய்த் தடாதகைப் பிராட்டியாரென்னுந் திருநாமங்கொண்டு திருவவதரித்துப் பட்டாபிஷேகமும் முடிசூடுதலும் அடைந்து பாண்டியநாடாளும் அரசுரிமையைப் பெற்றதனால்,'அம்பொன்முடி முடிச்சூடு மபிடேகவல்லி' எனப்பட்டாள். தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும் சங்கப்புலவர்களுக்கும் உறைவிடமாதலால், 'தமிழ்க்கூடல்' எனப்பட்டது. ஒருகாலத்தில் வருணன் சோமசுந்தரக்கடவுளது சக்தியைப் பரிசோதிக்குமாறு எண்ணி ஏழு மேகங்களையும் அளவின்றி மழை பொழிந்து மதுரையை அழிக்கும்படி ஏவ, அங்ஙனமே வந்த ஸப்தமேகங்களையுந் தடுக்கும்பொருட்டு அக்கடவுள் கட்டளையால் அவரது சடையிலுள்ள நான்குமேகங்களும் மேலுயர்ந்து நான்குகூடமாகக் கூடியதனால், மதுரை, நான்மாடக்கூடலென்றுங் கூடலென்றும் பெயர் பெற்றது; "வன்றிறல் வருணன் விட்ட மாரியை விலக்க வீசன், மின்றிகழ் சடையினின்று நீங்கிய மேக நான்குங்,குன்றுபோ னிவந்து நான்குகூடமாக் கூட லாலே, யன்று நான் மாடக் கூட லானதான் மதுரை மூதூர்"எனத் திருவிளையாடலில் நான்மாடக்கூடலானபடலத்திற் கூறியதனால் அறிக.

இது, பெரும்பாலும் நாற்சீர்களுங் காய்ச்சீர்களாய்வந்த எட்டடித்தரவு.

க.—விண் * * * செலுத்தினையே.— (இ - ள்.) விண் அரசும் - சுவர்க்கலோகத்தரசாட்சியையும், பிற அரசும் - மற்றை யரசாட்சிகளையும், சிலர் - சிலபேர், எய்த - அடையும்படி, விடுத்து - கட்டளையிட்டுவிட்டு, ஒரு நீ - ஒப்பற்ற நீ, பெண் அரசு தர கொண்ட - பெண்களுக்குட் சிறந்தவளாகிய தடாதகைப்பிராட்டியினாற் கொடுக்கப்பட்ட. பேர் அரசு - பெரிய இராச்சியத்தை, செலுத்தினை - செங்கோல்செலுத்தி ஆண்டாய்; (எ - று.)

என்றது, மலயத்துவஜபாண்டியன்மகளாகிய தடாதகைப்பிராட்டியைச் சிவபெருமான் சுந்தரபாண்டியவடிவமாகி மணம்புரிந்துகொண்டு அம்மனைவியினாற்பெற்ற பாண்டியநாட்டை அரசாண்டதை. தேவர்முதலிய யாவர்க்கும் அவரவர்வினைக்கேற்பப் பதவியளித்தருளுகிற நீ ஒருமனிதனாக வந்து மண்ணுலகத்தையாண்டது, அடியார்கள்பக்கல் காரணமின்றி இயல்பாக வுண்டாகிற கருணையினாலே யன்றி வேறன்றென்பது கருத்து. விண்ணரசு - இந்திரபதவி. 'பிறவரசு' என்றது - பிரமவிஷ்ணுக்கள், திக்பாலகர் முதலியோரது பதவிகளை.

உ.—தேம் * * * மிலைச்சினையே.—(இ - ள்.) தேம் பழுத்த - தேன் மிகுந்துள்ள, கற்பகத்தின் நறுந் தெரியல் - கல்பகவிருக்ஷத்தின் மலர்களாலாகிய நல்வாசனைவீசுகிற மாலையை, சிலர்க்கு—, அமைத்து - (சூடுமாறு) நியமித்து, (நீ), வேம்பு அழுத்தும் நறை கண்ணி - வேப்பமலர்களால் தொடுக்கப்பட்ட வாசனையையுடைய மாலையை, முடி சென்னி-கிரீடத்தையுடைய தலையில், மிலைச்சினை - சூடினாய்; (எ - று.)

என்றது - சுந்தரபாண்டியவடிவமாகிப் பாண்டியர்க்கு உரிய வேம்பு மாலையைச் சூடியதை. இவையெல்லாம்உன் கருணையினாலேயென்றுகருத்து. சிலபேர்க்கு இந்திரன்முதலியதேவர்களது பதவியைத் தந்து என்று முதலடிக்குக்கருத்து. தேன் + பழுத்த = தேம்பழுத்த; தேன்என்னும் மொழி வலிவர இறுதிஅழிந்து இனமென்மை தோன்றப்பெற்றது: [நன் - மெய் - கக.]தெரியல் - விளங்குவது; மாலைக்குத் தொழிலாகுபெயர். கண்ணி - தலையிற்சூடும் மாலை. முடி - மயிர்முடியுமாம்.

௩.—வானேறு * * * எடுப்பதே.—(இ - ள்.) வான் ஏறும் - ஆகாயத்திற் பறக்கும்படியான, சில புள்ளும் - (கருடன் அன்னம் முதலிய) சிலபறவைகளை, பலர் - (திருமால் பிரமன் முதலிய) பலபேர், அங்கு - அவ்விடங்களில், வலன் உயர்த்த-வெற்றிக்கொடியில் உயர்த்தியெடுக்க, அடிகள் - சுவாமியாகிய நீ, ஆன் ஏறும் விடுத்து - விருஷபக்கொடியையும் விட்டு, மீன் ஏறே - (அப்பறவைகட்குஅஞ்சும்படியான) மீனையோ, எடுப்பது - (கொடியில்) உயரத்தூக்குவது; (எ - று.)

என்றது - சுந்தரபாண்டியனானபொழுது அக்குலத்தார்க்குஉரிய மீன் கொடியை உயர்த்தியதை. இதனால், கடவுளது அடியவர்க்கெளியனாந்தன்மையை வெளியிட்டார். வானேறும் - இடியேற்றையும் என்றும் பொருள் கொள்ளலாம்; இந்திரனுக்குக் கொடி இடியாதலின். புள்ளும், உம்-உயர்வுசிறப்பு. வலன்-பலம் என்பதன் விகாரம். உயர்த்த - செயவெனெச்சம்; இது, இறந்தகாலப்பெயரெச்சமாயும் வரும். ஏறு - ஆண்பெயர்: "கடல்வாழ்சுறவும் ஏறெனப்படுமே" என்பதனால், 'மீனேறு' எனப்பட்டது; "மீனேறுயர்த்த கொடிவேந்தன்," "மீனேற்றுக் கொடியோன்" என்றார் சிந்தாமணியிலுங் கலித்தொகையிலும். ஆனேறும், உம்மை - உயர்வுசிறப்பு. அடிகள் - முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி; இதனை அண்மைவிளியாகவுங் கொள்ளலாம்.

௪.—மனவட்டம் * * * களிப்பதே.—(இ - ள்.) மனம் வட்டம் இடும் - (ஞானிகள்) மனத்திற் சுற்றுகிற, சுருதி - வேதமாகிய, வயம் பரிக்கு - சிறப்பையுடைய குதிரைக்கு, மாறு அன்றே - ஒப்பாகாதே: (அங்ஙனமிருக்க), கனவட்டம் - கனவட்டமென்னுங் குதிரை, தினம் வட்டமிட - நாள்தோறும் வலசாரியும் இடசாரியுமாக மண்டலகதியைப் பயில, கண்டு - அதனைப் பார்த்து, களிப்பதே - மகிழ்வது என்னகாரணத்தினாலோ? (எ - று.)

கருணையினாலே என்றதாம். கனவட்டமென்று பாண்டியர்ஏறும் பட்டவர்த்தனக்குதிரைக்குப் பெயர். 'மனவட்டமிடுஞ் சுருதி' என்றது - அறிந்தவரால் மனத்தில் ஆராயப்படுவதனால். மனம்-மநஸ் என்னும் வடமொழியின் திரிபு. இனி, மன என்று எடுத்து - அதனை மன்ன என்பதன் தொகுத்தலாகக் கொண்டு, நித்தியமாய் அழியாததனால் எந்நாளும் ஒருபடிப்படவட்டமிடுகிற சுருதியென்றுமாம். மன்ன - அரசனே என்று விளியாகவுமாம். வ்ருத்தம்என்னும் வடமொழி பிராகிருதமாய் வட்டமெனத் தமிழிற் சிதைந்து வந்தது. வேதம் பரமசிவனுக்குக் குதிரையானது திரிபுரசங்காரகாலத்தில்; அன்றியும், வேதந்தான் கடவுளை எப்பொழுதும் மேற்கொண்டிருத்தலால், 'சுருதிவயப்பரி' என்றதாகவுங் கொள்ளலாம். அன்று - எதிர்மறைக் குறிப்புமுற்று. ஏ - தேற்றம். ஈற்றேகாரம், வியப்புத்தோன்ற நின்றது.

௫.—விண் *** படிந்தனையே.—(இ - ள்.) விண் ஆறு-ஆகாசகங்காநதி, தலை மடுப்ப - (உன்) தலையில் நிரம்ப, நனையா - (அதனாற் சிறிதும்) நனையாத, நீ—, விரை பொருநை தண் ஆறு-விரைந்துவருதலையுடைய தாமிரபர்ணியென்னுங் குளிர்ந்த நதியில், குடைந்து - நீராடி, வைகை தண் துறையும் - வையையாற்றின் குளிர்ந்த நீர்த்துறையிலும், படிந்தனை - ஸ்நானஞ்செய்தாய்; (எ - று.)

இது உனது திருவருளால் என்றதாம். தேவகங்காநதி பரமசிவனது சடைமுடியில் அறுகம்புல்லினுனியிற் பனிநீர்போலத் தங்கிய தென்று புராணங்கூறுதலால், 'விண்ணாறு தலைமடுப்பநனையா நீ' என்றார். பொருநையும் வைகையும் பாண்டியநாட்டி லுள்ளவை.

௬.—பொழிந்து *** மடுத்தனையே.—(இ - ள்.) முது மறையின்-பழமையான வேதங்களின், பொழிந்து ஒழுகு - வழிந்துஒழுகுகின்ற, சுவை -

மிக்க உருசியை, கண்டும் - நுகர்ந்துபார்த்திருந்தும், (அதனைவிட்டு), புது அமுதம் வழிந்து ஒழுகும் - புதிய அமிருதத்தின் இரசம் பெருகிவழிகிற, தீம் தமிழின் - இனிப்பான தமிழ்ப்பாஷையின், மழலை - இளஞ்சொல்லை, செவி மடுத்தனை - திருச்செவிசார்த்தியருளினாய்; (எ - று.)

தமிழ்நூல்களைக்கேட்டு அதற்கு மனம் மிகக்கனிதல் பாண்டியர்க்கு இயல்பு.

இவை ஆறும் - நாற்சீர்களுங் காய்ச்சீர்களாகிய ஈரடித் தாழிசைகள்.

க.—அவன் * * * உருவினை.—(இ - ள்.) அவன் அவள் அது எனும் அவைகளில் - ஆண் பெண் அலி என்னப்படும் அவைகளுள், ஒரு பொருள் இவன் என - இவ னொரு பொரு ளென்று, உணர்வுகொடு - அறிவினால், எழுதுஅரும் - எழுதுவதற்கு அரிய, உருவினை - ரூபத்தையுடையவனாயிருக்கிறாய்; (எ - று.)

இதற்குக் கருத்து:—சிவபெருமானோடு ஒவ்வாமைக்குப் பெண் அலிகளோடு ஆண்களோடு வாசியில்லை என்பது; என்றது, எல்லாப்பொருள்களினுஞ் சிறந்தவனென் றபடி. ஆணும் பெண்ணும் அலியு மல்லாத பொருள் சூனியமன்றோ எனின்;-ஒருபொருள் இதுவென என்னாமல் ஒருபொருளிவனென என்று உயர்திணையாண்பாலீற்றாற் கூறியதுதானே யாவரினுஞ்சிறந்தவனென்று நன்குகாட்டாநின்றதென்க; அன்றியும், அவன் அவள் அது எனப் பால்பகுக்கப்படுபவை உயிர்களாதலால், அவ்வுயிர்களி லொருவன் இவன் என்று அறிவினால் அறியப்படாத உருவமுடையாய் என்றுங் கருத்துக்கொள்ளலாம்.

உ.—இலது * * * அளவினை.—(இ - ள்.) இலது என - இல்லாதபொருள் என்றும், உளது என - உள்ள பொருள் என்றும், இலது உளது எனும் அவை அலது என - இல்லாதது என்றும் உள்ளதென்றும் கூறப்படு பொருளும் அன்றென்றும், அளவுஇடல் அரியது-(ஆகமம்முதலிய பிரமாணங்களைக்கொண்டு) அளவிடுவதற்கு அருமையானதாகிய, ஓர்அளவினை - ஒரு தன்மையையுடையவனாயிருக்கிறாய் ; (எ - று.)

என்றது-நீ இல்லாததென்றும் உள்ளதென்றும் இல்லாததும் உள்ளதுமாயிருப்பதென்றுங் கூறப்படுகிற எல்லாப்பொருள்களின்வடிவமாயிருந்தும் அவற்றுள் இன்னதன்மையையுடையை யென்று எவர்க்கும் எளிதிற் பிரமாணபூர்வமாகக் கூறுதற்கரிய தன்மையையுடையாய் என்றபடி. சிவம் சத்தி நாதம் விந்துஎன நான்கு அருவாகியும், மகேசுரன் உருத்திரன் திருமால் அயன் என நான்கு உருவாகியும், சதாசிவம் என அருவுருவாகியும் நின்று, இந்நவவிபேதமுந் தோற்றுவித்தல் முதலியவற்றிற்கு ஏதுவாய் நாடகமாத்திரையால் நடிக்கும் இறைவனுகலின், இங்ஙனங் கூறியது.

ங.—குறி * * * நெறியினை.—(இ - ள்.) குறிஇலன்-உருவில்லாதவன், அலது - அதுவல்லாமலும், ஒரு குணம் இலன் - ஒருகுணமுமில்லாதவன், என - என்று, நினை - உன்னை, அறிபவர் - அறிபவர்களது, அறிவினும்-அறிவினாலும், அறிவு அரு - அறிவதற்கு அரிய, நெறியினை - தன்மையை யுடையவனாயிருக்கிறாய் ; (எ - று.)

என்றது - தவத்தாலுந் தியானத்தாலும் எல்லாப் பொருள்களையும் அறிந்தவர்களது அறிவுக்கும் அறிதற்குஅரியவன் என்றதாம்; அன்றியும், ஒருகால் தன்னை அறிபவர்களுக்குப் பின்அறிதற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால் மீட்டும் அறிவரியவ னென்றுங் கருத்துக்கொள்ளலாம். "உணர்ந்தார்க்குணர்வரியோன் றில்லைச் சிற்றம்பலத்தொருத்தன்" என்றார் திருச்சிற்றம்பலக்கோவையாரிலும். குறி - சின்னமுமாம். குண

மிலன் என்றதற்கு - தீயகுணமில்லாதவ னென்றுங் கருத்துக்கொள்வர். அறிவினும், உம்மை - உயர்வுசிறப்பு. 'குறியில னலதொரு குணமிலன்' என்றது, நிஷ்களசிவத்தை யென உணர்க; குறி என்றது - ஆண் பெண் அலி என்னும் பகுப்பை: குணமென்றது - முக்குணங்களை: "கூடலம்பதி மேவிய குணங் குறிகடந்த. வேடர்" என்றார் திருவிளையாடலிலும்.

ச.—இருமை * * * இனிமையை.—(இ - ள்.) இருமையும் - (இம்மை மறுமை என்னும்)இரண்டின் பயன்களையும், உதவுவது - (உயிர்களுக்கு) அருளுவது, எவன் - எவனது தொழிலோ, அவன் - அவனாவன், என - என்று, நினது-உன்னுடைய, அருமையை-அரியதன்மையை, உணர்வுறின் - ஆராய்ந்தறியுமிடத்து, அமிழ்தினும் இனிமையை - தேவாமிருதத்தினும் இனிமையையுடையவனாயிருக்கிறாய்; (எ - று.)

என்றது - தியானிக்குந்தோறுந் தெவிட்டாவமுதமாய் மனத்திற்குப் பேரானந்தத்தை விளைக்குந் தன்மையையுடையாய் என்றதாம். இம்மை மறுமையென்னும் இரண்டனுள் மறுமையில் வீட்டையும் அடக்கினார்.

இவை நான்கும் - நாற்சீருங் கருவிளச்சீர்களாகிய **ஈரடி அராகங்கள்.**

இவற்றுள், பெரும்பாலுங் குற்றெழுத்துகளே வந்தது - **சொல்லணி.**

க.—வைகை * * * சுமந்ததே.—(இ - ள்.) திரு முடி - (உனது) அழகிய தலையிலே, மண் சுமந்தது - (நீ) மண்ணைச் சுமந்தது, வைகைக்கோ - வைகையாற்றுக்கோ? புனல் கங்கை வான் நதிக்கோ - நீர்மயமான ஆகாச கங்காநதிக்கோ? சொரிந்து - கொட்டி, கரை செய்கைக்கு - கரையிடுதற்கு, என்று—, அறியேம் - (யாம்) அறிகிறேமில்லை; (எ - று.)

நீ வையையாற்றிற்குக் கரைகோலும்பொருட்டுத் திருமுடியில் மண் சுமத்தலை நோக்குமிடத்து உனது முடியின்மேலுள்ள கங்கையாற்றிற்குக் கரைகோலும்பொருட்டு மண்சுமப்பது போன்றதென்றதாம். கங்கைநதி முழுவதையும் ஒருதுளியாயினும் வெளியிற் செல்லாதபடி எளிதில் முடியில் அடக்கிவைத்த உனக்கு அக்கங்கைநதியின் அம்சமாகிய வையைநதியை அடக்குவது அரியதொருகாரியமன்று என்றுங் கருத்துக்கொள்க. நினைத்த மாத்திரத்தில் அடக்கவல்ல ஆற்றலையுடைய நீ வையையையணைக்கும்பொருட்டு மண்சுமந்தது பெருங்கருணையினா லென்றபடி. வான் நதி - சிறந்த நதி யென்றுமாம். வாதவூரடிகளை வருத்தியதன்பொருட்டு அரிமர்த்தன பாண்டியன்மீது உண்டான கோபத்தாற் சிவபெருமான் வையையாற்றை அவன்நகர்மேலேவ, அந்நதி மதுரையை யழிக்குமாறு பெருகிவர, அந்நகரத்தாரியாவரும் அரசன்கட்டளைப்படி கூலியாட்கள்வைத்துக் கரைகோலுகையில், சோமசுந்தரக்கடவுள் பிட்டுவிற்றுண்ணும் வந்தி என்னும் மலட்டுக்கிழவிக்குத் தன்கருணையினால் வேலையாளாக வந்து அமர்ந்து முடியின் மேற் கூடையில் மண்ணைச்சுமந்து கொண்டுபோய்க்கொட்டினர் என்பது, கதை; இதனைத்திருவிளையாடற்புராணத்தில்மண்சுமந்தபடலத்திற்காண்க.

உ.—அரும்பு * * * கட்டுண்டே.—(இ - ள்.)அரும்புஇட்டு - (கொன்றைமலர்முதலிய) புஷ்பங்களை இட்டுஅருச்சித்தும். பசுஇலை இட்டு-(வில்வபத்திரம் முதலிய) பசிய இலைகளை இட்டு அருச்சித்தும், ஆள் செய்யும் - அடிமைத்தொழில்செய்கின்ற, அன்னைஅவள் - தாய்போன்ற அன்புடைய வந்தியென்னுங்கிழவி,தரும் - தந்த, பிட்டு - பிட்டுக்களை, தலைஅன்பின் கட்டுண்டு - (அவளுடைய) சிறந்த அன்பினாற் கட்டப்பட்டு, பிட்டு உண்டாய் - விண்டு புசித்தாய்; (எ - று.)

பிட்டு என்னுஞ் சொல் இரண்டனுள்,முன்னது - பெயர்ச்சொல்: ஒரு வகைச்சிற்றுண்டி: பின்னது - இறந்தகாலவினையெச்சம்; பிள் - பகுதி.

'தலையன்பிற்கட்டுண்டு' என்றது-முதிர்ந்த பக்திக்கு வசப்பட்டு என்றவாறு; "பத்திவலையுட்படுவோன்" என்றார் திருவாசகத்தும். கட்டுண்டு என்பதில், உண் - செயப்பாட்டுப்பொருளுணர்த்தும்விகுதி. அரும்பு என்றது - மொட்டரு மலரை.

ரு.—முலை * * * சுமந்ததே.—(இ - ள்.) முலைகொண்டு-(தன்) முலைகளால், குழைத்திட்ட - (உன்திருமேனியை) இளகும்படிசெய்த, மொய் வளை - நெருங்கின வளையல்களை யுடைய உமாதேவியின், கை வளை அன்றே - கைகளிலணிந்துள்ள வளைகளன்றோ இது; (அங்ஙனமிருக்க), நீ—, மலை கொண்ட புயத்து - மலையைஉவமையாகக்கொண்டதொருதோளில், வளை கொண்டு சுமந்தது - வளையல்களை எடுத்துச் சுமந்தது, என் - ஏன்?

உமாதேவியின் கைவளையாயின் நீகொண்டுசுமக்கத்தக்கதன்மையையுடையதே;பிறவளையல்களைச்சுமந்தது உனதுகருணைத்திருவிளையாட்டினாலே யாம் என்று கருத்து. உமாதேவி காஞ்சீபுரத்தில் மாமரநிழலில் வாழ்கிற பிருதிவிமயமான சிவலிங்கத்தைச் சோடசோபசாரங்களோடும் பூசித்து வருகையில், பரமசிவன் அத்தேவியாரது பக்தியின் உறுதிநிலைமையைப் பரிசோதிக்கத்திருவுளங்கொண்டு சகலதீர்த்தங்களையும் ஒருங்கே வந்துசேரும்படி நினைக்க, எல்லாத்தீர்த்தமுங் கம்பையாற்றோடு கூடிப் பெருவெள்ளமாய்ப் பெருகிவர, அதனைக் கண்டு பார்வதிதேவி மிகக்கலங்கி அன்பினாலுண்டான அச்சத்தால் அவ்விலிங்கத்தை இறுகத்தழுவிக்கொள்ள, இலிங்கவடிவமாகிய உமாபதி அம்பிகையின் முலைத்தழும்பும் வளைத்தழும்புந் திருமேனியில் விளங்குமாறு குழைந்துகாட்டினு ரென்பது, முதலடியிற் சுட்டிய கதை; இதனைக் காஞ்சிப்புராணத்தில் தழுவக்குழைந்தபடலத்தில் "மணிமுலைக் குவட்டினோடு வளைக்கையால் நெருக்கிப்புல்லித், தணிவருங் காதல் விம்மக் காதலி தழுவ லோடுந், துணியிரு ளறுக்குஞ் சோதித் திருவுருக் குழைந்து காட்டி, யணிவளைத் தழும்பினோடு முலைச்சுவ டணிந்தாரையர்" என்பது முதலியவற்றால் அறிக.

பின்னடியிற் குறித்த கதை வருமாறு:—ஒருகாலத்திற் பரமசிவன் தாருகவனத்திலுள்ள முனிவர்களது மனைவிமார்களின் கற்புநிலையைப் பரீக்ஷிக்கஎண்ணித் தாம்ஒருவிடசங்கமத்திருவுருவங்கொண்டு அவரில்லந்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ்செய்ய, அம்முனிபத்தினியர்கள் அவரைநோக்கிக் காதல்கொண்டு மனவுறுதியழிந்து மேனிமெலிந்து கைவளை கழன்று விழுமாறு மிகவருத்தமடைய, அதனையறிந்த முனிவர்கள் அம்மகளிரை மதுரையில் வணிகர்கன்னிகைகளாகப்போய்ப்பிறக்கும்படிசபித்து, அம்மதுரைக்கடவுள் வந்து அவர்கள்கைகளைத் தொடும்பொழுது இச்சாபம் நீங்குமென்று அனுக்கிரகமுஞ் செய்ய, அங்ஙனமே வைசியகுலப்பெண்களாய் வந்து பிறந்த அவர்களது சாபத்தை ஒழிக்குமாறு சோமசுந்தரக்கடவுள் திருவுளத்தெண்ணித் தாம் வளையல்விற்பானொரு வணிகனது வடிவத்தைப் பூண்டு வீதிகளிற்சென்று வளையல்விற்று அம்மகளிர்களுக்கெல்லாம் வளையலிடுகிற பாவனையாய் அவர்கள் கைகளைத் தொட்டு அவர்கள் சாபத்தைப் போக்கியருளினு ரென்பதாம்; இதனைத் திருவிளையாடற்புராணத்து வளையல் விற்றபடலத்திற் காண்க. மொய்வளை - வினைத்தொகையன்மொழி. கொண்ட-உவமவுருபு. இனி,இதற்கு - மதுரைத்திருவீதியில் நீ தனியே வளையல்களைச் சுமந்துகொண்டுவந்தது உன்னைப்பிரிந்த வருத்தத்தால் உடம்புமிக இளைத்த உமாதேவியின் கையினின்றுங் கழன்ற வளைகளைக் கொண்டுவந்தது போன்ற தென்றுங் கருத்துக்கொள்ளலாம். மலை கொண்ட புயம் - மேருமலையை வில்லாக வளைத்துக் கொண்ட புயம் என்றுமாம்.

சு.—ஊன் * * * பட்டன்றே.—(இ - ள்.) ஊன் வலையில்-உடம்பாகிய வலையிலே, அகப்பட்டார்க்கு - அகப்பட்டுழல்கிற உயிர்களுக்கு, உட்படாய்-

அறியப்படாதவனே!—நின் புயத்து-உனது தோளில், ஓர் மீன் வலை கொண்டதும் - மீனைப் பிடிப்பதொரு வலையை ஏற்றுக்கொண்டதும், ஒருத்தி விழி வலையில் பட்டு அன்றே - ஒருத்தியின் கண்களாகிய வலையில் அகப்பட்டன்றோ? (எ - று.)

பாண்டியநாட்டில் தண்டுறைப்பாக்கமென்னுங் கடற்கரைச்சேரியில் வாழ்கின்றுனொரு வலைஞர்தலைவன் பலநாளாகப் பலவாறு வலைவீசிமுயன்றும் பிடிக்கப்படாததொரு கடலிலுள்ள பெருமீனைப் பிடிப்பவனுக்குத் தன் மகளை மணஞ்செய்துகொடுப்பதென்று நிச்சயித்திருக்க, சோமசுந்தரக்கடவுள் தாம் ஒருவலையனுருக்கொண்டு சென்று யாவரும் வியக்கும்படி வலையைவீசித் தம்மால்முன்னேசபிக்கப்பட்ட நந்திதேவர் தூவடிவமாகிய அம்மீனைப் பிடித்துக் கரைமேற் போகட்டுவிட்டுத் தமதுசாபத்தாற் பிறந்த உமாதேவியின்வடிவமான அம்மகளை மணஞ்செய்துகொண்டாரென்பது, இங்குக் குறித்த கதை; இதனைத் திருவிளையாடலில் வலைவீசியபடலத்திற் காண்க. ஊன், ன்-சாரியை; இத்தசையின்பெயர் - உடம்புக்கு ஆகுபெயர். உடம்பை வலையென்றது, உயிரைப் பந்தமுறுத்தலால். உட்படுதல் - அகப்படுதல். ஒருகால் நோக்கினமாத்திரத்தில் ஆடவரைத் தன்வசப்படுத்தலால், விழி-வலையெனப்பட்டது.

இவைநான்கும், நாற்சீருங் காய்ச்சீராகிய ஈரடித்தாழிசைகள்.

க.—(இ - ள்.) போகமாய் விளைந்தோய் நீ - (உயிர்களெல்லாம் அனுபவிக்கும்) எல்லா அனுபவங்களின் வடிவமாய்ப் பரிணமித்தவனாய் நீ.

என்றது - எல்லா அனுபோகங்களையும் அளித்தருளுபவனும், அவற்றின் தன்மையாய் நிற்பவனும் நீயே என்றதாம்.

உ.—(இ - ள்.) புவனமாய் பொலிந்தோய் நீ - எல்லா வுலகங்களின் உருவமாய் விளங்குபவனாய் நீ; (எ - று.)

என்றது - எல்லாப்பொருள்களின் உள்ளும் புறம்பும் எங்கும் பரந்திருக்குந் தன்மையைக் கருதி; என்றது - ஜகச்சரீரத்துவத்தை.

ரு.—(இ - ள்.) ஏகமாய் இருந்தோய் நீ - ஒருபொருளாயிருந்தாய் நீ.

என்றது - ஒப்பற்றதொருபொருளாய் நின்றாய் என்றபடி.

ச.—(இ - ள்.) எண் இறந்து நின்றோய் நீ - அளவில்லாமற் பலபொருள்களாய் நின்றாய் நீ; (எ - று.)

என்றது - அந்தர்யாமிநிலையைக் கருதி; விராட்சொரூபமுமாம்.

இவை நான்கும் - முதற்சீர் விளச்சீரும், நடுச்சீர் புளிமாச்சீரும், ஈற்றுச்சீர் நேரசையொருசீருமாகிய முச்சீர் ரோரடி யம்போதரங்கங்கள். இவற்றை இருசீரடியெனினும் இழுக்காது.

க.—(இ - ள்.) வானும் நீ - ஆகாசமும் நீ; (எ - று.)

உ.—(இ - ள்.) நிலனும் நீ - பூமியும் நீ; (எ - று.)

ரு.—(இ - ள்.) மதியும் நீ - சந்திரனும் நீ; (எ - று.)

ச.—(இ - ள்.) கதிரும் நீ - சூரியனும் நீ; (எ - று.)

ரு.—(இ - ள்.) ஊனும் நீ - உடம்பும் நீ; (எ - று.)

சு.—(இ - ள்.) உயிரும் நீ - ஜீவனும் நீ; (எ - று.)

எ.—(இ - ள்.) உளதும் நீ - உள்ள பொருளும் நீ; (எ - று.)

அ.—(இ - ள்.) இலதும் நீ - இல்லாத பொருளும் நீ; (எ - று.)

என்றது - உன்னையன்றி ஒருபொருளும்இல்லையென்றதாம்; 'வானு நீ நிலனு நீ' எனப் பஞ்சபூதங்களுள் முதலதாகிய வானையும் ஈற்றதாகிய நிலனையும் எடுத்துக் கூறியது, இடையிலுள்ள மற்றை மூன்றுபூதங்களுக்கும் உபலக்ஷணம். உத்பத்திக்கிரமத்தில் முன்நிற்றலால் வானையும், லயக்கிர

மத்தில் மூன்றிற்றலால் நிலத்தையும் எடுத்துக் கூறினர். முயற்கோடு, ஆகாயப்பூ என்பனபோன்ற இல்லாதபொருள்களும் அபாவம் என்று ஒரு பதார்த்தமாகஅங்கீகரிக்கப்படுதலால், 'இலது நீ'என்றது. இவற்றில் அஷ்ட மூர்த்திகளும் அடங்கியவாறுங் காண்க.

இவை எட்டும் - முதற்சீர் மாச்சீரும்,மற்றொரு சீர் ஓரசைநேர்ச்சீருமாகிய இருசீர் நேராடியம்போதரங்கங்கள்; இவற்றை ஒருசீரடியெனினும் இழுக்காது.

எனவாங்கு - அசைநிலை. இது - தனிச்சொல்.

பொன் * * * பொருட்டே.—(இ - ள்.) பொன் பூத்து அலர்ந்த கொன்றை - பொன்னை ஒத்து மலர்ந்த கொன்றைமலர், பீர் பூப்ப - பசலை நிறத்தை அடையும்படி, கருஞ் சினை வேம்பு-பெரிய கிளைகளையுடைய வேப்பமரத்தின் மலர்களை,பொன் முடி சூடி - (சுந்தரபாண்டியனுனபொழுது) அழகிய திருமுடியின்மேற் சூடிக்கொண்டு, அண்ணல் ஆன் ஏறு - பெருந்தன்மையையுடைய விருஷபம், மண் உண்டு கிடப்ப - மண்ணை உண்டுகிடக்கும்படி, கண் போல் பிறழும் கெண்டை - (மகளிர்) கண்போலப் பிறழுகிற மீனை, வலன் உயர்த்து - வெற்றிக்கு அடையாளமாக(க் கொடியில்) மேம்படுத்தி, வரி உடல் கட்செவி - கோடுகளையுடைய உடம்பையுடைய நாகம், பெரு மூச்சு எறிய - பெருமூச்சுவிடும்படி, பொன் புனைந்து இயன்ற பைம் பூண் - பொன்னு லலங்கரித்துச்செய்யப்பட்ட பசிய ஆபரணங்களை, தாங்கி - அணிந்து, முடங்கு உளை குடுமி மடங்கல் அம் தவிசில் - மடங்குகின்ற பிடரிமயிரையுந் தலைமயிரையுமுடைய சிங்கத்தின் வடிவமாகச்செய்யப்பட்ட அழகிய ஆசனத்தில், பசும் பொன் அசும்பு இருந்த பைம் பொன் முடி கவித்து - பசுமையான பொன் நெகிழ்ந்திருக்கப்பெற்ற பசும்பொன் மயமான கிரீடத்தைத் தரித்து, ஆங்கு - அம்மதுரையில், இரு நிலம் குளிர் தூங்கு ஒரு குடை நிழல் கீழ் - பெரிய நிலவுலகமுழுவதுங் குளிர்ச்சிபொருந்துதற்குக் காரணமான ஒற்றைவெண்கொற்றக் குடையின் நிழலில், அரசு வீறு இருந்த - அரசனுகி வேறொருவர்க்கில்லாத சிறப்போடு இருந்த, ஆதி அம் கடவுள் - முதன்மையான அழகிய கடவுளே!—ஐம் புலம் வழக்கின் - ஐந்து புலங்களின் இயக்கத்தினது, அருஞ் சுவை - அருமையாகிய சுவையை, அறியா - அறியாத, செம் பொருள் - செம்மையான பரம்பொருளாகிய, செல்வ - எல்லாச்செல்வமுமுடையவனே!— நின்-உனது, சீர் அடி - சிறந்த திருவடிகளுக்குச் செய்கின்ற, தொழும்புக்கு - அடிமைத் தொழிலுக்கு ஏற்ற, ஒள் பொருள் - சிறந்த செல்வம், கிடையாது ஒழியினும் - (எமக்குக்) கிடைக்காம லொழிந்தாலும், ஒழிக - ஒழியட்டும் [யாம் வறியவராயினுமாகுக]; பிறிது ஒரு கடவுட்கு - வேறொரு தெய்வத்துக்கு, பெரும் பயன் தரூஉம் - பெரிய பயனைக் கொடுக்கவல்ல, இறைமை-தலைமை, உண்டாயினும் ஆக - (எமக்கு) உண்டானாலும் உண்டாகட்டும் [யாம் செல்வராயினும் ஆகுக]; நின் சிறு அடியவர்க்கே-உனது சிறிய அடிமைத்தொழில் செய்யுந் தொண்டர்களுள்ளவிடத்துக்கே, குறுகி - சென்று சமீபித்து, குறு ஏவல் - (அவர்களுக்குச் செய்யும்) அடித்தொண்டுகளை, தலைக்கொண்டு - மேற்கொண்டு, 'கிடைத்த ஆ - (எமக்கு இப்பாக்கியம்) கிடைத்தவிதம், அம்மா - ஆச்சரியகரமானது' என்று - என்று எண்ணி, செம்மாப்பு உறூஉம் - இறுமாப்படைகிற, திறம் - தன்மையை, பெறல் பொருட்டு - (யாம்) அடையும்பொருட்டு, நின் - உனது, பொன் மலர் பொதுளிய - பொன்மயமான பூக்கள் நிரம்பிய, சில் மலர் - குளிர்ந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை, பழிச்சுதும் - துதிப்போம்; (எ - று.)

பூப்பச் சூடி, கிடப்ப உயர்த்து, எறியத் தாங்கி, முடிகவித்து, ஆங்கு, குடைநிழற்கீழ், தவிசில், வீற்றிருந்த கடவுள்! செல்வ! ஒழிக, ஆக. குறுகித்

தலைக்கொண்டு என்று செம்மாப்புறூஉந் திறம்பெறற்பொருட்டு நின் மலர் பழிச்சுதும் எனக்கூட்டுக.

பரமசிவன் பாண்டியனாகி வேம்புமாலையைச்சூடியதனால் முன்னே அவரது மாலையாகிய கொன்றைக்கும், மீனைக்கொடியாகக் கொண்டதனால் அவரதுகொடியாகிய விருஷபத்துக்கும், பொன்னாபரணத்தை அணிந்ததனால் அவரது ஆபரணமாகிய நாகத்துக்கும் பெருவருத்தமுண்டானதாகக் கூறினார். பூத்து - உவமவுருபு. பீர் - வருத்தம் அச்சம் முதலியவற்றா லுண்டாகும் நிற வேறுபாடு. மண்ணுண்டு கிடத்தல் - பகைவர்க்குத் தோற்று மிகவருத்தமுற்றவரது குணமாம். அண்ணல் - காம்பீரியம். சிவபிரானது விருஷபம் திருமாலினது அம்சமென்று சைவபுராணங் கூறுதலால், அதற்கேற்ப 'மண்ணுண்டுகிடப்ப' என்றார்; உலகங்களை வயிற்றினுட் கொண்டு பள்ளிகொள்ளுதல். திருமாலுக்கு உரியதாம். வலன் - பலம்என்னும் வடமொழியின் திரிபு. கட்செவி - கண்களையே காதுகளாகவுடையது; அன்மொழித்தொகை: இது 'சக்ஷுஃஸ்ரவாஃ' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு; பாம்புகளுக்குக் கண்களிலேயே செவியின்புலனும் பொருந்தியிருத்தல் காண்க. பாம்புக்கு இயல்பாகவுள்ள பெருமூச்செறிதலை வருத்தத்தாலுண்டானதாகக் குறித்தார். முதல் ஆறு அடிகளை "கடுக்கைமலர் மாற்றிவேப்பலர்சூடி, மைவாய்க் காப்புவிட்டணிபூ ணணிந்து, விரிசடை மறைத்துமணிமுடிகவித்து, விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதியாகி" எனக் கல்லாடத்திலும். "சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார் தணந்துவேப்பந், தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி,விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமருமகனாகி" எனத் திருவிளையாடலிலும் வருமவற்றோடு ஒப்பிடுக.

மடங்கலந்தவிசு - சிங்காசனம்; சிங்கந் தாங்குவதுபோலச் செய்யப்பட்ட பீடம். மடங்கலந்தவிசு, ஆதியங்கடவுள் என்பவற்றில், அம் - சாரியையாகவுங் கொள்ளலாம். 'அசும்பிருந்த' என்றது - ஓடவிட்டமாற்றுயர்ந்தபொன் நெகிழ்ந்து தோன்றுமாதலால். இனி, பசும்பொன் விளையுஞ் சுரங்கத்தினின்று எடுத்த பொன்னாலாகியமுடி என்றுமாம். ஆங்கு - அசையாகவுங் கொள்ளலாம். குளிர்தூங்கு-வினைத்தொகை; காரியப்பொருளது. நிழற்கீழ். கீழ் - ஏழனுருபு. பொன்மலர் என்றது - இந்திரன் முதலிய தேவர்களா லருச்சிக்கப்பட்ட கற்பகவிருக்ஷத்தின் மலர்களை. சில் - குளிர்ச்சிக் குறிப்பு; சில மலர் என்றுங் கொள்ளலாம்: சில என்பது பெரும்பாலும் இரண்டை உணர்த்தும். மலர் - உவமவாகுபெயர். பழிச்சுதும் எனப் பன்மையாகக் கூறியது, தாமொருவன் கடவுளைத் துதித்து அதன்பயனைத் தான் அடைதலினுஞ் சிருஷ்டிதொடங்கித் தன் கோத்திரத்தாரையுந் தன்னோடு கூட்டி வணங்கி அவர்களுக்கும் அப்பயனை அடைவித்தலே சிறந்ததெனக் கருதி. 'ஐம்புலவழக்கி னருஞ்சுவை யறியா' என்றது - கடவுள் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்துஅவாவையும் ஒழித்தவ ராதலால்; "பொறிவாயிலைந்தவித்தான்" என்றார் நாயனாரும்: இனி, இந்த அடிக்கு-ஐம்புலவுணர்ச்சிக்கு எட்டாதவ னென்றும் பொருள்கொள்ளலாம். தோற்றக்கேடுகளின்மையின் நித்தியமாய் நோன்மையால் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையின் தூய்தாய்த் தான் எல்லாவற்றையுங் கலந்துநிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனை 'செம்பொருள்' என்றார்; "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்ப தறிவு" எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க. இம்மை மறுமை வீடுகளில் எல்லாவுயிர்களும்பெறுகின்றசெல்வங்களனைத்துங் கடவுளுடையனவேயாமென்பது தோன்ற, 'செல்வ' என்றது. ஒண்பொருள்என்றது - நல்லவழியாற் சம்பாதிக்கப்பட்ட பொருளென்றபடி; மற்

றைச் சிறப்புக்களுக்குக் காரணமான பொருளென்றுமாம். பிறிதொருகட வுட்குப் பெரும்பயன்தரூஉ மிறைமை - தேவர்களுக்கும் வேண்டுவனவற் றைத் தரும்படியான சிறந்த ஆதிபத்தியம்; இனி, பெரும்பயனாகிய முத்தி யைத் தருந் தெய்வத்தன்மை உன்னையன்றி வேறொரு தெய்வத்துக்கு உண் டாயினு மாகுக என்றும் பொருள் கொள்ளலாம். அம்மா - வியப்பிடைச் சொல். ஆ - ஆறு என்பதன் விகாரம். செம்மாப்பு - மிகுந்த மகிழ்ச்சி; தொழிற்பெயர்: இறுமாப்பு சோகாப்பு அலமாப்பு அல்லாப்பு என்பன போல இது ஒருசொல்; செம்மா - பகுதி. தரும், உறும் என்பன - செய்யு ளோசைநிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்தன.

இது ஈற்றயலடி ஒன்று ஒழிய மற்றையடிகளெல்லாம் நாற்சீரும்,ஈற் றயலடி முச்சீருமாய், பெரும்பாலும் ஈரசைச்சீர்களால் வந்த **பத்தோன்ப தடி நேரிசை யாசிரியச் சுரிதகம்.**

இப்பாட்டு - தரவும் தாழிசையும் அராகமும் மீண்டுந் தாழிசையும் அம்போதரங்கங்களும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த **மயங்கி சைக் கொச்சகக்கலிப்பா.** (க)

பொருணான் கொருங்கீன்ற பொன்மாடக் கூட
லிருணான் றிருண்டகண்டத் தெம்மான்—சரணன்றே
மண்டுழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மவுலித்
தண்டுழாய் பூத்த தடம்

(இ - ள்.) பொருள் நான்கு - (அறம் பொருள் இன்பம் வீடு என்னும்) நான்கு புருஷார்த்தங்களையும், ஒருங்கு - ஒருசேர, ஈன்ற - (மெய்யடியார் க்குத்) தந்தருளுகிற, பொன் மாடக்கூடல் - அழகிய நான்மாடக்கூடலெ ன்னும் பெயர்பெற்ற மதுரையில் எழுந்தருளிய, இருள் நான்று இருண்ட கண்டத்து எம்மான் - இருள்போற் கரிய விஷம் பொருந்தியதனாற் கறு த்த கண்டத்தையுடைய எமது சிவபெருமானது, சரண் - திருவடி, மண் துழாய் உண்டாற்கு - உலகங்களை உணவாகக் கலந்து உண்ட திருமா லுக்கு, கண்மலரோடு - கண்ணாகிய செந்தாமரைமலரும், ஒள் மவுலி தண் துழாய் - விளங்குகிற முடியிலணிந்த குளிர்ச்சியான திருத்துழாயும், பூத்த- மலர்ந்த, தடம் - இடமாம்; (எ - று.)—அன்று, ஏ - தேற்றம்.

'பொருணான் கொருங்கீன்ற'என்னும்அடைமொழியைக் கூடலுக்காயி னும், எம்மானுக்காயினுங் கூட்டுக. இருள் - உவம வாகுபெயர். நான்று, நால் - பகுதி; நாலுதல் - இங்கே தங்குதல். மான் - மஹாந் என்னும் வட மொழியின் திரிபு: பெரியோனென்று பொருள். சரண் - சரணம் துழாய்- இறந்தகாலவினையெச்சம்; துழாவு - பகுதி, ஈறுகெட்டது - விகாரம்: ய் - இறந்தகாலவினையெச்சவிகுதி. உண்டல் என்னும் வினைக்கு ஏற்ப, துழாவு தல் கூறினர். திருமால் உலகங்களை வயிற்றினுட்கொள்ளுதல் பிரளயகா லத்தி லென்றறிக. தடம் என்கிற சொல்லுக்கு - குளம் என்றும் மலைப் பக்கம் என்றும் பொருள் உண்மையால், மலர்பூத்த குளமும் துழாய்பூத்த மலைப்புறமும் ஆம் என்று கொள்க திருமாற்குக் கண்மலர்பூத்த தடமென் றது - சிவபெருமானது திருவடிவிரலால் தரையிற்கீறியுண்டாக்கப்பட்டுச் சலந்தராசுரனைக் கொன்ற சக்கராயுதத்தை அரக்கர்முதலியோரை அழித் தற்குப்பெறும்பொருட்டுத் திருமால் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்க ளைக் கொண்டு சிவபெருமானை அருச்சித்து வழிபட்டுவருகையில், ஒருநாள் பரமசிவன் அவ்விஷ்ணுவினது அன்புநிலைமையைப் பரிசோதிக்க எண்ணி ஒரு மலரை மறைத்திட, திருமால் மனந்தளர்ந்து தமது செந்தாமரைமலர் போலுங்கண்களுளொன்றைப்பறித்து அருச்சித்தா ரென்னுஞ் சைவபுராண

கதையை உட்கொண்டு. 'திருமாற்கு மவுலித்துழாய்பூத்த தடம்' என்றது- திருமால் பரமசிவனது திருவடியில் தமது முடி படுமாறு சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிடும்பொழுது அவரது திருவடியில் இவரது திருமுடித் துழாய் பொருந்து மாதலின். மவுலி - மௌலி யென்பதன் போலி.

இது - மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (உ)

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் றண்மலர்த்தா
ணடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி நங்களுக்கோர்
திடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறவிண்ணோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே.

(இ - ள்.) விண்ணோர் - தேவர்களெல்லாம், 'இனி - இனிமேல், நங்களுக்கு - நமக்கு, ஓர் திடம் உண்டு - ஓர் உறுதி உண்டு; அகந்தைக்கு இடம் உண்டு இலை - அகங்காரத்துக்கு இடம் உள்ளதில்லை,' என - என்று எண்ணி, தேற - அச்சந்தீர்ந்து தெளியும்படி, விடம் - விஷத்தை, உண்ட - புசித்த, கந்தர - திருக்கழுத்தையுடையவனே! சுந்தர - சோமசுந்தரக் கடவுளே! சுந்தர மீனவனே - சுந்தரபாண்டியனாக வடிவமெடுத்துவந்தவனே! அகம் - (எனது) மனம், தடம் முண்டகம் கண்டகம் தாளது என்று - குளத்தில் தோன்றுகின்ற தாமரைமலர் முட்களோடுகூடிய நாளத்தையுடையதென்று கருதி (அதனை ஒழித்து), நின் - உனது, நடம்-திருநடனஞ்செய்கிற, தாள்- திருவடியாகிய, தண் - குளிர்ச்சியான, முண்டகம் மலர் - தாமரைமலரை, கொண்டு - உட்கொண்டு, உய்ந்த ஆ-நற்கதிபெற்ற விதம் (என்னவியப்பு!)

தடம் - தடாகம். செந்தாமரைமலர் சிவபிரான்திருவடிக்குச் செம்மை மென்மை அழகுகளில் ஒருபடி ஒக்குமாயினும், அது கொடிய முள்ளின் சம்பந்தத்தை யுடையதாதலால் அதனை ஒழித்து என்க. தாளது - தாள் என்னுஞ் சினைப்பெயரடியாப் பிறந்து அகரச்சாரியையுந் துவ்விகுதியும் பெற்று வந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. கொள்ளுதல் - தியானித்தல். உய்தல் - உஜ்ஜீவித்தல். நடம் உண்டு அகம் அகம் கொண்டு எனப் பிரித்து - நினது நடத்தாளாகிய தண்மலரை உட்கொண்டு மனஞ் செருக்குக்கொண்டு என்றுமாம். 'உய்ந்தவா' என்பதற்கு, வினைமுற்று வருவித்து உரைக்கப் பட்டது. திடம் - த்ருடம் என்ற வடசொல்லின் விகாரம். அகந்தை - அஹந்தா என்னும்வடசொல்லின் விகாரம்; யானென்னுஞ் செருக்கு என்று பொருள். கந்தரம் - தலையைத் தரிப்பதென்று கழுத்துக்குக் காரணப்பெயர்; வடசொல். கந்தரசுந்தர என எடுத்து, கழுத்தின் அழகுடையவனே யெனவுமாம்.

இது - நிரையசைமுதலாய்ப் பதினேழெழுத்துப்பெற்றுவந்த கட்டளைக்கலித்துறை. (ஙு)

மீனேறுங்கொடிமுல்லைவிடுகொல்லைக்கடிமுல்லைவெள்ளைப்பள்ளை
யானேறும்வலனுயர்த்தவழகியசொக்கர்க்கிதுவுமழகிதேயோ
கானேறுங்குழல்சரியக்கர்ப்பூரவல்லிதலைகவிழ்ந்துநிற்ப
வூனேறுமுடைத்தலையிற்கடைப்பலிகொண்டூரூர்புக்குழலுமாறே.

(இ - ள்.) மீன் ஏறும் - சிறந்த மீனையும்,—முல்லை கொடி விடு கொல்லை - முல்லைக்கொடிகளைத் தளிர்க்கவிடுகிற கொல்லைகளையுடைய, கடி - சிறந்த, முல்லை - முல்லைநிலத்துக்குரிய தெய்வமாகிய (திருமாலின் அம்சமான), வெள்ளை - வெண்ணிறமுடைய, பள்ளை - பருத்த, ஆன் ஏறும் - ருஷபத்தையும், வலன் உயர்த்த - வெற்றிக்கொடியாக மேம்படுத்திய, அழகிய சொக்கர்க்கு - அழகிய சொக்கலிங்கமூர்த்திக்கு,—கர்ப்பூர வல்லி-

கருப்பூரவல்லி யென்னுந் திருநாமம்பூண்ட உமாதேவி. கான் ஏறும் குழல் சரிய - வாசனைமிகுந்த கூந்தல் தாழுமாறு, தலை கவிழ்ந்து நிற்ப - (தனது கணவன் பிச்சையெடுக்கப் புறப்பட்டதனு லுண்டாகிய மானக்கேட்டால்) தலை இறங்கி நிற்கும்படி, ஊன் ஏறும் முடை தலையில் - தசைபொருந்திய முடைநாற்றமுடைய பிரமகபாலத்தில், கடை பலி கொண்டு - இழிவாகிய பிச்சையை ஏற்றுக்கொண்டு, ஊர் ஊர் புக்கு - பல ஊர்களிலுஞ் சென்று, உழலும் ஆறு - திரிந்தலையும் விதமாகிய, இதுவும் - இத்தொழிலும். அழகிதேயோ - அழகையுடையதொன்றோ? (எ - று.)

வஞ்சப்புகழ்ச்சியணி. கருணையினுற் செய்த தாதலின் இதுவும் அவர்க்கு அழகியதேயா மென்று கருத்து.

ஒருகாலத்திற் பிரமன் தானே முதற்கடவுளென்றுகூறிச் செருக்குற்றிருக்கையில், சிவபிரான் தாமே முதல்வ ரென்று தெரிவிக்குமாறு திவ்வியசொரூபத்தோடு எதிரில் தோன்ற, அவ்வயனது ஐந்தாமுகம் 'எனது நெற்றியினின்றுந் தோன்றிய நீயோ முதல்வன்?' என்று கூறிச் சிவனைப் பழித்தவளவில், அப்பெருமான் தமது அம்சமாகிய வயிரவரை நோக்கியருள, அவர் தமது இடக்கைவிரலின் நகத்துநுனியால் அவ்வைந் தாந்தலையைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவர்கையில்ஒட்டிக் கொள்ளுதலும், உருத்திரமூர்த்தி தருமத்தை உலகத்தவர் அறிந்து அனுஷ்டிக்குமாறு தாம் அனுஷ்டித்துக்காட்டும்படி வயிரவரை நோக்கி 'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்' என்று உரைக்க, அவர் அங்ஙனமே பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று கைக்கபாலத்தோடு பிச்சையெடுத்தன ரென்பது, கதை. வயிரவரது தொழிலைப் பரமசிவன்மேலேற்றிக்கூறியது, அவர் சிவாம்சமாதலின்.

மீனேறும் ஆனேறும் உயர்த்த என இயையும். மீனேற்றைஉயர்த்தது. சுந்தரபாண்டியனுனபொழுது. ஆனேற்றைஉயர்த்தது. தாமானதன்மையில். முல்லைநிலத்திற்கு முல்லைக்கொடி கருப்பொருளாம். முல்லைநிலத்திற்குத் தெய்வந் திருமாலாதலை "மாயோன்மேய காடுறையுலகமும்" என்றதனுல் அறிக. வெள்ளை - பண்புப்பெயர். சொக்கர் - சுயம்புமூர்த்தியென்றபடி. சொக்கம் என்பது தூய்மை யென்னும் பொருளது; 'சொக்கவெள்ளி' என்னுமிடத்துப் போல: இதனை ஸ்வச்சம் என்னும் வடமொழியின் சிதைவென்னலாம். அன்றி, சொக்கு - அழகு அல்லது பேரழகு: அதனையுடையவர் சொக்கர் என்றலு முண்டு; பழையதிருவிளையாடற்புராணத்தில் "சிந்தையாழ்ந் திறைஞ்சி யேத்திச் சிறந்தசெய் தியாரும் போற்ற, வந்தநீ டாலயத்துக் கணியுற வியைந்திருந்த. சுந்தர வடிவங் கண்டே சொக்கெனு நாம மிக்க, வெந்தையே நினக்கல்லா தோர்தேவர்க் குமியையா தென்றான்" என்றது காண்க: சுந்தரரென்ற வடமொழித் திருநாமத்துக்கு ஏற்ற தமிழ்த்திருப்பெய ரிது வென்பர். இதுவும், உம் - இழிவுசிறப்பு. கான் - இயற்கைமணம். முடை-மாம்சத்தின் சம்பந்தமான துர்க்கந்தம். கடைப் பலி-வாயில்தோறுங் கொள்ளும்பிச்சை யென்றுமாம்.

இது - ஈற்றுச்சீரிரண்டும் மாச்சீரும். மற்றைநான்குங் காய்ச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (ச)

[இரங்கல்.]

மாற்றொன் றிலையென் மருந்துக்கந்தோ சொக்கர்மாலை கொடார்
கூற்றொன் றலவொருகோடி கெட்டேன் கொழுந்தொன் றுதென்றற்
காற்றொன் றிளம்பிறைக்கீற்றொன் றுகார்க்கட லொன் றுகண்ணீ
ரூற்றொன் றிவளுக்குயிரொன் றிலையுண் டுடம்பொன் றுமே.

(இ - ள்.) என் மருந்துக்கு - எனது தேவாமிருதம் போன்ற மகளுக்கு, மாற்று ஒன்று இலை-பரிகாரம் ஒன்று மில்லை: அந்தோ-ஐயோ! சொக்கர் - சொக்கநாதர், மாலை கொடார் - (இவளுக்குத் தாமணியும்) பூமாலையைத் தந்தருளுகின்றாரில்லை; கூற்று ஒன்று அல-(இவளுக்கு) யமனோ ஒன்றல்ல: ஒருகோடி - மிகப்பலவாம்; கெட்டேன்—! (அக்கூற்றுக்களாவை யென்றால்),—கொழுந்து ஒன்று தென்றல் காற்று ஒன்று-இளமைபொருந்திய தென்றற்காற்று ஒன்றும், இளம் பிறை கீற்று ஒன்று - இளமையான கோடுவடிவமாகிய பிறைச்சந்திரனொன்றும். கார் கடல் ஒன்று-கரிய கடல் ஒன்றுமாம்; கண்ணீர் ஊற்று ஒன்று இவளுக்கு - கண்ணீ ரூற்றுப்பொருந்திய இம்மகளுக்கு, உயிர் ஒன்று இலை - உயிர் ஒன்றுமில்லை; உடம்பு ஒன்றுமே உண்டு - உடம்பு ஒன்றுதானே உள்ளது; (எ - று.)

இது, தலைமகனோடு புணர்ந்து பிரிந்து பிரியாற்றாமையால் வருந்துகின்ற தலைமகளது வருத்தம்நோக்கிய செவிலித்தாய் இரங்கிக்கூறியது.

'மாற்றொன்றிலையென்மருந்துக்கு' என்றதில்-எனது மருந்துக்கு மாற்றில்லை யென்னும் பொருளுஞ் சொற்போக்கால் தொனிக்கின்றது. அந்தோ, கெட்டேன் - இரக்கச்சொற்கள். தலைமகனார் தாம்வாராராயினும் தாமணிந்த மாலையையாயினுங் கொடுத்தனுப்புவராயின் அதனைப் பெற்றுத் தரித்து இம்மகள் துயரந்தணிவளே என்னுங்கருத்தால். 'மாலைகொடார்' என்றாள். 'கொழுந்தொன்று தென்றல்,' 'ஊற்றொன் றிவள்' என்பவற்றில். ஒன்று - வினைத்தொகை. கொழுந்தொன்றுகாற்று - மந்தமாருதம். தென்றல் - தெற்கிலிருந்துவருவது. கொழுந்தொன்று எனத் தனியே எடுத்து - மாமரம்முதலியவற்றின் தளிர் ஒருயமனென்றும் பொருள்கொள்ளலாம். பிறை - பிறப்பது என இளஞ்சந்திரனுக்குக் காரணக்குறி. ஊறுவது - ஊற்று. மரணாந்தமான வருத்தத்தை அனுபவித்தல் தோன்ற, 'உயிரொன்றிலை' என்றது. தென்றற்காற்று முதலியன விரகிகளுக்குக் காமோத்தீபகமாய் மிக்கவருத்தத்தை விளைக்குமாதலின், அவை 'கூற்று' எனப்பட்டன.

இது - நேரசைமுதலாய் வந்த கட்டளைக்கலித்துறை. (௫)

ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங் குடம்பொன்றிலா
ரென்றே யறிந்தும் பினின்றே யிரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன் றிவெண்பொன் பசும்பொன் குயின்றேசெயு
மன்றே யிருக்கப் புறங்கா டரங்கா டவல்லாரையே.

(இ - ள்.) 'உடம்பு ஒன்றே - (பரமசிவனுக்கு உள்ளது) ஓர் உடம்பே; அங்கு இரண்டே இடும் பங்கு - அவ்வுடம்பொன்றிலும் இடுகிற பங்கு இரண்டாம்; உடம்பு ஒன்று இலார்-(தமக்கென்று சொந்தமாக) ஓருடம்பு இல்லாதவர் அவர்', என்றே அறிந்தும் - என்று நிச்சயமாகத் தெரிந்துநின்றும், (வெண்பொன் பசும்பொன்)-வெள்ளியாலும் பொன்னாலுமாகிய, குன்றே இரண்டு அன்றி - (கைலாசம் மேரு என்னும்) இரண்டு மலைகள்மாத்திரமே யல்லாமல், வெண்பொன் பசும்பொன் குயின்றே செயும் மன்றே - வெள்ளியினாலும் பொன்னாலும் அமைத்துச்செய்யப்பட்ட (வெள்ளியம்பலம் பொன்னம்பலம் என்னுஞ்) சபைகளும், இருக்க-தமக்குச் சொந்தமாயிருக்க, (அவற்றைவிட்டு). புறம் காடு அரங்கு - (ஊர்க்குப்) புறத்திலுள்ள மயானமாகிய நடனசாலையில், ஆட வல்லாரை - நர்த்தனஞ் செய்தல்வல்ல அச்சிவபிரானை, பின் நின்றே - (அவரது) பின்னே சென்று நின்றுகொண்டே, இரங்கு என்று-'(என்பக்கல்நீ) இரக்கங்கொண்டு கூடுவாயாக' என்று, இரக்கின்ற ஆ-(இவள்) வேண்டுகின்ற விதம் (என்ன)?(எ-று.)

இது - தலைமகனைக் கண்டு அளவிறந்த காதல் கொண்ட தலைமகளைக் குறித்துத் தோழி கூறியது.

'அங்கு இரண்டே இடும் பங்கு' என்றது - இடப்பங்கு ஒன்று அம்பிகைக்கும் வலப்பங்குஒன்று சிவனுக்குமாயிருத்தலை யுட்கொண்டு; அன்றியும், உமாதேவிக்கும் திருமாலுக்கும் பரமசிவனது உருவத்திற் பங்கு உண்மையைக் கொண் டாகவுமாம். உடம்பில்லாதவரும் விரும்பத்தக்கவற்றை விட்டுத் தகாதவற்றை விரும்பும் பித்துடையவரும் அருவருக்கத்தக்க இடுகாட்டில் ஆடுபவரு மாகிய ஒருவரை இவள்விரும்புதல் பேதைமை யென்றதாம். இதில், வஞ்சப்புகழ்ச்சியணி தோன்றும்.

'வெண்பொன்', 'பசும்பொன்' என்றவற்றைக் குன்றோடுங் கூட்டுக. கைலையும் மேருவும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடமாதலை "மேரு மந்தரங் கைலைபர்ப் பதமுதல் விடைமேல், வரு மந்தர நாடவனுறைபதி யனந்தம்"எனத் திருவிளையாடலிற் கூறியவாற்றால் அறிக. மகா மேருகிரியின் பலசிகரங்களுட் பிரதானமான மனோவதி வைகுண்டம் யசோவதி என்னும் மூன்றுசிகரங்கள் முறையே பிரம விஷ்ணு சங்கரர்களுக்கு இடமாயிருக்கு மென்பர்; இதனை "அந்தவரை யெட்டினுக்கு நடுவாக வணியுறவே, முந்திமூளைத் துளசிகர மூன்றுளவே மூவர்க்கும்." "தடவரையி னடுவுச்சி தனின் முளைத்த சிகரத்தின், வடிவுடைய மனோவதி தான் மலரயன்வாழ் புரியதற்குக். குடதிசையிற் கொடுமுடியில் வைகுண்டங் கோவிந்த, னிடம்வடபாற் குணதிசையில் யசோவதி சங்கரர் தடமே" எனச் சிவதருமோத்தரத்திற் காண்க. குயின்று, குயில் - பகுதி. வெள்ளியம்பலம்-திருமதுரையில். பொன்னம்பலம்-திருச்சிற்றம்பலத்தில். வல்லாரை இரக்கின்றவா என இயையும்.

இது - முதல்நாற்சீரும் மாச்சீர்களும், ஈற்றது புளிமாங்கனிச்சீருமாகிய விருத்தக்கலித்துறை. (௬)

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு விற்பீர்போல் மதுரை மூதூர்க், குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல் லாங் கொள்ளை கொள்கின் றீராற், பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்தது நன் றினீரிப் பாவை மார்க்குப், பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ கொள்வதற்கோ புறப்பட்டீரே.

(இ - ள்.) வலம் கொண்ட - வலத் திருக்கையிற் கொண்ட, மழு உடையீர் - மழுவென்னும் ஆயுதத்தை யுடையவரே! (நீர்), வளை கொண்டு விற்பீர் போல் - வளையல்களை எடுத்துக்கொண்டு விலைக்குவிற்பவர்போலப் (புறப்பட்டு வீதியில் வந்து), மதுரை மூதூர்-மதுரையென்னும் பழைய ஊரிலுள்ள, குலம் கொண்ட பெய் வளையார் - உயர்குலத்தில்தோன்றிய தரித்த வளையல்களையுடைய மகளிரது, கை வளை எல்லாம் - கையிலுள்ள வளையல்களை யெல்லாம், கொள்ளை கொள்கின்றீர்—; ஆல் - ஆதலால், பலம் கொண்ட செட்டு - பயனைக் கொண்ட வாணிகம், உமக்கு—, நன்று பலித்தது - நன்றாகப் பயன்பெற்றது; நீர்—,இ பாவைமார்க்கு - இந்த மகளிர்க்கு, பொலம் கொண்ட வரி வளைகள் - அழகைக்கொண்ட கோடுகளையுடைய வளையல்களை, விற்பதற்கோ - விற்பதற்காகவோ, கொள்வதற்கோ - கொள்ளைகொள்ளுதற்காகவோ, புறப்பட்டீர் - வெளிப்பட்டீர், (சொல்லும்); (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

இச்செய்யுளில்'கொள்ளைகொள்கின்றீர்'என நிகழ்காலமாகக்கூறியதனால், இது - மதுரையிற் சோமசுந்தரக்கடவுள் வளையல்விற்ற திருவிழாவைக் கண்டருள்கிறபொழுது அவரது வடிவழகை நோக்கி மையல்கொண்டாளொரு குலமகள் கூறியதாகச் செய்யப்பட்டதென்று அறிக;அன்றி, முன்னே வளையல்விற்றபொழுது அதனை வாங்குதற்கு வந்த வணிக

மகளிருள்ஒருத்தி கூறியதாகச் செய்யப்பட்டதென்றுங் கொள்ளலாம். அவரது அழகைக் கண்டமாத்திரத்தில் மகளிர்க்கெல்லாம் வேட்கைநோய் மிகுதியாய்உண்டாகி அதனால் உடம்பு மிகவுமிளைத்துக் கைவளைகள் கழன்றுவிழுந்துவிடுதலால், இங்ஙனங் கூறியது.

வலங் கொண்ட-வலிமைகொண்டஎன்றுமாம்; "மழுவலத்தினை"என்றார் காசிக்கலம்பகத்தும். மழு - எரியிரும்புப்படை. வளை - வளைந் திருப்பது. 'மூதூர்'என்றது,பிரளயகாலங்களிலும்அழியாமல்என்றுமுளதாகின்ற அவ்வூரின் உறுதிநிலையைக் கருதி. பலங் கொண்ட - உறுதிகொண்ட எனவுமாம். செட்டு - வணிகர்செயல்; இதனால் வணிகர்க்குச் செட்டியார்என்று பெயர். விற்பதுபோன்று கொள்ளுதல் பெரியஇலாபமாதலால், 'செட்டு உமக்குப் பலித்தது' எனப்பட்டது. பாவைமார் - சித்திரப்பிரதிமைபோல மிக அழகியவர்.

இது. நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (எ)

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடி
மட்டிருக்கு நீப வனத்தானே—கட்ட
விரும்பரவத் தானேநின் மென்மலர்த்தா ளன்றோ
தரும்பரவத் தானே தனை.

(இ - ள்.) பட்டு இருக்க - (உயர்ந்த) பட்டாடைகள் (பல) இருக்க, (அவற்றை விட்டு), தோல் அசைஇ - புலித்தோலையும் யானைத்தோலையும் தரித்துக்கொண்டு, பாண்டரங்கம் கூத்து ஆடும் - பாண்டரங்கமென்னும் பெயர்பெற்ற திருநடனத்தைச் செய்தருளுகின்ற,மட்டு இருக்கும் நீபவனத்தானே - வாசனை பொருந்திய கடம்பவனத்தில் எழுந்தருளியிருப்பவனே! கட்ட விரும்பு அரவத்தானே - (ஆபரணமாகத்) தரிக்க விரும்புகிற நாகங்களையுடையவனே! நின் மெல் மலர் தாள் - உனது மென்மையான தாமரைமலர்போலுந் திருவடி, பரவ-(தன்னை அடியார்கள்) வணங்கித்துதிக்க, (அவர்களுக்கு), தானே தனை தரும் - தானே தன்னைக் கொடுத்தருளும்; (எ - று.)—அன்றே - தேற்றம்; அப்பொழுதே யெனினுமாம்.

பரமசிவன் தம்மைமதியாத தாருகவனமுனிவர்களது மனநிலையைப் பரிசோதிக்கநினைந்து ஒருவிடவுருவங்கொண்டு அவர்கள்வீடுகள்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ்செய்து தம்மைநோக்கிக் காதல்கொண்ட அவர்கள் பத்தினிமார்களது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டுபொறுமற் கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்றுசெய்து அவ்வோமத் தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்றுவிடும்படி ஏவ, சிவபெருமான் தம்மேற் சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும்,பூதங்களைத் தமது கணங்களாகவுங் கொண்டு,மானைக் கையிலேந்தி, புலியைத்தோலை யுரித்து உடுத்து,யானையின் உட்சென்று உடல்பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்டு,முயலகனை முதுகிற் காலால் ஊன்றி,வெண்டலையைக் கையிற் பற்றிச் சடைமேல் அணிந்து,அவற்றையெல்லாம் பயனிலவாகச்செய்துவிட்டன ரென்பது, கதை. அருந்தவம்யற்றிப்பெருவரம்பெற்ற கஜாசுரனென்பவன் தேவர் முனிவர் முதலியோரை இடைவிடாது வருத்தித் துரத்த, அஞ்சியோடிய அவர்களது பிரார்த்தனையாற் பரமசிவன் தம்மையெதிர்த்துப்போர்செய்யவந்த அவ்வசுரனைக் காலால் உதைத்துத் தள்ளிக் கொன்று தோலை யுரித்துப் போர்த்தருளின ரென்ற கதையையுங் கொள்ளலாம்.

பாண்டரங்கம்-பதினொராடலுள் ஒன்று; அது-தேவர்களாகிய தேரில் முன்நின்றபிரமன் காணும்படி பைரவிவடிவாகிய பரமசிவன் திரிபுரசங்கார

காலத்தில் வெண்ணீற்றையணிந்து ஆடியது; "தேர்முனின்ற திசைமுகன் காணப், பாரதி யாடிய வியன்பாண் டரங்கம்," "பாண்டரங்க முக்கணு ளுடிற்று," "மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து, பண்டரங்க மாடுங்கால்," "ஏறமர் கடவுண் மூவெயி லெய்வுழிக், கூறுகூ றாகக் கொடியொடும் படையொடும்,வேறுவே றுருவின் விண்மிசைப் பரந்தன,ரவ் வழி யொளியொடு முருவொடுந் தோன்றித், தேர்மு னின்று திசைதலை பனிப்பச், சுவையுங் குறிப்பு மொழிவில தோன்றி. யவையவை யவ்வழி யாடின ளுட, மைந்தரு மகளிருந் தந்நிலை யழிய, மெய்ப்படு சுவையொடு கைப்படை மறப்பக், சடிய காலக் காற்றென வேற்றவன், படிநிலை திரியாப் பாண்டரங் கம்மே" என்பவற்றால் உணர்க.

பட்டிருக்க - இறந்துகிடக்க எனினும் அமையும். மட்டு - தேனுமாம். மதுரைத்திருப்பதி யுள்ள க்ஷேத்திரத்திற்குக் கடம்பவன மென்று பெயர்; ஆதியிற் கடம்பாரணியமாயிருந்தது பின்பு மதுரைநகராயிற்று. 'தாளன்றே தரும்பரவத்தானே தனை' என, திருவடியே வீடாயிருக்கு மென்றார்; அதனை "தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி" எனத் திருவாசகத்தும், "சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள் கைப் புலம்பிரிந் துறையும்" எனத் திருமுருகாற்றுப்படையிலும் வருவன வற்றாலும், பிறரும்திருவடியைக்கூறுமாற்றாலும் அறிக.

இது - மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (அ)

[இரங்கல்.]

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன் சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யா, மினியி ருப்பவொண் ணாதும டந்தைமீ ரிடம ருங்குஞ்ச டைமருங் கும்மிரு, கனியி ருக்குங்க டம்பவ னேசனார் கண்பு குந்தென்க ருத்துளி ருக்கவும், பனியி ருக்கும்பி றைக்கூற்ற முற்றியென்பாவி யாவியை வாய்மடுத் துண்பதே.

(இ - ள்.) மடந்தைமீர் - தோழிப்பெண்களே! இடம் மருங்கும் - (தமது)வாமபாகத்திலும், சடை மருங்கும்-ஜடையிடத்திலும், இரு கனி இருக்கும் - (அம்பிகையும் கங்கையுமென்னும்)இரண்டுமகளிர் இருக்கப்பெற்ற, கடம்பவன ஈசனார் - கடம்பவனத்திற்கு நாதராகிய சிவபிரான், கண் புகுந்து - கண்வழியாய் எனதுள்ளே பிரவேசித்து. என் கருத்துள் இருக்கவும் - எனது மனத்தில் நீங்காமல் வீற்றிருக்கவும், பனி இருக்கும் பிறை கூற்றம் - குளிர்ச்சிபொருந்திய இளஞ்சந்திரனாகிய யமன், முற்றி - வளைந்து, என் பாவி ஆவியை - எனது தீவினையையுடைய உயிரை,வாய் மடுத்து உண்பதே - வாயினுட்கொண்டு உண்ணுகின்றதே! தனி இருப்பவர் - (கணவனைப்பிரிந்து) தனியேயிருக்கும் மகளிர், என் படுவார் - என்ன வருத்தத்தையடைவார்? கெட்டேன்—! சற்றும் நீதி ஒன்று அற்ற-சிறிதும்நீதியொன் றில்லாத, இ ஊரில் - இந்தமதுரையில், யாம் இனி இருப்ப ஒண்ணாது - நாம் இனிமேலிருக்கத் தகாது; (எ - று.)

இது-பாங்கியைநோக்கித் தலைவி இரங்கிக் கூறியது; சந்திரோபாலம்பநம்.

கணவனைவிட்டுப்பிரிந்தவரைப் பிறைச்சந்திரன் வருத்துவது இயல்பே, தலைவனை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் மனத்தினுள்ளே வைத்துக் கொண்டிருக்கிற என்னையும் இவ்வூரிற் பிறை வருத்துகின்றது என்ற காரணத்தினால், 'சற்றும் நீதியொன்றற்ற இவ்வூர்' என்றாள்.

பிருங்கி யென்னும் முனிவர் பரமசிவனை மாத்திரம்பிரதக்ஷிணஞ்செய்யக் கண்டபார்வதிதேவி தன்பதியைநோக்கி 'முனிவர் என்னைப் பிரதக்ஷிணஞ் செய்யாமைக்கு ஏது என்ன?" என்று வினவ, உருத்திரமூர்த்தி 'இஷ்டசித்தி பெறவிரும்புபவர் உன்னையும், மோக்ஷம் பெறவிரும்புபவர் என்னையும் வழி படுவர்'என்ன. அதுகேட்ட தேவி பெருமானுடம்பிரியாதிருக்குமாறு தவம் புரிந்து வாமபாகம் பெற்றாரென்பது கதை.

ஒண்ணாது - ஒன்றாது என்பதன் மரூஉ. மடந்தையீர் - மடந்தைமார் என்பதன்விளி. கனி கன்னி என்பதன் தொகுத்தல்விகாரம். கூற்றை யுதைத்து அவன்செருக்கை யொழித்த கடவுள் மனத்திலிருக்கவும் சிறிதுமஞ்சாது கூற்றம் என்னைக் கொல்லுகின்றதே யென்று இரங்கி னாள். 'பாவியாவி' என்றது, தலைமகனைக் கூடியணைதற்கு ஏற்ற நல் வினையில்லாமைபற்றியும், கூடாமைக்கு ஏற்ற தீவினையுடைமை பற்றியு மாம். ஈற்றேகாரம், இரக்கப்பொருள் தோன்ற நின்றது.

இது - முதலில் மாச்சீரும் மற்றைமூன்றுங் கூவிளச்சீர்களும் பெரும் பாலும்பெற்று நாற்சீரால்வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும், அவ்வடிநான்குகொண்டு, அரையடிக்கு நிரையசைமுதலாயின் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும், நேரசைமுதலாயின்பதினொன்றும் பெற்று வந்த கட்டளைக்கலிப்பா. (௬)

[இரங்கல்.]

உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதையீர்—தண்ணிதழி
யிந்தா நிலமேவெனச்சொலா ரென்செய்வாண்
மந்தா நிலமே வரின்.

(இ - ள்.) பேதையீர் - பேதைமைக்குணமுடைய மகளிரே! ஒள் மது ரை சொக்கருக்கு - ஒளியையுடைய மதுரையி லெழுந்தருளியுள்ள சொக்க நாதர்க்கு, உண் அமுதம் நஞ்சு ஆகில் - உண்ணுமமிருதம்விஷமானால், என் பெண் அமுதம் நஞ்சேயோ - எனது பெண்ணாகிய அமிருதமும் விஷந் தானேயோ? (அவர்), 'தண் இதழி இந்தா - குளிர்ந்த கொன்றைமாலையா கிய இதனைத் தரப்பெற்றுக்கொள்; நில மேவு - நிலாவில் இன்புற்றிரு,' என சொலார் - என்று சொல்லியருளார்; மந்த அநிலமே வரின் - மந்தமாருதம் வந்தால், என் செய்வாள் - (இவள்) யாதுசெய்வாள்? (எ - று.)

மிகவருந்துவளே! என்று செவிலித்தாய் இரங்கிக்கூறியது.

ஓர்அமுதம் நஞ்சானால் மற்றையமுதமும் நஞ்சாகவேண்டுமோ! என இரங்கியபடி. 'உண்ணமுதநஞ்சாகில்' என்றது - பாற்கடலில் தோன்றிய விஷத்தைத் திருவமுதுசெய்ததை. இனி, முதலிரண்டடிக்கு - சொக்கர் க்கு விஷம் உண்ணுமமிருதமானதனால் எனது பெண்ணாகிய அமிருதம் விஷ மாயிற்றேயோ என்றும் பொருள்கொள்ளலாம். பேதைமைஎன்பது - அறிந் தும் அறியாதுபோலிருக்குந் தன்மை; இது, பெண்களுக்கு உரிய முக்கிய குணமாம். இந்தா - மரூஉமொழி; "இந்தா விஃதோ ரிளங்குழவி யென் றெடுத்துச், சிந்தாகுலந்தீரத் தேவிகையி லீந்தனனே" எனக் கந்தபுராண த்தும் இச்சொற்பிரயோகங் காண்க. நிலா என்னுங் குறியதன்கீழ் ஆ,குறுகி 'நில' என நின்றது. நிலம்மேவுஎனப்பிரித்து-தரையிற்பொருந்தியிரு என வும் பொருள்கொள்ளலாம். கொழுநனைப்பிரிந்த மகளிர்க்கு நிலாவில் வருந்துதலும், நிலத்தில் ஒருபடியாகப் பொருந்தாமையும் இயல்பு.

இது-மலர்என்னும்வாய்பாட்டால்முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா.

[புயவகுப்பு.]

(முதலடி.)

வரியளி பொதுளிய விதழியொ டமரர்
மடந்தையர் நீல வனம்புக் கிருந்தன
மதியக டுடைபட நெடுமுக டுடைய
நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன
மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டடுதிறன் முறைமுறை துதிசெய்
தணங்கவ ராடு துணங்கைக் கிணங்கின

(இரண்டாமடி.)

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற்றி நின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன
புலவெயி றயிறரு குருதியொ டுலவு
மடங்கலின் வீர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில்பண் ணொடுதமி ழுருவை
யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன

(மூன்றாமடி.)

உருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாண னுழைதுங்கத் திரிந்தன
வுருகிய மனமொடு தழுவியொர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன
வுறுதியொ டவண்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடைம ணுந்திச் சொரிந்தன
வுருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன

(நான்காமடி.)

தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
ததும்பிய வூற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே.

(இ - ள்.) வரி அளி பொதுளிய - இசைப்பாட்டையுடைய வண்டுகள் நெருங்கிமொய்த்த, இதழியொடு - கொன்றைப்பூமாலையோடு, அமரர் மடந்தையர் நீல வனம் - தெய்வப்பெண்களது கண்களாகிய கருநெய்தல்மல

ர்த்தொகுதியை, புக்கு இருந்தன - அடைந்திருந்தன; மதி அகடு உடைபட - சந்திரனது நடுவிடம் உடையுமாறு, நெடு முகடு அடைய - நீண்ட ஆகாயத்தின் மேல்முகட்டுச்சியை அடையும்படி, நிமிர்ந்த - உயர்ந்த, பொன்மேரு - பொன்மயமான மகாமேருகிரி, வணங்க - (வில்லாக) வளையும்படி, பொலிந்தன - விளங்கின; மழ கதிர் வெயில் விட - இளமையான சூரியனது வெயில்போன்ற ஒளியை எறியும்படி, ஒளி விடு - ஒளியை வீசுகிற, சுடர் - காந்தியையுடைய, வலயம் - தோள்வளையை, கொடு - அணிந்து, லோகம் அடங்க சுமந்தன - உலகமுழுவதையுந் தாங்கின; மதுகையொடு - (தோள்களினது) வலிமையையும், அடு திறல் - (பகைவரைக்) கொல்லுந் திறமையையும், முறை முறை - வரிசை வரிசையாக, துதி செய்து - தோத்திரம்பண்ணி, அணங்குஅவர் - பேய்கள், ஆடு - ஆடுகிற, துணங்கைக்கு - துணங்கையென்னுங் கூத்துக்கு, இணங்கின - இசைந்திருந்தன; பொரு சமரிடை - போர்செய்கிற யுத்தகளத்தில், எதிர் பிளிறும் - எதிரே கர்ச்சித்து வந்த, ஓர் களிறு - ஒருயானையை, பிளந்து - உடலைப்பிளந்து (அதன்தோலை), ஒருபோர்வை புறம் சுற்றி நின்றன - ஒருபோர்வையாக மேலேதரித்துநின்றன; புகை எழ - புகை கிளம்பும்படி, அழல் உமிழ் - நெருப்புப்பொறியை வீசுகிற, சுழல் விழி - சுழல்கிற கண்களையுடைய, உழுவை - புலியானது, வழங்கும் - தந்த, ஓர் ஆடை - (அதன் தோலாகிய) ஓர்ஆடையை, மருங்குற்கு அணிந்தன - அரைக்குடுத்தன; புலவு - துர்க்கந்தத்தையுடைய, எயிறு - கோரதந்தங்களோடும், அயில்தரு குருதியொடு - பருகுகின்ற இரத்தத்தோடும், உலவு - உலாவுகிற, மடங்கலின் - சிங்கத்தினது, வீரம் - பராக்கிரமம், ஒடுங்க - அடங்கும்படி, துரந்தன - செய்தன; புகலியர் குரிசில் - சீர்காழியிலுள்ளார்க்குத் தலைவராகிய சம்பந்தமூர்த்திநாயனாரது, பண்ணொடு - இசையோடு இசைந்த, தமிழ் - தமிழ்த்தேவாரத்திருப்பதிகத்தின், அருமை - அருமையை, அறிந்து —, ஒரு தாளம் - ஒரு தாளத்தை, வழங்க புகுந்தன - கொடுக்கத் தொடங்கின; உரும் இடி என - பேரிடிபோல, வெடிபட - கர்ச்சனையுண்டாக, எதிர் கறுவி நடந்து - எதிரே சீற்றங்கொண்டு சென்று, ஒரு பாணன் - சித்தனொருவன், ஒதுங்க - ஒழியும்படி, திரிந்தன - அவனுடம்பை அற வெட்டின; ஓர் கிழவி - பிராயம்முதிர்ந்தவளொருத்தி, உருகிய மனமொடு - அன்புகொண்ட மனத்துடனே, தழுவி - அணைத்து, கருந் துணிமேல் இடு - கரிய ஆடையி விட்ட, வெள் பிட்டு - வெண்மையான பிட்டுணவை, உகந்தன - விரும்பி எடுத்துண்டன; அவள் - அக்கிழவி, உறுதியொடு - (நாம் செய்யவேண்டும் வேலையை இவன் செய்து முடிப்பானென்னுந்) துணிவோடு, மனை புகும் வகை - வீட்டிற்குச் செல்லும்படி, கடிது - விரைவில், ஒரு கூடை மண் சுமந்து - ஒருகூடையில் மண்ணைச் சுமந்து எடுத்துப்போய், உந்தி சொரிந்தன - எழும்பிக் கொட்டின; உருவிய சுரிகையொடு - (கையிலெடுத்து)உருவின உடைவாளுடனே, எதிர் வரு - எதிரில் வருகிற, செழியர் - அரிமர்த்தன பாண்டியரது, பிரம்பு அடி - பிரம்பினடியை, காண - பார்த்ததனால், நடுங்கி குலைந்தன - மிகநடுங்கின; தரு சுவை அமுது எழ - (யாவர்க்குந்)தருகிற இனிமையையுடைய அமிருதத்தின் தன்மை பொருந்த, மதுரமது ஒழுகு - இன்சுவை மிகுந்து ஒழுகப்பெற்ற, பசுந் தமிழ் மாலை - பசிய தமிழ்த்தொடைப்பாமாலையை, நிரம்ப புனைந்தன - நிறைய அணிந்தன; தளிர் இயல் மலைமகள் - தளிர்போன்ற மென்மைத்தன்மையையுடைய இமயமலையின்மகளாகிய உமாதேவியினது, வரி வளை - கோடுகளையுடைய வளைகள், முழுகு - பதிவதனால் உண்டான, தழும்பு - தழும்பானது, அழகுஆக அழுந்த - ஓர் அழகாகப் பொருந்தும்படி, குழைந்தன - நெகிழ்ந்து காட்டின; தளர் நடை இடும்-

தளர்ந்த நடையை இடுகிற, இள மதலையின் - இளைய குமாரனாகிய முருகக்கடவுளினது, மழலை ததும்பிய ஊறல்-மழலைச்சொற்கள் நிரம்பிய வாயில் ஊறும் நீர், அசும்ப - மேலே துளிக்க, (அதனால்), கசிந்தன - ஈரமாயின; தமிழ் மதுரையில் - செந்தமிழ்வழங்கும் மதுரையிலே, ஒரு குமரியை மருவு - தடாதகையென்பாளொரு மகளை மணஞ்செய்துகூடிய, சவுந்தர மாறர்-சுந்தரபாண்டியராக வடிவெடுத்த சோமசுந்தரக்கடவுளினது, தட பொன் புயங்கள் - பெரிய அழகிய தோள்கள்; (எ - று.)

பிரபந்தத்தலைவனது தோள்களை வருணித்தல் புயவகுப்பாம்.

வரி - புள்ளிகளுமாம். அளி - வடசொல். தேவர்கள்மாலையில் வண்டு மொய்யாதாயினும், இங்கே இறைவனருளால் வண்டு மொய்த்தது என்க. அமரர்மடந்தையர் நீலவனம் புகுதல் - தேவமாதர்களின் கண்களால் எப்பொழுதுங் காணப்படுதல். மேருவை வில்லாக வளைத்தது, திரிபுரசங்கார காலத்தில். வணங்க-கீழ்ப்பட வெனினுமாம். 'லோகமடங்கச் சுமந்தன' என்றது - சுந்தரபாண்டியனா யரசாண்டதை; காத்தற்றொழிலை யாகவுமாம்: புயவலிமையால் உலகத்தைக்காத்தலைத் தோளிற் சுமத்த லென்பது, கவிசமயம். துதி - ஸ்துதி. துணங்கையாவது - விலாப்புறத்தில் இரண்டுகைகளையும் முடக்கி அடித்துக்கொண்டு ஆடுங் கூத்து; "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், தொடக்கிய நடையது துணங்கை யாகும்" என்பது காண்க: இனி, இரண்டு கைகளையும் விலாப்புறத்தில் முடக்கிவைத்து ஆடுங் கூத்து என்றுமாம்; "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றத், தொடக்கிய நடையது துணங்கையாகும்" என்றுங் கூறுவ ராதலால். 'துணங்கைக்கு இணங்கின' என்றது - பேய்கள் தமக்குத் தகுதியாக மிக்கஇரை கிடைத்தமையை நோக்கி மிகமகிழ்ந்து தோள்களின் பலபராக்கிரமங்களை முறையேசொல்லித் துதிக்கும்படி பகைவர்களையெல்லாங் கொன்று விளங்கின என்றபடி. சமர் - ஸமரம் என்னும் வடமொழியின் விகாரம். போர்வை-போர்க்கப்படுவது; வ்-எழுத்துப்பேறு, ஐ - செயப்படுபொருள்விகுதி. மருங்குற்கு - மருங்குலில் என உருபுமயக்கமாகவுங் கொள்ளலாம்.

திருமால் நரசிங்காவதார மெடுத்து இரணியனைச் சங்கரித்து அவனிரத்தமுழுவதையுங் குடித்து அதனால் மயங்கிச் செருக்குக்கொண்டு மூவுலகங்களுக்கும் வருத்தமிழைத்தபொழுது, அதனைப் பிரமன்முதலிய தேவர்களால் அறிந்த பரமசிவன் அவர்கள்வேண்டுகோளினாற் சரபவுருக்கொண்டு அச்சிங்கத்தைக் கொன்று அதன்தோலை மேற்கொண்டனர் என்பது, இங்குக்குறித்த கதை.

சூரபதுமனென்னும் அசுரன் தேவருலகை யடைந்து இந்திரன் முதலிய தேவர்களோடு போர்செய்ய, அவர்கள் தோல்வியடைந்து இனிப் பரமசிவனது திருவடியே நமக்குப் புகலிடமாவ தென்று கருதிச் சீர்காழியில் வந்து சிவபெருமானை வணங்கிப் பிரார்த்திக்க, அக்கடவுள் கருணைகூர்ந்து முருகக்கடவுளை அவர்களிடுக்கண்களையுமாறு உண்டாக்கி அனுப்பியருளியதனால், தேவர்களுக்குப் புகலிடமாய் நின்றமை பற்றி, சீர்காழிக்கு 'புகலி' என்று திருநாமம்.

சோழமண்டலத்திலே சீர்காழியிற் பிராமணகுலத்திற் கௌணியர் கோத்திரத்திற் சிவபாதவிருதயரது திருக்குமாரராய்ச் சிவபெருமானருளால் அவர்மனைவியாராகிய பகவதியாரென்பவரிடம் பிறந்து மூன்றுபிராயத்திலேசிவன்சக்தி என்னும் இருவராலும் ஆட்கொள்ளப்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையார், ஒருநாள் திருக்கோலக்கா வென்னுந் திருப்பதியை அடைந்து திருக்கோயிலை வலஞ்செய்து முன்னின்று கைகளால் ஒத்தறுத்

துத் திருப்பதிகம்பாடும்பொழுது, சிவபெருமான் திருவருள்புரிந்து ஸ்ரீபஞ்சாக்ஷரம்எழுதப்பட்டிருக்கிற பொற்றாளமொன்றைத் தந்தருளினரென்பது, தாளம்வழங்கிய கதை.

'நடந்தொருபாணனொதுங்கத்திரிந்தன' என்றது, அங்கம்வெட்டின திருவிளையாடலை உட்கொண்டு; அதனை மேற் பதின்மூன்றாம் பாட்டிற் காண்க. 'பாணன்'என்றதனால், அந்தச்சித்தன் பாணச்சாதியான்போலும். இனி, நடந்தொரு என்பதை-நடந்த ஒரு என்பதன் விகாரமாக் கொண்டு, எதிரே செருக்குக்கொண்டு ஒழுகிய பாணனொருவன் ஊரைவிட்டு ஓடிப்போம்படி செய்தனவென்றும் உரைகூறலாம்;என்றது-வடதேசத்திலிருந்து அநேகம் ஜயவிருதுகளுடனே தனதுமாணாக்கர்பலரோடும்மதுரைக்குவந்து அரசனாற்பலவாறு சன்மானிக்கப்பட்டு அளவுக்குவிஞ்சியசெருக்குக்கொண்டு திரிந்த ஏமநாதனென்பானொருவீணைப்பாடகனை வெல்லவிரும்பிய அம்மதுரை ராஜஸம்ஸ்தானபாடகனாகிய பாணபத்திரனென்பவனது வேண்டுகோளினாற் சோமசுந்தரக்கடவுள் ஒருவிறகுதலையனாச் சென்று ஏமநாதன்வீட்டையடைந்து வீணையைமீட்டி அதிற்சாதாரியென்னுமிராகத்தை அமைத்து வாசித்துக் கருவியுங்கண்டமும்ஒக்க யாவரும் வியக்குமாறுபாடி அவனை அன்றைக்கே நாணங்கொண்டு அஞ்சியோடிப்போம்படி செய்தனரென்னுங் கதையை உட்கொண்டது: இதனைத் திருவிளையாடலில் விறகுவிற்றபடலத்திற்காண்க. இதற்கு வேறுகதை கூறுவராயினும்,பொருந்துமாயிற் கொள்க.

கருந்துணிமேலிடு வெண்பிட்டு - சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்படத்தொடுத்த தொடைமுரண். சுரிகை-க்ஷுரிகா என்னும் வடமொழியின் சிதைவு. செழியன் - செழுமையையுடையவன். வையையாற்றை அணைத்தற்கு வந்தியென்பவளுக்கு வேலையாளாக அமர்ந்த சோமசுந்தரக்கடவுள் வேலையைச் செவ்வையாகச்செய்யாமல் அழிம்புசெய்ய, அதுகேட்டுக் கடுங்கோபங்கொண்ட பாண்டியன் அவரைத் தன்கைப் பொற்பிரம்பால் வீசி அடிக்க, அப்பெருமான் அந்தர்த்தானமாயினரென்பது, செழியர் பிரம்படிகாண நடுங்கிக்குலைந்த கதை. தமிழுக்குப் பசுமை-இனிமை. சொல்லால் தொடுத்த பாமாலையை, மலரால்தொடுக்கும் பூமாலையாகக் கூறினார். இள மதலை - இளமையான உக்கிரகுமாரபாண்டியனாகவுமாம். ஊறல் - ஊறுகின்றநீருக்குத் தொழிலாகுபெயர். மழலை - நிரம்பாமென்சொல்.

இது - பெரும்பாலும் நான்குஏழாஞ்சீர்கள் புளிமாச்சீர்களும், ஆறாஞ்சீர் தேமாச்சீரும், மற்றைய ஐந்துங் கருவிளச்சீர்களுமாக வந்தது காலடியாகவும், அஃது நான்குபெற்றது ஓரடியாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட முப்பத்திருசீராசிரியச்சந்தவிருத்தம். 'தனதன தனதன தன தன தனன தனந்தன தான தனந்தத் தனந்தன' என்பது, காலடிக்கு ஏற்ற சந்தக்குழிப்பு. (கக)

புயல்வண்ண மொய்குழல் பொன்வண்ணந் தன்வண்ணம்
போர்த்தடங்கண்,கயல்வண்ண மென்வண்ண மின்வண்ணமேயிடை
கன்னற்செந்நெல், வயல்வண்ணப் பண்ணை மதுரைப் பிரான்வெற்
பில் வஞ்சியன்னா, ளியல்வண்ண மிவ்வண்ண மென்னெஞ்ச மற்றவ்
விரும்பொழிலே.

(இ - ள்.) (நான் கண்ட மங்கையினது), மொய் குழல் - அடர்ந்த கூந்தல், புயல் வண்ணம் - மேகத்தின்நிறமாம்; தன் வண்ணம்-அவளது மேனியின்நிறம், பொன் வண்ணம்-பொன்னின் நிறமாம்; போர் தட கண்-போர் செய்தலில்வல்ல பெரிய கண்கள், கயல் வண்ணம்-கயல்மீனின்தன்மையனவாம்; இடை—, என் வண்ணம் மின் வண்ணமே - எனது தன்மையும்

மின்னலின் தன்மையுமாம்; கன்னல் செந்நெல் - கரும்புஞ் செந்நெலும்விளைகின்ற, வயல் - கழனிகளையுடைய, வண்ணம் - அழகிய, பண்ணை - மருதநிலஞ் சூழ்ந்த, மதுரை - திருமதுரையிலெழுந்தருளிய, பிரான் - சிவபெருமானது,வெற்பில் - மலையிலுள்ள ,வஞ்சி அன்னாள் - வஞ்சிக்கொடி போன்ற அவளது, இயல் வண்ணம் - வடிவத்தின் தன்மை, இ வண்ணம்-இத்தன்மையதாம்; அ இரும் பொழில்-அவளிருக்கும் பெரியசோலை, என் நெஞ்சம் - எனது மனமாம்; (எ - று.)

இச்செய்யுள்-தெய்வப்புணர்ச்சியின் இறுதியில் தலைமகளது அடைதற்கரிய தன்மையை நினைந்து வருந்துகின்ற தலைமகனை எதிர்ப்பட்டு உற்றதுரைக்கக்கேட்ட பாங்கன் 'நின்னாற்காணப்பட்டவடிவுக்கு இயலையும், இடத்தையுங் கூறுவாய்'என்று சொல்ல,அவனுக்குத் தலைமகன் தான்கண்ட மகளின் இயல் இது இடம் இது என்று கூறியது; இயலிடங்கூற லென்னுந் துறை.

குழலுக்குப் புயல் உவமை - கருமைக்கும், குளிர்ச்சிக்குமாம். 'போர்த் தடங்கண்' என்றது, ஆடவரை வருத்துந்தன்மைபற்றி. கண்ணுக்குக் கயல் உவமை - பிறழ்ச்சிக்கு. என்வண்ணம் இடை என்றது மெலிந்துள்ளஎனது தன்மைபோல இடை மெலிந்துள்ளதென்றபடி. இடைக்கு மின்னற்கொடி உவமை - நுண்மைக்கும், ஒளிக்கும். வஞ்சி உவமை-மெல்லியதாய் ஒல்கி ஒசிதற்கு. மற்று - அசை. 'என்நெஞ்சம் அவ்விரும்பொழில்' என்றதற்கு- அவளுள்ள சோலை என்மனம்போல அணித்தாயுள்ளதென்றும்,என்மனமும் பூஞ்சோலையும் அவளிருக்கின்ற இடமாமென்றுங் கருத்துக்கொள்க.

இது, நிரையசைமுதலாய் வந்த கட்டளைக்கலித்துறை. (கஉ)

[அம்மானை.]

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகி
லொருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
யானாலுங் காயமிலை யையரவர்க் கம்மானை.

(இ - ள்.) இருவருக்கும் - (அயன் அரி என்னும்) இரண்டுமூர்த்திகளுக்கும், காண்பு அரிய - காண்பதற்கு அருமையான, மதுரா ஈசனார்-மதுரைக்குத் தலைவராகிய, ஈசர் - சிவபெருமான்,விருது கட்டி - தனதுவெற்றியைப் புலப்படுத்தும் பேச்சைச் சொல்லி,அங்கம் வெட்டி - (ஒருசித்தனது) உடம்பிலுறுப்புக்களைத் தனித்தனிதுணித்து,வென்றனர்காண் - (அவனைச்) சயித்தவராவர்; அம்மானை—; (அவ்வாறு), விருது கட்டி - வெற்றிவார்த்தையைக் கூறி, அங்கம் வெட்டி - பகைவனுடம்பைத் துணித்து, வென்றனரே ஆம் ஆகில் - ஜயித்தவராவரேயானால், அருமை உடம்பு ஒன்று - காணுதற்கு அரிய (அவரது) உடம்பு ஒன்று, இரு கூறு ஆவது - இரண்டு துண்டாகுவது, ஏன் - என்ன? அம்மானை—; ஆனாலும் - உடம்பு ஒன்று இருகூறாயினும், ஐயர் அவர்க்கு - தலைவராகிய அப்பெருமானுக்கு, காயம் இலை - தழும்புஇல்லை; அம்மானை—; (எ - று.) — விருதுகட்டி - வெற்றிக் கொடியை நாட்டி எனவுமாம்.

மூன்றுமங்கையர் அம்மானையாடும்பொழுது பிரபந்தத்தலைவனது தன்மையைப்பற்றி வார்த்தையாடுவது, அம்மானையென்னும் உறுப்பின் இலக்கணமாம்.

இருவர்க்குங் காண்பரிய கதை:—தாம்தாம் கடவுளென்னுங் கருத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர்பகைமைபூண்ட பிரமவிஷ்ணுக்களின் மாறுபாட்டை ஒழிக்கும்பொருட்டுப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவில் ஒரு பெரிய அனற்பிழம்பினுருவமாய்த் தோன்றி நின்று 'இப்பிழம்பின் அடியையும் முடியையுந் தேடுமின்' என்ன, அவ்வடிமுடிகளில் ஒன்றை முன்னங் கண்டவரே முதல்வரென்று சொல்லிப் பிரமன் ஹம்ஸரூபியாய் முடியினைக் காண விண்பறந்தும் விஷ்ணு வராகரூபியாய் அடியினைக்காண மண்ணிடந்துஞ் சென்று பலநாள்தேடியும் முடிவுகண்டிலராய்ப்போயின ரென்பதாம்.

குலோத்துங்கபாண்டியன்காலத்தில் வேறொருதேசத்திலிருந்து மதுரைக்குவந்து பலர்க்கு வாள்வித்தைகற்றுக்கொடுத்துக்கொண்டு சோமசுந்தரக்கடவுளை வழிபட்டு மிகவுங்கிழவனாய் வாழ்கின்றானொரு வாளாசிரியனிடத்தில் வித்தைகற்றுத்தேர்ந்த சித்தனென்பவன் மிகச் செருக்குக்கொண்டு தன்னாசிரியனுக்கு மாறாகத் தானுமொரு கல்விக்கூட முண்டாக்கி அவன்மாணாக்கர்களையெல்லாம் மனம் வேறுபடுத்தித் தன்மாணாக்கராக்கி அவனதுவருவாயைக் குறைத்து அவனதுமனைவியையுங் கவர்ந்துகொள்ள விரும்பிப் பலநாளாகமுயன்று ஒருநாள் கணவனில்லாத வேளையில் அவள் கையைப்பற்றி இழுக்க, அவன்கருத்துக்கு இணங்காத அக்குருபத்தினியின் வருத்தத்தை ஒழித்தற்குச் சோமசுந்தரக்கடவுள் அவ்விருத்தகுருவின் வடிவுகொண்டு சென்று சித்தனைப் போர்க்குஅழைத்து ஊர்க்கு வெளியில் ஓரிடத்தில் அவனோடு சிலநேரம் பொருது அவனது நெஞ்சு நாக்கு கை கண்டம் முதலிய உறுப்பொவ்வொன்றையுந் தனித்தனி துணித்துத் தலையையும் அறுத்துக் கொன்றருளினு ரென்பது, அங்கம்வெட்டிய கதை.

மதுரா ஈசன் - மதுரேசன்; வடமொழிப்புணர்ச்சி. குணசந்தி. உடம்பொன்று இருகூறுவது என்றது-வலப்பாகம் சிவனதும். இடப்பாகம் சத்தியதுமாய் நிற்கிற அர்த்தநாரீசுவரவடிவத்தை. 'நாயமிலை' என்பதற்கு-ரூபமில்லை யென்பது, உள்ளுறைபொருள்.

இது, எல்லாச்சீருங் காய்ச்சீர்களாகிய நான்கடிகளால் தனித்துவந்து ஈற்றடி எண்சீராய்மிக்கு ஏனையடிகள் நாற்சீராய்நின்ற கலிந்தாழிசை.(கங)

[இரங்கல்.]

அம்மகோவெனும்விழுமழுமெழுந்துநின் றருவிநீர்விழிசோரும்,
விம்முமெங்குமெய்வெயர்த்துவெய்துயிர்க்குமென் மெல்லியலிவட்
கம்மா,வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு மணந்தவர் மலர்த்தாமந்;
தம்மினேனெனுந்தவப்பயன்பெரிதெனு நதந்தைதாளெறிந்தார்க்கே

(இ - ள்.) (இந்தப்பெண்), அம்மகோ எனும் - ஐயோ வென்பாள்; விழும் - கீழேவிழுவாள்; அழும் - புலம்புவாள்; எழுந்துநின்று - எழுந்திருந்து, அருவி நீர் விழி சோரும்-மலையருவிபோலக் கண்ணீர் பெருகுவாள்; விம்மும் - கலங்குவாள்; எங்கும் - இரங்குவாள்; மெய் வெயர்த்து - உடம்பு வேர்வையடைந்து, வெய்து உயிர்க்கும் - வெப்பமுடையதாகப் பெருமூச்சுவிடுவாள்; (தோழிமார்களை நோக்கி), 'மாதரீர் - மங்கையரே, வம்மின் - (இங்கு)வாருங்கள்: மதுரையும் குமரியும் மணந்தவர் - மதுராநகரியையுங் கன்னியாகுமரியையுங் கூடின சோமசுந்தரக்கடவுளது, மலர் தாமம் - பூமாலையை. தம்மின் - கொணர்ந்து கொடுங்கள்,' எனும் - என்பாள்; 'தந்தை தாள் எறிந்தார்க்கு - தந்தையின் பாதத்தை வெட்டிய சண்டேசுவரர்க்கு. தவம் பயன் - தவத்தின் பலன், பெரிது - பெரியதாம்.' எனும் - என்பாள்; மெல் இயல் இவட்கு - மென்மையானதன்மையை

யுடைய இம்மகளுக்கு, என் - என்ன துன்பம் நேர்ந்தது! (எ - று.)—அம்மா - ஈற்றசை; இரக்கவிடைச்சொல்லாகவுங் கொள்ளலாம்.

தலைமகளது துயரம்நோக்கிச் செவிலி இரங்கிஉரைத்தது, இச்செய்யுள்.

ஐயகோஎன்பதுபோல, அம்மகோஎன்பதும் - இரக்கமுணர்த்துவதோரிடைச்சொல். இனி, அம்ம கோ எனப் பிரித்து - அம்மவென்றும் கோவென்றும் தனித்தனி கூறி இரங்குவாளென்றும் பொருள் கொள்ளலாம்: கோ என்பது,ஒரு இரக்கச்சொல்; ஹா என்னும் வடமொழியின் திரிபென்பர். வம்மின், தம்மின்-வா தா என்னும் பகுதியடியாப் பிறந்த ஏவற்பன்மைமுற்றுக்கள். 'மதுரையும் குமரியும் மணந்தவர்' என்பதற்கு - மதுரை முதல் கன்னியாகுமரி ஈறாகப் பாண்டிநாட்டை ஆண்டவரென்று கருத்து; மதுரையைஆண்டு தடாதகையைமணஞ்செய்துகொண்டவரென்றுங் கொள்ளலாம். இதில், சொற்போக்கால்,இரண்டுமகளைப் புணர்ந்தவரென்னும் பொருளுந் தொனிக்கின்றது. தாமம் - வடசொல். ஓ - இரக்கம்.

'தவப்பயன் பெரிது' என்றது-பெருந்தவஞ்செய்தவர்க்கன்றிப் பிறர்க்குப் பரமசிவனது பூமாலைமுதலியன கிடைப்பதற்கரியன வென்னுங் கருத்தைக் கொண்டு. இங்ஙனங்கூறியது, அவர் செய்த தவம் இன்னதென்று தெரிந்தால் யானும் அந்தத்தவத்தைச்செய்து மாலையைப் பெறுவேனென்று கூறியதாம். சோழமண்டலத்தில் திருச்சேய்ஞலூரில் பிராமணஜாதியில் பவித்திரை வயிற்றில் தோன்றிய விசாரசருமரென்பவர், இடையர்கள் பசுக்களை யடிப்பதைப் பார்த்துப் பொறாமல் இரங்கி அவ்வூரிலுள்ள பசுக்களையெல்லாம் உடையவர்களின் சம்மதிபெற்றுத் தாமே மேய்த்துவருங்காலத்தில்,மண்ணியாற்றங்கரையில் மணலினால் ஒருசிவலிங்கத்தைத்தாபித்து அப்பசுக்களினின்றும்பாலைக்கறந்து குடங்குடமாகக்கொண்டுபோய்அன்போடு அபிஷேகஞ்செய்துவர, அதுதெரிந்து அவ்வூரவர்கள் அவரது தந்தையாகிய எச்சதத்தனிடத்திற் போய் 'உமதுபுத்திரன பசுக்களை அன்போடு மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்துமணலிற்சொரிந்துவிளையாடுகின்றான்' என்று சொல்லி முறையிட, அத்தத்தன் மைந்தனறியாதபடி மறைந்துசென்று அங்ஙனஞ் செய்தலைக் கண்டு மிகுந்த கோபங் கொண்டு விசாரசருமரைத் தன்கைத்தண்டினாற்பலமுறையடித்துத் திருமஞ்சனப்பாற்குடங்களைக் காலினாலிடறிச்சிந்த, அந்நாயனார் தமக்குமுன்கிடந்த ஒருகோலையெடுத்து உடனேமழுவாகிய அதனாற் சிவாபராதஞ்செய்த தந்தையின் கால்களை வெட்டிவிட்டு முன்போலவே அருச்சனைசெய்ய, பரமசிவன் பார்வதியோடு பிரதியக்ஷமாகித் தொண்டர்கட்கெல்லாம் அவரைத் தலைவராக்கித் தாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் அவர்க்கே கிடைக்கும்படி சண்டேசுவரபதத்தைத் தந்தருளினரென்பது கதையாதலால், 'தவப்பயன் பெரிது தந்தைதாளெறிந்தார்க்கு' என்றாள். இதனை "இல்வாழ்வை விட்டுக் கதிவேட் டடைபவர்க் கேழைபங்க, னல்வாழ்வை யேதருங் காசிப் பிரானறும் பூங்கடுக்கை.வல்வார் முலைக்கொம் பனைய் தந்தை தாண்மழு வாலெறிந்து, கொல்வா ரொருவருக் கல்லா தெவர்க்குங் கொளற்கரிதே" என்னுங் காசிக்கலம்பகக்கவியோடு ஒப்பிடுக.

இது-முதற்சீர் தேமாச்சீரும், ஈற்றுச்சீர் புளிமாங்காய்ச்சீரும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தம். (கச)

[மதங்கியார்.]

எறிவேலி ரண்டுமெனை துயிர்சோர வுண்டுலவ விகல்வா ளிரண்டு விசிறு, வெறிசேர்க டம்பவன மதுரேசர் முன்குலவி விளையாடு மின்கொ டியனீர், சிறுநான்ம ருங்குலிறு மிறுமாகொ

லென்றுசில சிலைநூபு ரஞ்சொன் முறையீ, டறியீரென் னெஞ்சு
மல மரவேசு ழன்றிடுநம் மதிவேக நன்று நவுமே.

(இ - ள்.) எறி வேல் இரண்டும் - எறிகின்ற வேலாயுதம்போலும் இரண்டுகண்களும், எனது உயிர் சோர-என்னுடைய உயிர் தளர்ச்சி பெற, உண்டு - அதனை உண்டு, உலவு - உலாவ, இகல் வாள் இரண்டு - வலிமையையுடைய இரண்டு வாளாயுதங்களை, விசிறு - விசிறிக்கொண்டு, வெறி சேர் கடம்ப வனம் மதுரா ஈசர் முன் - வாசனைபொருந்திய கடம்பவனமாகிய மதுரைக்குத் தலைவரான சிவபிரானது முன்னிலையில், குலவி-விளங்கி, விளையாடும் - விளையாடுகிற, மின் கொடி அனீர் - மின்னற்கொடி போன்றவர்களே! சிறு நூல் மருங்குல் - நுண்ணிய நூல்போன்ற இடை, இறும் இறும் ஆ(று)கொல்-(கூந்தல் கொங்கை முதலியவற்றின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல்) அடிக்கடி முறிவதுபோலும், என்று—, சில சிலை நூபுரம் - ஒலிக்கின்ற சில காற்சிலம்புகள், சொல் - சொல்லுகிற, முறையீடு-முறையிடுகையை, அறியீர்-நீங்கள் அறியாமல், என் நெஞ்சும் அலமர-(உங்களிடையோடு ஒப்ப) எனது மனமுங் கலங்கும்படி, சுழன்றிடும் - சுழலுகிற, நும் - நுமது, அதி வேகம் - மிகுந்தவிரைவு, அறவும் நன்று - மிகவும் நன்றாயிருந்தது; (எ - று.)

இரண்டுகைகளிலும் வாளையெடுத்துச் சுழற்றிக்கொண்டு தானுஞ் சுழன்று ஆடுவாளோர் இளமங்கையினிடத்துத் தனக்கு உண்டான வேட்கையை ஒருகாமுகன் வெளிப்படுத்திக்கூறுவதாகச் செய்யுள்செய்வது, மதங்கியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

வேல் - உவமையாகுபெயர். 'வேலிரண்டும் எனதுயிர்சோர உண்டுலவு' என்றது - கண்களிரண்டும் எனக்கு மிகுந்த காமநோயை உண்டாக்கிக்கொண்டு பிறழ என்றவாறு. முன் - சந்நிதானத்தில். குலவி - மகிழ்ச்சிகொண்டு எனினுமாம். இன் கொடி என்று எடுத்து - இனியகொடியென்றும் உரைக்கலாம். அனீர் - அன்னீர் என்பதன் தொகுத்தல். சிலை நூபுரம் - பருக்கைக்கற்களையுடைய நூபுரம் என்றுமாம். சிலம்புகள் காலிற்பொருந்தி யொலித்தலை 'இடை முறியும்முறியும்' என்று காலில்விழுந்து முறையிடுவனவாகக் குறித்தார். முறையீடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். அறியீர் - முற்றெச்சம்; வினையாலணையும்பெயராகவுங் கொள்ளலாம். நெஞ்சும், உம்மை - இறந்ததுதழுவிய எச்சம். அலமா, அலமா - பகுதி. நெஞ்சு அலமருதல் - வேட்கைமிகுதியாலும், இடைக்கு என்ன அபாயம் நேரிடுமோ வென்னுங் கவலையினாலு மென்க.

இது - முதல்மூன்றுநான்காஞ்சீர்கள் புளிமாங்காய்ச்சீர்களும், இரண்டு நான்காஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறுவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௩௫)

அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்படா
நிறந்தந்த கும்ப மதயானை யுநெடுந் தேர்ப்பரப்பு
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருந்
புறந்தந்த வாவணங் கேநன்று காமவெம் போரினுக்கே.

(இ - ள்.) அணங்கே - திருமகள்போன்றவளே! அறம் தந்த - எல்லாத்தருமங்களும் அமைந்த, பொன் பொலி-செல்வத்தோடு கூடி விளங்குகிற, கூடல் - மதுரையி லெழுந்தருளிய, பிரான் - சிவபிரானது, வெற்பில்-மலையிலே,—அம் பொன் படாம் - அழகியபொன்னாற்சித்திரித்த ஆடையையுடைய, நிறம் தந்த - நல்லநிறம்பொருந்திய, கும்பம் - மஸ்தகங்களையுடைய, மத யானையும் - மதத்தையுடைய யானையையும், நெடுந் தேர்

பரப்பும் - விசாலமான தேர்த்தட்டையும். மறம் தந்த வில் படை - வலிமை பொருந்திய வில்லாகிய ஆயுதத்தையும், வாள் படையும் - வாளாயுதத்தை யும், கொண்டும் - வைத்துக்கொண்டும், காமம் வெம் போரினுக்கு - வெவ் விய காமப்போரில். ஒரு நீ - ஒப்பற்ற நீ, புறம் தந்த ஆ - புறங்கொடுத்த விதம், நன்று - நன்றாயிருந்தது! (எ - று.)

யானை தேர் வில் வாள் முதலிய போர்க்குஉரிய படைகளைக்கொண்டு ள்ள நீ அவையொன்றுமில்லாத என்னுடன் செய்யுங் காமப்போரில் தோற் றல் தகுதியன் றெனக் கூறியவாறும்; இது - தலைமகளைப்புணர்ந்த தலை மகன் அவளைநோக்கி அவள் புணர்ச்சியில் மெலிந்ததைக் கூறியது; புறங் காட்டல் என்னுந் துறை.

அறந்தந்த கூடல் எனஇயையும்; அறந்தந்தபொன் என இயைத்து - முப்பத்திரண்டுதருமங்களையுஞ் செய்தருளின உமாதேவி ஒருபாற் பொருந் தப்பெற்ற கூடற்கடவுள் எனவுமாம். வெற்பிற் புறந்தந்தவா எனஇயையும்; வெற்பிலணங்கே எனக்கூட்டினும் அமையும்; வெற்பினுள்ள யானை யென் றும் இயைக்கலாம்: வெற்புப்போன்ற யானையெனவுமாம். பொற்படாம் - பீதாம்பரம். யானை என்றது கொங்கையையும், தேர்ப்பரப்பு என்றது அல் குலையும், விற்படை என்றது புருவத்தையும், வாட்படை என்றது கண்ணை யும் எனக் காண்க. படாம்-படம்என்னும் வடமொழியின் திரிபு. யானைக்கு ஏற்பப் படாம் முகபடாமென்றும், கொங்கைக்கு ஏற்பப் படாம் கச்சு என் றுங் கொள்க. நிறந்தந்த - மார்பிற்பொருந்திய என்றும உரைப்பர். கொங் கைக்கு யானையின் மஸ்தகமும் மருப்பும் உவமை கூறப்படும். மற்று - அசை. அணங்கு - உவமையாகுபெயர். நன்று - பிறகுறிப்பு. போரினுக்கு - உருபுமயக்கம். "மதவே மடனும் வலியு மாகும்" என்னுஞ் சூத்திரத்தின்படி மதஎன்னுமுரிச்சொல் வலிமையுணர்த்துமாதலால், மதயானையென்றதற்கு- வலியயானை யென்றும் உரைக்கலாம். காமப்போர் - கலவிப்போர். வெம் போர் - விரும்பப்படும் போருமாம்.

இது. நிரையசைமுதலதான கட்டளைக்கலித்துறை. (௧௬)

போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத்துப் புழைக்கை நால்வாய்க், காரானைப் போர்வைதழீஇ வெள்ளானைக் கருள்சுரந்த கடவுளேயோ, வோரானை முனைப்போருக் கொரு கணைதொட் டெய்திடுநீ ரொருத்தி கொங்கை, யீரானை முனைப் போர்க்கும் வல்லீரே லொருகணைதொட் டெய்தி டீரே.

(இ - ள்.) போர் ஆனை - போர்செய்யவல்ல எட்டுயானைகள், முதுகு உறைப்ப - முதுகுவருந்தும்படி, பொறை ஆற்றும் - தாங்குதலைச் செய்கி ன்ற, சினகரத்து - விமானத்திலே, புழை கை - துளையையுடைய துதிக்கை யையும், நால் வாய் - தொங்குகின்ற வாயையுமுடைய, கார் - கரிய. ஆனை- யானையினது, போர்வை - தோலாகிய போர்வையை, தழீஇ - போர்த்துக் கொண்டு, வெள் ஆனைக்கு - வெண்மைநிறத்தையுடைய ஐராவதயானைக்கு. அருள் சுரந்த - கருணைசெய்த, கடவுளேயோ—! ஓர் ஆனை முனை போரு க்கு-ஒருயானையின் உக்கிரமான போரை முடித்தற்கு, ஒரு கணை தொட்டு எய்திடும் - ஓர் அம்பைத் தொடுத்து எய்துவிட்ட, நீர்—, வல்லீர்எல் - வல் லவராவீரானால், ஒருத்தி கொங்கை - ஒருமகளினது தனங்களாகிய, ஈர் ஆனை - இரண்டுயானைகளின், முனை போர்க்கும் - முனைந்துசெய்யும் போ ரை முடித்தற்கும், ஒரு கணை தொட்டு எய்திடீர் - ஓர்அம்பைத்தொடுத்து எய்துவிடும்; (எ - று.)

இது, பாங்கி தலைவனை வரைந்தெய்தும்படி வற்புறுத்தியது.

எட்டுயானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்துநான்குசிவ கணங்களுஞ் சுமக்கும்படி மயனால் நிருமிக்கப்பட்டு இந்திரனாற் கொணர்ந்து சமர்ப்பிக்கப்பட்டதொரு விண்ணிழிவிமானத்திற் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருத்தலால், 'போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத்து' என்றார்; இதனை, திருவிளையாடற்புராணத்தில் இந்திரன்பழி தீர்த்த படலத்தில் "கிரியெட்டு மெனமழையைக் கிழித்தெட்டும் புழைக்கைமதிக் கீற்றுக் கோட்டுக், கரியெட்டுஞ் சினமடங்க ளுலெட்டு மெட்டெட்டுக் கணமுந் தாங்க, விரியெட்டுத் திசைபரப்ப மயனிருமித் துதவிய வவ் விமானஞ் சாத்தி, யரியெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பா னாயினனே" என்பதனா லறிக.

சினகரம் - ஜிநக்ருஹம் என்னும் வடசொல்லின் சிதைவு; ஜிநாலயத்தின் பெயராகிய இது, பின்பு எல்லா ஆலயங்கட்கும் பொதுப்பெயராய் வழங்கலாயிற்று: இதனை அஜநக்ருஹம் என்றதன் சிதைவென்பாரு முளர்; அஜநன் - கடவுள். நால் வாய் - வினைத்தொகை; நாலுகின்ற வாய் என விரியும்.

வெள்ளானைக்கு அருள்சுரந்த கதை:—காசியிற் சிவபூசைசெய்து கொண்டிருந்த துருவாசமுனிவர், அச்சிவபிரானருளால் அவர்முடியிலிருப்பதொரு தாமரைமலர் தமதுகையில் விழப்பெற்று மிக மனங்களித்துத் தேவலோகஞ்சென்று, ஐராவதத்தின்மே லேறிப் பவனிவருகிற தேவேந்திரனைக் கண்டு அம்மலரை அவன்கையிற் கொடுக்க, அதனை அவன் செல்வச்செருக்கால் மதியாமல் ஒருகைநீட்டி வாங்கி யானைத்தலைமேல் வைத்தவளவில், அவ்யானை அம்மலரைத் துதிக்கையாலிழுத்துத் தள்ளிக் காலால்மிதித்துத் தேய்த்துவிட்டதனால், முனிவர் மிகக்கோபித்து அவ் வைராவதத்தைக் காட்டானையாய்விடும்படி சபித்து, உடனே தேவர்கள் வேண்டுகோளினாற் சிறிதுசினந்தணிந்து, நூறுவருஷங் கழிந்தபின்பு பழைய வடிவமாய்விடும்படி அனுக்கிரகஞ் செய்து போக, அங்ஙனமே ஐராவதம் காட்டானையாகிப் பலகாலங் கானகத்தில்திரிந்தபின்பு ஒருநாள் கடம்பவனத்தில் வந்து பொற்றாமரைக்குளத்தில் நீராடிப் பூர்வஜந்மஞானம் பெற்றுப் பரமசிவத்தைப் பூசித்து அவரருளால் முன்னையவடிவம் அடைந்து வானுலகஞ்சென்றதென்பது; இதனைத் திருவிளையாடலில் வெள்ளையானைசாபந்தீர்த்தபடலத்திற் காண்க.

ஓரானைப்போருக்கு ஒருகணைதொட்டெய்த கதை:—சோழராஜனொருவனது விருப்பத்தாற் சமணர்கள் அபிசாரயாகஞ்செய்து அதினின்றுஎழுப்பினதொருமதயானையை விக்கிரமபாண்டியனைக்கொல்லும்படி ஏவியனுப்ப, யாவருமஞ்சும்படிவந்தஅவ்யானையை அவ்வரசன்வேண்டுகோளாற் சோமசுந்தரக்கடவுள்ஒருவில்வீரனதுவடிவமாய்த்தோன்றி நாரசிங்கபாணத்தைத் தொடுத்துக்கொன்று விழுத்தினர் என்பதாம்; இதனைத் திருவிளையாடலில் யானையெய்த படலத்திற் காண்க.

கடவுளேயோ—ஏ, ஓ இரண்டும் - விளியுருபு; ஓ கடவுளே என இயைத்தலும், ஓகாரத்தை அசையாகக் கொள்ளுதலும் ஒன்று. எய்திடும், எய் - பகுதி. நான்காமடிக்குக் கருத்து - இத்தலைமகளைப் பாணிக்கிரகணஞ்செய்து கூடிக் கலப்பீராக என்பதாம். கொங்கையிரானை முனைப் போர் என்றது - கலவிப்போரை. ஈற்றடியில், 'கணை' என்றது - மன்மதபாணம்; இங்கே, தாமரைமலர்: அதுபோன்ற கையைக் குறிப்பால் உணர்த்திற்று. கைகளைப் பிடித்து எய்தும் என்றதாம். எய்திடீர் என்ற ஏவற்

பன்மை வினைமுற்றுக்கு - சேரும் என்று பொருள்கொள்ளும்பொழுது, எய்து - பகுதியாம்.

இக்கவி, நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (௩எ)

எய்யாது நின்றொருவ னெய்வதுவு மிளையாட னிளைப்பும் புந்தி
வையாதார் வைதனுறின் மதியார்தா மதித்திடுதல் வழக்கேயன்றே
மெய்யாத மெய்கடிந்து வீடாத வீடெய்தி வீழார் வீழச்
செய்யாள்செய் சரக்கறையாந் திருவால வாயிலுறை செல்வ னோ.

(இ - ள்.) மெய்யாத - (நிலையில்லாமையாற்) பொய்யாகிய, மெய்-உடம்பை, கடிந்து - விட்டு, வீடாத வீடு எய்தி - அழியாத முத்தியுலகத்தை அடைந்து, வீழார்-மீண்டும் இங்கே வராத முக்தர்களும், வீழ-விரும்பும்படி, செய்யாள் செய் சரக்குஅறை ஆம் - செம்மைநிறத்தை யுடையவளான இலக்குமி செய்த எல்லாப்பொருள்களும்நிரம்பியிருப்பதோர் அறைபோன்ற, திருவாலவாயில் - மதுரையில், உறை - எழுந்தருளியிருக்கின்ற, செல்வனே - எல்லாச்செல்வமுமுடைய கடவுளே!—ஒருவன்-மன்மதன், எய்யாது நின்று - அறியப்படாமல் நின்று, எய்வதுவும் - அம்பெய்வதையும், இளையாள்தன்-இளம்பருவமுடையளான இம்மகளது, இளைப்பும் - வருத்தத்தையும், புந்தி வையாதார் - அறிவில் வைக்காத சுற்றத்தார் முதலியோர், வைதல் உறின் - பழிக்கத்தொடங்கினால், மதியார் - முற்றறிவையுடையவராகிய நீர், மதித்திடுதல் - (இப்பெண்ணின் வருத்தத்தை) எண்ணிவந்துகூடுதல், வழக்கே அன்றே - நீதியேயாமன்றோ? (எ - று.)

இது, வந்து தலைமகளைக் கூடுமாறு பாங்கி தலைவனுக்குக் கூறியது.

எய்யாமை-அறியாமையென்னும்பொருளுணர்த்துவதோர்உரிச்சொல்; "எய்யாமையே யறியாமையே." மன்மதன் அநங்கனாதலால், 'எய்யாதுநின்று' எனப்பட்டது. எய்யாது என்னும் எதிர்மறைவினையெச்சத்திற்கு - இளையாமல் என்றும் பொருள் கொள்ளலாம். புந்தி வையாதார் - அறியாதவர் என்றபடி. மன்மதனெய்வதையும் மகளிளைப்பதையும் அறியாதவர் வைதால் அறிந்தவராகிய நீர் மதித்துக்கூடவேண்டுவது முறையா மென்றாள். 'மதியார்' என்பதற்கு - பிறையுடையவ ரென்றும் பொருள். மதியார்-முன்னிலையைப் படர்க்கையாகச் சொன்ன இடவழுவமைதி. முதலிரண்டடியில் - இவ்வளவு காலமாய் எய்யாமல்நின்ற ஒருவன் எய்வதையும் இளையாதவளொருத்தி இளைத்தலையும் வையாதவர் சிலர் வைதலையுஞ் செய்தலை நோக்குமிடத்து மதியாதவர் மதிக்கவேண்டுவது கிரமமாம் என்று ஒருவகைச் சமத்காரந் தோன்றவும்,விரோதாபாசமென்னும் அலங்காரம் பொருந்தவுங் கூறியவாறு காண்க. முத்தியுலகத்திற்கு அழிவில்லை யாதலாலும், அங்குச்சென்றுபேரின்பநுகர்பவர் மீண்டுவருதலில்லாமையாலும், 'வீடாத வீடெய்தி வீழார்' எனப்பட்டனர். அவர்களும் விரும்ப எனவே, மதுரையின் சிறப்புக் கூறியவாறாம்.

செய்யாள் - செம்மைநிறமுடையவள். திருமகள் செய்த சரக்கறையா மென்றது, எல்லாச்செல்வமும் நிரம்பியதென்றவாறு. அறை - சிறுவீடு. மதுரைநகரத்தின் பழைய எல்லையை அறிவித்தல் வேண்டுமென வேண்டிய வங்கியசேகரபாண்டியனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டசோமசுந்தரக்கடவுள் தமது கையில் ஆபரணமாக அணிந்துள்ள நாகத்தை நோக்கி 'நீ வரையறுத்துக் காட்டு'என்றுகட்டளையிட ,அது தன்வாலும்வாயும் ஒன்றுபடும்படி உடம்புவளைந்து அந்நகரைச் சுற்றிநின்று அதன் எல்லையைக் காட்டியதனால், மதுரை 'ஆலவாய்'எனப் பெயர்பெற்றது; இதனைத் திருவிளையாடற் புராணத்துத் திருவாலவாயானபடலத்திற் காண்க: ஆலவாய் என்னும்

பெயர்க்கு-விஷத்தை வாயிலுடையது என்பது பொருள்; இது, ஹாலாஸ்யம் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு: வேற்றுமைத்தொகையன்மொழி. பாம்பின்பெயர், இலக்கணையால் நகரத்துக்கு வழங்கப்பட்டது. வீடு என்பதற்கு - கருமபந்தத்தினின்று ஆன்மா விடுபடுவது என்று பொருள்; இது, முக்தி என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. தாம் - அசை.

இது, நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (கஅ)

ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவெமை யாளுடைய
பச்சை மயிலோ, டீறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர மேச
ரொரு சற்று முணரார், நீறுபடு துட்டமதன் வேறுருவெ டுத்தலரி
னீள்சிலைகு னித்து வழிதே, னூறுகணை தொட்டுவெளி யேசமர்
விளைப்பதுமென் னூழ்வினைப லித்த துவுமே.

(இ - ள்.) ஆறு - கங்காநதியை, தலை வைத்த - தன்னிடம் அடக்கி வைத்த, முடி - திருமுடியில், நீள் நிலவு - நீண்ட சந்திரன், எறிப்ப-ஒளியை வீசும்படி, எமை ஆள் உடைய பச்சைமயிலோடு - எம்மை அடிமையாக வுடைய பசுமைநிறமுள்ள மயில்போன்ற உமாதேவியுடனே, ஈறு முதல் அற்ற மதுராபுரியில் - நாசமும் உற்பத்தியு மில்லாமல் எப்பொழுதும் நித்தியமாயுள்ள திருமதுரையில், உற்ற - எழுந்தருளிய, பரம ஈசர் - (யாவர்க்குஞ்) சிறந்த தலைவராகிய சோமசுந்தரக்கடவுள்,—நீறு படு - (தமது நெற்றிக்கண்ணின் நெருப்பினால் முன்புஎரிக்கப்பட்டுச்) சாம்பராய்விட்ட, துட்ட மதன் - கொடியவனாகிய மன்மதன், வேறு உரு எடுத்து - வேறே வடிவத்தை எடுத்துவந்து, அலரின் நீள் சிலை - புஷ்பமாகிய நீண்டவில்லை, குனித்து - வளைத்து, வழி தேன் ஊறு கணை - பெருகுந்தன்மையையுடைய தேன்சுரக்கும் மலர்களாகியஅம்புகளை, தொட்டு - பிரயோகித்து, வெளியே சமர் விளைப்பதும் - வெளிப்படப் போர்செய்வதையும், என் ஊழ்வினை பலித்ததுவும் - எனது முற்பிறப்பிற் செய்த கருமம் பயன்பட்டுவிட்டதையும், ஒரு சற்றும் உணரார் - மிகச்சிறிதும் அறியார்போலும்; (எ - று.)

அறிவராயின் உடனே வந்து என்னைக் கூடாதிருப்பரோவென்பதாம். இது, தலைவிகூற்று.

நீள்நிலவு - வட்டவடிவமின்றிப் பிறைக்கோட்டின்வடிவமான சந்திரன்; அன்றி, நெடுந்தூரம்விளங்குகின்ற சந்திரன். கங்காநதியையும் சந்திரனையும் முடிமீதுகொண்டுள்ளதனால் தாபந்தணிந்துநிற்பவ ரானதனாலும், இறைவியுடன்உறைகின்றதனாலும், வேறொருத்தியான எனதுவிரகதாபத்தையுணர்ந்தில ரென நயங்காண்க. பச்சை-பண்புப்பெயர். 'ஈறுமுதலற்ற' என்பதைப் பரமேசருக்குக்கூட்டுதலுமாம். திருக்கைலாயத்திற் பரமசிவன் சனகர்முதலியநால்வர்க்கு ஞானநெறியையுணர்த்துதல்நிமித்தம் தாம்மௌனநிலையில்நிற்கையிற் பிரமனேவலால் மலரம்புகளை எய்து தமது தவத்தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்துநெற்றிக்கண்ணை விழித்து அதன்நெருப்பிற்கு இரையாய் உடம்பு எரிந்துபோம்படி செய்தன ரென்னுங் கதையை உட்கொண்டு, 'நீறுபடுதுட்டமதன்' என்றார். துட்டன்-துஷ்டன். மதன்என்பதை மதநன் அல்லது மந்மதன் என்னும் வடசொல்லின் விகாரமாகக் கொள்க. 'வேறுருவெடுத்து' என்றது - உருவமில்லாமல் விற்பிடித்தலும் அம்பெய்தலும் முதலியன கூடாவென்னுங் கருத்தை உட்கொண்டு. 'அலரினீள்சிலை குனித்து' என்றது - புஷ்பதந்வா என்னும் மன்மதனது வடமொழிப்பெயரின் பொருள்பற்றி; காமநூலென்னும் பூவிசேடம் காமனுக்கு வில்லாமென்று தமிழ்நூலிலும், மந்மததந்த்ரமென்னும் புஷ்பம் மன்மதனுக்கு வில்லாமென்று வடநூலிலுங் கூறுமாறு உணர்க. வழி தேன் - விளை

த்தொகை. 'தேனூறுகணை' எனவே, மலர்க்கணைஎன்பது விளங்கிற்று. பலித்ததுவும் - குற்றியலுகரம் கெடாது பொதுவிதியால் வகரவுடம்படுமெய் பெற்றுநின்றது.

இது - முதலைந்துங் கூவிளங்காய்ச்சீரும், ஆறுவது தேமாச்சீரும், எழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௧௬)

[தழை.]

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியன்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின் களபக்கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினாய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே.

(இ - ள்.) என் - எனது, வாள் கணினாய் - வாளாயுதம்போன்ற கண்களையுடையவளே! வில் ஆர் புயத்து-விற் பொருந்திய தோளையுடைய, அண்ணல் - பெருந்தன்மையுடையனான தலைவன், தண் அளியால் - குளிர்ச்சியான கருணையினால், தந்த - கொடுத்த, மெல் தழை - மென்மையான இத்தழை, பல்லார் உயிர்க்கு உயிர் ஆம் - எல்லாருடைய உயிர்களுக்கும் உயிராகிய, மதுரேசர் - மதுரைநாயகராகிய சோமசுந்தரர், அ பாண்டியன் முன் - அந்த அபிஷேகபாண்டியனது முன்னிலையில், கல்லானைக்கு இட்ட - கல்லினாலாகியயானை உண்ணுமாறு அதற்குக் கொடுத்த, கரும்பு அன்று காண் - கருப்பந்தழைபோன்றதொன் றன்றே; நின் - உனது, களபம் கொங்கை - கலவைச்சந்தனம் அணிந்த, தனமாகிய, வல் ஆனைக்கே - வலிய யானைக்கே, இட - இடுதற்பொருட்டு, வாய்த்தது போலும் - அமைந்ததுபோலும்; (எ - று.)

இது, 'இத்தழையை வாங்கிக்கொண்டு என்குறையை முடித்தருள்வீராம்' என்று தலைமகன் வேண்டிக் கையுறையாகக் கொணர்ந்துகொடுத்த தழையை அருமையாக ஏற்றுக்கொண்ட தோழி தலைமகளிடஞ் சென்று அவள்குறிப்பையறிந்து 'இத்தழை நமக்கு எளியதொன்றன்று, இதனை ஏற்றுக்கொள்வாயாக' எனத் தழையை வியந்துஉரைத்தது: தழையேற்பித்தல் என்னுந் துறை. தழை - மலர்களை இடையிட்டுத் தளிர்களாற்செய்வதோர் உடைவிசேடம். இங்ஙனந் தொடுத்த தழையை ஆடையாகஉடுத்துக்கொள்ளுதல், குறிஞ்சிநிலத்துமகளிரியல்பு.

'உயிர்க்குயிராம்' என்றது-உடலினுள்ளே உயிர் தங்கியிருத்தல்போலச் சீவான்மாவினுட் பரமான்மா அந்தரான்மாவாய்த் தங்கி யிருக்கின்றன ரென்றபடி. அபிஷேகபாண்டியன்காலத்திற் சோமசுந்தரக்கடவுள் எல்லாம் வல்லசித்தருருவாகிப் பல விசித்திரமானசெய்கைகளைச் செய்ய, அதுகேள்வியுற்ற பாண்டியன் அவரைத் தேவாலயத்தின்உட்பிரதக்ஷிணத்தில் வடமேற்கு மூலையிற் கண்டு கடவுளென்றுஅறியாமல் மனிதரென்றுகருதி ஒரு பெருங்கரும்பைக் கையிற் கொண்டு அவர்க்குக் காட்டி 'இதனை இவ்விந்திரவிமானத்தைச்சுமக்கின்ற கல்லானைகளுள் இவ்யானை உண்ணுமாறு செய்வீரானால் உமதுசகலசித்தி விளங்கும்' என்றுஇயம்ப, அதற்குச்சம்மதித்துச் சித்தர் கடைக்கண்ணாற் சைகைகாட்ட, உடனே அக்கல்லானை உயிர் பெற்றுக் கைநீட்டிக் கரும்பைவாங்கித் தின்றதென்பது, கதை; இதனைத் திருவிளையாடற்புராணத்திற் கல்லானைக்குக் கரும்பருத்திய படலத்திற் காண்க. 'கரும்பன்று காண்' என்றது, அக்கரும்பினுஞ் சிறந்தது இது வென்றபடி. காண் - தேற்றம்; முன்னிலையசையாகவுங் கொள்ளலாம். களபம் என்று யானைக்கன்றுக்குப் பெயர் உண்மையால், ஆனைக்களபமெனக் கூட்டு

தலுமாம். வில் - வில்வன்மையுமாம்; ஒளியாகவுமாம். என்லாட்கணிஞய் - எனது கண்போன்றவளே யெனவுமாம்.

இது, நேரசைமுதலதாகிய கட்டளைக்கலித்துறை. (௨0)

தழைத்திடுங் கூடலார், குழைத்துடன் கூடலார்,
பிழைத்திடுங் கூடலே, யிழைத்திடுங் கூடலே.

(இ - ள்.) தழைத்திடும் கூடலார் - செழித்துள்ள மதுரையில் எழுந்தருளியிருப்பவரான சோமசுந்தரர், குழைத்து - (என்னை) மகிழ்ச்செய்து, உடன் கூடலார்-விரைவில்வந்து (என்னுடன்) கூடுகிறாரில்லை; இழைத்திடும்- இழைக்கின்ற, கூடல் - கூடற்சுழியானது, கூடல் பிழைத்திடும் - கூடுதலைத் தவறும்; (எ - று.)—யான் என்செய்வேன்! என்பதாம்.

தலைவனைப்பிரிந்து கடற்கரையில் தனியே இரங்குகின்றளொரு தலைமகள் 'என்னைப்பிரிந்த தலைமகன் மீண்டும் என்பக்கல் வருவானே வாரானே' எனக் கூடற்சுழியிழைத்துப் பார்த்துக்கொண்டு வருந்தாநின்று கூறியது. இது; 'கூடலிழைத்தல்' என்னுந் துறை.

கூடலிழைத்தலாவது - வட்டமாகக் கோட்டைக் கீறி அதனுள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து இரண்டிரண்டுசுழியாகக் கூட்டிக் கணக்கிட்டு இரட்டைப்பட்டால் தலைவர் வந்துகூடுவா ரென்றும் ஒற்றைப்பட்டால் அவர் வந்துகூடா ரென்றுங் கருதிக் குறிபார்ப்பதொரு மரபாம் என்று அறிக; கண்களைமூடிக்கொண்டுமணலில் வட்டமாகக்கோட்டைக்கீறி அது தொடங்கியஇடமும் சேர்ந்தஇடமும் ஒன்றுபட்டுச்சரிவரக்கூடியிருக்குமானல் தலைவன் வந்துதன்னைக்கூடுதல்கூடு மென்றும் அங்ஙனம்வட்டங்கூடாதிருப்பின் அவன் வந்து கூடுவதில்லை யென்றுங் குறிபார்க்கும் மரபும் உண்டு. இரண்டாமடியில், கூடலார் என்னுஞ்சொல் - எதிர்மறைப் பலர்பால்வினைமுற்று. இனி, பின்னிரண்டடிக்கு - கடற்கரையிலிழைக்குங் கூடற்சுழி பிழைத்திடுமென்று பொருள்கூறுவாருமுளர்; அப்பொருளுக்கு, மூன்றுமடியிற் கூடல் என்பது - நதிகளோடு கடல் கூடுமிடமாகிய கரை யென்று உணர்க.

கூடல் என நான்கடியிலும் வந்தது,மடக்கு; வடநூலார் யமகமென்பர்.

இது - முதற்சீர் கருவிளச்சீரும், மற்றது கூவிளச்சீருமாகிய குறளடி நான்குகொண்ட வஞ்சித்துறை. (௨௧)

கூட லம்பதி கோயில்கொண், டாடல் கொண்டவ ராடலே,
யூட லும்முடம் பொன்றிலே, கூடலும்மொரு கொம்பரோ.

(இ - ள்.) ஒரு கொம்பு - பூங்கொம்புபோல்வாளொரு மகள், ஊடலும் - பிணங்குதலும், கூடலும் - (அவ்வூடல் நீங்கிப்) புணர்தலும், உடம்பு ஒன்றிலே - ஒருடம்பிலேயாம்; (ஆதலால்), கூடல் அம் பதி - அழகிய மதுரைத்திருப்பதியில், கோயில் கொண்டு - திருக்கோயில்கொண்டு எழுந்தருளி, ஆடல் கொண்டவர் - திருவிளையாடல்களைக் கொண்டருளிய சிவபெருமானது,ஆடலே - திருவிளையாட்டு என்ன வியப்புடையது! (எ - று.)

ஆடலே என்பதில் ஏகாரம்,வியப்புத்தோன்ற நின்றது. 'ஊடலுங் கூடலும் உடம்பொன்றிலே' என்றது, உமை ஒருபாகமும் மகேசுவரர் ஒரு பாகமுமாகிய வடிவத்தின் நிலைமையைக் கருதி. ஊடல் - பிரணயகலகம். அரோ - ஈற்றசை. கொம்பர் என எடுத்து, குற்றியலுகரப்போலியாகவுங் கொள்ளலாம். இனி, இக்கவிக்கு - கூடற்பதியிற் கோயில்கொண்டு ஆடல் கொண்டவரது விளையாட்டு எத்தன்மையதென்றால் ஒருகொம்பு உடம்பொன்றிலே ஊடுதலுங் கூடுதலுமாம் என அந்வயித்து உரைத்தலுமாம்.

இது - முதற்சீர் தேமாச்சீரும், மற்றை யிரண்டுங் கூவிளச்சீர்களுமா கிய சீர்தடி நான்கு கொண்ட வஞ்சிவிருத்தம். (உ௨)

[ஊசல்.]

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கம்மக் கலனுஞ் சிலம்புங் கலந்தார்ப்ப
மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
யம்மென் மருங்கொசிய வாடுகபொன் னூச
லழகெறிக்கும் பூண்முலையீ ராடுகபொன் னூசல்.

(இ - ள்.) கொம்மை குவடு அசைய - பருத்த தனங்களாகிய மலைச் சிகரங்கள் அசையவும், கூர் விழி வேல் போர் ஆட - கூர்மையையுடைய கண்களாகிய வேல் போர்செய்யவும், கம்மம் சிலம்பும் கலனும் கலந்து ஆர்ப்ப - அரியதொழில்களையுடைய சிலம்பு என்னுங் காலணியும் மற்றை யாபரணங்களும் கலந்து ஆரவாரிக்கவும், அம் மெல் மருங்கு ஒசிய - அழ கிய மெல்லிய இடை துவளவும், மும்மை தமிழ் மதுரை முக்கண் அப்பன் சீர் பாடி - மூன்றுதமிழ்களும்வழங்குகின்ற மதுரையி லெழுந்தரு ளிய மூன்று திருக்கண்களையுடைய கடவுளின் புகழைப் பாடி, பொன் ஊசல் ஆடுக - பொன்னாலாகிய ஊஞ்சலாடுவீராக; அழகு எறிக்கும் பூண் முலையீர் - அழகிய ஒளிவீசுகின்ற ஆபரணங்களை யணிந்த தனங்களை யுடையவர்களே! பொன் ஊசல் ஆடுக—; (எ - று.)

ஊசலாவது - ஆசிரியவிருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல், ஆடிரூசல், ஆடாமோவூசல், ஆடுகவூசல் என ஒன்றுல்முடிவுறக் கூறுவது.

விழியை 'வேல்' என்றது, கூர்மையாலும் ஆடவரை வருத்துதலா லும் என்க. 'அது போராட' என்றது, கண்பிறழ்தலை யுட்கொண்டு. கம்மம் - கம்மாளர் செய்யும் விசித்திர வேலைப்பாடு; இது, கர்மம் என் னும் வடசொல்லின் விகாரம்: "கம்மப்பல்கலம்" என்றார் சிந்தாமணி யாரும். மும்மைத் தமிழ் - இயல் இசை நாடகம் என்பன. ஆர்த்தல் - பே ரொலிசெய்தல். வலக்கண் சூரியனும் இடக்கண் சந்திரனும் நெற்றிக்கண் அக்கினியுமாக இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுட ரென்க. பொன் னூசல் - அழகிய ஊச லென்றுமாம்.

இது, மாச்சீருங் காய்ச்சீரும் விரவிய நான்கடிகளால் தனித்துவந்து ஈற்றடிஎண்சீராய்மிக்கு ஏனையடிகள் நாற்சீராய்நின்ற வெண்டளையால்வந்த கலித்தாழிசை. (உ௩)

[களி.]

அழகுற்றதொர் மதுரேசனை யமரேசனெ னக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதொர் சான்றுண்மைப யின்றார்தின முயன்றாற்
பலமுண்டதி னலமுண்டவ ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது வீடுந்தர வற்றா
லெழுதாததொர் திருமந்திர மிளம்பாளையு ளுண்டே.

(இ - ள்.) அழகு உற்றது ஓர் மதுரா ஈசனை - அழகு பொருந்திய தாகிய ஒப்பற்ற திருமதுரைக்குத் தலைவனான சோமசுந்தரக் கடவுளை, அமர ஈசன் என - தேவர்கட்கெல்லாந் தலைவரென்று எண்ணி, கொண் டாடும் - கொண்டாடுவதனு லாகின்ற, களியால்-களிப்பினல், நின்று இசை

-பாடும் - கீதம்பாடிநிற்கிற, களியேம் - கட்குடியராவோம், யாம்—; அப்பா—! நாம்—, பொழுதைக்கு இரு கலம் ஊறு பைந் தேறல் பனையினை-வேளைக்கு இரண்டுபாத்திரம் நிரம்பச் சுரக்கின்ற பசிய மதுவையுடைய பனைமரத்தை. போற்றி - சிறப்பித்து, குருமூர்த்திக்கு இணை சாற்றத் தகும் - சிறந்த ஆசாரியமூர்த்திக்கு ஒப்பாகச் சொல்லத்தகும்; (எவ்வாறென்றால்),—பழுது அற்றது ஓர் சான்றாண்மை பயின்றார் - குற்றமற்றதாகியதொரு சான்றாண்மைக்குணத்தைக் கடைப்பிடித்தவர்கள், தினம் - நாள்தோறும், முயன்றால் - (குருமூர்த்திபக்கல் வந்தனைவழிபாடுகளால்) முயற்சி செய்தால். பலம் உண்டு - தக்கபயன் கிடைப்பதாம்; அதின் நலம் உண்டவர் அறிவார் - அப்பயனது நன்மையை அனுபவித்தவர் அறிவார்கள்; பல கலை நூல் எழுதப்படும் ஏடு உண்டு - (அக்குருவினிடம்) பல கலைஞான நூல்கள் எழுதப்பட்ட ஏட்டுச்சுவடி உள்ளதாம்; அது வீடும் தர வற்று-அச்சுவடி முத்தியையுங் கொடுக்கவல்லது; எழுதாதது ஓர் திருமந்திரம் - எழுதப்படாததொரு சிறந்த வேதமந்திரம், இளம்பாளையுள்—, உண்டு-(அவ்வாசிரியனிடம்) உள்ளதாம்; (எ - று.)—பின்னிரண்டடிக்கு வெளிப்படையான பொருள்:—குற்றமற்றதாகியதொரு சான்றாண்மையென்னுஞ் சாதியின்தன்மையைப் பொருந்திய சான்றார் பனைமரத்தில் நாடோறுங் காலந் தவறாமல் முயற்சி செய்தால் தக்க பயனாகிய மது கிடைக்கும்; அதன் நன்மையை அதனைப்பருகியவர்மாத்திரமே அறிவார்கள்; அன்றியும் அப்பனையிலே பல கல்விநூல்களை எழுதத்தக்க ஓலையாகிய ஏடு உண்டு, அவ்வோலையோடு குடிசையையும் அமைக்கவல்லது; இன்னும் எழுதாததொரு திருமந்திரமாகிய மது இளையபாளையிலே உண்டு என்பதாம்.

கட்குடியர் அக்கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, களியென்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

அமரேசன் என கொண்டு ஆடும் களியால் எனப்பிரித்து - தேவநாயகனென்று உட்கொண்டு ஆனந்தக்கூத்தாடுதற்குக் காரணமான களிப்பினாலென்றுமாம். களியேம் - தன்மைப்பன்மைக் குறிப்புமுற்று. பொழுதைக்கு, ஐ - சாரியை. கலம்-மண்பாத்திரம். பைந்தேறல் - புதிய மது; குளிர்ந்த மது என்றுமாம். 'அப்பா' என்றது, கட்குடியர் முதலியோர் விளிப்பதோர் சொல்விழுக்காடு. சான்றாண்மை - பலகுணங்களாலும் நிறைந்து அவற்றைஆளுதற்றன்மை; சான்று ஆண்மை எனப் பிரிக்க: 'பல குணங்களாலும்' என்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. எழுதாததொர் மந்திரம் என்றது, வேதம் எழுதாக்கிளவியாய்ச் சுருதியென்று வழங்குவதாதலின். மந்திரம் என்று கள்ளுக்கும்பெயர்; மதிரா என்னும் வடமொழியின் சிதைவுபோலும். பலம் உண்டு என்பதற்கு - நல்லவலிமை யுண்டு எனவும் பொருள்கொள்ளலாம். வற்று - வல் என்னும் பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. அதில் நலம் உண்டு அவர் அறிவார் என்றும் பிரிக்கலாம். கலம் - ஓரளவுமாம். 'இளம்பாளையுள்' என்பதற்கு இரண்டுபொருள் இல்லை.

இது - நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீரும், மற்றை ஆறும் மாங்கனிச்சீருமாகிய எண்சீராசிரியவிருத்தம். (உச)

உண்பது நஞ்சமா லுறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத நின்னதே பெரும வேள்கணை
யெண்பது கோடிமே லெவன்றொ டுப்பதே.

(இ - ள்.) பெரும - மகிமையையுடையவனே! உண்பது நஞ்சம் - (இம்மகளுக்கு) உண்ணும்உணவு விஷமாம்; உறக்கம் இல்லை- தூக்கம் இல்லை;

கூடலே வள் பதி வாய்த்தது என்னும் - கூடலென்னும் மதுரையே தனக்குச் சிறந்தவாசஞ்செய்யுமிடமாகப் பொருந்திய தென்பாள்; (ஆதலால்), பெண் பதம்-இப்பெண்ணின் நிலைமை, நின்னதே - உனது நிலைமையைப் போன்றதேயாம்; (இங்ஙனமிருக்கவும்), வேள் - மன்மதன், (சிறிதும் அஞ்சாமல்), எண்பது கோடி மேல் - எண்பதுகோடியென்னுந் தொகையினும் அதிகமாக, கணை - அம்புகளை, தொடுப்பது - (இவள்மேற்)பிரயோகிப்பது, எவன் - என்ன? (எ - று.)

இது, தலைவனைப்பிரிந்த தலைவியது நிலைமையைத் தோழி தலைவனுக்குக் கூறியது.

இம்மகளின் தன்மை மன்மதனையெரித்த உனது நிலைமையை ஒத்திருக்கவும்,மன்மதன் அச்சமின்றி மலரம்புகளைத்தொடுத்துவருத்துவது ஏனென்றாள். முதலிரண்டடி - பரமசிவனுக்கும், தலைவிக்கும் சிலேடை: பரமசிவன்மேற் செல்லும்போது, விஷம் உண்பதாம் ஒடுக்கம் இல்லையாம் மதுரையே தாம் எழுந்தருளியிருத்தற்குச் சிறந்ததலமாக வாய்த்ததாம் என்று பொருள். இரண்டாமடி - சிறந்த தலைவனை முன்கூடியதே (யான் இப்பொழுதுபடும் அவஸ்தைக்குக் காரணமாக) வாய்த்த தென்பாள் என்றும் பொருள்படும். உறக்கம் - தொழிற்பெயர்; உறங்கு - பகுதி. பெண்பத நின்னதே என்பதில், நீ பாண்டியநாட்டை ஆண்ட பதவி மனைவியாகிய தடாதகையின் பதவியேயா மென்னும் பொருள் தொனிக்கின்றது. பெரும - பெருமா னென்பதன் விளி; ஈறுகெட்டதும், ஈற்றயல்குறுகியதும் - விளியுருபு. எண்பதுகோடி - மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்று எடுத்துக்காட்டியவாறு; திருக்குறளில் "எழுபது கோடி யுறும்" என்பது போல. மேல் - இம்மகளின்மேல் எனினும் அமையும்.

இது - மூன்றுஞ்சீர் மாச்சீரும். மற்றமூன்றும் விளச்சீர்களு மாகிய கலிவிருத்தம். (உ௫)

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
யெடுத்து நின்றது மாயவ ராகமே
யெயிறி றுத்தது மாயவ ராகமே
யடுப்ப தந்தணர் பன்னக ராசியே
யணிவ துஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர்க டம்பவ னத்தையே
கொள்வ தையர்க டம்பவ னத்தையே.

(இ - ள்.) தொடுத்து அணிந்ததும் - (சிவபிரான் மாலையாகத்) தொடுத்துத் தரித்ததும், அம் புத்தர் அங்கமே - அழகிய தேவர்களது உடம்பையேயாம்; சுமந்திருந்ததும் - (அவர் திருமுடிமேல்) தரித்திருந்ததும், அம்பு தரங்கமே - அலைகளையுடைய (கங்காநதியின்) நீரையேயாம்; எடுத்து நின்றதும்-தரித்துநின்றதும், மாயவர் ஆகமே-மாயையையுடையவரான திருமாலின் உடம்பையேயாம்; மாய - ஒழியும்படி, எயிறு இறுத்ததும்-கோட்டை முறித்ததும், வராகமே - பன்றியையேயாம்; அடுப்பது - பொருந்தியிருப்பது, ஆசி - (யாவர்க்கும்) ஆசீர்வாதஞ்செய்தலையுடைய, அந்தணர் - பிராமணர்களது, பல் நகர் - பல நகரத்தேயாம்; அணிவதும் - (ஆபரணமாகத்) தரிப்பதும், சில பன்னக ராசியே - சில நாகங்களின் கூட்டத்தையேயாம்; கொடுப்பது - (பல அடியார்களுக்குத்) தருவது, ஐயர்கள்தம் பவனத்தையே - தேவர்களது உலகத்தையேயாம்; ஐயர் - சிறந்த அக்கடவுள்,

கொள்வது - (தாம்எழுந்தருளியிருக்கும் இடமாகக்) கொள்வது, கடம்ப வனத்தையே - கடம்பாரணியமாகிய மதுரையையேயாம்; (எ - று.)

'தொடுத்தணிந்தது மம்புதரங்கமே' என்றது - சருவசங்காரகாலந் தோறும் ஒடுங்கிய பிரமனது தலைகளையும் திருமாலின் எலும்புகளையும் சிவபிரான் மாலையாகத்தொடுத்து, எப்பொழுதும் அழிவில்லாமல் எஞ்சிநின்ற பொருள் தாம்ஒருவரே யென்பதை அப்பிரமனாதியோர் அறிந்து வழிபட்டு நற்கதியடைதற்பொருட்டு ஆபரணமாக அணிகின்றன ரென்னும் வரலாற்றை உட்கொண்டு. புதர் என்னும் வடசொல்லுக்கு - அறிவுடையவ ரென்று பொருள். அம்பு தரங்க மென்பதும், அந்தணர் பன்னக ராசியே யென்பதும்-பொருட்பொருத்தத்திற்கு ஏற்பச் சொல்மாற்றப்பட்டன.

திருமால் வாமநாவதாரமெடுத்து மாவலிபக்கல் மூவடிமண்வேண்டி அதுகொடுத்தற்கு அவன் இணங்கியவுடனே திரிவிக்கிரமனாகவளர்ந்து அனைத்துலகையும் ஈரடியிலொடுக்கி அளந்து அவனதுமுடியின்மே லோரடியை வைத்து அவன்செருக்கை அடக்கியவுடனே அளவில்லாதகளிப்பைக்கொண்டு அனைத்துலகிற்கும் அழிவுசெய்யத் தொடங்க, அதுநோக்கிக் கடுஞ்சினங்கொண்ட முக்கட்கடவுள் தமதுஅம்சமாகிய வயிரவரை நோக்கியருள, அவர் விரைந்துசென்று விஷ்ணுமூர்த்தியின் வலியை அடக்கி அவரது தோலை உரித்துச் சட்டையாகத்தரித்து உடல்முழுமெலும்பையுஞ் சூலத்தில் ஏற்றன ரென்னுங் கதைபற்றி. 'எடுத்துநின்றது மாயவராகமே' என்றார்; அன்றியும், பரமசிவன் யுகாந்தகாலத்தில் ஒடுங்குகிற திருமாலின் உருவத்தைப் பிரமனுருவத்துடனே தமதுஉருவத்தில்ஏற்றுக்கொண்டு காக்கின்றன ரென்னுங் கதைபற்றியுமாம்.

முன்ஒருகாலத்திற் பூமியைப் பாயாகச்சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாக அவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்துக்கொண்டுவந்து பரப்பியவுடனே மிக இறுமாந்து மதங்கொண்டபொழுது, உருத்திரமூர்த்தி வேடவுருவங்கொண்டு சென்று அவ்வராகத்தைக் கொன்று அதனது ஒருகோட்டைப் பறித்துத் தமது மார்பில் ஆபரணமாக அணிந்துகொண்டன ரென்னுங் கதையைக் கருதி, 'எயிறிறுத்தது மாய வராகம்' என்றது.

அந்தணர்-அம் தண் அர்: அழகிய தண்மையை [அருளை] உடையோர்; அல்லது, அந்த அணர்:அந்தத்தை அணவுவோர்; வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்: இது, பிராமணர்க்குக் காரணவிடுகுறிப்பெயர். பிராமணர்களது அக்கிரகாரங்களிற் கடவுள் எழுந்தருளியிருக்கின்றன ரென்பது, நூற்கொள்கை. ஆசி-ஆஸிஸ் என்னும் வடமொழியின் விகாரம். இனி, (எப்பொழுதும்)எற்றுக்கொள்வது முனிவர்களதுவாழ்த்தையேயாம் என்றும் பொருள் கொள்ளலாம். பந்நகம் என்னும் வடசொல்லுக்கு - கால்களால் நடவாத தென்று பொருள். ஐயர் - முனிவர்களுமாம். ஐயர்கள்தம் பவம் நத்தை எனப் பிரித்து - (யாவர்க்கும்) கொடுப்பது பெரியோர்களாகப் பிறக்கும் விருப்பத்தையே யென்றும் பொருள் கொள்வர். உம்மைகளுக்கும் ஏகாரங்களுக்கும் ஏற்றபடி பொருள்கொள்க.

இஃது, அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதிமுற்றுமடக்கு.

இது - கட்டளைக்கலிப்பா; இலக்கணம்,ஒன்பதாங்கவியிற் கூறப்பட்டது.

கடங்கரைக்கும் வெற்பிற் கனைகனைக்கும் வைகைத்
தடங்கரைக்க ணின்றவர்நீர் தாமோ—நெடுந்தகைநுங்

கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையி
னூட்டம் புயமே நமன்.

(இ - ள்.) கடம் கரைக்கும் வெற்பின் - மதநீரைப் பெருக்குகின்ற மலைபோன்ற யானையின்மேல் (ஏறி), கரை கரைக்கும் வைகை தட கரைக் கண் - கரையை (நீர்வெள்ளத்தால்) கரையச்செய்கின்ற வையையாற்றின் பெரிய கரையில், நின்றவர் - எழுந்தருளிநின்றவர், நீர்தாமோ-நீரோதாம்? நெடுந் தகை - பெருமைக்குணத்தையுடைய, நும் - உமது, புயம் - தோள்கள், கூட்டம் - (என்னுடன்) கூடுதலை, கொடாவிடில் - கொடுக்காமற் போனால், வேள் கூன் சிலையின் நாட்டு அம்புயமே - மன்மதன் தனது வளைந்த கருப்புவில்லில் வைத்துத்தொடுக்கின்ற தாமரைமலராகிய அம்பே, நமன் - (எனக்கு) யமனும்; (எ - று.)—மரணந்தமான வருத்தத்தை உண்டாக்கு மென்றபடி; விரைவில் என்னைக் கூடியருளவேண்டு மென்பதாம்.

இச்செய்யுள், சோமசுந்தரக்கடவுள் யானைவாகனத்தின்மேல் எழுந்தருளி மதுரைத்திருவீதியில் திருவிழாக்கண்டருளும்பொழுது அத்திருக்கோலத்தின் காட்சியைக் கண்டு காதல்கொண்டா ளொரு மகள் அக்கடவுளை முன்னிலைப்படுத்திக் கூறிய தென்க.

கடம் - வடசொல்; யானைக்கன்னத்தின் பெயர்: அதிலிருந்து வழிகிற மதநீருக்கு ஆகுபெயர். வெற்பு - யானைக்கு உவமையாகுபெயர்; பருமைக்கும், வலிமைக்கும், மதநீரருவியைப்பெருக்குதற்கும் உவமை. இனி, வெற்பின் - மலைபோல, நின்றவர் என்றுமாம்; நடை வலிமை காம்பீரியங்களில் உவமை. வையையாறு மோதிக் கரையையிடித்தற்கு யானையுவமைகொள்ளுதலு மொன்று. "நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ, வனைத்துணவு நீக்கு மசோகு—வனத்திலுறு, முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங், கொல்லு மதனம்பின் குணம்" என்றபடி நினைப்பு பசலை துய்ப்பனவெவிட்டல் மோகம் மரணம் என்னும் அவத்தைகளை முறையே உண்டாக்கக்கடவனவான தாமரைமலர் மாமலர் அசோகமலர் முல்லைமலர் நீலோற்பலமலர் என்னும் மன்மதன்கணை யைந்தனுள் முதலதான தாமரை மலரேஎனக்கு மரணத்தைவிளைக்கு மெனத் தனது விரகவேதனையின் அதிசயத்தை எடுத்துக்கூறின ளென்க. அம்புயமே, ஏ-பிரிநிலையோடு இழிவுசிறப்பு. அம்புயம்-அம்புஜம்: நீரிற்பிறப்பது. நமன் - யம னென்பதன் சிதைவு.

இது - மலரென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (உஎ)

[வண்டு.]

நம்பாநி னக்கோல முறையோவெ னக்கால நஞ்சுண்டு பித்
துண்டு நாந்தேவ ரென்பார், தம்பாவை யர்க்கன்று காதோலை
பாலித்த தயவாளர் கூடற்றடங்காவில் வண்டேர்,செம்பாதி மெய்யுங்
கரும்பாதி யாகத் திருத்தோளு மார்பும் வடுப்பட்ட துங்கண்,டெம்
பாவை யைப்பின்னு மம்பாவை செய்வா ரொளியானை நலியிற்பி
னேதா மிவர்க்கே.

(இ - ள்.) பித்து உண்டு - மயக்கத்தைக் கொண்டு, நாம் தேவர் என்பார் - நாமே 'முதற்கடவுள்' என்று கூறிச் செருக்கித்திரியுந் தேவர்கள், அன்று - (திருப்பாற்கடல்கடைந்த) அந்நாளில், 'நம்பா - பரமசிவனே! நினக்கு - உனக்கு, ஓலம் - அபயமளித்துக்காக்கப்படும்பொருளாவோம் (யாம்); முறையோ—!' என - என்று (குறையைச் சொல்லி) முறையிட, (அதற்கு இரங்கி),காலன் நஞ்சு உண்டு - (மரணத்தைச்செய்தலால்) யமனை

ஒத்த விஷத்தைப் புசித்து, தம் பாவையர்க்கு - அத்தேவர்களது மனைவி மார்க்கு, காது ஓலை பாலித்த - ஓலையென்னுங் காதணியை (வாங்காதபடி) அளித்த [மாங்கல்யபிக்ஷைகொடுத்த], தயவு ஆளர் - திருவருளை யுடைய வரான சிவபிரானது, கூடல் - மதுரையிலுள்ள, தட காவில் - பெரிய சோலைகளில்வாழ்கின்ற,வண்டீர்-வண்டுகளே! (சோமசுந்தரக்கடவுள்),செம் பாதி மெய்யும் - (தமது) சிவந்த பாதியுடம்பு முழுவதும், கரும் பாதி ஆக- கருமையான பாகமாக, திரு தோளும் மார்பும் வடு பட்டதும்-(தமது)அழ கிய தோளும் மார்புந் தழும்புபட்டதையும், கண்டு - பார்த்து, பின்னும் - பின்பும், எம் பாவையை - எமது கருவிழிப்பாவைபோல் அரிய மகளை, அம் பாவை செய்வார் - அழகிய சித்திரப்பிரதிமை போலச் (செயலற்றுக்கிடக் கும்படி) செய்வாராயினர்; எளியாரை - எளிய மகளிரை, நலியின் - வருத் தினால், (அதனால்), பின் இவர்க்கு ஏது ஆம் - மற்று இவர்க்கு என்ன பய னுண்டாம்? (எ - று.)—வருத்தாதிருக்குமாறு அவர்க்கு நீர் சொல்ல வேண்டு மென்பது, குறிப்பு.

இது, தலைமகனைப் பிரிந்த தலைமகளது துயரப்பாடு நோக்கிய செவிலி த்தாய் வண்டுகளைநோக்கி இரங்கிக் கூறியது.

ஒரு பெண்ணைப் பாதியுடம்பில் வைத்துக்கொண்டு அவளால் மார்புந் தோளும் வடுப்பட்டும் மற்றொருபெண்ணைக் காதலித்து வருத்துவானேன்? என்பது, கருத்து; ஒருமகளை விரும்பி மணத்ததனால் தமதுபாதியுடம்பை இழந்து மார்புந்தோளும்வடுப்பட்ட இவர் வேறொருமகளையும் விரும்பி மணப்பதற்கு வருத்துகின்றனரே; இதனால் இவர்க்கு இன்னும் என்ன அபாயம் நேருமோ வென்னுங் கருத்துந் தோன்றுகின்றது. முறையோ - முறைப்பாடு: அநுகரணம். காலநஞ்சு - காலகூடமென்னும் நஞ்சு எனவும், ஆலகாலமென்னும் நஞ்சு எனவுமாம். பித்து - இறுமாப்பு. பித்துண்டு-பித் தங்கொண்டு எனச் சிவனுக்குக் கூட்டுதலுமாம். காதோலை பாலித் தல் - குறிப்பு; கணவனை யிழந்தவர் காதோலையை நீக்க வேண்டு வது, நூற்றுணிபு. "செற்றால முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தைமேற்கொள், பற்றாலங் கதுநுகர்ந்து நான்முகனே முதலோர்தம் பாவைமார்கள், பொற்றாலிதனையளித்தோன்" என்ற கந்தபுராணம், இங் குக் கருதத்தக்கது. தயவு-தயா என்ற வடசொல்லின் விகாரம். செம்பாதி= சரிபாதி யெனவுமாம். செம்பாதிமெய்யுங் கரும்பாதியாக வென்றது-உமா மகேசுவரவுருவத்தை. சங்கரனது திருநிறம் செம்மையும், சங்கரியது திரு நிறம் கருமையுமாம்; இதனை "வலப்பாகஞ் செழும்பவளச் சோதியென்ன வாணீலச் சோதியென்ன மற்றப் பாகங், கலப்பான திருமேனி"என்றதனா லும் அறிக. 'தோளு மார்பும் வடுப்பட்டது' என்றது, தழுவக்குழைந்த வர லாற்றை; தோள் - வளையாலும், மார்பு - தனத்தாலும் வடுப்பட்டதென்க. பாவை - உவமவாகுபெயர்; "உண்கண் மணிவாழ் பாவை", "கண்மணிப் பாவை யன்ன, பெண்" என்றார் சிந்தாமணியிலும், நற்றிணைநானூற்றிலும். எளியார் - மெல்லியலார்: அபலைகள் என்றபடி. நலியின் - எதிர்காலவினை யெச்சம். 'எளியாரைநலியிற்பினேதாமிவர்க்கு' என்றதில், வலியார்க்கு எளியாரைவருத்துதல் இழிவா மென்னும் பொருளுந் தொனிக்கின்றது.

இது - ஈற்றுச்சீரொன்று தேமாச்சீரும், மற்றையஏழும் பெரும்பாலும் காய்ச்சீரும் சிறுபான்மை மாச்சீருமாகிய எண்சீராசிரியவிருத்தம். (உ௮)

[இரங்கல்.]

ஆவமே நாணே யடுகணையே யம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுஞ் சமனன்றே

யோவமே யன்ன ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே.

(இ - ள்.) அ மத வேள் - அந்த மன்மதனது, ஆவமே - அம்பறாத்
தூணியும், நாணே - வில்நாணியும், அடு கணையே - கொல்லவல்ல அம்பும்,
சாவமே - வில்லும், (ஆகிய இவற்றைத் தனித்தனியே), தூக்கின் - ஆராயு
மிடத்து, சமனும் சமன் அன்று - (இவற்றுள் ஒவ்வொன்றுக்கும்) யமனும்
ஒப்பாகமாட்டான்; பழி அஞ்சும் சொக்கருக்கு - பழியைஅஞ்சுகிற சொக்க
நாதர்க்கு, ஓவமே அன்னாள் உயிர் விற்று - சித்திரப்பதுமையைப் போன்ற
வளான இம்மகளது உயிரை விலைசெய்து, பெண் பழி கொள்-பெண்கொலை
யாலாம் பழியைக் கொள்ளுகின்ற. பாவமே - தீவினையே, பாவம் - பெருந்
தீவினையாம்; (எ - று.)

இது செவிலிகூற்று; பாங்கிகூற்றுகவுமாம்.

ஆவமே முதலிய ஏகாரங்கள் நான்கும் - எண்ணுப்பொருளன. குமர
வேளை விலக்குதற்கு, 'மதவேள்' என்றார். அகரச்சுட்டு, உலகறி பொரு
ளின்மேலது. சாவம் - சாபம். பாவம் - பாபம். சமன் என்னுஞ் சொல் இர
ண்டனுள், முன்னது - ஶமநன் அல்லது ஸமன் அல்லது யமன் என்பதன்
சிதைவாம்; பின்னது - ஸமன். மன்மதனுக்குப் பூங்கொத்துத் தூணியென்
றும், வண்டொழுக்கு நாணியென்றும், மலர் கணையென்றும், கரும்பு வில்
லென்றும் அறிக. முதலிரண்டடிக்கு - மன்மதன் ஆவமுதலியவற்றைத்
தூக்கிவந்தால் அவனுக்கு யமனும் உவமையாகா னென்னும் பொருளுங்
கொள்ளலாம். பெண்கொலைகாரணமாக வேடனுக்கும் அரசனுக்கும் வரும்
பழியை அஞ்சி அதனைத்தீர்த்தவர் அப்பெண்கொலைகாரணமாகத் தமக்கு
வரும் பழியை அஞ்சித் தீர்த்துக்கொள்ளவேண்டாமோ? என்றாள். 'உயிர்
விற்று'என்றது - மன்மதபாணம் முதலியவற்றால் இவள் இறந்துபடுதற்குத்
தாம் காரணமாய் என்றவாறு. உயிரை விலையாகக்கொடுத்துப் பழியை வாங்
கிக்கொள்கிற பாவ மென்க; மாற்றுநிலையணி யென்னும் பரிவர்த்தநாலங்
காரம். பாவமே பாவம் - எண்ணமே எண்ணம் என்று பொருள்படும். அம்
மதவேள் என்றுஎடுத்து, அழகிய மன்மத னெனினுமாம்.

சொக்கர் பழியஞ்சிய கதை:—அநந்தகுணபாண்டியன்காலத்தில்
ஒருபிராமணன் தன்மனைவியோடுங் குழந்தையோடும் புத்தூரிலிருந்து மது
ரைக்குவரும்வழியில் ஓர்ஆலமரத்தினிழலில் மனைவியைஇருக்கச்செய்து தாக
த்துக்குத் தண்ணீர்கொண்டுவரப்போய் மீண்டுவந்தபொழுது மனைவி அம்பு
தைத்துஇறந்துகிடக்கக் கண்டு கலங்கி அங்குஇளைப்பாறிநின்றானொரு
வேடனைக் குற்றவாளியென்று கருதிப் பிடித்து அரசனிடங்கொண்டுபோய்
விட, அரசன் பலவாறுவிசாரித்தும் உண்மைவிளங்காமையாற் சொக்கநாத
ரைப் பிரார்த்தித்து அவர்நியமனப்படி அந்தணனோடும் மாறுவேடம்பூண்டு
புதுமணநிகழ்வதொரு வணிகன்மனையிற் சென்று அங்கேவந்திருந்த யம
தூதர்களது சம்பாஷணையால் ஆலமரத்தின்இலையிற் பலநாளுக்குமுன் ஒரு
வன் எய்து தைத்திருந்த அம்பு காற்றின்விசையால் தற்செயலாய்விழப்
பார்ப்பனி இறந்துபோயினா ளென்று அறிந்து தெளிந்து வேதியனையுந்
தெளிவித்தனன் என்பதாம்.

இது, மாச்சீருங் காய்ச்சீருமாய் ஈற்சீரும் விரவி வெண்டளையால்
வந்த நான்கடித்தரவுக் கொச்சகக்கலிப்பா. (உ௧)

[பறவைவிடுதூது.]

கரைபொருதி ரங்கு கழிதொறுமி ருந்து கயல்வரவு றங்கு
புள்ளீரே, பருவமுமி மூந்தென் மகடுயரு ழந்து படுவிரக மொன்று

முள்ளீரே, யருமையொடு மெங்கள் பெருமையைய றிந்தே யருள் புரிய விங்கு வல்லீரே, மருவியக டம்ப வனமதுபு குந்தெ மதுரைய ரன் முன்பு சொல்லீரே.

(இ-ள்.) கரை பொருது - கரைகளை மோதி, இரங்கு - ஒலிக்கின்ற, கழிதொறும் - உப்புக்கழிகள்தோறும், இருந்து - தங்கி, கயல் வர உறங்கு - (தமக்குத் தக்க இரையாகிய) மீன் வருமளவும் தூங்குவதுபோல வாடியிருக்கின்ற, புள்ளீரே - நீர்வாழ்பறவைகளே! (நீங்கள்), என் மகள் - எனது மகளாகிய இவள், பருவமும் இழந்து - (தலைவனோடு கூடுதற்குஎற்ற) யௌவனபருவத்தையும் வீணாக இழந்து, துயர் உழந்து - துன்பமனுபவித்து, படு - படுகிற, விரகம் ஒன்றும் - காமநோய்சிறிதையும், உள்ளீரே - நினைக்கின்றீர்களில்லை; எங்கள் - எங்களுடைய, அருமையொடும் - அருமையையும், பெருமையை - பெருமையையும், அறிந்து - தெரிந்து, இங்கு - இப்பொழுது, அருள் புரிய - கருணைசெய்ய, வல்லீரே - (நீங்கள்) வல்லவர்களா? (வல்லீராயின்), மருவிய கடம்பவனம்அது புகுந்து - (திருவுள்ள முவந்து) எழுந்தருளியிருக்கும் இடமாகிய கடம்பாரணியத்தை அடைந்து, எம் மதுரை அரன் முன்பு - எங்களது மதுரைச் சிவபிரான்முன்னிலையில், சொல்லீரே - (இவள்படும்பாட்டைச் சற்றே) சொல்லுங்கள்; (எ-று.)

இது - தலைவனைப் பிரிந்து வருந்துகிற தலைவியது நிலைமையை நோக்கி இரங்கிய செவிலித்தாய் நீர்வாழ்பறவைகளைத் தூதுவிடுத்தது.

'கழிதொறும்' என்றதனால், இரங்கற்கு உரிய நெய்தல்நிலங் கூறியவாறு. "ஓடுமீ னோடி யுறுமீன் வருமளவும், வாடி யிருக்குமாங் கொக்கு," "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" என்பவாதலால், 'கயல்வர வுறங்கு புள்ளீரே' என்றார். புள்ளீரே - விளி. விரகம் - பிரிவினால்நிகழும் வருத்தம். உள்ளீரே, சொல்லீரே—ஏ - இரக்கம்; உள்ளீரே என்பதில் தேற்றமாகவுமாம். தலைவியையும், பாங்கி முதலியோரையும் உளப்படுத்தி 'எங்கள்,' 'எம்' எனப் பன்மையாக் கூறினாள். வல்லீரே, ஏ - வினா. அரன் - ஹரன்; (யுகாந்தகாலத்தில் எல்லாப் பொருள்களையுஞ்) சங்கரிப்பவன்; அன்றி, (அடியார்களின் அருந்துயரனைத்தையும்) அழித்தருள்பவன். இங்கு - இவ்விடத்தில், இவ்விஷயத்தில் எனினும் அமையும்.

இச்செய்யுளில் அடிதோறும் ஈற்றெழுத்துக்களிற் சில ஒற்றுமைப்பட்டு வந்தது, இயைபுத்தொடையென்னுஞ் செய்யுளுறுப்பாம்.

இது - ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், இரண்டு நான்கு ஆறாஞ் சீர்கள் தேமாச்சீர்களும், ஏழாவது தேமாங்காய்ச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௩0)

[இரங்கல்.]

ஈரித்த தென்ற லிளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப் பிணியோ தணியாவாற்
பாருக்கு ணீரே பழியஞ்சி யாரெனின்மற்
றாருக் குரைக்கே னடிகே ளடிகேளோ.

(இ-ள்.) ஈரித்த தென்றல் - குளிர்ந்த தென்றற்காற்றும், இள வாடை - இளமையான வாடைக்காற்றும், திங்கள் - சந்திரனும், என்று ஓர் பேர் இட்ட - என்றுஒவ்வொருபெயரிட்டுவழங்கப்படுகின்ற, மும்மை பிணியோ - மூன்றுவியாதிகளோ, தணியா - குறைகின்றனவில்லை; அடிகேள் அடிகேளோ - கடவுளே கடவுளே! பாருக்குள் - பூமியில், நீரே பழி அஞ்சியார் - நீர்தாம்

பெண்பழியை அஞ்சியவர், எனின் - என்றால், மற்று ஆருக்கு உரைக்கேம் - (உம்மைவிட்டு) வேறே யார்க்கு (இவ்வேதனையை)ச்சொல்லுவோம்? (எ - று.)

இது, தலைவிகூற்று; பாங்கிகூற்றாகவுங் கொள்ளலாம்.

தென்றல் - தெற்கிலிருந்து வருங் காற்று. வாடை - வடக்கிலிருந்து வருவது. பிணியோ,ஓ-தெரிநிலை. பிரிந்தார்க்குத் தென்றல்முதலியன வருத்தத்தை மிகவிளைத்தலால், பிணி யெனப்பட்டன. அஞ்சியார் - இறந்தகாலப் பலர்பால் வினையாலணையும்பெயர்; முன்னிலைப்படர்க்கை. உரைக்கேம்,ககரவிடைநிலை - எதிர்காலமுணர்த்திற்று. அடிகேள் - அடிகளென்பதன் விளி; ஈற்றயல் திரிந்தது-விளியுருபு. முறையீட்டால் அடுக்கிற்று. 'ஆருக்குரைக்கேம்' என்றதனால், நீரே வந்தணைந்து பிணியைத்தணிக்கவேண்டுமென்றதாம். 'பழியஞ்சியார்' என்றது, உகூ-ஆஞ்செய்யுளிற்குறித்த வரலாற்றை உட்கொண்டது. ஆல் - ஈற்றசை.

இது - **கோச்சகக்கலிப்பா**; இலக்கணம், உகூ - **ஆஞ் கவியிற் கூறப்**பட்டது. (ருக)

[**பிச்சியார்.**]

அடுத்த தோர்தவ வேடமும் புண்டர
மணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தெடுத்த தாள்பதித் தாடிக்க டைப்பிச்சைக்
கிச்சை பேசுமப் பிச்சனெ னச்செல்வீர்
கடைக்க ணோக்கமும் புன்மூர லும்முயிர்
கவர்ந்து கொள்ள விடுத்தக பாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றோ
பிச்சி யாரெனும் பேருமக் கிட்டதே.

(இ - ள்.) அடுத்தது ஓர் தவம் வேடமும் - பொருந்தியதொரு தவவொழுக்கத்திற்கு உரிய வேஷமும், புண்டரம் அணிந்த முண்டமும் - விபூதியைத் தரித்த மொட்டைத்தலையும், ஆய் - உடையவர்களாய்,—வெள்ளி அம்பலத்து - வெள்ளியம்பலத்தில், எடுத்த தாள் பதித்து ஆடி - தூக்கிய திருவடியைக் கீழேபதியவைத்துக் கால்மாறிநடித்து, கடை பிச்சைக்கு - வாயில்தோறுஞ் சென்றுகொள்ளும் பிக்ஷைக்கு, இச்சை பேசும் - உபசாரவார்த்தைகள் சொல்லிக்கொண்டு செல்கிற, அ பிச்சன் என - அந்தப் பித்தனாகிய சிவபிரான் போல, செல்வீர் - செல்பவர்களே! கடைக்கண் நோக்கமும் - கடைக்கண் பார்வையையும், புல் மூரலும் - புன்சிரிப்பையும், உயிர் கவர்ந்துகொள்ள - பிறருயிரைப் பறித்துக்கொள்ளும்படி, விடுத்த - வெளித்தோற்றுவித்த, கபாலி போல் - (கையிற்)கபாலமுடைய பரமசிவன் போல, பிடித்த சூலமும் - கையிற்பிடித்த சூலாயுதத்தையும், கைவிட்டிலீர்-கையினின்றும் விடுகின்றீரில்லை, என்றோ - என்ற காரணத்தினாலோ, உமக்கு - உங்களுக்கு, பிச்சியார் எனும் பேர் - பிச்சியாரென்னும் பெயரை, இட்டது - வைத்தது; (எ - று.)

சிவசின்னம் பூண்டு தெருவிற்பிச்சைக்குவருகிற மகளிரை நோக்கி ஒரு காமுகன் தன்வேட்கையைப்புலப்படுத்தி முன்னிலைப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, பிச்சியார்என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

வேடம், பிக்ஷை - வடசொற்றிரிபுகள். கடவுள் தவவேஷத்தையும் திரிபுண்டரமணிந்த தலையையும் உடைத்தாயிருத்தல்போல நீங்களும் உடைத்தாயிருக்கின்றீர்: அவர் வெள்ளியம்பலத்தில்எடுத்ததாளைப்பதித்துவைத்துக் கால்மாறியாடியதுபோல நீங்களும் தூக்கினகாலைப்பெயர்த்துவைத்து ஆடு

கின்றீர்கள்: அவர் பிச்சைக்குச்சென்றதுபோல நீவிரும் செல்கிறீர்: அவர் கடைக்கணோக்கத்தையும் புன்முறுவலையும் உயிர்கொள்ளவிடுத்ததுபோல நீயிரும் விடுக்கின்றீர்: அவர் கபாலத்தோடு சூலங் கைவிடாததுபோல நீரும் கைவிட்டிலீர்: இதனால் நீங்கள் அப்பித்தனை ஒத்தலால் உமக்குப் பிச்சியாரென்னும்பேர் இடப்பட்டதோ? என்றான். இச்சகம் பேசுதல், பிச்சைக்காரரின் இயல்பாம். பிச்சன் - பித்தன் என்பதன் இடைப்போலி.

கடைக்கணோக்கமும் புன்முறுவலும் உயிர்கவர்ந்து கொள்ள விடுத்தது - சிவபிரான் மன்மதனுயிரைக்கவருமாறு நெற்றிக்கண்ணின் பார்வையையும் திரிபுரத்தவருயிரைக்கொள்ளுமாறுபுன்னகையையுஞ் செலுத்தியதும், இம்மகளிர் கடைக்கணோக்கினாலும் புன்னகையாலுந் தனதுஉயிரை வருத்துதலுமாம். பிச்சியார்-பிச்சரென்பதன் பெண்பன்மை.

"தண்ணுலாம்பொழிற் காசித்தெருவினீர் தரித்திருந்தவக் கோலமுஞ் சூலமும், பெண்ணொடாடுமெப்பிச்சனுக் கொத்தலாற் பிச்சியாரெனும் பேர் தரித்தாடுவீர்.வெண்ணிலாமுகிழ்க் குங்குறு மூரலால் வீணிலேயெம் புரத்தெரியிட்டனீர். கண்ணினாலுமிக் காமனைக் காய்ந்திடிற் கடவுளீரென்றிறைஞ்சுதுங் காணுமே" என்னுங் காசிக்கலம்பகக்கவியின் பொருளை இங்கே நோக்குக.

இது - கட்டளைக்கலிப்பா; இலக்கணம், முன் கூறப்பட்டது. (௩௨)

[மடல்.]

இடங்கொண்டமானும்வலங்கொண்டவொண்மழுவுமெழுதும்
படங்கொண்டுவந்தனையானெஞ்சமேயினிப்பங்கயப்பூந்
தடங்கொண்டகூடற்சவுந்தரமாறர்பொற்றாள்பெயர்த்து
நடங்கொண்டதோர்வெள்ளிமன்றேறுதுமின்றுநாளையிலே.

(இ - ள்.) நெஞ்சமே - மனமே! இடம் கொண்ட மானும் - இடக்கையிற்கொண்ட மானையும், வலம் கொண்ட ஒள் மழுவும் - வலக்கையிற் கொண்ட ஒள்ளிய மழுவாயுதத்தையும், எழுதும் - எழுதிய, படம் - (சிவபிரானது) படத்தை, கொண்டுவந்தனை - கொண்டுவந்தாய்; இனி - இனிமேல், பங்கயம் பூ தடம் கொண்ட கூடல் - பொற்றாமரைக்குளத்தையுடைய மதுரையில் எழுந்தருளிய, சவுந்தரமாறர் - சுந்தரபாண்டியராகிய சோமசுந்தரக்கடவுள்,பொன் தாள் பெயர்த்து-அழகிய திருவடிகளை மாற்றிவைத்து, நடம் கொண்டது - திருநிருத்தஞ்செய்தருளுமிடமாகிய, ஓர் - ஒரு, வெள்ளி மன்று - வெள்ளியம்பலத்தில், இன்று நாளையில் - இன்றைத்தினத்தில், ஏறுதும் - ஏறுவோம்; (எ - று.)

இது, மடன்மாவேறுதல் என்னுந் துறை; அஃதாவது - தலைமகனும் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தமதுஇச்சைப்படியே களவுப்புணர்ச்சிபுணர்ந்து பிரிந்தபின்பு அவ்வாற்றாமைமிஞ்சி அதனால் நாண முதலியன அழிந்து இவர்களுள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் பெயரையும் தமது பெயரையும் ஒருபடத்திற் சித்திரமெழுதிக் கையிற் கொண்டு பனைமடலினால் ஒருகுதிரையுருச்செய்வித்து அதன்மேல் தாம் ஏறி அதனைப் பிறரால்இழுப்பித்து வீதிவழியே பலருங்கூடும் பொதுவிடங்களிற் செல்லுதல்: இதற்குப் பயன் - இவரது இக்கடுந்தொழிலைக் கண்டு அதனாற் பெருவேட்கையையுணர்ந்து உறவினராயினும் அரசராயினுங் கூட்டுவிக்கக் கூடுதலாம். இது, ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது; அளவுக்கு விஞ்சிய ஆசையின் மிகுதியால் மகளிர்க்குஞ் சிறுபான்மை வரும். அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும், மடலூர்

வேனென்றுசொல்லுதல் இருபாலார்க்கும் உரியதென்றும் உய்த்துணர்க. இங்குக்கூறிய இது, தலைவிகூற்றும்.

படம் - சித்திரமெழுதும்படம். 'படங்கொண்டு வந்தவையா னெஞ்சமே' என்றது, மனத்திற் சுந்தரேசரது வடிவம் இடையறாது அமைந்திருத்தலை யுட்கொண்டு. பங்கயம் - பங்கஜம்; சேற்றில் உண்டாவது. தாள் பெயர்த்தல் - தூக்கிய காலை நிறுத்தி நிறுத்திய காலைத் தூக்குதல். மடலூர்பவர் பலருங்கூடும்வெளியிடத்திற் சென்று பலர்க்குந் தமதுவேட்கையைப் புலப்படுத்துவ ராதலால், 'மன்றேறதும்' என்றாள். மன்று - பலருங் கூடும் பொதுவிடம். எறுதும் - தனித்தன்மைப்பன்மை; நெஞ்சத்தை உளப்படுத்திய பன்மையுமாம். இன்று நாளையில்-இன்றைக்காயினும் நாளைக்காயினும் எனவுமாம். பொற்றாள் - பொன்னணியணிந்த தாளுமாம்.

இது, நிரையசைமுதலதாகிய கட்டளைக்கலித்துறை. (ருரு)

[இரங்கல்.]

இருநிலன கழ்ந்ததொரு களிறுவெளி றும்படிபொ ரிருளியின ணைந்த ணையுமக், குருளையைம ணந்தருளி னிளமுலைசு ரந்துதவு குழகரிது ணர்ந்தி லர்கொலாங், கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில கணைமதன்வ ழங்க வவைபோ, யுருவியப சும்புணின்வெண் ணிலவனல்கொ ளுந்தியதெ முயிர்சிறிதி ருந்த தரிதே.

(இ - ள்.) இரு நிலன் - பெரிய பூமியை, அகழ்ந்தது - (கோட்டினாற்) குத்தியெடுத்துவந்ததாகிய, ஒரு களிறு - ஒப்பற்றதொரு வராகமூர்த்தி, வெளிறும்படி - வெண்ணிறமடையும்படி, ஓர் இருளியின் அணைந்து - ஒரு பன்றியுருவத்திற் கூடி, அணையும் அ குருளையை - (தம்மைத்)தழுவுகின்ற அப்பன்றிக்குட்டிகளை, மணந்து - சேர்ந்து, அருளின் - கருணையோடு, இளமுலை சுரந்து உதவு - இளமையான தனங்களைப் பால்சுரந்து அளித்த, குழகர் - அழகையுடையவரான சோமசுந்தரக்கடவுள்,—கங்குல் - இராத்திரி, கருகியது - (இருளாற்) கறுத்ததும்,கொங்கை-(எமது)தனங்கள்,அற வெளிறியது - (பசலையால்) மிக வெளுத்ததும், மதன் - மன்மதன், சில கணை வழங்க - சிலஅம்புகளைப் பிரயோகிக்க, அவை போய் உருவிய - அந்த அம்புகள் சென்று தைத்ததனாலுண்டான, பசும் புணின்-(எமது)பச்சைவிரணங்களில், வெள் நிலவு அனல் - வெண்மையான சந்திரகாந்தியாகிய அக்கினி, கொளுந்தியது - பற்றியதும், எம் உயிர் - எமது பிராணன், அரிது- அருமையாக [வருத்தப்பட்டுக்கொண்டு], சிறிது இருந்தது - கிஞ்சித்து இருந்ததும் ஆகிய, இது - இத்தொழில்களை, உணர்ந்திலர்கொல்ஆம் - அறிந்திலர்போலும்; (எ - று.)—அறிந்திருப்பராயின் உடனே வந்து எம்மைஅணைந்திருப்ப ரென்றதாம்.

இது - தலைவனைப் பிரிந்த தலைவியின் வார்த்தை.

'இருநில னகழ்ந்ததொரு களிறு' என்றது, திருமாலின் மூன்றும்அவதாரமாகிய வராகத்தை. கருநிறமுடைய அவ்வராகம் இப்பன்றிக்கு ஒப்பாகாமையால் உண்டாகிய வருத்தத்தால் நிறம்வேறுபட வென்க. களிறு- ஆண்பாற்பெயர்; இது பன்றிக்கும் உரியதாதலை "கேழற் கண்ணுங் கடிவரை யின்றே" என்னும் மரபியற்சூத்திரத்தால் அறிக. பிருகஸ்பதிபகவானது சாபத்தின்படி இளமையிலேயே தந்தையையுந்தாயையும்இழந்த பன்னிரண்டு பன்றிக்குட்டிகள் படுகிற வருத்தத்தைச் சோமசுந்தரர் நோக்கிப் பெருங்கருணைகூர்ந்து உடனே தாய்ப்பன்றியின்வடிவமெடுத்து முலைகொடு

த்துப் பாலூட்டி அவற்றைக் காத்தருளினரென்பது, திருவிளையாடற்புராணவரலாறு; பன்றிக்குட்டிகளுக்குமுலைகொடுத்தபடலத்திற் காண்க. இவ்வரலாற்றை இங்கே எடுத்துக்கூறியது, இழிந்த அஃறிணையினிடத்தும் வரம்புகடந்து அருள்கூர்ந்த அக்கடவுளின் காருண்யத்தைக் காட்டுதற்கு. இத்தகைய கருணையுடையவர் கங்குல்கருகியதுமுதலியவற்றை அறிந்தால் எம்மிடத்துங் கருணைகூர்வரென்றவாறு. குருளை - இளமைப்பெயர்; "நாயே பன்றி புலி முயலு நான்கும், ஆயுங்காலைக் குருளையென்ப" என்றார். பசும்புண் - புதிய புண்; ஆறாத புண். 'இது' - தொகுதியொருமை.

இது - முதல் மூன்று ஐந்தாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறாஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச்சீரு மாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம்; 'தனதனன தந்ததன தனதனன தந்ததன தனதனன தந்த தனனா' என இதற்குச் சந்தக்குழிப்புக் காண்க. (௩௪)

[கொற்றியார்.]

அருநாம மரசிவசங் கரநாம மெனக்கொண்
டவற்றொருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
பெற்றியார் தமிழ்மதுரைக் கொற்றியார் கேளீ
ரொருநாமம் பயந்தவர்முன் றருநாமம் வியந்திங்
குலகரிடு நாமமதொன் றுள்ளநீர் வெள்ளைத்
திருநாம மிட்டவன்றே கெட்டவன்றே யிமையோர்
தெரித்திடுநா மமுமுனிவோர் தெரித்திடுநா மமுமே.

(இ - ள்.) 'அரு நாமம் - (பெறுதற்கு) அரிய திருநாமங்கள் (எவையென்றால்), அர சிவ சங்கர நாமம் - ஹர சிவ சங்கர என்னுந் திருப்பெயர்களாம்,' என கொண்டு - என்று எண்ணி, அவற்று ஒரு நாமம் பகர்ந்தோர்க்கு - அத்திருநாமங்களுள் ஒருதிருநாமத்தை (ஒருகால்) உச்சரித்தவர்களுக்கு, அரி அயன் இந்திரன் ஆம் பெரு நாமம் - திருமால் பிரமன் இந்திரன் என்பவையாகிய பெரிய பட்டப்பெயர்களை, கொடுத்து - தந்து, அவர் தம் கரு நாமம் துடைக்கும் - அவர்களது மறுபிறப்பென்னும் பெயரையும் ஒழித்து முத்தியை அருளுகின்ற, பெற்றியார் - மகிமையையுடையவரான சொக்கநாதரது, தமிழ் மதுரை - செந்தமிழ்வழங்கும் மதுரையிலுள்ள, கொற்றியார் - கொற்றியார்களே! கேளீர் - (யான்சொல்வதைக்) கேளுங்கள்: ஒரு நாமம் - (பெண்ணென்னும்) ஒப்பற்றதொரு பெயரையும், பயந்தவர் முன் தரு நாமம் - பெற்ற தாய்தந்தையர் இளமையில் இட்ட பெயரையும், உலகர் வியந்து இங்கு இடு நாமம் அது ஒன்று - உலகத்தவர் (உமது அழகு முதலியவற்றைக் கண்டு) அதிசயித்து (இப்பொழுது) வைக்கும் சிறப்புப்பெயரொன்றையும், உள்ள - உடைய, நீர் - நீங்கள், வெள்ளை திரு நாமம் இட்ட அன்றே - வெண்ணிறமான அழகிய திருநாமத்தை (நெற்றியில்) தரித்த அப்பொழுதே, இமையோர் தெரித்திடும் நாமமும் - தேவர்கள் உடைத்தான பெரும்புகழும், முனிவோர் தெரித்திடும் நாமமும் - முனிவர்கள் உடைத்தான கீர்த்தியும், கெட்ட அன்றே - அழிந்தனவன்றோ? (எ - று.)

வைஷ்ணவசின்னம் பூண்டு வீதியிற் பிச்சைக்கு வருகின்ற மகளிரை முன்னிலைப்படுத்திக் காமியொருவன் தன்காதலைப் புலப்படுத்துப்பேசுவது, கொற்றியார் என்னும் உறுப்பாம். உடம்பிற்பலவிடங்களில் நாமந்தரித்துள்ள அவர்களைக்குறித்துப் பேசும் பேச்சாகிய இச்செய்யுளில் 'நாமம்' என்ற சொல்லைப் பலவிடங்களில் அமைத்தது ஒரு சமத்காரம்.

உமது பொலிவை நோக்கித் தேவரும் முனிவரும் தம்நிலை யழிந்து காதல்கூர்ந்து சிறப்பிலராயின ரென்பதாம். சிவன் என்பதற்கு - (அடியார்க்கு) மங்களத்தைச் செய்பவ னென்றும், சங்கரன் என்பதற்கு - சுகத்தைச் செய்பவ னென்றும், அரி என்பதற்கு - (அசுராதியோரை) அழிப்பவ னென்றும், அயன் என்பதற்கு - திருமாலினிடமிருந்து தோன்றியவ னென்றும் பொருள். அரி - ஹரி. அயன்-அஜன். கரு - கர்ப்பமென்னும் வடசொல்லின் சிதைவு. தமிழ் மதுரை-இனிய மதுரை யெனினுமாம். முன்-நாமகரணகாலத்தில். வியந்து உலகர் இடு நாமம் - தேன்மொழியாள், புயற்குழலாள் துடியிடையாள் என்பனபோல்வன. திருநாமம் - வைஷ்ணவர்இடுந் திருமண்காப்பு. கெட்ட - அன்சாரியைபெறாத பலவின்பால் முற்று. அன்றே - தேற்றம். இமையாக்கண்ண ராகலின், 'இமையோர்' எனப்பட்டனர். தரித்திடும் என்பது, மோனைப்பொருத்தநோக்கி 'தெரித்திடும்' எனத் திரிந்தது. இமையோர்தரித்திடும்நாமம் தேவமாதர்கள் கொண்டுள்ள திலோத்தமை முதலிய பெயர்க ளெனக் கொண்டும் உரைக்கலாம். 'இளையோர்த்தெரித்திடும்'என்ற பாடத்துக்கு - இளமைந்தரைத் தெரிவிக்கின்ற அவர்களது நற்பெயர் என்று பொருள். முனிவோர், ரகரவீற்றயலகரம் ஓவாயிற்று. கரு நாமம்-பிறப்புத்துன்பத்தால் உண்டாகும் அச்சமுமாம்.

இது - நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றை ஆறுங் காய்ச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தம். (௩௫)

மும்மைத் தமிழ்க்கூடன் மூலலிங்கத் தங்கயற்க
ணம்மைக் கமுதா மருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
முள்ளத் திருக்கோயி லுள்.

(இ - ள்.) மும்மை தமிழ் கூடல் - (இயலிசை நாடக மென்னும்) மூவகைத்தமிழும் வழங்கும் மதுரையில் எழுந்தருளிய, மூல லிங்கத்து - முதன்மையான லிங்கத்தின் வடிவமாகிய, அம் கயல் கண் அம்மைக்கு அமுது ஆம் - அழகிய மீனாக்ஷியம்மைக்கு அமிருதம்போல மிகவினிய, அரு மருந்தை - (பெறுவதற்கு) அரிய மருந்தாகிய பரமசிவத்தை, நம் உள்ளம் திரு கோயிலுள் - நமது மனமாகிய அழகிய ஆலயத்தில், வெம்மை வினை கள்ளம் திருக்கு ஓயின் - கொடிய தீவினைக்குக் காரணமான வஞ்சனையாகிய மாறுபாடு ஒழிந்தால், காணல்ஆம் - பார்க்கலாம்; (எ - று.)

மேரு கைலாசம் முதலிய தலங்கள்தோறும் உள்ள எல்லாவிலிங்கங்களுக்கும் முன்னேதோன்றியதனாலும், அவ்விலிங்கங்களுக்கெல்லாம் முதற் காரணமாதலாலும்,'மூலலிங்கம்'எனப்பட்டது; இதனை"பன்னருந் தலங்கடம்மிற் பராபர விலிங்கந் தோன்று, முன்ன ரிக்கடம்பின்மாடே முளைத்தெழுந் திச் செவ்வி லிங்கம்", "அப்பதியிலிங்க மெல்லா மருட்குறி யிதனிற் பின்பு, கப்புவிட் டெழுந்த விந்தக் காரண மிரண்டி னாலு, மொப்பரி தான ஞான வொளிதிரண் டான விந்தத், திப்பிய விலிங்க மூல விலிங்கமாய்ச் சிறக்கு மன்றே" என்னுந் திருவிளையாடலாலும், "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்னுந் திருநாவுக்கரசுநாயனார்தேவாரத்தாலும் உணர்க. கயற்கணம்மை - வடசொல்லின் மொழிபெயர்ப்பு. பிறவிப்பிணியைத் தீர்க்கு மாதலால், 'மருந்து' எனப்பட்டது. திருக்கு - மாறுபாடு, தீயசிந்தை. கண்டீர் - தேற்றம்; முன்னிலையசையுமாம்: அவ்வாறு காண்மீ ரெனவுமாம். 'மூலலிங்கத்து,' 'அமுதாம்' என்றஇரண்டும், மருந்துக்கு அடைமொழி.

இது, நாள் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (௩௬)

உள்ளும் புறம்புங் கசிந்தூற் றெழநெக் குடைந்துகுதி
கொள்ளுஞ்செந் தேறல் குனிக்கின்ற வாபத்திக் கொத்தரும்ப
விள்ளுங் கமலத்தும் வேத சிரத்தும்விண் மீனைமுகந்
தள்ளுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கத்துமே.

(இ - ள்.) (அடியார்களது), உள்ளும் - அகமாகிய மனமும், புறம்பும் - புறமாகிய உடம்பும், கசிந்து - கனிந்து, நெக்கு - நெகிழ்ந்து, உடைந்து - விண்டு, ஊற்று எழ - ஊற்றுநீர்போலக் கரைந்து உருகும்படி, குதி கொள்ளும் - விளங்குதலைக் கொண்ட, செம் தேறல் - சிவந்த தேன்போலினிய பரமசிவம், பத்தி கொத்து அரும்ப - பக்தியாகிய பூங்கொத்துத் தோன்ற, விள்ளும் - மலர்கிற, கமலத்தும் - உள்ளத் தாமரையிலும், வேத சிரத்தும் - வேதாந்தத்திலும், விண் மீனை முகந்து அள்ளும் கொடி மதில் பொன் கூடல் வெள்ளி அரங்கத்தும் - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற நக்ஷத் திரங்களை மொண்டு அள்ளிக்கொள்ளுகிற துவசங்களைக் கட்டிய மதில் களையுடைய அழகிய மதுரையில் உள்ள வெள்ளியம்பலத்திலும், குனிக் கின்ற ஆ - நர்த்தனஞ்செய்கின்ற விதம், (என்னவியப்பு!) (எ - று.)

நெக்கு, நெகு - பகுதி. தேறல் - சிவத்துக்கு, நாவுக்குஇனிமையால் உவமம். விண்மீனைமுகந்து அள்ளுங் கொடி யென்றது, மதிலின் உயர்வை விளக்கிற்று.

இது - நேரசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. (ருஎ)

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
யால யம்பிற வெள்ளிய ரங்கமே
யுரங்கொள் பல்கல னென்பர வாமையே
யுணர்வு ருமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே.

(இ - ள்.) ஐயற்கு - சிறந்த சோமசுந்தரக் கடவுளுக்கு, அரங்கும் - நடிக்கும் இடமும், வெள்ளி அரங்கமே - வெள்ளியம்பலமேயாம்; ஆலயம் - வசிக்குந் திருக்கோயில், பிற எள்ளியர் அங்கமே - (கடவுளையொழிய) மற்றவற்றை இகழ்ந்த அடியார்களது மனமேயாம்; உரம்கொள் பல் கலன் - திருமார்பில் அணிந்துகொள்ளும் பல ஆபரணங்கள், என்பு அரவு ஆமையே - எலும்பும் நாகமும் ஆமையோடுமேயாம்; உணர்வு உருமையும் - (யான்) தத்துவஞானத்தை அடையாமைக்குக் காரணமும், என் பரவாமையே - (அக்கடவுளை) யான் வழிபடாமலிருத்தலேயாம்; விரும்பு பாடலும் - (அக் கடவுள்) விரும்பும் பாட்டும், மானம் மா கவியே - பெருமையையுடைய சிறந்த செய்யுள்களேயாம்; மேவு மானமும் - விரும்பி வீற்றிருக்கும் விமானமும், மா கம் விமானமே - (தேவேந்திரனாற்) பெரிய வானத்தினின்றும் வந்த விமானமேயாம்; திருந்து தானம் - திருத்தமாயுள்ள இயற்கைமூலஸ்தானம், தட மதில் கூடலே - பெரிய மதிலையுடைய மதுரையேயாம்; வெள்ளிதட மதில் கூடல் - வெள்ளிமலையாகிய கைலாசத்தில் எழுந்தருளியிருத்தலும், செயற்கையே - செயற்கையேயாம்; (எ - று.)

பிற - தேவதாந்தரங்களும், ஐம்புலவாசைகளும். எள்ளியர் - இறந்த காலப் பலர்பால் வினையாலணையும்பெயர். 'ஆலயம் பிறவெள்ளியரங்கமே' என்பதனை, காசிக்கலம்பகத்தில் "நண்ணு மாலய மாதவரங்கமே" என்

பதனோடு ஒப்பிடுக. உரம் - உறுதியுமாம். திருமாலினது கூர்மாவதாரத்தின் செருக்கைப் பரமசிவன் விநாயகனைக்கொண்டு அடக்கி அவ்வாமையின் ஓட்டைப் பெயர்த்து மார்பில் அணிந்துகொண்டனனென்பது. கதை. 'உணர்வுறாமையு மென்பராவாமையே' என்பதற்கு - (அக்கடவுள்) அறியாததும் எனது வழிபாடின்மையையே யென்றும் பொருள்கொள்ளலாம்; எனது வழிபாடின்மையைப் பொருள்செய்யாது காரணமின்றியெழும் இயற்கைப்பெருங்கருணையால் என்னை ஆட்கொண்டருள்கின்றனரென்றபடி. 'மாகவி' என்றது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலியோரது தேவாரத்திருப்பதிகங்களை. மானம் - முதற்குறைவிகாரம். மாகவிமானம் - விண்ணிழிவிமானம். பின் 'செயற்கை' என்பதனால், 'திருந்துதானம்' என்றது இயற்கையாயிற்று. கீழ் 'கூடன் மூலலிங்கம்' என்றதற்கு ஏற்ப, 'திருந்துதானங் கூடல்' எனப்பட்டது. கைலாசமுதலிய தலங்களிலுள்ள லிங்கங்களெல்லாம் மதுரைமூலலிங்கத்தின் கிளைகளா மாதலால், 'செயற்கை வெள்ளித்தடமதிற் கூடல்' என்றார். முதலடியின் ஈற்றிலுள்ள 'அங்கம்'என்றதை - அம் கம் எனப்பிரித்து, அழகிய தலை எனக் கொண்டு, பிரமரந்திர மென்றாயினும், துவாதசாந்த மென்றாயினும் பொருள்கொள்ளுதலும் ஒன்று.

இது - இருபத்தாறாங்கவிபோன்ற மடக்குக் கட்டளைக்கலிப்பா.(௫அ)

கூடார்பு ரந்தீம டுக்கின்ற துஞ்சென்று கும்பிட்டதோ
ரேடார்கு ழற்கோதை யுயிருண்ப தும்மைய ரிளமூரலே
வாடாத செங்கோல்வ ளர்ப்பீரெ னக்கன்னி வளநாடெனு
நாடாள வைத்தாளு நகையாதி னிப்போடு நகையாடவே.

(இ - ள்.) கூடார் புரம் தீ மடுக்கின்றதும் - தம்மோடுகூடாத பகைவர்களது திரிபுரத்தை நெருப்புப்பற்றவைத்து எரித்ததும், சென்று கும்பிட்டது ஓர் ஏடு ஆர் குழல் கோதை உயிர் உண்பதும் - தம்மை வந்து வணங்கிய தன்மையையுடையாளொரு பூவிதழ்கள்நெருங்கியகூந்தலையுடைய பூமாலைபோலும்இம்மகளது உயிரை ஒழிப்பதும், ஐயர் இள மூரலே - தலைவரான உமது புன்சிரிப்பேயாம்; வாடாத செங்கோல் வளர்ப்பீர் என - குறைதலில்லாத அரசாட்சிமுறைமையை நீதிதவறுமற் செய்வையாக (நீர்) வளரச்செய்வீரென்று எண்ணி, வளம் கன்னி நாடு எனும் நாடு ஆள வைத்தாளும் - எல்லாவளங்களையுமுடைய பாண்டியநாடென்னும் நாட்டை அரசாளும்படி (உம்மை) வைத்த தடாதகைப்பிராட்டியும், நகையாது - (உமது கொடுங்கோன்மையைக் கண்டு) பரிகாசஞ்செய்யாதபடி, இனிப்போடு நகை ஆட - (இனியாயினும் இம்மகளுக்கு) இனியதாயிருக்கும்படி சிரித்தல்செய்வீராக.

இது, செவிலிகூற்று; பாங்கிகூற்றாகவுமாம்: தலைவனை நோக்கியது.

பகைமைகொண்ட அசுரரையும் வேட்கை கொண்ட மகளையும் ஒருபடிப்படப் புன்சிரிப்பால் உயிர்மாய்ப்பது அநீதியா மென்றாள். புரம் - உடம்புமாம். கும்பிட்டதோர் கோதை என இயையும். கோதை - மாலையையுடையா ளெனவுமாம். ஐயர் - முன்னிலைப்படர்க்கை. நகை - தொழிற்பெயர்; நகு - பகுதி, ஐ - விகுதி: நகை - பகுதியெனக் கொண்டால், முதனிலைத்தொழிற்பெயராம். ஆட - அகரவீற்று வியங்கோள் வினைமுற்று. கோதை - தலைவி.

இது - ஈற்றுச்சீர் மாங்கனிச்சீரும், மற்றைநான்கும் மாங்காய்ச்சீருமாகிய விருத்தக்கலித்துறை. (௫௯)

நகையே யமையுமிந்த நாகரிக நோக்கு
மிகையே யனங்கன் வினைகொளல்வீ ணன்றே

தகையே மதுரேசன் றண்டமிழ்நா டன்னீர்
பகையே துமக்கு நமக்கும் பகர்வீரே.

(இ - ள்.) மதுராபுரீசன் தண் தமிழ் நாடு அன்னீர்-மதுரைக்குத் தலைவனாகிய சிவபிரானது குளிர்ச்சியான தமிழ்முழங்கும்பாண்டியநாட்டையொத்துச் சிறந்தவரே!—நகையே அமையும்-(என்னை அழித்தற்கு-உமது) புன்சிரிப்பு ஒன்றே போதும்; இந்த நாகரிகம் நோக்கு - சதுரப்பாட்டையுடைய இந்த (உமது) பார்வை, மிகையே - அதிகமேயாம்; அனங்கன் வினை கொளல் - (இவ்விரண்டன்மேலும்) மன்மதனும் போர்த்தொழிலைக் கைக்கொள்வது, வீண் அன்றே - வீணேயாம்; தகையே - (இங்ஙனம் என்னை வருத்தங்காணுதல் உமக்குத்) தகுதியோ? உமக்கும் நமக்கும்—, பகை எது - பகைமை யாது உளது? பகர்வீர் - சொல்லும்; (எ-று.)

இது - தலைவியைநோக்கித் தலைவன் கூறியது; தலைவிகூற்றாகவுமாம்.

முதலடியில், எ - பிரிநிலை. நோக்கு - முதனிலைத்தொழிற்பெயர். மிகையே, ஏ - தேற்றம். அநங்கன் - (சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்பால் எரிக்கப்பட்டு) அங்கமில்லாதவன்; அங்கம்-உடம்பு. தகையே, ஏ - வினாவகையால், தகுதியன்று என எதிர்மறைப்பொருள் தந்தது.

இது - இருபத்தொன்பதாங்கவிபோன்ற கொச்சகக்கலிப்பா. (௪0)

வீரம் வைத்தவில் வேள்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணே
ஈரம் வைத்த விளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்ப வனேசனே.

(இ - ள்.) ஈரம் வைத்த - குளிர்ச்சி பொருந்திய, இள மதி - இளஞ்சந்திரனது, வெள் நிலா - வெண்மையான நிலாவாகிய, காரம் - காரத்தை, வைத்த - (என்மேல்) வைத்த, கடம்பவன ஈசனே - கடம்பாரணியத்துக் கடவுளே! வீரம் வைத்த - பராக்கிரமம் பொருந்திய, வில் வேள் - விற்போரில்வல்ல மன்மதன், கணை - தனது அம்புகளை, மெய் தன பாரம் - (என்) உடம்பிலுள்ள பருத்த கொங்கைகளின்மேல், வைத்த - தைக்கவைத்ததனு லாகிய, பசும் புண் - பச்சைவிரணம். பசும் புணே - பச்சைவிரணமாகவேயுள்ளது; (எ - று.)

காரம்வைத்தாற் புண் ஆறுதல் உலகத்தில் இயல்பன்றோ? நீ நிலவாகிய காரத்தை வைத்தும் எனது புண் ஆறாமல் மேன்மேல் மிகுவது என்னை! என்றாள்; இது, தலைவிகூற்று.

வீரம் வைத்த - (என்மேற்) கறுவைத்த எனவுமாம். ஸ்தநபாரம் - வடமொழித்தொடர். உறைப்பும் கடுமையும் உடையதாதலால், நிலவு புண்ணுக்குஇடுங் காரமாகக் குறிக்கப்பட்டது. இள மதி வெண்ணிலாக் காரம் வைத்த எனக் கடவுளின்தொழிலாகக் கூறியது, சிவபெருமானருளாலே சந்திரன் குறைதீர்ந்து வளர்தல்பற்றி. புன்சிரிப்பை வெண்ணிலாக்காரம் வைத்ததாகக் கூறியதெனவுங் கொள்ளலாம். 'காரம் வைத்தேன்' என்றும் பாடம்.

இது - மாச்சீரும் விளச்சீருமாக விரவிவந்த கலிவிருத்தம். (௪௧)

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற்றுங் கடம்பா டவிச்சுந் தரமாறுந், தடந்தோள் குறித்திங் கணைந்தே மெனிற்பின் றரும்பே றன்மத்தின் பெருவாழ்வோ, தொடர்ந்தே யுடற்றிந் திரன்சா பமுற்றுந் தரந்தா னுமிப்பெண் பழிபோமோ,

வடைந்தேம் விடக்கொன் றையந்தா ரெவர்க்கென் றமைந்தே கிடக்கின் றதுதானே.

(இ - ள்.) கடம் கால் - மதநீரைப் பெருக்குகின்ற, பொருப்பு ஒன்று - மலைபோன்ற ஒருயானை, இடும் - கொடுத்த, போர்வை - தோலாகிய மேற்போர்வையை, சுற்றும் - (உடம்பின்மேல்) அணிந்த, கடம்பஅடவி சுந்தரரே - கடம்பவனத்தில்எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே! நும் - உமது, தட தோள் குறித்து - பெரிய திருத்தோள்களைத் தழுவுதலை உத்தேசித்து, இங்கு அணைக்தேம் எனில் - இங்கே [உம்மிடம்] (நாங்கள்) வந்துசேர்ந்தோமானால், பின் - வந்துசேர்ந்தபின்பு, தரும் பேறு - (நீர் எங்களுக்குக்) கொடுக்கும் பாக்கியம், உன்மத்தின் பெரு வாழ்வோ-பைத்தியமாகிய பெரிய வாழ்க்கைதானோ? தொடர்ந்தே உடற்று - (விடாமற்) பின்தொடர்ந்து வந்துகொண்டு வருத்துகின்ற, இந்திரன் சாபம் முற்றும்-இந்திரனது பிரமகத்திதோஷம் முழுவதையும், துரந்தாலும் - (நீர்) ஒழித்தவரானாலும், இ பெண் பழி போமோ-பெண்கொலையினாலாகின்ற இந்தத்தோஷம் (உம்மை விட்டு) ஒழியுமோ? [ஒழியாதன்றோ]; கொன்றை அம் தார் - (உமது) அழகிய கொன்றைப்பூமாலை, அடைந்தேம் விட - (உம்மை)அடைந்த எங்களுக்குத் தவிர, எவர்க்கு என்று தான் அமைந்தே கிடக்கின்றது - (பின்னை) யார்க்கென்று பொருந்தியிருக்கின்றதோ? (எ - று.)

இது - தலைவிகூற்று; தலைவனை நோக்கியது.

உன்மத்து - உந்மத்தம் என்பதன் விகாரம். 'உன்மத்தம்' என்றது - மன்மதாவத்தைகளுள் ஒன்று. இனி, 'பின் தரும் பேறு உன்மத்தின் பெரு வாழ்வோ' என்பதற்கு-(நீ எங்களுக்கு) இறந்தபின் தரும்பாக்கியம் உமது பித்தை (யாங்களும்) அடையச்செய்கின்ற ஸாரூப்யபதவியாகிய பெருவாழ்க்கையோ? என்றும் பொருளாம். விருத்திராசுரனைக்கொன்றதனால் தேவேந்திரனுக்குவந்த பிரமஹத்திதோஷத்தைச் சோமசுந்தரமூர்த்தி அவன் கடம்பவனத்துக்கு வந்தமாத்திரத்தே ஒழியச்செய்து அவனுக்கு அரசளித்துக் கதியீந்த கதையைத் திருவிளையாடற்புராணத்தில் இந்திரன்பழிதீர்த்தபடலத்தில் விளங்கக் காண்க. பிரமகத்தியினும் ஸ்திரீஹத்தி பெரும்பாதகமென்னுங் கருத்தால், 'இந்திரன்சாபமுற்றுந் துரந்தாலு மிப்பெண்பழி போமோ' என்றது. 'பெண்பழி' என்றது-தனக்கு மரணத்தோடொத்த விரகவேதனையை விளைத்ததனாலாம் பழியை.

இது - பெரும்பாலும் ஈற்றுச்சீர் புளிமாங்காய்ச்சீரும், மற்றைஆறும் புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௫௨)

தான வெங்களி றோடு மிந்திரன் சாப முந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூனி மிர்ந்திட வேநி மிர்ந்திடு கூட லம்பதியே.

(இ - ள்.) தானம் - மதஜலத்தையுடைய, வெம் - உக்கிரமான, களிறோடும் - ஐராவதயானையின் சாபத்துடனே, இந்திரன் சாபமும் - தேவேந்திரனது சாபத்தையும், தொலையா-தீர்த்து, மேனி தந்த - நல்வடிவத்தைத் தந்த, கல்யாணசுந்தரர் - கலியாணசுந்தரரென்னும் ஒருதிருநாமமுள்ள சொக்கநாதர், மேவு - திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்கின்ற, வண் பதி - அழகிய தலம்,(எதுவென்றால்),—வான் நிமிர்ந்திட - மேலுலகத்தை நெருங்க,ஆடும் - அசைகின்ற, ஒண் கொடி - பிரகாசம்பொருந்திய துவசங்கள்,வால சந்திரனும் கூன் நிமிர்ந்திடவே - இளம்பிறைச்சந்திரனும் தேய்

ந்து தன்வடிவம் வளேவுமாறும்படியாகவே, நிமிர்ந்திடு - உயர்ந்துள்ள, அம் கூடல் பதி ஆம் - அழகிய மதுரைத்திருப்பதியாம்; (எ - று.)

இது - பிரபந்தங்களுக்கு உரிய ஊர் என்னுந் துறை.

'வெண்களிறு' என்றும், 'மேன்மைதந்த' என்றும் பாடம். மேனிதந்தது- இந்திரனுக்குப் பிரமஹத்திதோஷம் நீங்கத் தெய்வவொளிமிக்கு விளங்குவதான உருவத்தையும் ஐராவதத்திற்குக் காட்டானேயுருவம்நீங்க முன்னேய உருவத்தையும் அளித்தது. வான் இமிர்ந்திட எனப் பிரித்து - மேகங்கள் (கொடியைக்கண்டு அஞ்சிஅலறிக்) கர்ச்சிக்கும்படி யென்றும் பொருள் கொள்ளலாம். வாலசந்திரன் - பாலசந்த்ரன். பதிக்கு வண்மை - தன்னிடம் அடைந்தவர்க்குத் தக்கபதவியைத் தருத லாகவுமாம். கொடிக்குஞ் சந்திரனுக்குஞ் சம்பந்தமில்லாதிருக்கச சம்பந்தத்தைக் கற்பித்ததனால், தொடர் புயர்வுநவிற்சியணி; வடநூலார் சம்பந்தாதிசயோக்தி யென்பர்: இதனால், கொடியின் உயர்ச்சி தொனிக்கின்றது. கூடலம்பதியே சுந்தரர்மேவுவண் பதியாம் என்று அந்வயித்துஉரைத்தலுமாம்.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் தேமாச்சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் கூவிளச்சீர்களும், ஈற்றது கூவிளங்காய்ச்சீரு மாகிய அறுசீராசிரியச்சந்தவிருத்தம்; 'தான தந்தன தான தந்தன தான தந்தனனு' என இதற்குச் சந்தக்குழிப்புக் காண்க. (௩௩)

[கைக்கிளை.]

அஞ்சேல் மடநெஞ்ச சபிடேகச் சொக்கரருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போற்—றுஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கு
மறலியற் கூந்தற் காடமர்க் கண்ணே.

(இ - ள்.) மட நெஞ்சு - அறியாமையையுடைய மனமே! அபிடேகச் சொக்கர் - அபிஷேகச்சொக்கநாதரது, அருள் -(அடியார்க்குப் பரகதியை) அருளுதலையுடைய, செம் சே அடிக்கு - அழகிய சிவந்த திருவடிகளுக்கு, அடிமை செய்யார் போல் - தொண்டுபூண்டொழுகாதவர் போல, துஞ்சாது- ஒருநிலைகொள்ளாமல், அஞ்சேல் - பயப்படாதே; அறல் இயல் கூந்தற்கு - கருமணல்போலுந் தன்மையுள்ள கூந்தலையுடையளான (யான்கண்ட) மகளுக்கு, ஆடு - அசைகின்ற, அமர் - போர்செய்தலையுடைய, கண் - கண்கள், எறி திரை கருங் கடல் ஏய்க்கும் - வீசுகின்ற அலைகளையுடைய கரிய கடலை ஒக்கும்; (எ - று.)

கண்கள் பொதுநோக்காகிய மருட்பார்வையையும் காதல்நோக்காகிய அருட்பார்வையையுந் தருதலால், விஷத்தையும் அமிருதத்தையுந் தந்த பெரிய கடலை ஒக்கும் என்றதாம்; தலைவன் தலைவியது குறிப்பை அறிந்து நெஞ்சிற்கு உணர்த்தியது: உட்கோள் என்னுந் துறை; அவளுடம்பாட்டுக்குறிப்பை அவள்பார்வையால் அறிந்து மகிழ்தல், பயனும். இமைத்தல்செய்கின்ற கண்கள் அலைவீசுகிற கடலை ஒக்கும் எனக் கருத்துக்கொண்டால், தலைவன் தலைவியைத் தனியே கண்டவுடனே இவள் மானிடமகளோ தெய்வமகளோ என்று உண்டான ஐயத்தை அவளவயவத்தினியக்கத்தை நோக்கித் தெய்வமல்லளென்றுஅறிந்து தெளிதல், துறையாம்.

அஞ்சேல் - எதிர்மறையொருமையேவல். நெஞ்சு - அண்மைவிளி. செஞ்சே என்பதை ஒருபொருட்பன்மொழியாகக்கொண்டால், மிக்க செம்மையையுடைய வென்று பொருள். அடிமைசெய்யாதவர்களது மனமும் செயலும் ஒருவழிப்படாதாம். இனி, துஞ்சாது எறி திரை என்றுஎடுத்து,

ஓய்வின்றி வீசுகின்ற அலைகளையுடைய வென்றலுமொன்று. அறலியற்கூந்தல் - அன்மொழித்தொகை. அமராடு கண்ணென மாறுதலுமாம்.

இது - முதலிரண்டடிகளும் வெண்பாவடிகளாய், மற்றைய இரண்டும் ஆசிரியவடிகளாய், அவற்றுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய் வந்து. உட்கோளைச் சொன்ன ஒருதலைக்காம முணர்த்தியதனால், கைக்கிளை மருட்பா. இது, நாயகநாயகிகளுள் ஒருவருள்ளக்கருத்தை ஒருவர் அறியாத ஒருதலைக்காம மாதலால், கைக்கிளையாயிற்று. (சச)

கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத்துக் கேமுத்த முண்டிமயத்
தண்முத் தமைந்த தமனிய மேதலைச் சங்கம்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே.

(இ - ள்.) இமயம் தண் முத்து அமைந்த - இமயமலையிற்பிறந்த குளிர்ந்த முத்துப்போன்ற உமாதேவி ஒருபாற் பொருந்தப்பெற்ற, தமனியமே - பொன்போன்றவனே! தலைச் சங்கம் பொங்கும் - முதற்சங்கத்திற் சிறந்து விளங்கிய, பண் - திருத்தமுடைய, முத் தமிழ்க்கு - மூவகைப்பட்ட தமிழுக்கும், ஓர் பயனே - ஒருபயனாக உள்ளவனே! சவுந்தரபாண்டியனே—! கண் முத்து அரும்பின - (இம்மகளுக்குக்) கண்கள் கண்ணீர் துளிக்கப்பெற்றன; கொங்கை பொன் பூத்த - தனங்கள் பசலைநிறந்தோன்றப்பெற்றன; (ஆதலால்), கனி பவளத்து ஒள் முத்து அரும்பும் என் பெண் முத்துக்கு - கனிந்த பவழம்போன்ற வாயில் ஒள்ளிய முத்துப்போன்ற பற்கள் விளங்கப்பெற்ற எனது சிறந்த இம்மகளுக்கு, முத்தமே உண்டு - (உன்னை) விட்டுப்பிரிந்திருத்தலே உளது; (எ - று.)

நீ விரைவில் வந்து அணைந்து இவளது பிரிவுநோயைத் தீர்த்தருளவேண்டு மென்பதாம்; இது, செவிலி கூற்று.

முத்தும், பொன்னும் - உவமவாகுபெயர். முத்தம் - முக்தம். இமயம் - பனிமலை. ஒருகாலத்தில் உமாதேவி பலநாளாய்த் தவஞ்செய்து கொண்டிருந்த பர்வதராஜனாகிய இமவானின் மகளாய்த் திருவவதரித்துப் பார்வதியென்னுந்திருநாமத்தைப் பெற்றதனால், 'இமயத்தண்முத்து' எனப்பட்டாள். சிவத்தையும் சத்தியையும் பொன்னும் முத்துமாகச் சொன்னது, அவற்றின் சேர்க்கையமைதியின் சிறப்பை நோக்கி. தமனியம் - தபநீயம் என்னும் வடசொல்லின் திரிபு; நெருப்பிற்சுடப்பட்டு விளங்குவதென்று பொருள். 'தமிழ்க்கு ஓர் பயன்' என்றது - சிவபெருமானைத் துதித்தலினாலேயே தமிழுக்குச் சிறப்பு உண்டாயிற்றென்றவாறு. இச்செய்யுளில் 'முத்து' என்ற சொல்லைப் பலமுறைஉபயோகித்தது, ஒரு சமத்காரம்.

இது - நேரசைமுதலதான கட்டளைக்கலித்துறை. (சரு)

பாணரு மழலைச் சிறியாழ் மதுரப் பாடற்குத் தோடுவார் காதும் பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும் பாலித்தாய் பாட்டளி குழைக்குங், கோணரு வுளைப்பூங் கொத்தலர் குடுமிக் குறுங்கணொட் டிலைச்சிலை குனித்த கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலா மலைதென் கொடியிடைக் காற்றுமா றுளதோ, சேணருப் பசும்பொற் றசும்பசும் பிருக்குஞ் சிகரியிற் றகரநா றைம்பாற் சேயரிக் கருங்கட் பசுங்கொடி நடங்குஞ் செவ்வியிற் சிறைமயி லகவத், தூணரு முழவுத் தோண்மடித் தும்பர் சுவல்பிடித் தணந்துபார்த் துணங்குந் தோரணமாடக்கூடலிற் சோமசுந்தரா சந்த்ரசேகரனே.

(இ - ள்.) சேண் அறா - உயர்ச்சி நீங்காத [மிகவுயர்ந்த], பசும் பொன் தசும்பு - பசிய பொன்னாலாகிய கலசம், அசும்பிருக்கும் - (ஓடவிட்டபொன்னாதலால்) நெகிழ்ந்திருக்கப்பெற்ற, சிகரியில் - மலைபோன்ற உபரிகையின்மேல், சிறை மயில் - தோகையைவிரித்தலையுடைய மயில்கள், தகரம் நாறு ஐம் பால் - தகர மென்னும் பெயரையுடைய மயிர்ச்சாந்து வாசனை வீசுகின்ற கூந்தலையும், சே அரி கருங் கண் - சிவந்த இரேகைகளையுடைய கரிய கண்களையு முடைய, பசுங் கொடி - பசுமையானபூங்கொடிபோன்ற ஒரு மங்கை, நுடங்கும் - ஒல்கி அசைந்து ஆடுகின்ற, செவ்வியின் - தன்மை போல, அகவ - கூத்தாட, (அவ்வாட்டத்தை), உம்பர் - தேவர்கள், தூண் அறா - தூணின்தன்மை நீங்காத, முழவு தோள் - மத்தளம்போலத் திரண்டுருண்ட தோளை, மடித்து - மடித்துவைத்து, சுவல் பிடித்து - பிடரியைக் கையால் தாங்கிக்கொண்டு, அணந்து பார்த்து - அண்ணாந்துபார்த்து, உணங்கும் - வருந்துதற்குக் காரணமான, தோரணம் மாடம் - தோரணத்தையுடைய மாளிகைகளையுடைய, கூடலில் - மதுரையில் எழுந்தருளிய, சோமசுந்தரா - சோமசுந்தரக்கடவுளே! சந்த்ர சேகரனே - சந்திரனைத் தலையில்அணியும்அணியாக வுடையவனே!—பாண் அறா - இசை நீங்காத, மழலை - குதலைச்சொற் போன்ற, சிறு யாழ் - சிறிய வீணையின், மதுரம் பாடற்கு - இனிப்பான பாட்டுக்கு, தோடு வார் காதும் - தோடு என்னுங் காதணியை யணியும் நீண்ட காதுகளையும், பனி மதி கொழுந்துக்கு - குளிர்ச்சியான இளஞ்சந்திரனுக்கு, அவிர் சடை பொதும்பும் - விளங்குகின்ற சடையின் பொந்தையும், பாலித்தாய் - கொடுத்தருளியவனும், பாட்டு அளி குழைக்கும் - இசைப்பாட்டையுடைய வண்டொழுங்காகிய நாணி பூட்டப்பெற்ற, கோண் அறா - வளைவு நீங்காத [எப்பொழுதும் வளைந்துள்ள], உளை பூ கொத்து அலர் குநுனி - மேலே தூய்மையுடைய பூங்கொத்து மலர்ந்த நுனியையும், குறுங் கண் - சிறிய கணுக்களையும், நெடு இலை - நீண்ட இலைகளையு முடைய, சிலை - கரும்பாகிய வில்லை, குனித்த - வளைத்த, கூற்று - யமன்போன்ற மன்மதனது, உயிர் - உயிரை, குடித்தாய்க்கு - உண்டவனுமான உனக்கு, ஆற்றலாம் அலது - (யாழ்ப் பாடல்முதலியவற்றிற்கு வருந்தாமற்) பொறுத்திருக்கலாமேயல்லாமல், என் கொடி இடைக்கு - எனது மகளாகிய பூங்கொடிபோலும் இடையையுடைய இவளுக்கு, ஆற்றும் ஆறு - (அவற்றைப்)பொறுக்கும் விதம், உளதோ - உண்டோ? [இல்லை யென்றபடி] ; (எ - று.)

வீணையிசைக்குக் காதைக்கொடுத்து இளம்பிறைக்கு முடியைத்தந்து காமனுயிரைக் கொள்ளைகொண்ட உனக்கு அவ்வீணையிசைமுதலியவற்றாலுண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தல் கூடும்: இவ்வெனதுமகளுக்குப் பொறுத்தல்கூடுமோ? என்றாள். இது,செவிலி தலைவனைநோக்கிக் கூறியது. விரைவில் வந்து அணையவேண்டு மென்றதாம்.

யாழிசைமுதலியன ஒருவரையொருவர் பிரிந்த நாயகநாயகிகளுக்குப் பிரிவுநோயைவளர்த்து வருத்தத்தைமிகுவிப்பனவா மென்க. கம்பள அசுவதரர் என்னுங் கந்தருவ ரிருவர் சிவபிரானைக்குறித்துப் பலநாள் தவஞ்செய்து அவரருளால் தோடென்னுங் காதணிவடிவாகி அவரதுகாதுகளிற் பொருந்தி எப்பொழுதுங்கையில்வீணையைவைத்துக்கொண்டு பாடுகின்றன ரென்பது கதை; மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழில் "பகரு மிசைதிசை பரவ விருவர்கள் பயிலு மியறெறி வெள்வளைத் தோட்டினர்" எனவும், காசிக்கலம்பகத்தில் "பருகுமி னமிர்தென வுருகிரு கவிஞர்கள் பனுவலின் மதுர விசைக்குக் குழைந்தன" எனவும், "ஓரிருவரிசை கூட்டுண்ணுந் திருச் செவிக்கே கூறுவீர்" எனவும் வருதல் காண்க. "கந்தரு வனாயிரு காதிற்

* H

சேர்த்தனை" என்பதுங் காண்க. இதற்குத் தும்புருநாரதரென்று கூறுவாரு முளர். சிறுமை என்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு சீறு என நின்றது. சீறியாழ் - குற்றியலிகரம். கோண் - முதனிலைத்தொழிற்பெயர்.

உளை - பஞ்சுபோல்உள்ளீடில்லாதது; இச்சொல் இப்பொருளதாதலை, "உளைப்பூ மருதி னொள்ளிண ரட்டி" என்னுந் திருமுருகாற்றுப் படையில் 'உளை' என்பதற்கு 'மேலிற்றுய்' என்று நச்சினார்க்கினியர் உரைத்த உரையால் அறிக. கொடியிடை - உவமைத்தொகை யன்மொழி. சிகரி - சிகரத்தை யுடையது என, மலைக்குக் காரணக்குறி; இது, இங்கே உவமையாகு பெயர். தகரம் - சாந்துக்கு ஆகுபெயர்; இது, பஞ்சவிரையில் ஒன்று. ஐம்பால் - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; ஐந்துபகுப்பையுடையதென்றாயினும், ஐந்துதன்மையையுடைய தென்றாயினும் பொருள்கொள்க: ஐந்துபகுப்பாவன - மயிரை உச்சியில்முடித்தலாகிய முடியும், பக்கத்தில்முடித்தலாகிய கொண்டையும், பின்னேசெருகலாகிய சுருளும், சுருட்டிமுடித்தலாகிய குழலும், பின்னிவிடுதலாகிய பனிச்சையுமாம்; ஐந்து தன்மையாவன - மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை என்பன.

தாணறு - தாணையொத்தஎன்றபடி. கையை மடித்துக் கழுத்தின் பின்புறத்தில் வைத்துக்கொண்டு மேல்நோக்கிப் பார்த்தல், கழுத்துநோவாமைப் பொருட்டு. அணந்து - அண்ணாந்து என்பதன் விகாரம். தேவர்கள் அண்ணாந்துபார்த்து மெலிகின்றனரென்ற இதனால், அம்மதுரைநகரத்து மாடமாளிகைகள் வானுலகத்தினும் உயர்ந்துள்ளன வென்றதாம். தோரணம் - தலைவாயில்; மாவிலை முதலியவற்றாற் செய்யுந் தோரணமுமாம். உமாதேவியோடுகூடி அழகாய்விளங்குவதனால், ஸோமஸுந்தரனென்றுதிருநாமம்; இது, தேவர்களிட்டது: இதனை "இந்தமா லிலிங்கத் தெண்ணான் கிலக்கண விச்சை மேனி யந்தமி லழகன் பாகத் தமையுட னழகு செய்து, சந்ததம் விளக்கஞ் செய்யுந் தகைமையை நோக்கிச் சோம சுந்தர னென்று நாமஞ் சாத்தினார் துறக்க வாணர்" என்னுந் திருவிளையாடற்புராணத்தால் அறிக.

இது - இரண்டு நான்கு எழுத்துச்சீர்கள் மாச்சீர்களும் மற்ற நான்கும் விளச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃது இரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த பதினறுசீராசிரியவிருத்தம். (௪௬)

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்குந்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூட
லொண்ணுத றழீஇய கண்ணுதற் கடவு
ளெண்மர் புறந்தரூஉ மொண்பெருந் திசைக்குத்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரிந்த
விரசதங் குயின்ற திருமா மன்றகம்
பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் றாயினுங்
கருந்தாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டு
மிருவே றமைந்தநின் னொருபெருங் கூத்தே.

(இ - ள்.) கரும்பொறி சுரும்பர் - கரிய புள்ளிகளையுடைய வண்டுகள், செவ்வழி பாட - (அருகில்வந்து) செவ்வழியென்னும்பண்ணைப் பாடாநிற்க,

சேய் இதழ் விரிக்கும் - (அது தங்குதற்கிடமாகச்) சிவந்த இதழை மலர்த்துகிற, பொகுட்டு பொன் அம்புயம்-கொட்டையையுடைய பொற்றாமரை மலர், பாண்மகற்கு அலர் பொன் பலகை நீட்டும் - ஒருபாணனுக்கு விளங்குகின்ற பொற்பலகையை நீட்டித்தந்த, கடவுள் - சோமசுந்தரக் கடவுளது, செம் கைக்கு - சிவந்ததொருகைக்கு, படி எடுப்பு - உவமை யெடுத்துக் காட்டுதலை, எய்க்கும் - ஒத்திருக்கின்ற, தட மலர் பொய்கை - பெரிய மலர்களையுடைய பொற்றாமரைக்குளத்தையுடைய, தண் தமிழ் கூடல் - குளிர்ந்த தமிழ்வழங்கும் மதுரையிலெழுந்தருளிய, ஒள் நுதல் தழீஇய - ஒளியுள்ள நெற்றியையுடைய மீனாக்ஷியம்மை தழுவிய, கண் நுதல் கடவுள் - நெற்றியிற் கண்ணையுடைய கடவுளே! எண்மர் புறந்தரூஉம் ஒள் பெருந் திகைக்கு - அஷ்டதிக்பாலகர்களாற் பாதுகாக்கப்படுகிற ஒள்ளிய பெரிய எட்டுத்திக்குக்களுக்கும், தூய்மை செய்தாங்கு - பரிசுத்தியைச் செய்தாற்போல, பால் நிலா விரிந்த - பால்போலும்வெள்ளிய நிலாப்போன்றவொளி (எல்லாத்திக்குக்களிலும்) பரவுதற்கிடமான, இரசதம் குயின்ற திரு மா மன்று அகம் - வெள்ளியினாலாகிய அழகிய பெரிய அம்பலத்தினிடம், பொன் மலை கிடப்ப வெள்ளி வெற்பு உகந்தாய்க்கு - பொன்மலையாகிய மேரு தனக்குச் சொந்தமாகவிருக்கவும் வெள்ளிமலையாகிய கைலாசத்தை விரும்பி முக்கியஸ்தானமாகக் கொண்ட உனக்கு, செம் பொன் மன்றினும் சிறந்தன்று - சிவந்த பொன்னம்பலத்தினுஞ் சிறந்ததாயிற்று; ஆயினும் - ஆனாலும், கருந் தாது குயின்ற என் கல் நெஞ்சு அகத்தும் - இரும்பினாலாகிய எனது கல்லைப்போல வலிய மனத்தினிடத்தும், இரு வேறு அமைந்த நின் ஒரு பெருங் கூத்து - வெவ்வேறுவகைப்பட்ட ஆணுருவமும் பெண்ணுருவமுமாகிய இரண்டுவடிவமு மமைந்த உனது ஒப்பற்ற பெரிய திருநடனத்தை, வருந்தியும் - வருத்தப்பட்டாயினும், வழங்கல் வேண்டும் - செய்தருளுதல் வேண்டும்; (எ - று.)

சிறந்த பொன்மலையும் பொன்னம்பலமும் இருக்கவும் அவற்றை அத்தனைமுக்கியமாக்கொள்ளாமல் அவற்றினும் இழிந்த வெள்ளிமலையையும் வெள்ளியம்பலத்தையும் முக்கியஸ்தானமாகக் கொண்டதுபோலவே எல்லாவற்றினுமிழிவான எனது இருப்புநெஞ்சிலும் நீ திருவுள்ளமுவந்துவந்து எழுந்தருளுதல் வேண்டுமென வேண்டியபடி. சுரும்புபாடுதல்-பாணனது பாட்டுக்கும், சிவந்தபூவிதழ் - பொற்பலகைக்கும், தாமரை - திருக்கைக்கும் உவமை: நாள்தோறுங் காலந்தவறாமற் கோவிலுக்குவந்து சுவாமிதரிசனஞ்செய்து மிக்கபக்தியுடனே இசைபாடுகின்ற பாணபத்திரனென்னும் வீணைப்பாடகனுக்குச் சோமசுந்தரக்கடவுள் திருவருள் கூர்ந்து ஒருநாள் பொற்பலகையொன்றைஆசனமாகக்கொள்ளும்படி அளித்தருளினரென்பது கதை; இதனைத்திருவிளையாடற்புராணத்திற்பலகையிட்டபடலத்திற்காண்க. திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்க்குச் சொக்கநாதசுவாமி பொற்பலகையிட்டனரென்று பெரியபுராணம் கூறும்.

கருஞ்சுரும்பர், செவ்வழியென வந்தது-சொல்லால்தொடுத்த தொடைமுரண். சுரும்பர்-சுரும்பு என்பதன் ஈற்றுப்போலி. படிஎன்பது-ஒன்றன்வடிவையுடைத்தாய் அதுவென்றே கருதப்படுவது; ப்ரதி என்னும் வடமொழியின் சிதைவு. ஒண்ணுதல் - பண்புத்தொகை யன்மொழி. எண்மர் - இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர். 'ஒண்பெருடுக்கைக்கு' என்றபாடத்துக்கு-ஒள்ளியபெரியஉடுக்குமாடையாகிய திக்குக்களுக்கு என்று பொருள் கொள்க; சிவபிரான் திகம்பரனாதலின். இரசதம் - ரஜதம். சிறந்தன்று - தகரவிடைநிலையும் அன்சாரியையும் றகரவிகுதியும் பெற்றுவந்த ஒன்றன்பாலிறந்தகால முற்று. கருந்

தாது - கருமையான தாதுப்பொருள். குயின்ற, குயில் - பகுதி. செய்வழி யென்றது - ரீங்காரத்தை.

இது - ஈற்றயலடி முச்சீரடியும் மற்றையடிகள் நாற்சீரடிகளுமாகப் பெரும்பாலும் ஈரசைச்சீர்களால் வந்த பதினன்கடி நேரிசையாசிரியப்பா.()

தேத்தந்த கொன்றையான் றெய்வத் தமிழ்க்கூடன்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றைமைவிட்
டேகவி மானமுனக் கேன்.

(இ-ள்.) தேன் தந்த கொன்றையான் - தேனைச் சொரிகின்ற கொன்றைப்பூமாலையையுடையவனை பரமசிவனது, தெய்வம் தமிழ் கூடல்-தெய்வத் தன்மையையுடைய தமிழ் வழங்கும் மதுரையிலுள்ள, மா தந்தம் வேழம் மதம் மடங்க மீ தந்த - பெரிய தந்தங்களையுடைய எட்டு யானைகள் தங்கள் மதம் ஒடுங்கும்படி மேற்கொண்டுதாங்குகிற, மா கம் விமானம் - பெரிய வானுலகத்தினின்று வந்த இந்திரவிமானத்தை, வணங்கினம் - (யாம்) நமஸ்கரித்தோம்; ஆல் - ஆதலால். கூற்று - யமனே! எமை விட்டு - எங்களை விட்டு, ஏகு - செல்வாயாக; உனக்கு—. அவிமானம் என் - செருக்கு எதற்காக? [செருக்கை விட்டுவிடு என்றதாம்]; (எ - று.)—கூடல் மாகவி மான மென இயையும்.

தேன்தந்த - தேத்தந்த; தேன்மொழி.வலிவர ஈறுபோய் வலிமிக்கது. பரமசிவன் தானே அகத்தியனார்க்கு அருளியதாதலாலும். தொண்டர்கள் கடவுளைத் துதித்ததெல்லாம் இப்பாஷையாலே யாதலாலும், வடமொழியோடொப்புமை இப்பாஷைக்கே யன்றிப் பிறபாஷைகளுக்கு இன்மையாலும், 'தெய்வத்தமிழ்' என்றது; தெய்வக்கூடல் என இயைத்தலுமாம். கீழ் "போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரம்" என்றாற்போல, இங்கே 'வேழ மதமடங்க மீத்தந்த விமானம்' என்றார். கூற்று - அண்மைவிளி. அவிமானம்-அபிமாநம். அவி மானம் எனப் பிரித்து - அடங்குவாயாக உனக்கு அகங்காரம் என்ன என்றும் பொருள்கொள்ளலாம். மதம் அடங்க எனவும் பிரிக்கலாம். 'எவன்' என்னும் வினவினைக்குறிப்புமுற்று. இடைக்குறைவிகாரப்பட்டு 'என்' என்று ஆகி, நீட்டல்விகாரத்தால் 'ஏன்' என்று நின்றது. மாத் தந்த - பெருமை பொருந்திய என்றுமாம். கூடல் விமானமென இயையும்.

இது - நாள்என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (௪௮)

ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுமற்றோர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
றேனின்ற வைந்தருச் சிந்தா மணியொடத் தேனுவுமே.

(இ - ள்.) ஏழை நெஞ்சே-அறியாமையையுடைய மனமே! ஏன் நின்று இரங்குதி - என்னகாரணத்தினால் நின்று கவலைப்படுகின்றாய்? வண்டு இமிர் கடப்பங்கான் - வண்டுகள் ஒலிக்கின்ற கடம்பாரணியத்தில், ஓர் கற்பகம் - ஒரு கல்பகவிருக்ஷம், நின்றது - பொருந்தியுள்ளது; அந்த கற்பகத்தின் பால் நின்ற - அந்தக் கல்பகவிருக்ஷத்தின் பக்கத்திலே பொருந்திய, பச்சை பசுங் கொடியே - பசுநிறமுள்ள இளைய (காமவல்லியென்னும்) பூங்கொடியே, தேன் நின்ற ஐந் தரு-தேன்பொருந்திய பஞ்சதருக்களையும்,சிந்தாமணியொடு - சிந்தாமணியென்னும் ஜீவரத்தினத்தையும், அ தேனுவும் -

அந்தக் காமதேனுவையும், முற்றும் - எல்லாவற்றையும், பாலிக்கும் - (அடியார்க்குத்)தந்தருளும்; (எ - று.)— மற்று - அசை. ஆல் - ஈற்றசை.

அக்கற்பகத்தையுங் காமவல்லியையும் அடைந்து நற்பேறுபெற்று நீ கொண்டுநிற்கும் இரக்கத்தை நீக்கிக்கொள்வாய் என நெஞ்சிற்கு அறிவுறுத்தியதாம்.

கடம்பு + கான் = கடப்பங்கான்; மென்றொடர் வன்றொடராய் அம்முச் சாரியைபெற்றுநின்றது. மற்று - அசை. 'கற்பகம்' என்றது, தன்பக்கல் வந்து நினைப்பவர் நினைப்பவற்றையெல்லாம் நினைத்தவாறே கொடுத்தருளும் நிலைமைபற்றி. 'கற்பகம்' என்றது - சிவத்தை. 'கொடி' என்றது - சத்தியை. ஐந்தரு - சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம், அரிசந்தனம் என்பன. சிந்தாமணி - நினைப்பவற்றைத் தருவதொரு தேவமணி. காமதேனு - அங்ஙனம் தருவதொரு தெய்வப்பசு; தேநு - பசு. சிவசத்தியின் திருவருளைப் பெற்றாற் கற்பகநிழலிற் சிந்தாமணி காமதேனு முதலிய சிறப்புக்களைப் பெற்று வீற்றிருக்குந் தேவேந்திரபதவி முதலியவற்றை எளிதிற் பெறலாமென்பது, ஈற்றிரண்டடியின் கருத்து.

இது - நேரசைமுதலாகவந்த **கட்டளைக்கலித்துறை.** (௪௧)

தேனறுதசி லைக்கரும்புகொ லைக்கரும்பொரு வேம்பெனுந்
தேம்புயத்தணி வேம்பினைக்கனி தீங்கரும்பெனு மிவ்வண
மானறுதம ழைக்கணங்கையு மாறியாடத்தொ டங்குமான்
மாறியாடுநின் வல்லபந்தொழ வந்தபேர்க்கும்வ ருங்கொலோ
கானறுதசு ரும்புநாண்கொள்க ரும்புவில்லினைக் காய்ந்தநாட்
கைப்பதாகைக வர்ந்துகொண்டதோர் காட்சியென்னவெ டுப்ப
மீனறுதவ டற்பதாகைவி டைப்பதாகையு டன்கொளும் [தோர்
வீரசுந்தர மாறமாறடும் வெள்ளியம்பல வாணனே.

(இ - ள்.) கான் அறுத - நல்வாசனையை விட்டுநீங்காத, சுரும்பு - வண்டுகளின் ஒழுங்காகிய, நாண் - வில்நாணியை, கொள் - கொண்ட, கரும்பு வில்லியை - கரும்பாகிய வில்லையுடைய மன்மதனை, காய்ந்த நாள் - கோபித்துஎரித்த காலத்தில், கை பதாகை கவர்ந்து கொண்டது ஓர் காட்சி என்ன - அவன்கையிலுள்ளதொரு மீனக்கொடியைப் பறித்துத் தான் கொண்டதொரு தன்மைபோல, எடுப்பது - உயரத்தூக்கப்படுவதாகிய, ஓர் - ஒரு, மீன் அறுத அடல் பதாகை - மீன்நீங்காத வலிமையையுடைய கொடியை, விடை பதாகையுடன் - விருஷபத்துவசத்துடனே, கொளும் - கொள்ளுகின்ற, வீர சுந்தர மாற - வீரதன்மையையுடைய சுந்தரபாண்டியனாகிய சோமசுந்தரக்கடவுளே! மாறு அடும் - பகைவர்களை அழிக்கின்ற, வெள்ளி அம்பலம் வாணனே - வெள்ளியம்பலத்தில் வாழ்பவனே! (இம்மகள்), தேன் அறுத - ரசம்நீங்காத, சிலைக்கு அரும்பு - (மன்மதனுக்கு) வில்லாயிருத்தற்குப் பொருந்திய, கொலை கரும்பு - கொல்லையில்தோன்றுகின்ற கரும்பை, ஒரு வேம்பு எனும் - (மிகக் கைத்தலால்) ஒரு வேம்பு என்பாள்; தேம் புயத்து அணி வேம்பினை - (சுந்தரபாண்டியர்) அழகிய தோளில் தரித்துக்கொண்டிருக்கிற வேப்பம்பூமாலையை, கனி தீம் கரும்பு எனும் - (மிக இனிமைதருதலால்) முதிர்ந்த தித்திப்புள்ள கரும்பென்பாள்; இவணம் - இவ்வாறு, மான் அறுத மழை கண் நங்கையும் - மான்பார்வையின் தன்மை நீங்காத மழைபோற் குளிர்ந்த கண்களையுடைய இம்மகளும், மாறி ஆட தொடங்கும் - மாறியாடத் தொடங்குவாள்; ஆல் - ஆதலால், மாறி ஆடும் நின் வல்லபம் - மாறிஆடுகின்ற உனது வல்லமை, தொழ வந்த பேர்க்கும் வரும்கொலோ - (உன்னை) வணங்குதற்கு வந்தவர்களுக்கும் வருமோ?

இது - செவிலிகூற்று; பாங்கிகூற்றெனினும் இழுக்காது.

கொலை - கொல்லையென்பதன் இடைக்குறை. கொல்லுதற்றன்மையையுடைய கரும்பு என்று உரைத்தால், கரும்பின் இனிமையைச் சிறப்பியாதாம். 'குலைக்கரும்பு' என்றும் பாடங்கொள்ளலாம். தலைவனைப்பிரிந்து வருந்துந் தலைவிக்கு அவ்வருத்தத்தால் மிகவினியவுணவும் மிகக்கைத்துவெறுக்கப்படுவதா மாதலால் 'கரும் பொருவேம்பெனும்' என்றும், சுந்தரேசர் பாண்டியனானபொழுது அணிந்த வேப்பமாலையைத் தலைவி பெறுதற்கு மிக விரும்புதலால் 'வேம்பினைக் கரும்பெனும்' என்றுங் கூறப்பட்டன. தலைவரோடு கூடியுள்ளார்க்கு மிக இனிமைதருகின்ற மன்மதனது விற்கரும்பு தலைவனைப்பிரிந்த இவளுக்கு இன்னாமையை மிகத்தருதல்பற்றிக் கரும்பை வேம்பென்றதாகவுங் கொள்ளலாம். மழைக் கண் - மழைபோல நீர்வெள்ளத்தைச் சொரிகிற கண் எனவுமாம். நங்கை மாறிபாடுதல் - மாறுடி வார்த்தை சொல்லுதல். நம்பன் மாறாடுதல் - கான்மாறி ஆடுதல். மன்மதனுக்குக் கொடி மீனும். பதாகை - பெருங்கொடி. மாறு - மாற்றார்க்குப் பண்பாகுபெயர் வாணன் - வாழ்நன்என்பதன் மரூஉ.

இது - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்தாஞ்சீர்கள் தேமாச்சீர்களும், மற்றநான்குங் கூவிளச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டி கொண்டது ஓரடியாகவும் நின்ற பதினொன்றுசீராசிரியவிருத்தம். (௬௰)

வாணிலாப் பரப்பு மகுடகோ டீர மறிபுனற் கங்கைநங் கைக்கும் வையமீன் றளித்த மரகதக் கொடிக்குன் வாமபா கமும்வழங் கினையாற், பூணுலாங் கலபப் புணர்முலை யிவட்குன் பொற்புயம் வழங்கலை யெமர்போற் பொதுவினின் றாய்க்க நடுவின்மை யிடையே புகுந்தவா றென்கொலோ புகலாய், தூணுலாம் பசும்பொற் றோரண முகப்பிற் சூளிகை நெற்றிநின் றிறங்குஞ் சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கந் தோன்றலு மூன்றுநா ணிரம்பா, நீணிலா வெனக்கொண் டணங்கனார் வளைக்கை நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கு நீடுநான் மாடக் கூடலிற் பொலியு நிமலனே மதுரை நாயகனே.

(இ - ள்.) தூண் உலாம்-தூண்கள் பொருந்திவிளங்குகிற, பசும் பொன்-பசிய பொன்னினாலாகிய, தோரணம்-தலைவாயிலினது, முகப்பின் - முன்னிடத்தில், சூளிகை நெற்றிநின்று இறங்கும் - மேல்மாடத்தின் நுனியினின்றும் இழிந்துவருகிற, சுரி முகம் குடம் கூன் வலம்புரி சங்கம்-சுழிந்த முகத்தையுடைய குடம்போலப் பருத்த பின்புறம்வளைந்துள்ள வலம்புரியாகிய சங்கம், தோன்றலும் - காணப்பட்டவளவில், (அதனை), மூன்று நாள் நிரம்பா நீள் நிலா என கொண்டு - மூன்றுதினம் நிறையாத இனிநீண்டுவளருந் தன்மையையுடைய மூன்றாம்பிறைச்சந்திரனென்று மாறுபாடாகஎண்ணி, அணங்கு அனார் வளை கை நெடு இதழ் கமலங்கள் முகிழ்க்கும் - திருமகளைப் போன்ற இளமகளிரின் வளையணிந்த கைகளாகிய நீண்ட இதழ்களையுடைய தாமரைமலர்கள் குவிகிற, நீடு நான்மாடக்கூடலின் - நீண்ட நான்மாடக்கூடலென்னும் மதுரையில், பொலியும் - எழுந்தருளியுள்ள, நிமலனே - குற்றமற்றவனே! மதுரை நாயகனே - மதுரைக்குத் தலைவனே! வாள் நிலா பரப்பும் - ஒளியையுடைய சந்திரகாந்தியைப் பரவச்செய்கிற, மகுட கோடீரம் - திருமுடியின் சடையை. மறி புனல் கங்கை நங்கைக்கும் - அலைமடங்குகிற நீரையுடைய கங்காதேவிக்கும், வையம் ஈன்று அளித்த - உலகங்களையெல்லாம் பெற்றுக் காத்த, மரகதக் கொடிக்கு - (நிறத்தால்) மரகதப்பச்சைரத்தினமயமான கொடிபோன்ற உமாதேவிக்கு, உன் வாம பாகமும் - உனது

இடப்பக்கத்தையும், வழங்கினை - கொடுத்தருளினாய்; பூண் உலாம் - ஆபரணங்கள் அசையப்பெற்ற, களபம் - கலவைச்சந்தனமணிந்த, புணர் முலை - ஒன்றோடொன்றுநெருங்கிய தனங்களையுடைய, இவட்கு - இம்மகளுக்கு, உன் - உனது, பொன் புயம் - அழகியதோளை, வழங்கலை - கொடுத்தருளுகின்றாயில்லை; எமர் போல்-எம்முடையவர்போல, பொதுவில் நின்றாய்க்கு - (யாவர்க்கும்)பொதுவாகநின்ற உனக்கு, இடையே-நடுவிலே, நடு இன்மை - நடுநிலைமையில்லாத தன்மை, புகுந்த ஆறு - வந்துசேர்ந்த விதம், என்கொலோ - யாதோ? புகலாய் - சொல்வாயாக; (எ - று.)—செவிலிகூற்று.

உன்னை அடைந்தஒருபெண்ணுக்குமுடியையும் மற்றொருபெண்ணுக்கு ஒருபக்கத்தையுங் கொடுத்து இவ்வொருத்திக்குமாத்திரந் தோளைக்கொடாதது பக்ஷபாதமாதலால் மத்யஸ்தனென உனக்குத் தகாதென்றாள்; விரைவில் வந்து இவளைத்தோளிலணைத்துக்கொள் என்றதாம். சிவன் சத்தியின் உதவியைக்கொண்டு படைத்தல்முதலிய எல்லாத்தொழில்களையுஞ் செய்தலால், 'வையமீன்றளித்த மரகதக்கொடி' எனப்பட்டாள். உலாவுமென்னுஞ் செய்யுமெனெச்சம் ஈற்றுயிர்மெய் செட்டு 'உலாம்' என நின்றது; [நன் - வினை - உஉ.] 'எமர்போற்பொதுவினின்றாய்க்கு நடுவின்மை யிடையே புகுந்தவாறு' என்பதில்-பொதுவிடமாகிய அம்பலத்தில் ஆடிநின்ற உனக்கு மகளிர்போல இடுப்பில்லாமை நடுவிலே வந்ததென்றும் பொருள்தோன்றும்; பரமசிவனுடம்பிற் பார்வதிவடிவமும் பிறகுகலந்ததனால். வலம்புரிச்சங்கம் - வலப்பக்கமாகச் சுழிந்திருந்தலையுடைய சங்கு. குளிகையின்நெற்றியினின்றுஇறங்குகிறகூனியவெண்சங்கம் மேற்கேகாணப்பட்டு இறங்குகிறபிறைமதிபோலத்தோன்றும்; மயக்கவணி. அங்குச் சங்கம் வையையாற்றின்வெள்ளத்தின் விசையால் எறியப்பட்டதுபோலும். சந்திரனைக் கண்டவுடனே தாமரைகுவிதல் இயல்பு. கலியாணமாகாத கன்னிகைகள் தமக்குத்தக்ககணவனைப்பெறும்பொருட்டுப் பிறைமதியைத் தொழுதல் மரபாதலால், 'அணங்கனோர்வளைக்கை நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கும்' என்றார். நல்வினையுடையோரிடத்துச் செல்லுமளவும் பலர்க்கும் பொதுவாயிருத்தலாலும், வடிவழகாலும், திருமகள் கன்னிகைக்கு உவமை. ஆல் - ஈற்றசை.

இது - நாற்பத்தாறுங்கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம். ()

மதுமலர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
ததிலோர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
கறிவு நாணுநம் மாவியு மேகொலாம்
பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பினைப்
புதிய துந்நம் முயிர்ப்பலி யேயன்றோ
பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே.

(இ - ள்.) 'மது மலர் குழலாய் - தேனினையுடைய மலர்களைச்சூடிய கூந்தலையுடையவளே! பிச்சை - (எனக்குப்) பிக்ஷையிடுவாயாக', என்று - என்று சொல்லிக்கொண்டு, நம் மனைதொறும் திரிவார் - நமது வீடுகள் தோறும் அலைபவராகிய சிவபிரான், பிச்சை இட்ட போது - பிச்சைபோகட்டபொழுது, அதில் - அக்கபாலத்தில், ஓர் பிச்சையும் கொள்ளார் - ஒரு பிக்ஷையையும் ஏற்றுக்கொள்ளுகின்றாரில்லை; இங்கு-இப்பொழுது [இவ்விடத்தில்], கொள்கின்றது-(அவர்)வாங்கிக்கொள்ளுகின்றது, நம் அறிவும் நாணும் ஆவியுமே கொல் ஆம்-நமது அறிவையும் நாணத்தையும் உயிரையுமே போலும்; பூவை - நாகணவாய்ப்பறவைபோலும் உமாதேவியை, பால் கொள் - (தமது)

இடப்பாகத்திற் கொண்ட, புழுகு நெய் சொக்கர்க்கு - புழுகுநெய்ச்சொக்க ரென்னும் ஒருதிருநாமமுடைய சோமசுந்தரமூர்த்திக்கு, பதுமம் நாறும் பலி கலத்து - தாமரைமலரில் தோன்றிய(பிரமனது தலையாகிய)பிக்ஷாபாத்திரத்தில், ஊற்றிய பசு இரத்தம் - முன்னே சொரிந்த(திருமாலின்) பச்சை ரத்தம், பழஞ் சோறு எனின் - பழையஉண வென்றால், பினை - பின்பு, புதியதும் - புதியஉணவும், நம் உயிர் பலியே அன்றோ - நமதுஉயிராகிய பிச்சையேயன்றோ? (எ - று.)

இது - சொக்கநாதரது பிக்ஷாடனத்திருவிழா நடக்கும்பொழுது அத்திருக்கோலத்தின் காட்சியைக் கண்டு காதல்கொண்டாளொருத்தி தன்தோழியோடு கூறியதாகச் செய்யப்பட்டது; தாருகவனத்து முனிபத்தினிகளுள் வேட்கைவிஞ்சினளொருத்தி மற்றொருத்தியுடன் கூறியதாகச் செய்யப்பட்ட தெனவுமாம்.

மது மலர்க் குழலாய் - பிக்ஷாடனஞ்செய்யுஞ் சிவபிரான் இவளை விளித்த விளி; தலைவி தோழியை விளித்ததெனினும் அமையும். அதில் - நாம் இடும் பலவகைப்பிச்சையில் என்றுமாம். அவரைக்கண்டமாத்திரத்தே காமந் தலைக்கொள்ளுதலால் அறிவுசோர்ந்து நாணமழிந்து உயிரும் மரணாவஸ்தையை அடைதலால். இவ்வாறு கூறியது. நாண்-லஜ்ஜை. பரமசிவனது அம்சமாகிய வயிரவமூர்த்தி பிரமகபாலத்தைக் கையிற்கொண்டு திருமாலினிடம் பிச்சைக்குச்சென்றபோது அவர் தமது சக்கராயுதத்தால் தமதுதலையையரிந்து அதனினின்றுபெருகுகின்ற இரத்தத்தைப் பலகாலம் அக்கபாலத்திற் சொரிந்து அது பாதியும்நிறையாமையால் வாளாபோயின ரென்பது, கதை. பச்சிரத்தம் - புதிய இரத்தம். இரத்தம் - வடசொற்றிரிபு. பூவை-செவிக்கினிய செஞ்சொல்லுக்கு உவமை.பினை-பின்னை: தொகுத்தல்.

இது, கட்டளைக்கலிப்பா. (௫௨)

[தூது.]

புழுகுநெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க
ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண்
டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந்ததநீ
பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே.

(இ - ள்.) என் பைங் கிளியே - எனது பசிய கிளியே! 'புழுகுநெய்ச் சொக்கர்—, அபிடேகச் சொக்கர்—, கர்ப்பூரச் சொக்கர்—, அழகிய சொக்கர்—, கடம்பவனச் சொக்கர்—, அம் கயற்கண் தழுவிய - அழகிய மீனாக்ஷியம்மை ஆலிங்கனஞ்செய்த, சங்கம் தமிழ் - (தலை இடை கடை என்னுஞ்) சங்கங்களில் வழங்குகின்ற தமிழுக்கு உரிய, சொக்கர்—,' என்று என்று—, சந்ததம் - எப்பொழுதும், நீ—, பழகிய - பயின்றுவந்த, சொற்கு - சொல்லுக்கு, பயன் - பிரயோசனத்தை, தேர்ந்து - தெரிந்து, இங்கு - இவ்விடத்தில், வா - மீண்டுவா; (எ - று.)

நீ பழகிய சொல்லுக்குப் பயனாகச் சென்று சொக்கநாதரிடம் பேசி எனதுவருத்தத்தை அவர்க்கு எடுத்துச்சொல்லி வா எனத் தலைவி தலைவனிடம் கிளியைத் தூதுவிடுத்தாள்; கிள்ளைவிடுதூது.

கயற்கண் - கயல்மீன்போலும் கண்ணுடையாள்; உவமத்தொகையன்மொழி. இங்கு - இப்பொழுது என்றுமாம்.

இது - நிரையசைமுதலதாய்வந்த கட்டளைக்கலித்துறை. (௫௩)

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி யார்க்கவமே
வந்ததொரு பெண்பழியென் வாழ்த்துகே—னந்தோ

வடியிடுமுன் னையர்க் கடுத்தவா கெட்டேன்
கொடியிடமாப் போந்த குறை.

(இ - ள்.) பைந் தமிழ் தேர் - பசிய தமிழின் ஆராய்ச்சிக்கு இடமான, கூடல்-மதுரையிலெழுந்தருளிய, பழி அஞ்சியார்க்கு-பழியைஅஞ்சியவரான சொக்கநாதர்க்கு, அவமே - வீணாக, ஒரு பெண் பழி - இப்பெண்கொலையாலாவதொரு பழிப்பு, வந்தது - வந்துவிட்டது; என் - இதுஎன்ன? வாழ்த்துகேன் - (அவர்க்கு அப்பழி தீருமாறு) வாழ்த்துவேன்; அந்தோ - ஐயோ! ஐயர்க்கு - அத்தலைவர்க்கு, அடியிடும் முன்-(இவ்வூர்க்கு வரப்) புறப்படுமுன்னே, கொடி இடம் ஆ போந்த - காக்கை இடப்புறமாக வந்ததனாலாகிய, குறை - தோஷம், அடுத்த ஆ - பொருந்தியவிதம், (என்னே!) கெட்டேன்—! (எ - று.)—இது, தோழிகூற்று.

காக்கைஇடமாதல், அபசகுனமாம். 'அடியிடுமுன் னையர்க் கடுத்தவா கொடியிடமாப் போந்த குறை' என்பதில். தொன்றுதொட்டுச் சிவபிரானுக்குப் பூங்கொடிபோன்ற உமாதேவி இடப்பக்கமுழுவதிலும் பொருந்த வந்த குறை இருந்தவிதம் என்னே என்பது, உள்ளுறைபொருள்.

இது - மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (கூச)

[காலம்.]

குறுமுகைவெண் டளவளவின் மணந்துவக்குங் காலங்
கொழுநரொடு மிளமகளிர் மணந்துவக்குங் கால
மறுகுதொறு நின்றெமர்க ளுருத்திகழுங் காலம்
வரிசிலைநாண் டுருவிலியு முருத்திகழுங் காலஞ்
சிறுமதிநம் பெருமதியி னுகப்படருங் காலந்
தென்றலிளங் கன்றுமுயி ருகப்படருங் கால
நிறையினொடு நாணினொடு மகன்றிரியுங் கால
நேசர்மது ரேசர்வரை யகன்றிரியுங் காலம்.

(இ - ள்.) வெள் - வெண்மையான, தளவு குறு முகை-முல்லைக்கொடியின் சிறிய அரும்புகள், அளவு இல் மணம் துவக்கும் - அளவில்லாத வாசனையை வீசத்தொடங்குகின்ற, காலம் - காலமும்; இளமகளிர் - இளம்பருவமுடைய பெண்கள், கொழுநரொடும் - தம்நாயகருடனே, மணந்து-கூடி, உவக்கும் காலம் - மகிழுங் காலமும்; எமர்கள் - எம்மவர்கள், உருத்து - (என்மேற்) கோபித்து, மறுகுதொறும் நின்று - தெருக்கள்தோறும் போய்நின்றுகொண்டு, இகழும் காலம் - (எம்மை) இகழ்ந்து அலர் தூற்றுங் காலமும்; உருஇலியும் - அங்கமில்லாதவனான மன்மதனும், வரி சிலை கொண்டு - கட்டமைந்த கருப்புவில்லை(க் கையில்)எடுத்துக்கொண்டு. உரு திகழும் காலம் - ரூபத்தோடு வெளிப்பட்டு விளங்குங் காலமும்; சிறு மதி - இளஞ்சந்திரன், நம் பெரு மதியின் - நமது பெரிய அறிவின், உகப்பு - மகிழ்ச்சியை, அடரும் காலம் - அழிக்குங் காலமும்; தென்றல் இளங் கன்றும்- மந்தகதியாக வருகிற இளைய தென்றற்காற்றும், உயிர் உக - (எமது) உயிர் நீங்கும்படி, படரும் காலம் - சஞ்சரிக்குங் காலமும்; அகன் - (எமது) மனம், நிறையினொடும் நாணினொடும் - கற்போடும் இலச்சையோடும், திரியும் காலம் - மாறுபடுங் காலமும்; நேசர் மதுரேசர் -(எமது) அன்பராகிய மதுரைச் சொக்கநாதர், வரை அகன்று இரியும் - இம்மலையை விட்டு நீங்கிச் சென்ற, காலம் - காலமுமாம், (இது); (எ - று.)—இப்

படிப்பட்ட மாலைக்காலத்தில் யான் எங்ஙனம் தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்வது! எனத் தலைவி கூறியவாறு.

'எமர்கள்' என்றது, சுற்றத்தார் முதலியோரை. உகப்பு - தொழிற் பெயர்; உக - பகுதி, பு - விகுதி. "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" என்னுஞ் சூத்திரத்து 'கொள்ள வும்' என்னும் உம்மையால் 'தென்றலிளங்கன்று' என்றார். நிறையினொடு நாணினொடும் அகன் திரிதல் - நிறையையும் நாணையும் மனம் இழத்தல். நேசர் - நேயரென்பதன் போலி.

இது - ௩௫ - ஆம் கவிபோன்ற எண்சீராசிரியவிருத்தம். (௫௫)

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே—யிம்முறையு
மிம்மேனி காமநோய்க் கீடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொ றீங்கு.

(இ - ள்.) அருள் - கருணையையுடைய, கூடல் பெம்மான்மேல் - மதுரைச் சிவபெருமான்மேலே, பட்ட—. பிரம்பு அடி - (அரிமர்த்தனபாண்டியனது) கைப்பிரம்பின் அடி, அன்று - அந்நாளில், நம்மேல்—, பட்டது—; இ மேனி - இந்த (எனது) உடம்பு, காமநோய்க்கு-காம வியாதிக்கு, ஈடு அழிந்த ஆ - வலிமைகெட்ட விதத்தால்,இ முறையும் - இப்பொழுதும், அடிகள் செம் மேனிக்கு - அக்கடவுளினது சிவந்த திருமேனிக்கு, தீங்கு - தீமை, உண்டு ஆம் கொல் - உண்டாயிருக்குமோ? (எ - று.)

அம்மா என்பதை அசையாகவாயினும், வியப்பிடைச்சொல்லாகவாயினும், தோழியைவிளித்த விளியாகவாயினுங் கொள்க. பெம்மான் - பெருமானென்பதன் மரூஉ. நம்மேல் அன்று பட்டது என்றது, நாம் அக்காலத்தில் எடுத்திருந்த உடம்பின்மேற் பட்டது என்றவாறு; இதனைத் திருவிளையாடலில் மண்சுமந்த படலத்தில் ௫௩ - ஆஞ் செய்யுள் முதலியவற்றால் அறிக. உண்டாங்கொல் என்றதனால், அவரது மேனிக்கும் காமநோய் வருத்த முண்டாயிருக்குமாதலால் அவர் என்னை உடனே வந்து அணைந்திருப்பரே என்று கருத்து. இது, தலைவிகூற்று.

இது - காசு என்னும் வாய்பாட்டால் முடிந்த ஒருவிகற்ப நேரிசை வெண்பா. (௫௬)

[சிந்து.]

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாங்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல்ப சும்பொன்ன தாக்கினே
மிருந்த வீடும்வ றும்பாழ தாமவர்க்
கெருத்துக் கொட்டிலும் பொன்வேய்ந்தி டச்செய்தே
மருந்த னந்நமக் கோதன மேயப்பா
வாட கத்துமற் றுசையவ் வையர்க்கே.

(இ - ள்.) குரும்பை வெம் முலை - தெங்கினிளங்காய்போன்ற விரும்பப்படுகிற தனங்களையுடைய உமாதேவி, சேர் - (ஒருபாற்)சேரப்பெற்ற, மதுரேசர் - மதுரைச் சொக்கநாதரது, பொன் கோபுரத்தில் - பொன்னாலாகிய [அழகிய] கோபுரத்தின்மேலே, கொடி கட்டு - துவசம்நாட்டவல்ல, சித்தர் - சித்திபெற்ற ரசவாதிகளாவோம், யாம்—; கரும்பை முன்பு கல்

ஆனைக்கு இடும் சித்தர் - கரும்பை முன்னே கல்யானைக்கு உண்ணும்படி இட்டருளிய சித்தராகிய சோமசுந்தரரது, கையில் - கையிலுள்ள, செம் கல் - சிவந்த கல்லை, பசும் பொன்னது ஆக்கினேம் - பசியபொன்னாகச் செய்தோம் [சிவபிரானது கையில் வில்லாகவுள்ள சிவந்த மலையாகிய மேருவைப் பொன்னாகச் செய்தோம்]; இருந்த வீடும் வறும் பாழது ஆம் அவர்க்கு - தாமிருந்த வீடும் நுகரப்படும்பொருளொன்றுமில்லாத பாழிடமாகவுடைய அவர்க்கு [தாமெழுந்தருளியிருக்கும்முத்தி சிதாகாசமாகிய அவர்க்கு], எருது கொட்டிலும் பொன் மேய்ந்திட செய்தேம் - எருது கட்டுங் கொட்டகையையும் பொன்னால் மேலே கூரைபோகடச்செய்தோம்; [எருத்துக்கு ஒட்டு இலும் பொன் மேய்ந்திட செய்தேம் - அவர்க்குருஷபமாகிய திருமாலுக்குப் பொருந்திய மனைவியும் இலக்குமியாக வாய்க்கச்செய்தோம்: பொன் - இலக்குமி]; நமக்கு அருந் தனம் ஓதனமே - நமக்கு அரிய பொருளோ சோறேயாம்; [அருந்து அனம் ஓதனமே - உண்ணும் உணவு சோறேயாம்]; அப்பா—! அ ஐயர்க்கே - அந்தத்தலைவர்க்கே, ஆடகத்து ஆசை - பொன்னில் ஆசை (உள்ளது); [ஆடு அகத்து ஆசை - ஆடுமிடமாகிய அம்பலத்தில் ஆசை (உள்ளது)]; (எ - று.)

ரசவாதிகள் தமது திறமையை ஒருதலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள்செய்தல், சித்துஎன்னும் உறுப்பின் இலக்கணமாம்; ரசவாதமாவது - பொன்செய்தல்.

குரும்பைவெம்முலை - அன்மொழி. வெம்மை - விருப்பமாதலை, "வெம்மை வேண்டல்" என்னுஞ் சூத்திரத்தால் அறிக. ஒரு பெருஞ்சித்தர்க்குச் செங்கல்லைப் பொன்னாக்கினேமெனத் தமது சிறப்பைத் தெரிவித்தார். சித்தர் என்பதில் எண்ணமுடையவர் என்னும் பொருளுந் தோன்றும். 'மேய்ந்திட' எனவும் பாடம்; போலி. அப்பா - சித்தர்கள் வழங்குஞ் சொல் விழுக்காடு. மற்று - அசை.

இது - கட்டளைக்கலிப்பா. (௫௭)

ஐயம ணிக்கல மென்பணியே யன்பணி யக்கொள்வ தெ
ன்பணியே, மெய்யணி சாந்தமும் வெண்பலியே வேண்டு வது
ங்கொள வெண்பலியே, யெய்யவெ டுப்பதொர் செம்மலையே யே
ந்தியெ டுப்பதொர் செம்மலையே, வையகம் வாய்த்தவ ளம்பதியே
வாழ்வது கூடல்வ ளம்பதியே.

(இ - ள்.) (சோமசுந்தரக்கடவுளுக்கு), ஐய - அழகையுடைய, மணி கலம் - இரத்தினங்கள்பதித்துச் செய்த ஆபரணம், என்பு அணியே - எலும்பு மாலையேயாம்; (அவர்), அன்பு அணிய - அன்புபொருந்த, கொள்வது - ஏற்றுக் கொள்வது, என் பணியே - எனது அடிமையேயாம்; மெய் அணி சாந்தமும் - (அவர்) திருமேனியில் அணிந்துகொள்ளுஞ் சந்தனமும், வெள் பலியே - வெள்ளிய விபூதியேயாம்; கொள வேண்டுவதும் - (அவர்) வாங்கிக்கொள்ள விரும்புவதும், எண் பலியே - இகழத்தக்க பிச்சையேயாம்; எய்ய எடுப்பது - (அவர் திரிபுரசங்காரகாலத்தில் அம்பை) எய்தற்பொருட்டு (வில்லாக) எடுத்தது, ஓர் செம் மலையே - சிவந்த (பொன்மயமான) ஒரு [மேரு] மலையேயாம்; ஏந்தி எடுப்பது - (அவர் விருப்பத்தோடு) தூக்கி எடுப்பது, ஓர் செம்மலையே - ஒப்பற்ற (முருகக்கடவுளென்னும்) புத்திரரையே; வையகம் வாய்த்தவள் அம் பதியே - (அவர்) உலகங்களையெல்லாம் பெற்ற உமாதேவியின் அழகிய கொழுநரேயாவர்; வாழ்வது - (அவர்) எழுந்தருளியிருப்பது, கூடல் வளம் பதியே - எல்லாவளங்களையுமுடைய மதுரையென்னுந் திருப்பதியேயாம்; (எ - று.)

ஐய - ஐ என்னும் உரிச்சொல்லடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; இதற்கு - வியக்கத்தக்க என்றும் பொருள்கொள்ளலாம்: "ஐ வியப்பாகும்" என்பது சூத்திரமாதலின். எண் பலி - எண்ணுகிற பிச்சை யெனவுமாம். செம்மல் - உக்கிரகுமாரபாண்டியனுகவுமாம்.

இது - மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீருங் கூவிளங்காய்ச்சீர்களும், மற்ற நான்குங் கூவிளச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (௫௭)

ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாட லெழுதா மறை யோடு மிசைமுத் தமிழ்பாடப், பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும் பெருமான் முன்சென்றுள் சிறுமா னென்சொல் கேன், பாடா ளம்மனையு நாடா ளெம்மனையும் பயிலா டண்ட லையு முயலாள் வண்டலையு, மாடாண் மஞ்சனமுந் தேடா ளஞ்ச னமு மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே.

(இ - ள்.) ஏடு ஆர் - இதழ்கள் பொருந்திய, புண்டரிகத்து - வெண் டாமரைமலரில் வாசஞ்செய்கின்ற, இள மான்-இளைய மான்போன்ற பார் வையையுடைய சரசுவதி, முது பாடல் - அநாதியான பாட்டுக்களாகவுள்ள, எழுதா மறையோடும் - எழுதப்படாத வேதங்களுடனே, இசை முத் தமிழ்- இராகத்தோடுகூடிய மூவகைத்தமிழ்ப்பாடல்களையும்,பாட-பாடாநிற்க, பீடு ஆர் கூடல் வளம் பாடா - பெருமை பொருந்திய மதுரையின் சிறப்பைத் தாம் பாடிக்கொண்டு, ஆடல் செயும் - திருநிருத்தஞ் செய்தருளுகின்ற, பெருமான் முன் - மகிமையையுடைய சிவபிரா னெதிரில், சிறு மான் - சிறிய மான்பேடுபோன்ற இம்மகள், சென்றுள் - முன் (ஒருகால்) போயினள்; என் சொல்கேன் - (அதனால் விளைந்ததை) என்னவென்று எடுத்துச் சொல் வேன்; (அதுமுதல் அவள்), இன்னமும் - இதுவரையிலும், அம்மனை யும் பாடாள்-அம்மானைப்பாடலையும் பாடமாட்டாள்; எம்மனையும் நாடாள்- எந்த வீட்டையும் (விரும்பிச்செல்லுதற்குத்) தேடமாட்டாள்; தண்டலையும் பயிலாள் - பூஞ்சோலையிலும் போய்ப் பழகமாட்டாள்; வண்டலையும் முய லாள் - விளையாட்டுக்களையும் முயன்றுசெய்யமாட்டாள்; மஞ்சனமும் ஆடாள் - நீராடுதலையுஞ் செய்யமாட்டாள்; அஞ்சனமும் தேடாள் - மையையும் (இட்டுக்கொள்ளுதற்குத்) தேடமாட்டாள்; அன்னமும் அயி லாள் - சோற்றையும் உண்ணமாட்டாள்; துயிலாள் - தூங்கவும்மாட்டாள்.

செவிலிகூற்று; தலைமகளது வருத்தத்தைக் கூறியது.

மான் - இரண்டிடத்தும் உவமையாகுபெயர். 'எம்மனையும்' என்றது, உயிர்த்தோழிகளின் வீடுமுட்பட என்றவாறு. தண்தலை - குளிர்ந்த இடத் தையுடையதுனைக் காரணக்குறி. மஞ்சனம் - மஜ்ஜநம்என்னும் வடமொழி யின் திரிபு.

இது-முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றநான்குங் காய்ச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். (௫௮)

இன்னியந் துவைப்பச் சங்க மேங்கிடச் செழிய ரீன்ற, கன்னியை மணந்தே யன்றே கன்னிநா டெய்தப் பெற்றுர், மின் னிவண் முயக்கும் பெற்றால் வெறுக்கைமற் றிதன்மே லுண்டோ, கொன்னியல் குமரி மாடக் கூடலம் பதியு ளார்க்கே.

(இ - ள்.) (சோமசுந்தரமூர்த்தி), இன் இயம் துவைப்ப - இனிய வாச்சியங்கள் ஒலிக்கவும், சங்கம் ஏங்கிட - மங்களசங்கங்கள் முழங்கவும், செழியர் ஈன்ற கன்னியை மணந்தே அன்றே - மலயத்துவசபாண்டியர்

பெற்ற பெண்ணாகிய தடாதகையைக் கலியாணஞ் செய்துகொண்டதனாலேயன்றோ, கன்னி நாடு எய்த பெற்றார் - அழிவில்லாத பாண்டியநாட்டை(த் தாம் அரசாளும்படி) அடையப் பெற்றார்; கோன் இயல் - பெருமை பொருந்திய, குமரி - அழியாத, மாடம் - வீடுகளையுடைய, கூடல் அம் பதி - அழகிய மதுரைத்திருப்பதியில், உளார்க்கு - உள்ள அச்சுந்தரருக்கு, மின் இவள் முயக்கும் பெற்றால் - மின்னற்கொடிபோலும் இவளது சேர்க்கையையும் அடைந்தால், இதன்மேல் வெறுக்கை மற்ற உண்டோ - இதனினும் மேற்பட்டதொரு செல்வம் வேறு உளதோ? [இல்லையென்றபடி]; (எ - று.) —செவிலிகூற்று; பாங்கிகூற்றுமாம்.

உத்தமவிலக்கணமுடைய சிறந்த மகளை மணஞ்செய்துகொள்ளப்பெற்றால் வரம்பில்லாத செல்வம் பெருகு மென்பது, நூற்றுணிபு; "திருமகளிவளைச் சேர்ந்தானு றெண்டிரை யாடை வேலி, யிருநில மகட்குஞ் செம்பொ னேமிக்கு மிறைவ னாகுஞ். செருநிலத் தியலை வென்றீர் திருவினுக் குரியீ ரென்றான்" என்னுஞ் சிந்தாமணியையுங் காண்க. முயக்கு - முயங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். வெறுக்கை - (மெய்யுணர்ந்தவர்களால்) வெறுக்கப்படுவது; (பலராலும்) விரும்பப்படும் பொருளுக்கு எதிர்மறையிலக்கணையால் வெறுக்கையென்று பெயர் வந்ததென்றுங் கூறுவர்: வெறு - பகுதி, க் - சந்தி, கு - சாரியை, ஐ - செயப்படுபொருள்விகுதி; தொழிலாகுபெய ரென்பாருமுளர். கன்னிநாடு-கர்யாகுமரியையுடைய பாண்டியநாடு எனவுமாம்.

இது - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்ற நான்கும் மாச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (௬௦)

[கார்.]

கேளார்பு ரஞ்செற்ற வின்னாரி தோயக் கிளர்ந்துற்றதோர்,
தோளாளர் கூடற்ப திக்கேகு முகில்காள் சொலக்கேண்மினோ,
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த வென்சொன் மறுத்தே
கன்மின், றாளாண்மை யன்றேத லைப்பட்ட வூரிற் றனித்தேகலே.

(இ - ள்.) கேளார் - (தேவர்கட்குப்) பகைவர்களாகிய அசுரர்களது, புரம் - திரிபுரத்தை, செற்ற - அழித்தற்குக் கருவியான, வில் நாரி - (மேருமலையாகிய) வில்லினது (ஆதிசேஷனாகிய) நாணி, தோய - (தன்மேற்) பொருந்த, கிளர்ந்துஉற்றது - விளங்குதல்பொருந்தியதாகிய, ஓர் ஒப்பற்ற, தோளாளர் - திருத்தோளையுடைய சோமசுந்தரரது, கூடல் பதிக்கு - மதுரைத்திருப்பதிக்கு, ஏகும்-செல்லுகின்ற, முகில்காள்-மேகங்களே! சொல - (யான் ஒருவார்த்தை) சொல்ல, (அதனை), கேண்மின் - கேளுங்கள்; ஓர் மின்னும் - ஒரு மின்னல்போன்ற தலைவியும், வாளா - வீணாக, கண் மழை சிந்த - கண்ணீர்மழையைப் பொழியும்படி, என் சொல் மறுத்து ஏகன்மின் - எனதுவார்த்தையை விலக்கி (நீங்கள் அங்கே) செல்லாதேயுங்கள்; தலைப்பட்ட ஊரில் - (முன் ஒரு காற்) சிறைப்பட்ட ஊரில், தனித்து ஏகல்- (நீவிர் மீண்டும்) தனியே செல்லுதல், தாளாண்மை அன்றே - நல்முயற்சியன்றேயாம்; (எ - று.)

இச்செய்யுள், கார்காலத்தில் வருவதாகக் காலங்குறித்துத் தலைவியைப்பிரிந்துசென்ற தலைமகன் அங்ஙனமே காரியத்தைமுடித்துக்கொண்டு மீளும்போது, தனக்குமுன்னே விரைந்துசெல்கின்ற மேகங்களைப்பார்த்து, 'தலைவி இவற்றைக் கண்டால் நமது பிரிவைப்பற்றி மிகவருந்துவாளே' எனக் கவன்று, அம்மேகங்களைநோக்கித் தான்வருமளவும் நீவிர் தாழ்க்க வேண்டுமெனக் கூறியது.

கேளார் - சொன்னவார்த்தையைக் கேட்டடங்காதவர்: எனவே, பகைவராயிற்று. அம்பை எய்யும்பொருட்டு வில்லிநாணியைப் பிடித்து இழுக்கும்போது அது தோளின்மேற் படும். அன்றி, நாகாபரணரென்றபொருளில் 'கேளார்புரஞ்செற்றவின்னாரி தோயக் கிளர்ந்தூற்றதொர் தோளாளர்' என்றதாகக் கொள்ளுதலு மொன்று. 'மின்னும்' என்ற உம்மை, நீங்கள் மழையைச் சொரிவதுபோல வென்னும் பொருளை உணர்த்தும். உக்கிரகுமாரபாண்டியன் ஒருகாலத்தில் தன்னாட்டிற் பொதியமலையில் மேய்ந்து கொண்டிருந்த புஷ்கலாவர்த்தம்முதலிய சிலமேகங்களைப் பிடித்து விலங்கிடுவித்துச் சிறைச்சாலையி லிருத்தினா னென்பது, திருவிளையாடற்புராண வரலாறு. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்திற் காண்க. நான்சாமடியால், நான் வருமளவும் நீர் விரைவுகொள்ளாதி ரென்றதாம். ஓகாரம் - இரக்கம்.

இது, முதல்மூன்றுசீர்கள் மாங்காய்ச்சீர்களும், நான்காவது மாச்சீரும், ஐந்தாவது புளிமாங்கனிச்சீரு மாகிய விருத்தக்கலித்துறை. (சுக)

[இடைச்சியார்.]

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற
ரெண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சிபே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத் தோயீர் வாளா
மண்டுமென் னகத்தி லென்னீர் மத்திட்டு மதிக்கின் றீரே.

(இ - ள்.) கண்டமும் - திருக்கழுத்தும், காமர் மெய்யும் - விரும்பப்படுகின்ற பாதியுடம்பும், கறுத்தவர் - கருமைநிறமாயுள்ளவரும், வெளுத்த நீற்றர் - வெண்ணிறமான விபூதியையுடையவருமாகிய சொக்கநாதரது, எண் தரு மதுரையில் - (யாவராலும்)எண்ணப்படுகிற மதுரையி லுள்ள, சிறு இடைச்சி பேர் இடைச்சி என்பீர் - சிறிய இடையையுடையவளும் பெரிய இடையர்குலத்தில் தோன்றிய மகளுமென்று சொல்லப்படுபவரே! தொண்டை வாய் அமுது இட்டு என்தன் பால் இங்கு தோயீர் - (உமது) கொவ்வைப்பழம்போன்ற அதரத்தின் அமுதம்போலினிய இரசத்தைத் தந்து என்னிடம் இங்கே கூடுவீராக [இப்பொழுது பாலை அமுதிட்டுத் தோயும் என்னும்பொருளுந் தோன்றும்]; வாளா மண்டும் என் அகத்தில் என் நீர் மத்து இட்டு மதிக்கின்றீர் - சும்மா பொருந்தியுள்ள எனது மனத்தில் நீர் ஏன் மயக்கத்தைச் செய்து கலக்குகின்றீர்? [தயிரில்லாமல் வெறுமையாகவுள்ள எனது வீட்டில் நீர் ஏன் மத்தையிட்டுக் கடைகிறீர்? என்னும் பொருளுந் தோன்றும்]; (எ - று.)

தெருவில் தயிர்கொண்டுவிற்கும் இடைச்சியை நோக்கிக் காதல் கொண்டாளொருவிடன் தனது வேட்கையை வெளிப்படுத்தி அவளை முன்னிலைப்படுத்துச் சொன்னதாகக் கூறுவது,இடைச்சியார் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

கண்டங் கறுத்தது - விஷத்தைஉட்கொண்டதனால். காமர் மெய் என்றது, பெண்வடிவமான இடப்பாகத்தை; அது கருநிறமுடைய உமாதேவியுண்மையாற் கறுத்தது. 'காமர் மெய்யுங் கறுத்தவர்' என்பதில், மன்மதனது உடம்பை வெகுண்டெரித்தவர் என்னும் பொருளும் விளங்கும். இடைச்சி - இடையனென்பதன் பெண்பால்.

இது - அறுபதாங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (சுஉ)

ஈர மதிக்கு மிளந்தென் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்கோலு மேகொடுங் கோன்மைமுற்றுங்

தீர மதிக்குஞ்செங் கோன்மையென் னாஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே.

(இ - ள்.) ஈரம் மதிக்கும் - குளிர்ந்த சந்திரனுக்கும், இளந் தென்றலுக்கும் - மந்தமான தென்றற்காற்றுக்கும், இன்று - இல்லாமல், எய்யும் மதன் கோரமது இக்கும் கொடுங் கோலுமே கொடுங் கோன்மை முற்றும் தீர - (மலரம்புகளை)எய்கிற மன்மதனது பயங்கரமான கரும்புவில்லும் கொடிய அம்பும் என்னும் இவைமாத்திரமே கொடுந்தன்மை முழுவதும் நீங்கும்படி, மதிக்கும் - வரையறுத்துச்செலுத்திய, செங்கோன்மை - நீதி தவறாத ஆளுகைத்தன்மை, சில தேவர் மதி சோர - சிலதேவர்கள் (விஷத்தின் வெப்பத்துக்கு ஆற்றாமல்) அறிவுதளர, (அத்தளர்ச்சியை ஒழித்தற்பொருட்டு), மதிக்கும் கடல் தீ விடம் உண்ட - கடையப்பட்ட பாற்கடலினின்று தோன்றிய கொடிய விஷத்தை அமுதுசெய்த, சொக்கருக்கு - சொக்கநாதருக்கு, என் ஆம் - யாதுசிறப்பாம்? (எ - று.)

மன்மதனது குடையுந் தேருமாய் என்னை வருத்துகிற சந்திரனையுந் தென்றலையும் அடக்காத இவர்க்கு, அம்மன்மதனது வில்லம்புகளின் கொடுமையை வென்றாரென்னும்புகழ் என்னசிறப்பை விளைக்குமென்று தலைவி இரங்கிக் கூறியது.

இன்றி யென்னும் எதிர்மறைக்குறிப்புவினையெச்சம் 'இன்று'என ஈறு திரிந்து நின்றது; [நன் - உயிர் - உ௬.] கோரமது, அது - பகுதிப்பொருள் விகுதி. கோலுமே, ஏ - பிரிநிலை. இக்கு - இக்ஷு என்னும் வடமொழியின் திரிபு. இனி, இச்செய்யுளுக்கு - குளிர்ந்த சந்திரனுக்கும் இளந்தென்றலுக்கும் இன்றைக்கு அம்பெய்கிற மன்மதனது கொடும்புத்திக்கும் (எப்பொழுதுங்) கொடுந்தன்மையே (உள்ளது), கொடுங்கோன்மை எங்குந் தீருமபடி செலுத்திய செங்கோன்மை சொக்கர்க்கு யாது பயனைத் தரும் என்றும் பொருள்கொள்ளலாம்.

இது - நேரசைமுதலதாய்வந்த கட்டளைக்கலித்துறை. (௬௫)

கரிய கண்டங்க ரந்தவோர், நிருபர் கூடலி னெஞ்சிரே,
யுருவ மும்பெண் ணுரு க்கொலா, மருவ மென்பதென் னாவியே.

(இ - ள்.) கரிய கண்டம் கரந்த ஓர் நிருபர் - (விஷமுண்டதனாற்) கறுத்த காளகண்டத்தை மறைத்துவந்த ஒப்பற்ற அரசராகிய சுந்தரபாண்டியரது, கூடலின் - மதுரையிற் பற்றுவைத்த, நெஞ்சிரே - மனமே! ஆவி - (எனது) உயிரினது, உருவமும் - வடிவமும், பெண் உரு கொல் ஆம் - பெண்ணின் வடிவம்போலும்; அருவம் என்பது என் - (அவ்வுயிரை) உருவமில்லாததென்றுசொல்லுவது என்ன? (எ - று.)

இது, தலைமகளைக் கூடிய தலைமகன் அவளது நலத்தைப் பாராட்டி நெஞ்சிற்கு எடுத்துரைத்தது; நலம்பாராட்டு என்னுந் துறை.

நிருபர் என்னுஞ் சொல்லுக்கு - மனிதர்களைக் காப்பவரென்று பொருள். நெஞ்சிரே - நெஞ்சார் என்பதன் விளி; ஈற்றயல்திரிந்தது-விளியுருபு. நெஞ்சிர்-உயர்வுபற்றிவந்த திணைவழுவமைதி. கூடற்பதியில் நெஞ்சு உடையவரே யென்றாயினும், கூடற்பதிபோன்ற இனிய மனமுடையவரே யென்றாயினும் பொருளுரைத்தால், தலைவன் தலைவியைநோக்கி விளித்ததென்க. உருவம், அருவம் - ரூபம், அரூபம் என்னும் வடசொற்களின் திரிபுகள். தான் சேர்ந்த பெண்ணைத் தனது உயிராகக் கூறினான்.

இது - இருபத்திரண்டாங்கவிபோன்ற வஞ்சிவிருத்தம். (௬௬)

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசாந்த
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுந்தனு வுங்கூ னிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே.

(இ - ள்.) ஆ ஆ-அந்தோ அந்தோ! என்னே - என்ன! தென்னவர்கோற்கு அன்று அணி சாந்தம்-தென்னாடாகிய பாண்டியநாட்டிலுள்ளார்க்குத் தலைவனாகிய கூன்பாண்டியனுக்கு அந்நாளில் (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்) மேலே அணிந்த விபூதியை, நீவா நின்றாய் - (நீ இப்பொழுது என் உடம்பின்மேல்) தடவுகின்றாய்; (தடவியும்), காம அனலம் நின்றில-(பாண்டியனது தாபஜ்வரம் நின்றதுபோல எனது) காமஜ்வரம் நின்றதில்லை; என்னே-(இது) என்ன! கோ ஆம் வில்லி கொடுந் தனுவும் கூன் நிமிராது - தலைவனாகிய வில்வல்லவனான மன்மதனது கொடிய வில்லும் வளைவு நிமிர்ந்ததில்லை [விற்போராளர்களுட் சிறந்தவனான கூன்பாண்டியனது வளைந்த உடம்பு கூன்நிமிர்ந்ததுபோல என்றபடி]; மூவா முதலார் மதுரை இது அன்றோ - அந்தமில்லாத அநாதியாகிய பரமசிவனது மதுரை இதுவன்றோ? மொழிவாய் - சொல்வாயாக; (எ - று.)

இது - தலைவனைப் பிரிந்த தலைவி தோழியைநோக்கிக் கூறியது.

தம்விஷயத்தில் அபசாரப்பட்டதனாற் கூன்பாண்டியனுக்கு உண்டான வெப்புநோயைச் சம்பந்தமூர்த்திநாயனார் பாண்டியனுடம்பை விபூதி கொண்டு திருக்கையினால் தடவித் தீர்த்தருளியபோதே அவனது கூனும் நிமிர்ந்ததென்று திருவிளையாடற்புராணத்திலுள்ள செய்தி இங்கே குறிக்கப் பட்டதென்று அறிக. ஆஆ - அதிசயவிரக்கச்சொல்லடுக்கு. என்னே என்பதும், அதிசயவிரக்கச்சொல்லேயாம். காமத்தை அனலென்றது, தான் சேர்ந்த இடத்தை எரித்து அழித்தலால். நின்றில-நின்றிலது என்பதன் விகாரம். மூவா - மூத்த என்னும் பெயரெச்சத்தின் எதிர்மறை ஈறுகெட்டுவந்தது.

இது - மூன்றாஞ்சீர் விளச்சீரும், ஈற்றுச்சீர் புளிமாங்காய்ச்சீரும், மற்ற மூன்றுந் தேமாச்சீர்களு மாகிய விருத்தக்கலித்துறை. (௬௫)

[வலைச்சியார்.]

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு முங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே.

(இ - ள்.) மொழிக்கு அயல் ஆகி - சொல்லுக்குக் கடந்து மேம்பட்டவராய், வேதம் முடிவினில் முடிந்துநின்ற வழிக்கு அயல் ஆகார்-வேதாந்தத் திற்சித்தாந்தமாகின்ற வழிக்கு அப்பாற்படாதவராகிய, கூடல் வலைவாணர் - மதுரையிலுள்ள வலையனாய்வடிவங்கொண்ட சோமசுந்தரக் கடவுளது, பெரு வாழ்வு - பெரியவாழ்க்கையை, அன்னீர் - ஒத்துச் சிறந்த மாதரே! கழி கயல் விற்பீர் - உப்புக்கழியிலுள்ள கயல்மீனை விற்கின்ற நீர், இ காசினி ஏழும் முற்றும் - ஏழுதீவுகளாகிய இப்பூமிமுழுவதும், உங்கள் விழி கயலுக்கே விலை என்ப - உமது கண்களாகிய கயல் மீனுக்கே விலையாமென்பதை, விளக்கிட்டீர்-செய்கையாய்த் தெரிவித்தீர்; (எ - று.)

மீன்விற்கும் வலையர்மகளைக் கண்டு காமுற்றவனொருவன் அம்மகளை முன்னிலைப்படுத்திச் சிருங்காரமான வார்த்தைபேசினதாகச் செய்யுள் செய்வது, வலைச்சியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

மொழிக்கு அயலாகி - சொல்லுக்குளடங்காதவராய் என்றபடி. காசினி - காஶ்யபீ என்னும் வடமொழியின் விகாரம்; (பரசுராமனால்) கசியபமுனிவர்க்குத் தானஞ்செய்யப்பட்ட தென்று பொருள். காசினியேழ் - ஜம்பூ, பிலக்ஷம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்பன. என்ப- என்பது என்பதன் விகாரம். மற்று - அசை.

இது - அறுபதாங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தம். (௬௬)

விற்கரும்பே யொன்றிதுகேண் மென்கரும்பே யன்னார்தஞ்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமா—னற்கரும்பை
யாளார் கடம்பவனத் தையருமற் றென்னீயும்
வாளா வலர்தூற்று வாய்.

(இ-ள்.) வில் கரும்பே-(மன்மதனது)வில்லாகிய கரும்பே! ஒன்று இது கேள் - (யான் சொல்லும்) இவ்வொருவார்த்தையைக் கேட்பாயாக: மெல் கரும்பே அன்னார்தம் - மென்மையான கரும்பையே யொத்த மகளிரது, சொல் கரும்பே - சொல்லாகிய கரும்பே, முற்றும் அலர் தூற்றும் - ஊர் முழுவதிலும் (அறியும்படி இவளைப்) பழிதூற்றும்; கடம்பவனத்து ஐயரும் - கடம்பாரணியத்தில் எழுந்தருளியுள்ள தலைவரும், நல் கரும்பை ஆளார் - நல்ல கரும்புபோன்ற இத்தலைவியை வந்து கூடுகின்றாரில்லை; என் நீயும் வாளா அலர் தூற்றுவாய் - ஏன் நீயும் வீணாகப் புஷ்பபாணங்களை (இவள் மேற்) சொரிகின்றாய்? (எ - று.)—இது, தோழிகூற்று.மற்று - வினைமாற்று.

கரும்பு - இனிமைக்கு உவமை. கரும் பே யன்னார் என்பதற்கு - பெரிய பேயை யொத்தவர் என்றும் பொருள் கொள்ளலாம். என்றது, சுற்றத்தாரை. சொற்கரும்பே அலர்தூற்றும் விற்கரும்பே நீ ஏன் அலர்தூற்றுவாய் எனச் சிலேடைப்பொருள்மூலமாக ஒருவகைச்சாதுரியந்தோன்றக் கூறினாள்.

இது - நாள் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (௬௭)

வால விர்த்தகு மாரனெ னச்சில
வடிவு கொண்டுநின் றாயென்று வம்பிலே
ஞால நின்னைவி யக்குந யக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்தச காயமா
கால காலத்ரி சூலக பாலவே
கம்ப சாம்பக டம்பவ னேசனே.

(இ - ள்.) பால லோசன-நெற்றியில் (நெருப்புக்)கண்ணுடையவனே! பாநு விலோசன - சூரியனாகிய (வலக்)கண்ணுடையவனே! பரம லோசன- சந்திரனாகிய (இடக்)கண்ணுடையவனே! பக்த சகாய - அடியார்களுக்குத் துணையாயுள்ளவனே! மா கால கால - பெரிய யமனுக்கும் யமனானவனே! த்ரிசூல - மூத்தலைச்சூலாயுதமுடையவனே! கபால - (கையிற் பிரம)கபால முடையவனே! ஏகம்ப - ஏகாம்ரநாதனே! சாம்ப - உமாதேவியோடுகூடியவனே! கடம்பவன ஈசனே-கடம்பாரணியத்தலைவனே! வால விர்த்த குமாரன் என சில வடிவு கொண்டு நின்றாய் என்று - குழந்தையென்றும் கிழவனென்றும் யௌவனமுடையோனென்றுஞ் சிலஉருவங்களை (முன்) எடுத்துநின்றாயென்று, ஞாலம் - உலகத்தவரெல்லாம், நின்னை - உன்னை, வம்பிலே - வீணாக, வியக்கும் - அதிசயித்துத்துதிப்பார்கள்; (அவர்கள்), நயக்கும் என் நடனம்

கண்டும் - சிறந்த எனது ஆட்டத்தைப் பார்த்தும், வியவாமை-அதிசயப்படாமைக்குக் காரணம், என் சொல்கேன் - (யான்) என்னவென்று சொல்லுவேன்! (எ - று.)

இங்கே 'நடனம்' என்றது, தான் பலநாளாகப் பலபிறப்பெடுத்து அப்பிறப்புக்கள்தோறும் பாலனும் விருத்தனும் குமாரனுமாய் நிற்பதை. ஒருகால் பாலவிருத்தகுமாரனுை யென்று உன்னை வியக்கின்ற உலகத்தவர் பலகாலும் பாலவிருத்தகுமாரனுகின்ற என்னை வியவாமைக்கு ஏது என்ன என்றார். என்னை ஆட்கொண்டு பிறப்பொழித்து முத்தியருளவேண்டுமென்பது, குறிப்பு. விக்கிரமபாண்டியன் அரசாண்டகாலத்தில் மதுரையில் விருபாக்ஷனென்னுஞ் சைவப்பிராமணனுக்குச் சுபவிரதையென்னும் மனைவியினிடம் பிறந்து விதிவசத்தால் ஒருவைஷ்ணவப்பிரமசாரிக்கு வாழ்க்கைப்பட்டு மாமன்மாமிகளால் மிகவெறுக்கப்பெற்றுச் சிவனடியாரைக்கண்டுஉபசரிக்கப்பெருமையால் மிகவருத்தப்பட்டுக்கொண்டிருந்த கௌரி யென்னும் மெய்யடியாளுக்குச் சோமசுந்தரக்கடவுள் ஒருநாள் மாமன்முதலியோரொருவருமில்லாதசமயத்தில் வீட்டினுட்சென்று முன்னே வயதுமுதிர்ந்த ஒருகிழப்பிராமணனும் பின்னே அழகுநிரம்பிய ஒருயௌவனபுருஷனும் உடனே ஒருபச்சிளங்குழந்தையுமாய்க் காட்சிதந்தருளி அவளைத் தமதுலகத்துக்கு அழைத்துப்போயின ரென்பது, திருவிளையாடற்கதை; விருத்த குமார பால ரான படலத்துக் காண்க.

வால-வடமொழித்திரிபு. நயக்கும் - விரும்பப்படுகிற என்றுமாம். பரமனென்னும் வடசொல்லுக்கு - சிறந்தவ னென்று பொருள்; கீழ் 'பாலலோசன பானுவிலோசன' என வந்ததனுல், பின் 'பரமன்' என்றது - சந்திரனை உணர்த்திற்று: இனி, இடக்கண் அருட்சத்திவடிவமானஉமாதேவியின் கண்ணுதலால் அதனைச் சிறந்தகண் ணென்றதாகவுங் கொள்ளலாம். 'பற்பலோசன' என்னும் பாடத்துக்கு - தாமரைமலர்போலக் குளிர்ந்த (இடக்)கண்ணுடையானே யென்று பொருள்; பற்பம் - பத்மம்என்னும் வடமொழியின் திரிபு. ஊழ்வினையாற் பதினாறுபிராயம்பெற்ற மிருகண்டுபுத்திரராகிய மார்க்கண்டேயரென்பவர், கூற்றுவன்வந்து காலபாசத்தால் தம்மைக் கட்டியிழுக்குங்காலத்துப் பரமசிவனைச் சரணமடைய, அப்பெருமான் யமனைக் காலாலுதைத்துத் தள்ளி முனிகுமாரர்க்கு என்றும்பதினாருகத் தீர்க்காயுசுகொடுத்தருளின ராதல்பற்றி, காலகால னென்று பெயர்; இவ்வரலாற்றால், தம் அடியார்க்கு ஊழ்வினையையும் ஒழித்தருளுகின்ற கடவுளது கருணை விளங்கும். ஏகம்ப - ஏகாம்ரஎன்னும் வடசொல்லின் சிதைவு; (காஞ்சீபுரத்தில்) ஒருமாமரத்தின்கீழ் எழுந்தருளியிருப்பவனே யென்று பொருள்.

இது - கட்டளைக்கலிப்பா. (கூஅ)

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணிணுட்
கிட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காமம டுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே.

(இ - ள்.) கட்டு வார் குழலீர் - (பலவகையாக) முடித்து அலங்கரிக்கப்படுகின்ற நீண்ட கூந்தலையுடைய மகளிரே!கயல்கண்ணிணுட்கு இட்டம் ஆம் சொக்கரை - மீனாட்சியம்மைக்குப் பிரியமாகிய சொக்கநாதரை, கரை ஏற்றினீர் - (நீங்கள் நீர்நிலையினின்றும்) கரையை அடைவித்தீர்கள்; மட்டு இல் காமம் மடு படிந்தேற்கு - அளவில்லாத காமமாகிய மடுவிலே விழுந்துகிடக்கின்ற எனக்கு, (கரையேற்றாமல்), பின்னும் - மீண்டும், குங்குமம் சேற்றையே கொட்டுவீர் - (நீங்கள்) குங்குமப்பூவின் குழம்பையே மேலே சொரிவீர்கள்; என்னே - (இது) என்ன அநீதி? (எ - று.)

இச்செய்யுள், தெப்பத்திருவிழா நடந்து முடிந்தபொழுது சோமசுந்தரரது சௌந்தரியத்தைத் தரிசித்துக் காதல்கொண்டா ளொரு தலைமகள் தன்தோழியரைநோக்கிச்சொல்லியதாகச் செய்யப்பட்டது; அத்திருவிழாவின் அந்தத்திற் சுவாமியைக் கரையில் எழுந்தருளப்பண்ணுதல், இயல்பு.

இட்டம் - இஷ்டம். விரகவேதனையுற்றார்க்குச் சந்தனம் குங்குமம் முதலியவற்றின் குழம்பைக் கொட்டிஞல் அது அந்நோயைமிகுவித்து வருத்து மாதலால், காமமடுவிற்படிந்துகரையேறவழியறியாதஎன்மேல் இன்னும் அதிலே நன்றாய் அழுந்துமாறு சேற்றைக்கொட்டுவது என்னே யென்றாள்.

இது - முதற்சீர் தேமாச்சீரும் மற்றமூன்றுங் கூவிளச்சீர்களுமாகிய கலிவிருத்தம். (கூகூ)

குங்குமச்சே றாடுங் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூடல்—லங்கயற்க
ணம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தே மஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி.

(இ - ள்.) குங்குமம் சேறு ஆடும் - குங்குமப்பூவின் சேறு நிரம்பிய, கொடி மாடம் வீதியில் - துவசத்தையுடைய உபரிகைவீடுகளையுடைய திருவீதிகளிலே, வெள் சங்கு மொய்க்கும் - வெண்ணிறமான சங்கங்கள் வந்து தவழும்படியான, சங்கம் தமிழ் கூடல் - சங்கத்திற்பயின்ற தமிழ் வழங்கும் மதுரையில் எழுந்தருளிய, அம் கயற்கண் அம்மை இடம் கொண்டாரை - அழகிய மீனாக்ஷியம்மையை வாமபாகத்திலே கொண்டவரான சுந்தரக்கடவுளை, அஞ்சலித்தேம் - கைகூப்பித்தொழுதோம்; இனி - இனிமேல், இமையிடம் கொண்டார்க்கு - எருமைக்கடாவை வாகனமாகவுடையவரான இந்தயமனுக்கு, அஞ்சலம் - பயப்படமாட்டோம்; (எ - று.)

குங்குமச்சேறாடும் வீதி யென இயையும். ஒருவர்மேலொருவர் குங்குமக்குழம்பைவீசி விளையாடுதற்கு இடமான வீதி யென்க. சங்குகள், சேறுள்ள விடத்தே பயிலும். இவ்விசேஷணத்தால், மதுரையின் செல்வச்சிறப்பை விளக்கியவாறும்; வீறுகோளணி. 'சங்குமொய்க்குஞ் சங்கத்தமிழ்க்கூடல்' என்றவிடத்துச் சொல்நயங் கருதத்தக்கது. அஞ்சலம் - எதிர்மறைத் தன்மைப்பன்மைமுற்று. மற்று - வினைமாற்று. மஹிஷம் என்னும் வடமொழியின் திரிபாகிய மயிடம்என்பது, எதுகைநயநோக்கி முதற்போலிபெற்று 'மையிடம்' என நின்றது.

இது - மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (எ0)

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக் கெழிலார் களனுங் களனா வருளா, நன்னீ ரமுதக் கடலா கியுளார் நரியைப் பரியாக் கிநடத் தினரா, லந்நீர் மையின்மிக் கென்னீர் மையெனு வடன்மா மடன்மா வரமா றுசெயா, மைந்நீ ரளகத் திளமா னையனீர் வருவேன் மதுரைத் திருவீ தியிலே.

(இ - ள்.) மை நீர் அளகத்து - அஞ்சனம்போலுங் கரியதன்மையையுடைய கூந்தலையுடைய, இள மானை அனீர் - (பார்வையால்) இளையமானைப்போன்ற மகளிரே!—இன் நீர் அமுதக்கு-இனிய தன்மையையுடைய (உமாதேவியாகிய) அமிருதத்துக்கு, இடமும் - வாமபாகத்தையும், கடுவுக்கு - விஷத்துக்கு, எழில் ஆர் களனும் - அழகு அமைந்த கண்டத்தையும், களன் ஆ - இடமாக, அருளா - கொடுத்தருளி,—நல் நீர் அமுதம் கடல் ஆகி உளார் - நல்லதன்மையையுடைய அமிருதமயமான கடல்போல இன்ப

மயமாயுள்ளவரான சோமசுந்தரக்கடவுள், நரியை பரி ஆக்கி நடத்தினர் - நரிகளைக் குதிரைகளாக்கிச் செலுத்தினர்; அ நீர்மையின் என் நீர்மை மிக்கு எனு - அத்தெய்வத்தன்மையினும் எனது தன்மை சிறந்ததென்று, மடல் மா அடல் மா வர மாறுசெயா - மடல்களையுடைய பனைமரம் வலிமையுடைய குதிரையாய் வரும்படி மாற்றி, மதுரை திருவீதியில் வருவேன் - மதுரையின் அழகிய வீதியில் (நாளைக்கு நான் புறப்பட்டு) வருவேன்; (எ - று.)—ஆல் - அசை.

இது - தோழிக்குத் தலைமகன், தான் நாணிழந்தமை வெளிப்படையாகத் தோன்ற, 'யான் நாளை நின்னூர்த்தெருவே மடலூர்ந்து வருவேன்' எனக் கூறியது; 'மடலேறும்வகையுரைத்தல்' என்னுந் துறை. இதனைத் தலைவியின்வார்த்தையாக்கி யுரைத்தலுமாம்.

களன் - இருபொருளிலும், களமென்பதன் இறுதிப்போலி. நரியைப் பரியாக்கியது - அரிமர்த்தனபாண்டியனால் வருத்தமுறுவிக்கப்பட்ட வாதவூரடிகளது துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டாம்; இத்திருவிளையாடலை, நரியைப் பரியாக்கிய படலத்திற் காண்க. மிக்கு - மிக்கது என்பதன் விகாரம். ஒருவிலங்கை மற்றொரு விலங்காக்குவதனிலும் ஒருமரத்தைக் குதிரையாக்குதல் அரியதென்னுங் கருத்தினனாய் 'அந்நீர்மையின் மிக்கென்னீர்மையெனு' என்றான்.

இது - எல்லாச்சீரும் மாச்சீர்களாகிய எண்சீராசிரியவிருத்தம். (எக)

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத் திகிரிப் படையுய்த் தவர்கூடற், றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத் தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர், புருவச் சிலையிற் குழைபட் டுருவப் பொருகட் கணைதொட் டமராடுஞ், செருவிற் றொலைவற் றவரைக் கொலுநற் சிலைசித் தசர்கைச் சிலைதானே.

(இ - ள்.) திருவை - இலக்குமியை, புணர் - தழுவுகின்ற, பொன் புயம் - அழகிய தோள்களையுடைய, மை புயல் - காளமேகம்போன்ற திருமாலின், கை-கையில், திகிரி படை உய்த்தவர் - (தாம் உண்டாக்கிச் சலந்தராசுரனைக் கொன்ற) சக்கராயுதத்தைக் கொடுத்தருளியவரான சிவபிரானது, கூடல் - மதுரையி லுள்ள, தரு மொய்த்து அருமை சிறை பெற்று அனம் - மரங்கள் மேலேஅடர்ந்திருத்தலால் (பெறுதற்கு) அருமையான இறகுகளை (மீண்டும்) பெற்றாற்போன்ற, முத் தமிழ் வெற்பு - மூவகைத்தமிழும் வழங்கும் மலையிலே, அமர் - பொருந்தியுள்ள, பொன் கொடி போல்வீர் - அழகிய பூங்கொடியைப் போன்ற மகளிரே!—சித்தசர் கை சிலை - மன்மதனது கையிலுள்ள கருப்புவில்,—புருவம் சிலையில் - புருவமாகிய வில்லிலே, குழை பட்டு உருவ-காதிலே பட்டு ஊடுருவுமாறு, பொரு கண் கணை-பிறழ்கிற கண்ணாகிய அம்பை, தொட்டு - தொடுத்து, அமர் ஆடும் - (மகளிர்) போர்செய்கின்ற, செருவில் - போரினின்று, தொலைவு அற்றவரை-நீங்குதலில்லாத என்போலியரை, கொலும் - கொல்லுகின்ற, நல் சிலை தானே - சிறந்த வில்லேயாம்; (எ - று.)

இது - தலைவன் கூற்று; தோழியைநோக்கியதாக வாயினும், தலைவியைநோக்கியதாகவாயினுங் கொள்ளலாம்.

இரண்டாம் அடியில் - மரங்கள்மேலே அடர்ந்துகிடத்தலாற் சிறைக்காவலைப் பெற்றாற்போன்ற மலை யென்றுமாம். 'குழைபட்டுருவப் பொருகண்' என்றது - காதளவும் நீண்ட கண் என்றவாறு. அம்பை விசையாக எய்யும்போது அது எய்பவனது காதளவுஞ் சென்று மீளும். 'குழை' என்றது, தானியாகுபெயராய், காதை யுணர்த்திற்று. 'தொலைவுற்றவர்' என்னும்

பாடத்துக்கு - வருத்தமுற்றவ ரென்று பொருளாம். சித்தஜர் என்றதற்கு- மனத்தில் (நினைத்தமாத்திரத்தில்) தோன்றுபவ ரென்று பொருள்; சிறப் புப்பன்மை. வெற்பு - பொதியமலை.

இது - ஈற்றுச்சீரொன்று புளிமாங்காய்ச்சீரும், மற்றைஆறும் புளிமாச் சீரு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (எஉ)

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேள்,
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்நின் மருங்குல்சுற்று, மிலை
சிலை யாக்கொண் டிளமானை யெய்திடு மிங்கிவர்பூங், குலைசிலை
யாக்கொண் டவர்போலு மாற்செம்மல் கொள்கைநன்றே.

(இ - ள்.) சிலை - மேருமலையை, சிலை ஆ கொண்ட - வில்லாகக் (கை யிற்) கொண்ட, தென் மதுரா ஈசர் - தென்மதுரைநாதரது, சிலம்பில்-மலை யிலுள்ள, வில் வேள் மலை சிலை ஆ கொண்ட வாள் நுதலாய் - விற்போரில் வல்ல மன்மதன் போர்செய்யும்வில்லாகக்கொள்ளப்பெற்ற ஒளியையுடைய புருவத்தையுடையவளே! நின் மருங்குல் சுற்றும் இலை - உனது இடையில் உடுக்கப்படுவ தாகிய தழையை, சிலை ஆ கொண்டு - வில்லாகக் கொண்டு, (அதனால்), இள மானை எய்திடும் - இளைய மானை எய்கின்ற, இங்கு இவர்- இங்கேயுள்ள இத்தலைவர், பூ குலை சிலை ஆ கொண்டவர் போலும் - பூங் கொத்தை வில்லாகக்கொண்ட மன்மதனவர் போலும்; செம்மல் கொ ள்கை நன்று - இத்தலைவரது செய்கை நன்றாயிருந்தது; (எ - று.)

இது, பாங்கி தலைவனை நகையாடிக் குறிஞ்சிநிலத்துத் தலைவிக்கு உரைத்தது.

வடமதுரையொன்று உளதாதலின், அதனை விலக்குதற்கு, 'தென் மதுரை' என்றார்; அழகிய மதுரை யெனினும் அமையும். 'வில்வேள் மலை சிலையாக்கொண்ட வாள்நுதல்'என்றதற்கு-தலைமகளது புருவம் மன்மதனது வில்லையொக்குமென்றும்,மன்மதனதுவிற்போலமிக்கவேட்கையைவிளைக்கு மென்றும் கருத்து. நுதல்-நெற்றியுமாம்.'நின் மருங்குல்சுற்றுமிலை'என்றது, குறிஞ்சிநிலத்துமகளிர் தழையைஆடையாகஉடுப்பராதலால். குறிஞ்சிநிலத் துமாதரைக் கூடக்கருதிய தலைமகன் கையுறையாகக் கையில் தழையைக் கொண்டு அதனால் மானைத் துரத்திக்கொண்டு செல்லுதல், மரபு. தழையை வில்லாகக் கொண்ட தலைவர் பூவை வில்லாகக்கொண்ட காமனைப்போல்வ ரென்றாள். கீழ்ப் பத்தொன்பதாங்கவியில்''அலரி னீள்சிலை குனித்து'' என் றாற்போல, இங்கு 'பூங்குலை சிலையாக்கொண்டவர்' என்றனள்; இனி, இதற்கு - கல்லைப் பூங்கொத்தாகக்கொண்டு அதனைப் பரமசிவன்மேலே எறிந்து அருச்சித்த சாக்கியநாயனார் போல்வ ரென்று பொருள்கூறுவாரு முளர். செம்மல் - ஆண்பாற்சிறப்புப்பெயர். ஆ-ஆக வென்பதன் விகாரம். ஆல் - அசை.

இது - நிரையசைமுதலதான கட்டளைக்கலித்துறை. (எங)

[பாண்.]

கொங்குரை யாற்றி லிட்டுக் குளத்தினிற் றேட நீடு
மங்குறேய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாணு
வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே.

(இ - ள்.) மதி இல் பாணு - அறிவில்லாத பாணனே! கொங்கு உரை - மாற்றுயர்ந்த பொன்னை, யாற்றில் இட்டு - மணிமுக்தாநதியிற் போகட்டு, குளத்தினில் தேட - ஒருகுளத்தில் தேடிப்பார்க்க, நீடும் - (அங்கே அது)

பொருந்தியிருத்தற்குக் காரணமான, மங்குல் தோய் முதுகுன்று ஐயர் - மேகங்கள் தவழப்பெற்ற திருமுதுகுன்றில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது, மதுரையோ - திருமதுரைப்பதியோ(இது); (நீ எம்கணவனை),ஆங்கு எங்கையர் மனைக்கண் வைத்து - அவ்விடத்தே எமது சக்களத்திகளது வீட்டில் வைத்துவிட்டு, எம்மிடை தேர்தி - எம்மிடத்தில் (வந்து) தேடுகின்றாய்; மற்று - மேலும்,மகிழ்நர்தம் வாழ்க்கை - (எம்)கொழுநரதுவாழ்வு, அ மங்கையர் மனம் போல் அன்றே - அம்மகளிரது விருப்பம்போலவுள்ளதன்றோ? (எ - று.)—தான் - அசை.

தலைமகளது கருத்தை அறிந்து அவளைச் சமாதானப்படுத்தி அவளிடந் தான் வரும்படி பேசிவருமாறு தலைமகளால் அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டு கூறியது, இது; 'பாணனோடுவெகுளுதல்' என்னுந்துறை.

'கொங்குரை' என்பது - அக்காலத்தில் வழங்கிவந்த மாற்றுயர்ந்த பொன்னின் பெயர்போலும்; கொங்குநாட்டில்வழங்கியபொன் எனினுமாம்; உரை-பொன்: உரைகல்லில்உரைக்கப்படுவது. சுந்தரமூர்த்திநாயனார், பங்குனியுத்தரத் திருநாள் சமீபித்தலும், தமதுமனைவியாராகிய பரவையார்க்குத் திருவிழாச்செலவிற்குக் கொடுத்தற்குப் பொன்கொண்டுவரும்பொருட்டுத் தலயாத்திரைசெய்கையில், திருமுதுகுன்றென்னுந்திருப்பதிக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகங்கள்பாடியபோது, சுவாமி பன்னீராயிரம்பொன் கொடுத்தருள, நாயனார் அப்பொன்முழுதையும் சுவாமியின் அனுமதிப்படி மணிமுக்தாநதியிலே புகவிட்டு, அங்குநின்றும்புறப்பட்டுப் பலதலங்களை வணங்கித் திருவாரூரையடைந்தபின்பு ஒருநாள் தம் மனைவியாரோடுங் கோயிலுக்குப்போய் வன்மீகநாதரை வணங்கி அக்கோயிலின்மேற்றிசையிலிருக்கின்ற திருக்குளத்தை யடைந்து அதிலிறங்கி அங்கே தடவித் தேடிப் பதிகம்பாடிப் பரமசிவனருளாற் பொற்றிரளைப்பெற்று எடுத்துக்கொண்டன ரென்பது,கதை; பெரியபுராணத்திற் காண்க. 'கொங்குரையாற்றிலிட்டுக் குளத்தினிற் றேட நீடும்' என்றது, ஸாபிப்பிராய விசேஷணம். பொன்னையாற்றிற்போகட்டுக் குளத்தில்தேட நீண்ட முதுகுன்றையரது மதுரை யாதலால், நீயும் தலைவனைப் பரத்தையரிடத்தில்வைத்து எம்மிடத்தில்தேடுகிறாய் என்றாள். 'ஆங்கு' என்றது, சேய்மைச்சுட்டு. மகிழ்நர் - மகிழ்ந்திருப்பவர்; ந் - பெயரிடைநிலை.

**இது - அறுபதாங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம்.** **(௭௬)**

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழு
மூழி முதல்வர்க் குருவழிந்தே—யாழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை.

(இ - ள்.) மடக் கிள்ளாய் - இளமையையுடைய கிளியே! வாழி - வாழ்வையாக; மதுராபுரி வாழும்-மதுரைப்பதியில்எழுந்தருளியிருக்கின்ற, ஊழி முதல்வர்க்கு - காலத்துக்கு முதல்வராகிய சிவபிரானுக்கு, உரு அழிந்தே - உடம்பை இழந்தே, ஆழியான் சேய் - சக்கரபாணியான திருமாலின் குமாரனாகிய மன்மதன், தொடுத்த - (என்மேற்) பிரயோகித்த, அம்போ - அம்புகளோ, திரள் முலையும் கள் மலரும் - திரண்ட முலைமலரும் தேனினையுடைய மற்றைமலர்களுமாம்; தாய் தொடுத்த அம்போ - (எனது)தாய் உண்டாக்கிச்சொன்ன பழிச்சொல்லோ,தலை-(அவற்றினுங்)கொடியதாம்;(எ-று)

**தலைமகள் கிளியைநோக்கி இரங்கிக் கூறியது.**

பின்னிரண்டடியில் - மன்மதன் தொடுத்த வம்போ திரண்டமுலையளவும் மலர்போன்றகண்ணளவுமே, தாய்தொடுத்தவம்போ தலையளவாம் என்

னும் பொருளுந் தோன்றுகின்றது. இனி, முல்லையும் மலருமாகிய மன்மதன் தொடுத்த அம்பையும், தாய்தொடுத்த வம்பையும், ஓதலை - (நீ தலைவனிடஞ்சென்று) கூறுகின்றாயில்லை யென்றும் பொருள்கொள்ளலாம். ஊழி முதல்வர்க்குஉருவழிந்து - சிவபிரானால் எரிக்கப்பட்டு அங்கமிழந்து அநங்கனாகி யென்க. 'உருவழிந்தேன்' என்னும் பாடத்துக்கு-யான் மதுரைமுதல்வர்க்குக் காதல்பூண்டுவடிவுகுலைந்தே னென்று பொருள். வாழியவென்னும் யகரவீற்றுவியங்கோள்வினைமுற்று, ஈறுகெட்டு வாழியென நின்றது; இ-சாரியை. கிள்ளாய்-கிள்ளை யென்பதன்விளி. ஆதியந்தமில்லாமல் நித்தியராயிருப்பதனால், 'ஊழிமுதல்வர்' என்றார்; இனி, உலகங்களுக்கு முதல்வ ரென்றுமாம். மன்மதன் ஸ்ரீமகாவிஷ்ணுவின் அவதாரமாகிய கிருஷ்ணபகவானுக்கு ஸ்ரீமகாலக்ஷ்மியின் அவதாரமாகிய ருக்மிணீதேவியினிடத்திற் பிரத்யும்நனென்னுங் குமாரனாய்த் தோன்றியதனால், 'ஆழியான்சேய்' எனப்பட்டான்; அன்றியும், சிவபிரானருளால் திருமாலுக்குத் திருமகளிடம் மன்மதன் தோன்றினா னென்றலும் உண்டு.

இது, மலரென்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (எகு)

[மறம்.]

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்றா
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தா
ருனைவிடுத்த மன்னவன்யா ருரையாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னாய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்துந்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினொடுஞ் சென்றே.

(இ - ள்.) தரு முகத்து-(தேவலோகத்திலுள்ள) கல்பகவிருக்ஷங்களின் நுனியை அளாவி, நிமிர் - உயர்ந்துள்ள, குடுமி - உபரிகைச்சிகரங்களையுடைய, மாடம் - மாளிகைகளையுடைய, கூடல் - மதுரையிலுள்ள, சவுந்தரபாண்டியர் - சுந்தரபாண்டியவரசரது, குடி - குலத்திற்பிறந்தவர், யாம்—; சமரில் ஆற்றாது - போரில் (எங்களுக்கு)முன்நிற்கமாட்டாமல், ஒரு முகத்தில்-ஒரேமுகமாக, ஒருகோடி மன்னர்-மிகப்பலராகிய அரசர்கள், மடிந்துஒழிந்தார்-இறந்துபோயினர்; தூதா-தூதனே! உனை விடுத்த மன்னவன் யார்-உன்னை(எம்மிடம்)தூதாகஅனுப்பியஅரசன் யாவன்? உரையாய் - சொல்வாயாக; மரு முகத்த - இயற்கைமணத்தைத் தன்னிடத்தேயுடைய, நெறி குழல் - நெறித்தலையுடைய கூந்தலையுடைய, எம் மடக்கொடியை - எமது இளைய பூங்கொடிபோன்ற மகளை, வேட்பான் - விவாகஞ்செய்துகொள்ளும் பொருட்டு, மணம் பேசி வரவிடுத்த - கலியாணம்பேசிவரும்படி அனுப்பின, வார்த்தை - செய்தியை, சொன்னாய்—; திருமுகத்தில் எழுத்து இது ஏல் - திருமுகத்தில் எழுதியுள்ள எழுத்து இதுவானால், திரு முடியில் எழுத்தும் தேர்ந்து அறிய - அழகிய தலையிலுள்ள விதியெழுத்தையும் ஆராய்ந்தறியும்படி, சென்று - (நீ) போய், சிகையினொடும் கொண்டுவா - குடுமியோடு (பிடித்துத் தலையைத் தனியே) கொண்டுவருவாயாக; (எ - று.)

தமது மகளை மணம்பேசும்படி ஓரரசனால்அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம்மறுத்து அவ்வரசனை இகழ்ந்துபேசியதாகச் செய்யுள் செய்வது, மறம் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம்; மறவர்-ஒருசாதியார்.

சவுந்தரபாண்டியர்குடி யாம் என்பதில் - சுந்தரபாண்டியரது ஆளுகை யில் வாழுங் குடிகள் யா மென்னும் பொருளுந் தோன்றும். வேட்பான் - பானீற்று எதிர்கால வினையெச்சம். 'திருமுகம்' என்று ஓலைக்கும் முகத்துக்கும் பெய ராதலால், இங்ஙனங் கூறியது.

இது - மாச்சீர்களுங் காய்ச்சீர்களும் விரவிவந்த எண்சீராசிரியவிருத்தம்.

[குறம்.]

செல்லிட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா தேவிக் கன்று, சொல்லிட்ட குறமகள்யான் றும்மலுநல் வரத்தே காண் சுளகி லம்மை, நெல்லிட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொரு ளாதுநித் திலக்கச் சார்க்கும், வல்லிட்ட குறியிழுடும் வளையிட்ட குறியுளதோர் வடிவு தானே.

(இ - ள்.) செல் இட்ட பொழில் - மேகங்கள் தங்குகின்ற சோலையை யுடைய, மதுரை - திருமதுரையி லுள்ள, தேவர் - சிறந்த சுந்தரபாண்டிய ரது, மணம் - விவாகத்தை, தடாதகாதேவிக்கு - தடாதகைப்பிராட்டிக்கு, அன்று - அந்நாளில், சொல்லிட்ட - (முன்னே அறிந்து) குறிசொல்லி யிட்ட, குறமகள் - குறச்சாதிப்பெண்ணுவேன், யான்—; தும்மலும்—, நல் வரத்தே காண் - நல்ல வருகையை யுடையதேயாம்; சுளகில் - முறத்தில், அம்மை - (உனது) தாய், நெல் இட்ட - நெல்லைக் கொணர்ந்துபோகட்ட, குறிக்கு - குறியை ஆராய்ந்துசொல்லுமிடத்து,— நீ நினைந்தது - நீ மனத்திற் பெறக் கருதியது, ஒரு பொருள் - ஒருபொருளாம்; அது - அப்பொருள், நித்திலம் கச்சு ஆர்க்கும் - முத்துக்களினுலாகிய கச்சினுல் இறுக்கிக்கட் டப்பட்ட, வல் - சூதாடுகருவிபோன்ற தனங்களை, இட்ட - வைத்ததனு லுண்டான, குறியிழுடும் - தழும்போடும், வளை இட்ட குறி - கைவளைகளைப் பதியவைத்ததனு லாகிய தழும்பையும், உளது - உடைத்தானதாகிய, ஓர் வடிவு தான் - ஒருவடிவமுடையதாம்; (எ - று.)

தலைமகனைக் கண்டு காமுற்ற தலைவிக்கு அத்தலைமகனது வாய்ப்பைக் குறத்தி குறிதேர்ந்து கூறுவதாகச் செய்யுள்செய்வது, குறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

தடாதகைக்கு 'சுந்தரபாண்டியர் உன்னை மணஞ்செய்துகொள்வார்' என்று முன்னமே குறிசொன்ன குறத்தி யா னென்று தனது சிறப்பை வெளியிட்டாள். தும்மல் - அருகிலுள்ளவரதாகவுமாம். வரத்து - தொழிற் பெயர். காண் - முன்னிலையசை; தேற்றமுமாம். அம்மை - தாயே எனத் தலைவியைநோக்கிய விளியுமாம். வல் - உவமவாகுபெயர். "முன்னொருநா ளம்மைதடா தகைபிறந்த நாளின் முகக்குறிகண் டிவளுலக முழுதாளு மென்றேன், பின்னொருநாள் கைக்குறிபார்த் தம்மையுனக் கெங்கள்பிஞ் ஞகர்தா மணவாளப் பிள்ளையென்று சொன்னேன்" எனவும், "இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றையிரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே" எனவும், "நெல்லளந்திட்டபோது நிமித்தநன் றிடத் தெழுந்த, பல்லியும் வரத்தே சொல்லும் பத்தினிப் பெண்கள் வாயாற், சொல்லிய வாய்ச்சொ லன்றித் தும்மலு நல்ல தேகாண்" எனவும் மீனுக்ஷியம் மைகுறத்தில் வருமாறு காண்க. நீநினைத்தபொருள் பரமசிவம்; அது, அம்பிகையின் கொங்கைத்தழும்பையும் வளைத்தழும்பையுங் கொண்ட வடிவ முடைய தென்பது கருத்து.

இது, நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (எஎ)

வடகலை யலபல கலையொடு தமிழ்வ ளருங்கூடல்
விடவர வரையினர் திருமுனி தொருவர் விளம்பாரோ

குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவு கொழுந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள் படும்பாடே.

(இ - ள்.) குடதிசை - மேற்குத்திக்கிலே, புகை எழ - புகை மேலெழுமாறு, அழல் உமிழ் - நெருப்பைச் சொரிகின்ற, நிலவு - இளஞ்சந்திரன், கொழுந்து ஓட - ஒளியை வீச,(அதற்கு), படம் அரவு என - படத்தையுடைய பாம்புக்கு (அஞ்சுவது)போல, வெருவரும்-அஞ்சுகின்ற, ஒரு தமியள் - கணவனைவிட்டுத் தனிமையிருப்பவளான இத்தலைவி, படும் - அனுபவிக்கிற, பாடு இது - இவ்வருத்தத்தை,—வடகலை அல பல கலையொடு தமிழ் வளரும் கூடல் - ஸம்ஸ்கிருதபாஷையும் அல்லாத பலபாஷைகளுமாகிய இவற்றோடு தமிழ்ப்பாஷையும் வளர்தற்கிடமான மதுரையில் எழுந்தருளிய, விடம் அரவு அரையினர் - விஷத்தையுடைய பாம்பை அரைநாணாக அணிந்த இடையையுடையவரான சோமசுந்தரரது, திருமுன் - அழகியமுன்னிடத்தே (சென்று), ஒருவர் விளம்பாரோ - ஒருவருஞ் சொல்லமாட்டாரோ?

எவராயினுஞ் சென்று சொல்வாராயின், அருட்கடலாகிய அவர் உடனே வந்து இவளை அணைந்து துயர்தீர்ப்ப ரென்றாள்; இது - தோழிவார்த்தை: செவிலிவார்த்தையாகவுமாம்.

மாலைக்காலத்தில் மேற்றிசையிலேகாணப்படுகின்ற இளம்பிறையாகிய அரவுக்கு அஞ்சி இவள் படும் பாட்டை, அரவை அடக்கி அணியாக அணிந்தவர்முன் சொன்னால், அவர் விரைவில் இவ்வரவையும் அடக்குவ ரென்றதாம். திருமுன் - சந்நிதானத்தில். 'புகை' என்றது, மாலைப்பொழுதில் தோன்றுகின்ற இருளை. 'அழல்' என்றது, காந்தியை. வெருவரும், வெருவா - முதனிலை. குடதிசை கொழுந்தோட வெனக. பலநாட்டுக்குடிகளும் மதுரையின்வளத்தைக்கருதி அங்குவந்துகுடியேறியிருத்தலால், வடமொழியுந்தென்மொழியுமல்லாத பல வேறு தேசபாஷைகளும் மதுரையில் வளருமெனக.

இது ஈற்றுச்சீர் புளிமாங்காய்ச்சீரும்.நான்காவது புளிமாச்சீரும்,மற்ற மூன்றும் கருவிளச்சீர்களுமாகிய விருத்தக்கலித்துறை. (எஅ)

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய்ந் நாணும்விட் டாள்வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே.

(இ - ள்.) என் - எனது, குலம் கொழுந்து - சிறந்த கொழுந்துபோன்ற இளமகள், பாட்டுக்கு உருகும் தமிழ் சொக்கநாதர் - தமிழ்ப்பாடலுக்குத் திருவுள்ளங் கனிகின்ற சொக்கநாதசுவாமியினது, பணை புயமே - பருத்த தோள்களையே, வேட்டு - விரும்பி, குருகும் - கைவளையையும், மெய் நாணும் - (தனக்கு) இயல்பாகவுள்ள லஜ்ஜையையும், விட்டாள் - இழந்தாள்; வண்டும் - வண்டையும், மெல் கிளியும் - மென்மையான கிளியையும், பேடு குருகும் - நாரைப்பேடையையும், விட்டாள் - (அவரிடம்) தூதுவிடுத்தாள்; அனல் பெய்யும் - நெருப்பை மேலேசொரிகிற, இரு கோடு - இரண்டுநுனிகளையுடைய, குருகு - வெண்ணிறமான, மதி கொழுந்துக்கு - இளஞ்சந்திரனுக்கு, என் செய்வாள் - (இவள்) யாது செய்வாள்? (எ - று.) —மிகவருந்துவளே யென்றபடி. செவிலிவார்த்தை.

பேடு என்பதை வண்டு கிளி என்பவற்றோடுங் கூட்டலாம்; பறவைப் பெண்மைப்பெயர்: ஈற்றடியில்,குருகு-இளமையுமாம். 'குருகு','விட்டாள்' என்ற சொற்களின் பொருள்வேறுபாடுபற்றிய நயங் காண்க.

இது - நேரசையாதிக் கட்டளைக்கலித்துறை. (எக)

[மேகவிடுதூது.]

ஏமவெற் பென்றுகயி லாயவெற் பென்றுமல யாசலத் தெ
ன்று முறைவார், கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர், தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்த
மலி சாரலிற் றுஞ்சு முகில்காள், மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற்
குஞ்சுமுயிர் வாய்மடுத் துண்டொழிவதே.

(இ - ள்.) தாமரை கண் துயிலும் மால் என - செந்தாமரைமலர் போலுந் திருக்கண் வளர்கிற திருமால்போல, சந்தம் மலி சாரலில் துஞ்சும் - சந்தனமரங்கள்நிரம்பிய (பொதியமலையின்) பக்கங்களிலே தங்கியிருக்கின்ற, முகில்காள் - மேகங்களே!—மா மதி பிஞ்சும் - அழகிய இளஞ்சந்திரனும், இரை தேர் குயில் குஞ்சும் - இரையைத்தேடுகிற குயிலின் குட்டியும், உயிர் - (எனது) உயிரை, வாய்மடுத்து உண்டு ஒழிவது - வாயினுட்கொண்டு புசித்துவிடுவதை,—ஏமம்வெற்புஎன்று-பொன்மயமானமேருமலையிலும், கயிலாயம்வெற்பு என்று-(வெள்ளிமயமான) கைலாசமலையிலும், மலய அசலத்து என்று - பொதியமலையிலும், உறைவார் - எழுந்தருளியிருப்பவரும், கோமகட்கு அன்பர் - (மலயத்துவசபாண்டிய)ராசனது மகளாகிய தடாதகைப்பிராட்டிக்கு அன்புள்ள கணவருமாகிய, மதுரா ஈசர் - மதுரைசசொக்கநாதரது, முச்சங்கம் வளர் கூடலில்-(தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும்)மூன்று தமிழ்ச்சங்கங்களுஞ் செழித்திருந்த மதுரையிலே, சென்று-(நீங்கள்)போய், புகலீர் - (அவர்க்குச்) சொல்லுங்கள்; (எ - று.)

தலைவனைப்பிரிந்ததலைவி அத்தலைவனிடம் மேகங்களைத் தூதுவிடுத்தது.

ஏமம்-ஹேமம்என்னும் வடமொழியின்விகாரம். 'என்று' என்பது மூன்றும், எண்ணிடைச்சொற்கள். பரமசிவன் பார்வதிதேவியைத் திருக்கல்யாணஞ்செய்துகொள்ளும்பொழுது, எல்லாவுலகங்களிலு மிருக்கின்ற தேவர் முனிவர் முதலிய யாவரும் வந்துசேர்ந்து இமயமலையினிடத்தில் ஒருங்கு திரண்டதனாற் பூமி வடதிசைதாழ்ந்து தென்திசைஉயர, அதுகண்டு அனைவரும் இதற்குஎன்செய்வதென்று அலமர, சிவபெருமான் தமக்குச் சமமான அகத்தியமகாமுனிவனைநோக்கி 'நீர்தாம் தெற்குப்பக்கத்து இருத்தற்கு உரியவர்' என்றுசொல்லி விடைகொடுத்து அனுப்ப, அவரும் சிவாஜ்ஞையை மறுமற் பொதியமலைக்குப் போதுகின்றவர் உமாமகேசுவரர்களது திருமணக்கோலக்காட்சியைக் காணப்பெற்றிலேனே யென்று மிகவும் மனம்வருந்த, அப்பொழுது அவர்க்குப் பரமசிவனார் தென்திசையிற் காட்சிகொடுப்போமென்று அருளிச்செய்து, அங்ஙனமே பின்னர்ப் பொதியமலையில்தரிசனந்தந்தருளியதனால், 'மலயாசலத்தென்றுமுறைவார்' என்றார்.

அசலம் என்னும் வடசொல்லுக்கு - சலித்தலில்லாதது என்று பொருள். என்றும், உம் - இசைநிறை; எப்பொழுதும் என்றுமாம். கோமகள் - (இமய) மலையின் மகளாகிய பார்வதி யென்னவுமாம். முச் சங்கம் வளர் கூடல் - வெற்றிச்சங்கு, மங்கலச்சங்கு, கொடைச்சங்கு என்னும் மூன்று வகைச்சங்கங்கள் முழங்குங் கூடலெனவுமாம். புகலீர்-ஏவற்பன்மைமுற்று. தாமரை-தாமரஸம் என்னும் வடமொழியின் விகாரம். மால்-மேகத்துக்குக் கருநிறத்தால் உவமை. சந்தம்-சந்தநம்என்னும் வடசொல்லின்விகாரம். முகில்காள் - முகில்கள் என்பதன் விளி; ஈற்றயல்நீண்டது - விளியுருபு. சந்திரகாந்தியும் குயில் கூவுங் குரலுங் காமோத்தீபகமாய் வருத்தத்தை மிகுவித்தலால், இங்ஙனங் கூறியது. குஞ்சு - இளமைப்பெயர்.

இது-முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் கூவிளச்சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறாஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச்சீரு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (௮0)

[சம்பிரதம்.]

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம றைத்து
டன்விடுத்தி டுவன்மற், றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்
கிடுவ னித்தனையும் வித்தை யலவாற்,றுட்டமத னைப்பொடிப டுத்தி
மது ரைக்குளுறை சொக்கர்குண மெட்டி னுடுமா, சிட்டர்கடு
தித்திடும க த்துவம னைத்துமொரு செப்பினுள டக்கி டுவனே.

(இ - ள்.) மட்டு அறு - அளவில்லாத, கடல் - கடல்களினாற் சூழப்பட்டுள்ள, புவி அனைத்தும் - பூமிமுழுவதையும், ஓர் இமைப்பினில் - ஒரு நொடிப்பொழுதுள்ளே, மறைத்து - மறையச்செய்து, உடன் - உடனே, விடுத்திடுவன் - மீண்டுங் காணவிடுவேன்; மற்று - இன்னும், எட்டு வரையை - அஷ்டகுலபருவதங்களையும், கடலை - கடல்களையும், முட்டியுள் - ஒருகைப்பிடியினுள்ளே, அடக்கிடுவன் - அடங்கச்செய்வேன்; இதனையும் - இவ்வளவும், வித்தை அல - (எங்கள்திறமைக்கு ஒரு பெரிய) வித்தையல்லவாம்; துட்ட மதனை - கொடிய மன்மதனை, பொடிபடுத்தி - சாம்பலாக எரித்து, மதுரைக்குள் உறை - மதுரையில் எழுந்தருளியுள்ள, சொக்கர் - சொக்கநாதரது, குணம் எட்டினுடும் - எட்டுத் திருக்கலியாண குணங்களோடுங் கூடிய, மா சிட்டர்கள் துதித்திடும் மகத்துவம் அனைத்தும் - பெரிய அடியார்கள் ஸ்தோத்திரஞ்செய்கிற மகிமைகளனைத்தையும், ஒரு செப்பினுள் அடக்கிடுவன் - ஒரு சிமிழினுள்ளே அடக்கிவிடுவேன்; (எ - று.)

இந்திரஜால முதலிய மாயவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக்கூறுவதாகச் செய்யுள் செய்வது, சம்பிரதம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

இச்செய்யுளில், முதலடியில் - கடல்சூழ்ந்த பூமிமுழுவதையும் கண்ணிமைக்குங்காலத்து மறையச்செய்து உடனே கண்விழிக்குங் காலத்துத் தெரியச்செய்வேன் என்றும்; இரண்டாமடியில், எள் - எள்ளையும், துவரையை - துவரையையும், கடலை - கடலையையும், (ஆக இத்தானியங்களை), முட்டியுள்-சிறுகலசத்தில், அடக்கிவிடுவேன் என்றும்; மூன்று நான்காமடிகளில் - சொக்கநாதரது அஷ்டகுணங்களோடுங் கூடிய மகிமைமுழுவதையும், ஒரு செப்பினுள் - (பஞ்சாக்ஷரம் அல்லது பிரணவம் என்னும்) ஒரு சொல்லிலே, அடக்கிவிடுவேன் என்றும் பொருள் தோன்றும். வித்தை-வித்யை. துட்டன், சிட்டர் - துஷ்டன், சிஷ்டர். குணமெட்டு - தன்வயத்தனாதல் முதலியன. ஆல் - ஈற்றசை. ஈற்றுஏகாரம் - தேற்றம்.

இது - முதலைந்துங் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறாவது தேமாச்சீரும் ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தம். (௮௧)

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
வெடுத்த பதஞ்சலியா ரேனுந்—தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனார்
சீறிக் குனித்தார் சிலை.

(இ-ள்.) அடுத்த-(தம்மைச்சரணமாக) அடைந்த, பதஞ்சலியார்-பதஞ்சலிமுனிவர், அஞ்சலியாநிற்ப-கைகூப்பித்தொழுதுநிற்க. எடுத்த பதம் சலியார் ஏனும் - தூக்கிய திருவடி மாறி அசையாமல் திருநிருத்தஞ் செய்தருளினாராயினும், தடுத்தவற்கு ஆ - தடுத்த இராஜசேகரபாண்டியனுக்காக, மாறி குனித்தார் - கால்மாறி ஆடிய சோமசுந்தரக்கடவுள், மலை குனித்து என்-மேருமலையை வில்லாக வளைத்ததனாற் பயனென்ன? மா மதனார்-வலிய மன்மதனார், சீறி - கோபித்து, சிலை - வில்லை, குனித்தார்-வளைத்தார்; (எ-று.)

இது, தலைவி இரங்கியது.

பதஞ்சலிபகவானுக்காகப் பதஞ் சலியாமல் திருநடனஞ்செய்தது, சிதம்பரத்திற் பொன்னம்பலத்திலும் மதுரையில் வெள்ளியம்பலத்திலும் என அறிக. பரதசாஸ்திரத்தில் மிகவல்லவனாகிய ராஜசேகரபாண்டியன், பரமசிவன் வெள்ளியம்பலத்தில் வலக்காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி நிருத்தஞ்செய்துகொண்டிருத்தலைத் தரிசித்து ஒருதிருவடியையே நெடுங்காலமாகத் தூக்கிவைத்துக்கொண்டிருத்தலால் அத்திருவடிக்கு மிகவருத்தம் உண்டாகுமென்று எண்ணி அதனால் தான் மிகவருந்தி ஒருசிவராத்திரியிற் சிவபிரானை வணங்கித் துதித்து 'நீர் இன்றைக்குத் தூக்கினகாலை ஊன்றி ஊன்றினகாலைத் தூக்கி ஆடவேண்டும்' என்று பிரார்த்திக்க, அது முதல் அக்கடவுள் அங்ஙனமே மாறி ஆடிநின்றாரென்பது, தடுத்தவற்கா மாறிக்குனித்த கதை; இதனைத் திருவிளையாடலிற் கான்மாறியாடிய படலத்திற் காண்க.

இது - மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசை வெண்பா. (அஉ)

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ
  சிவவாவி யொன்று முளதோ
விலையோ வறிந்திலமிம் மதனாண் மையென்புகல்வ
  திதுவேத வம்பி றிதெனா
முலையே யணிந்தமுகிழ் நகையீ ரொர்பெண்கொடியின்
  முலையோடு முன்கை வளையான்
மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம்
  மதுரேசர் தந்த வரமே.

(இ - ள்.) முலையே அணிந்த - முல்லையரும்புகளையே ஒத்த, முகிழ் நகையீர் - தோன்றுகிற பற்களையுடைய மகளிரே! சிலையோ-(மன்மதனது) வில்லோ, கரும்பு - கரும்பாம்; பொரு கணையோ - (அவன்) போர்செய்கின்ற அம்புகளோ, அரும்பு - அரும்புகளாம்; சிவ சிவ—! ஆவி ஒன்றும் - (அம்மன்மதனுக்கு) உயிர் ஒன்றும், உளதோ - உள்ளதோ? இலையோ - இல்லையோ? அறிந்திலம் - தெரிந்தோமில்லை; இம் மதன் ஆண்மை - இந்த மன்மதனது பராக்கிரமத்தை, என் புகல்வது - என்னவென்று சொல்வது? இதுவே - இவ்வாண்மையே, தவம் - (அவனுக்குச்) சிறந்த தவமாம்; பிறிது என் ஆம் - வேறே யாதாகும்? ஓர் பெண்கொடியின் - பூங்கொடிபோல்வாளொரு பெண்ணினது, முலையோடு - தனங்களாலும், முன் கை வளையால் - முன்னங்கையிலணிந்த வளையல்களாலும், மலையே குழைந்திடு தம் இரு தோள் - மேருமலை வில்லாக வளைதற்குக் காரணமான தமது இரண்டு தோள்களும், குழைந்து உறை - நெகிழ்ந்துள்ள, நம் மதுரேசர் - நமது மதுரைச்சொக்கநாதர், தந்த - (அவனுக்குக்) கொடுத்தருளிய, வரமே - வரமேயாகும், (இது); (எ - று.)

இதுவும், தலைவி இரங்கியது.

சிலையோ, கணையோ — ஓகாரம் - தெரிநிலை. சிவசிவ என்றது - இரக்கக்குறிப்பு. உளதோ, இலையோ — ஓகாரம்-ஐயம். முல்லை-முலையென இடைக்குறை விகாரமாயிற்று; "முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ" எனக் கலித்தொகையிலும், "பயிற்சியும் வனமுலைப் பாலே" என அழகர்கலம்பகத்திலும் போல. அணிந்த - உவமவுருபு. முகிழ் என்பதற்கு - அரும்பு என்று ஒருபொருள் உண்மையால், முல்லைமுகிழையே அணிந்த நகையீர் என்றும் பொருள்செய்யலாம். முலையே, எகாரம் - பிரிநிலை. மலையே, எகாரம் -

உயர்வுசிறப்பு. மலையே குழைந்திடு தோள் என்பதற்கு - (வலிமையில்)மலையும் பின்னிடும்படியான தோ ளென்றுமாம்.

இது - முதல் மூன்றுஞ் சீர்கள் புளிமாச்சீர்களும், இரண்டு நான்கு ஐந்தாஞ் சீர்கள் காய்ச்சீர்களும், ஆறாஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச்சீரு மாகிய எழுசீராசிரியவிருத்தம். (அரு)

வருப்புண்ட ரீக மிரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றோ
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே.

(இ - ள்.) வரும் புண்டரீகம் இரண்டால் - பொருந்திய (திருக்கை திருவடி என்னும்) இரண்டு செந்தாமரைமலர்களாலும், ஓர் கல்லும் - (மேருவாகிய) ஒருமலையையும், என் வல் நெஞ்சம் ஆம் இரும்பும் - எனது வலிய மனமாகிய இரும்பையும், குழைத்த - வணங்கச்செய்த, மதுரை பிரான் - மதுரைச் சொக்கநாதரது, வெற்பில் - மலையிலுள்ள, ஏழ் பரியோன் விரும்பும் தட மணி தேர் வலவா - ஏழுகுதிரைகளையுடையவனை சூரியனும் விரும்பும்படியான பெரிய அழகிய தேரைச் செலுத்துதல்வல்ல பாகனே! இது வெம் சுரம் அன்றோ-இந்த இடம் வெப்பத்தையுடைய கொடிய பாலைநிலமன்றோ! (இதில்), எங்கும் - எல்லாவிடத்தும், கரும்பும் - கரும்பையும், கனியும் - பழத்தையும், இளநீரும் - தெங்கினிளங்காயையும், கண்களின் - கண்களினால், பார் - காண்பாயாக!! (எ - று.)

இது - தலைவியைப் பிரிந்து சென்று மீண்டுவருகிற தலைமகன் இடைவழியில் அவளது உருவெளிப்பாட்டைப் பாலைநிலத்தே கண்டு வியந்து பாகனோடு கூறியது.

கரத்தாமரையாற் கல்லையும் அடித்தாமரையால் என்நெஞ்சையுங் குழைத்த என முறையேஇயைத்துப் பொருள்கொள்க. நெஞ்சத்தை இரும்பென்றது, வலிமைபற்றி. ஏழ்பரியோன்விரும்புந் தேர் எனத் தேரினது சிறப்பைக் கூறியவாறு. சூரியனது தேர்க்குதிரை ஏழ் [ஸப்த] எனப் பெயர்பெற்ற தொன்றே யென்பாரும், ஒருகுதிரையுண்டு அதற்கு ஏழுபெயர்கள் உண்டென்பாரும், ஏழு குதிரைகள் உண்டென்பாரும், ஏழுகுதிரைகள் உண்டு அவற்றுள் ஏழு [ஸப்த] எனப் பெயர்பெற்றதொன் றென்பாரும் உளர். மணித் தேர் - இரத்தினம்பதித்த தேர் என்றுமாம். 'கரும்பு' என்றது, தலைவியின் இன்சொல்லை. கனி என்றது, அதரத்தை. 'இளநீர்' என்றது, கொங்கைகளை. இது வெம் சுரம் அன்று - இது வெவ்வியபாலைநிலமன்று என்றும் பொருள்கொள்ளலாம்; காரணம், கரும்புமுதலியன காணப்படுதல்: ஏகாரம் - தேற்றம்.

இது - நிரையசையாதிக் கட்டளைக்கலித்துறை. (அசு)

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர்நுங் கடுக்கைக் காட்டின், மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து மூண்டெழுமான் மதித்தீ கெட்டேன், செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற் செங்கையிட்டு, மெருவிட்டு மூட்டிடநீர் விறகிட்டு மூட்டியவா வென்சொல் கேனே.

(இ - ள்.) கரு இட்ட காடு எறிந்து - (தம்அடியார்களது) கருப்பமாகிய பொருந்திய காட்டை வெட்டி, கடம்பவனத்து இருப்பீர் - கடம்பாரணியத்தில் இருப்பவரே! மதி தீ - சந்திரனாகிய நெருப்பு, நும் - உமது, கடுக்கை காட்டின் மரு இட்ட - கொன்றைமலர்த்தொகுதியின் வாசனை

பொருந்திய, கொள்ளை வெள்ளம் மடு - மிக்க கங்காநதியின் நீர்வெள்ளமாகிய மடுவிலே, படிந்து-முழுகி, மூண்டு எழும் - மேலேபொங்கியெழும்; கெட்டேன்—! செரு இட்ட விழி மடவார் - போர்செய்தலையுடைய கண்களையுடைய மகளிர், வாய் இட்டு சுடுவது அல்லால் - (தமது) வாயினாற் சொல்லும் பழிமொழியால் (என்னை) வருத்துவதல்லாமல், செங்கை ஈட்டும் எரு இட்டு - சிவந்த தமது கைகளினாற் சேர்க்கப்படுகிற எருக்களை மேலே போகட்டு, மூட்டிட - (அம்மதித்தீயை) மேலேமூளச்செய்ய, நீர் விறகு இட்டு மூட்டிய ஆ - நீர் விறகைப்போகட்டு வளர்த்த விதத்தை, என் சொல்கேன் - என்னவென்று சொல்வேன்? (எ - று.)

இது, விறகுவிற்ற திருவிழா நடக்கும்பொழுது சோமசுந்தரரது வடிவழகைக் கண்டு காமுற்றாளொரு தலைவி கூறியதாகச் செய்யப்பட்டது.

கரு - பிறப்பு. ஒருகாட்டை வெட்டி மற்றொருகாட்டிலிருப்பீரெனச் சாதுரியந்தோன்றக் கூறியவாறு. விறகிடுதற்கு ஏற்பக் காடெறிதல் கூறினாரென்றுங் கொள்க. 'கருவிட்டகாடெறிந்து' என்றது, அடியார்களுக்கு முத்தியைத் தந்து அவர்களது பிறப்பை ஒழித்து என்றபடி. மருவிட்ட கொள்ளை வெள்ளம் - பொருந்திய மிக்க தேனின் வெள்ளமென்றுங் கொள்ளலாம். நீரினால் அவியுந்தன்மையதாகிய நெருப்பு மடுவிற் படிந்து மேலே மூண்டதனால், 'கெட்டேன்' என்றாள். 'செங்கையீட்டு மெருவிட்டு மூட்டிட' என்றது - இளமகளிர் தத்தமக்குத் தக்க கொழுநனைப் பெறும்பொருட்டுப் பிறைதோன்றுங்காலத்து எருவை எடுத்து அதன்மேல் இட்டு அதனைக் கைகூப்பித் தொழுவதோர் மரபை உட்கொண்டு; இதனை "கீற்றுமதியெனநிலவு தோற்றுபரு வத்திலொளி கிளர்நுதற் செவ்வி வவ்விக் கெண்டைத் தடங்கணா ரெருவிட் டிறைஞ்சக் கிடந்ததும்" என மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில் வருவதனாலும் உணர்க. 'விறகிட்டு மூட்டியவா' என்றது - சொக்கநாதர் விறகுவிற்ற திருவிளையாடலிற் பிறையுடனே விறகு தங்குமாறு முடியிற் சுமந்த தன்மையைப்பற்றி. ஆல் - அசை.

இது, நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (அரு)

என்போ டுள்ள முநெக்குருக புக்கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ
தன்போற் காமன் சாபமு டித்தாற் றாழ்வுண்டே
முன்போர் காமன் சாபம னைத்து முடித்தாய்க்கே.

(இ - ள்.) என்போடு - எலும்பும், உள்ளமும் - மனமும், நெக்கு உருக - நெகிழ்ந்து கரையும்படி, புக்கு - எழுந்தருளி, என் போல்வார்க்கு - என்னைப்போன்ற இளமகளிர்க்கு, அன்போடு - அன்பையும், இன்பும்-இன்பத்தையும், அளித்தருள் - தந்தருள்கிற, கூடல் எம் அடிகேளோ - மதுரையில் உள்ள எமது சுவாமியே! முன்பு - முற்காலத்தில், ஓர் - ஒப்பற்ற, காமன் - கற்பகச்சோலைக்குத் தலைவனாகிய தேவேந்திரனது, சாபம் அனைத்தும் - பிரமகத்திதோஷம் முழுவதையும், முடித்தாய்க்கு - ஒழித்தருளிய உனக்கு, தன் போல் காமன் - (வேறுஉவமை தனக்குஇல்லாமையால்) தன்னைத் தானே ஒக்கின்ற மன்மதனது, சாபம்-வில்லை, முடித்தால் - அழித்தருளினால், தாழ்வு உண்டே - குறை உளதோ? (எ - று.)—எனது காமவேதனையைத் தீர்த்தருளவேண்டுமென்பதாம்.

இது - தலைவிகூற்று.

பின்னிரண்டடிகளில் - முன்னே ஒருகாமனது சாபத்தை முடித்த உனக்கு அதுபோல இப்பொழுதும் இக்காமனது சாபத்தையும் முடித்தால் தாழ்வுண்டோ வென்னும் பொருளுஞ் சொற்போக்கினால்தோன்றும். 'காமன்

சாபமனைத்தும்' என்பதற்கு - இந்திரனுக்குத் துருவாசமுனிவர் பாண்டியனால் முடிசிதறும்படி இட்ட சாபம்முழுவதையும் என்றும் பொருள்கொள்ளலாம். உண்டே, ஏ - வினா. அடிகேளோ, அடிகள் என்பதன் விளி; ஈற்றயல் திரிந்ததும், ஈற்றில் ஓகாரம் மிக்கதும் - விளியுருபாம்.

இது - மூன்றாஞ்சீர் விளச்சீரும், ஈற்றுச்சீர் காய்ச்சீரும், மற்ற மூன்றும் பெரும்பாலும் மாச்சீர்களுமாகிய விருத்தக்கலித்துறை. (அசு)

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா னாரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் மூழ்கிப் பதும பீடத்
தூற்றமி றாமு முலப்பில பல்றவம்
வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றொருவநின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரி னொருபழி சுமந்த
புன்றொழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
யன்றருள் சுரந்த தொன்றே சென்றோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
னெளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே.

(இ - ள்.) முள் தாள் - முள்ளையுடைய நாளத்தையும், பாசு அடை - பசிய இலையையும், நெடு இதழ் - நீண்ட இதழையுமுடைய, கமலத்து - தாமரையின்மலரிலே, இரை வர உறங்கும் - (தனக்குத்தக்க) உணவாகிய பெருமீன் வருமளவுந் தூங்குவனபோலிருக்கின்ற, குருகு - நாரைகள், விரி சிறை செம் கால் நாரைக்கு சிவபதம் கிடைத்து என - பரந்த இறகுகளையும் சிவந்தகால்களையுமுடைய நாரைக்குச் சிவகதி கிடைத்தஇடம் இதுவென்று எண்ணி, ஊற்றம் இல் தாமும் - (சிவனையன்றி வேறு)பற்றுக்கோடில்லாத தாங்களும், பைம்புனல் மூழ்கி - குளிர்ந்த தண்ணீரிலே நீராடி, பதுமபீடத்து இருந்து - பதுமாசனத்திலிருந்து, உலப்பு இல பல் தவம் - ஒழிதலில்லாத பலதவங்களை, வீற்று வீற்று - தனித்தனியே, நோற்பன - செய்வனவற்றை, கடுக்கும் - ஒக்கின்ற, குண்டு நீர் பட்டத்து - ஆழமாகிய நீரையுடைய பொற்றாமரைக்குளத்தின், ஒள் துறை - ஒளிபொருந்திய நீர்த்துறையிலுள்ள, சங்கமும் - சங்குகளும், வள் தமிழ் கடலின் தண் துறை சங்கமும் - வளப்பத்தையுடைய தமிழ்ப்பாஷையாகிய கடலினது இனியதுறைகளிலே பயின்ற (தலை இடை கடை என்னும்) புலவர்சங்கங்களும், முத்து அகம் பயின்று - முத்துக்கள் தம்மிடத்தே பயிலப்பெற்று [முத்தகம் பயின்று - முத்தகச் செய்யுட்களிற் பழகி], கா இயங்கு அற்று - (நீரைவிட்டு வெளியிற்) சோலைகளிலே சஞ்சரித்த லில்லாமல் [காவியம் கற்று - காப்பியங்களை அப்பியசித்து], சித்திரம் பாட்டு இயல் தேர்ந்தன - சிறந்த இசையின் கூறுபாடுகளை

ஆராய்ந்து ஒலித்தனவாகி [சித்திரம் பாட்டியல் தேர்ந்தன-பலவகைப்பட்ட பாட்டிலக்கணநூல்களை ஆராய்ந்து அறிந்தனவாகி], செல்லும் - சஞ்சரிக்கின்ற [ஒழுகுகின்ற], தட பணை உடுத்த - பெரிய வயல்களாற் சூழப்பட்டுள்ள, தண் தமிழ் கூடல் - இனிய தமிழ்வழங்கும் மதுரையை, இடம் கொண்டு இருந்த - (தாம்உகக்கும்)இடமாகக்கொண்டு எழுந்தருளியிருந்த, இமையா மூக் கண் - இமைத்தலில்லாத மூன்றுகண்களையும், கரு மிடறு - கரிய கண்டத்தையுமுடைய, ஒருவ - ஒப்பற்றகடவுளே! தாய் நலம் கவருபு - தாயினது இன்பத்தை நுகர்ந்து, தந்தை உயிர் செகுத்து - தந்தையின் உயிரைக் கொன்று, ஆங்கு - அதனால், இரு பெருங் குரவரின் - (தாய் தந்தை என்னும்) இரண்டு பெரியோரிடத்தும், ஒரு பழி சுமந்த - (மாத்ருகமனம் பித்ருஹத்தி என்னும்) ஒப்பற்ற பழியையும் பாவத்தையும் மேற்கொண்ட, புல் தொழில் - இழிவான செய்கையையுடைய, ஒருவற்கு - ஒருவனுக்கு, புகல் இன்மை - (உன்னையன்றி) வேறே சரணமில்லாமையை, தெரீஇ - அறிந்து, அன்று - அந்நாளில், அருள் சுரந்தது ஒன்றோ - (அவனுக்கு நீ) கருணைகூர்ந்தருளியது ஒன்றுமாத்திரமோ? சென்றது ஓர் வலியாற்கு - வந்து சரணமடைந்ததொரு கரிக்குருவிக்கு, அருள்வதூஉம் - (நீ) திருவருள்செய்ததையும், நோக்கி - பார்த்து, எளியார்க்கு எளியை என்பது குறித்து - (நீ) எளியவர்க்கு எளிதில் அருள்செய்யுந்தன்மையையுடையாய் என்பதை எண்ணி, நின் திரு அடி வழுத்துதும் - உனது திருவடிகளை வணங்கித்துதிப்போம், (யாம்); (எ - று.)

முட்டாட் பாசடை - முதலுக்கு எற்ற அடை; நெட்டிதழ் - சினைக்கும் எற்ற அடை. பசுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு 'பாசு' என்றும், நெடுமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்ஒற்றுஇரட்டி 'நெட்டு' என்றும் நின்றது. சோமசுந்தரக்கடவுளின் சிறப்பை முனிவர்கள் கூறக் கேட்டுத் திருமதுரையை அடைந்து பொற்றாமரைப்பொய்கையில் நீராடிக் கடவுளை வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து தியானித்துவந்த நாரையொன்றுக்கு அக்கடவுள் காட்சிகொடுத்துச் சிவலோகத்திற் சிவகணத்துள் ஒன்றாக வசிக்கும்படி வரந் தந்தனரென்னுந் திருவிளையாடல், நாரைக்குமுத்திகொடுத்தபடலத்துக்கதை. கிடைத்தென-கிடைத்ததென என்பதன் விகாரம்; செய்தென என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சமாகவுங்கொள்ளலாம்; கிடைத்ததனால்என்றுபொருள். பதுமாசனம் - அஷ்டாங்கயோகாசனத்துள்ஒன்று; அது - இருதொடைமேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறித்தோன்ற வைத்திருத்தல். பல்+தவம்=பஃறவம்; லகரத்தின்முன் தகரம் வர முறையே ஆய்தமாகவும் றகரமாகவுந் திரிந்தன: [நன் - மெய் உரு, ௩௪.] பொற்றாமரைக்குளத்தில் இயல்பாகமுழுகித் தாமரைமலரில் உறங்குகிற நாரைகளை நாரைக்குமுத்திகொடுத்ததீர்த்தமிது வென்று கருதி அதில்நீராடிப் பதுமாசனத்தில் இருந்து தவஞ்செய்வனவாக வருணித்தார்.

தமிழைக் கடலென்றது,அளவில்லாமைபற்றி. துறை என்பது - அத்தமிழின் அகமும் புறமுமாகிய பொருட்கூறுபாடுகளை. சங்கம் என்னுஞ் சொல் இரண்டனுள்,முன்னது ஸங்கம்;பின்னது-ஸங்கம். 'முத்தகம்'முதல் இரண்டடி - சிலேடையணி. இயங்கு - முதனிலைத்தொழிற்பெயர். முத்தகம் - முக்தகம்; அது - தனித்தனி முற்றுப்பெறுஞ் செய்யுள். பன்னிரு பாட்டியல்,வெண்பாப்பாட்டியல் என்பனபோல,சித்திரப்பாட்டியல் என்பது-அக்காலத்தில்வழங்கியதோர் இலக்கணப்பாட்டியலாகவுமாம். சித்திரப்பாட்டியல்-நால்வகைக்கவிகளுட் சித்திரகவியின் இலக்கணமுமாம். கவியினாற் செய்யப்பட்டது, காவ்யம். சங்கு ஒலித்தலைப் பாட்டிசையாகக் குறித்தார்.

அவந்திநகரத்திற் பிராமணசாதியிற்பிறந்தானொருவன் தன் தாயைப்புணர்ந்து தந்தையிடத்துப் பகைமைகொண்டு அவனைக்கொன்றுவிட்டு வேற்றூர்க்குவரும் வழியிடையே தாயையும் வேடர்கட்குப் பறிகொடுத்துப் பிரமகத்தியாற் பிடித்துப் பீடிக்கப்பட்டவனாய் உய்யுமாறொன்றுமில்லாமல் மதுரையினருகே வந்தபொழுது, சோமசுந்தரக்கடவுள் தமது நிர்ஹேதுக கிருபையினால் வேடவடிவமாய் வேட்டுவச்சிவடிவுகொண்ட மீனாக்ஷியுடனே அவனுக்குக் காட்சிதந்து தக்க பிராயச்சித்தமொன்றை எளிதாக உபதேசித்து அவனது பாதகத்தைத் தீர்த்தருளின னென்னுந் திருவிளையாடலை மாபாதகந்தீர்த்தபடலத்துக் காண்க. தெருப - வினையெச்சம்; உ - சாரியை. பு - இறந்தகாலவினையெச்ச விகுதி. தெரிந்து என்பது, விகாரப்பட்டு 'தெரீஇ' என அளபெடுத்தது. குரவர் - குரவன் என்பதன் திரிபு.

கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலத்துத் திருவிளையாடல் வருமாறு:— ஒரு தீர்த்தயாத்திரைப்பிராமணனது வார்த்தையால் மதுரைத் தலமே மற்றையெல்லாத்தலத்திலுஞ் சிறந்த தென்று அறிந்து அப்பதியையடைந்து சோமசுந்தரமூர்த்தியை அருச்சித்து வணங்கிய மிகவும் எளியதொரு கரிக்குருவிக்கு அக்கடவுள் 'மிருத்யுஞ்ஜயம்,' 'த்ர்யம்பகம்' என்னும் மந்திரங்களை உபதேசித்துப் பல பறவைகளிலும் வலியதாம்படி அனுக்கிரகித்து வலியனென்னும்பெயரையுந் தந்தருளின தென்பதாம்.

மற்று - அசை. அருள்வதூஉம் - இன்னிசையளபெடை. பட்டம் - குளம்.

இக்கவியால், எளிய எமது பாவத்தையுந் தீர்த்து அருள்செய்யவேண்டுமென வேண்டியவாறாம்.

இது - பத்தொன்பதடி நேரிசையாசிரியப்பா. (அஎ)

குறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றேயாற் றாச்
சிறுதுயிலும் பெருமூச்சுங் கண்டிரங் கலையாற்
றெறுமறலி நீயேயித் தெண்ணிலாவு
மெறியுநெடும் பாசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா லிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனை மதுரேசர் மிலைச்சு
நாகிளவெண் டிங்களென நவில்கின் றாரே.

(இ - ள்.) குறு முயலும் - சிறிய முயலையும், சில கலையும் - சிலகலைகளையும், இழந்து - நீங்கி, ஒரு மான் உயிரை கொள்ளை கொள்ள - ஒரு மான்போலும் இத்தலைவியின் உயிரைக் கவர்ந்துபோதற்கு, எழுந்த - புறப்பட்டுவிளங்குகின்ற, மதி கூற்றே - இளஞ்சந்திரனாகிய யமனே! ஆற்றா - (கண்டு) பொறுக்கக்கூடாத, சிறு துயிலும் - (இவளது) சிறிய தூக்கத்தையும், பெரு மூச்சும் - பெரிய மூச்சையும், கண்டும் - பார்த்தும், இரங்கலை - (இவள்விஷயத்தில்) மனம் இரங்குகின்றாயில்லை; ஆல் - ஆதலால், தெறு மறலி நீயே - (உயிர்களைக்) கொல்லுகின்ற யமன் நீயேயாவாய்; இ தெள் நிலாவும் - தெளிவாய்விளங்குகிற இந்த நிலாவும், எறியும் நெடும் பாசமே - (யமனாகிய நீ உயிர்களின்மேல்) வீசுகின்ற பெரிய காலபாசமேயாம்; முதிர் நரையால் - முற்றிய கிழத்தனத்தால், உடலும் அற கூனி - உடம்பும் மிக வளையப்பெற்று, இருள் நிறமும் இழந்தாய் போலும் - கருமையான நிறத்தையும் நீங்கி வெண்ணிறமடைந்தாய் போலும்; (இவ்வாறிருக்க), நறு நுதலார் - அழகிய நெற்றியையுடையரான இளம்பெண்கள், உனை - உன்னை, என்கொல் - என்னகாரணத்தால், மதுரா ஈசர் மிலைச்சும் நாகு இள வெள் திங்கள் என நவில்கின்றார் - மதுரைச்சொக்கநாதர் (முடியிற்) சூடுகின்ற மிக

வும்இளமையான வெண்ணிறமுள்ள சந்திரனென்று சொல்லுகின்றார்கள்? (எ - று.)—கரிய முதிய யமனாகிய உன்னை இளம்பெண்கள் இளஞ்சந்திர னென்றுசொல்வது பேதைமையே யென்பதாம்.

இது - பாங்கிவார்த்தை; சேவிலிவார்த்தையுமாம்.

இளஞ்சந்திரனுக்குக் களங்கமும் மற்றைக் கலைகளும் இல்லையாதலால், 'குறுமுயலுஞ் சிலகலையு மிழந்து' எனப்பட்டது. களங்கத்தை முயலென்றல், கவிமரபு. கலை - சந்திரன்பங்கு. மான் - தலைவிக்கு உவமவாகுபெயர். இதில்,ஒரு முயலையும் சில கலைமான்களையும் இழந்து ஒருமானின் உயிரைக் கவ்வவந்த என ஒருபொருளுந் தோன்றும். 'சிறு துயில்' என்றது,தலைவனைப் பிரிந்த வருத்தத்தால் தூக்கங்கொள்ளாததனால். பாசம் - கயிற்றுவடிவமான ஓர் ஆயுதம். யமனுக்கு இயல்பாகவுள்ள உடல்நெறிப்பும் கருநிறமும் மூப்பினால் ஒழிந்தனவாகக் கூறினாள். நரை - மயிர்வெளுக்கும்படியான முதுமை. பிறைச்சந்திரன், இயல்பில் உடம்பு வளைந்து நிறம் வெளுத்திருக்கும். நாகு,இள - ஒருபொருட்பன்மொழி. கூனி - வினையெச்சம்; கூன் - பகுதி, இ - இறந்தகால வினையெச்ச விகுதி.

இது - பெரும்பாலும் ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறாஞ் சீர்கள் காய்ச்சீர்களும்,மற்றமூன்றும் மாச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தம். ()

நவ்வியங்கண் மானுமானு மினிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங்க றுத்துளார்
கைவிளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
கொவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகைநீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவிரிந்த வல்குலீர்நும் மன்னைமார்கள் சங்கையிற்
படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே.

(இ - ள்.) நவ்வி அம் கண் மானும் - மான்பார்வை போலும் அழகிய பார்வையையுடைய பெண்ணாகிய உமாதேவியையும், மானும் - மானையும், இனிது உகந்து - தனித்தனி இனியதாகவிரும்பி, இடம் கொள்வார் - (முறையே) பக்கத்திற் கொண்டவரும் [இடத்திருக்கையிற் கொண்டவரும்], நஞ்சம் ஆர்ந்து - விஷத்தை உண்டும், என் நெஞ்சம் ஆர்ந்து - எனது மனத்தை விரும்பியும், (முறையே), நனி களம் கறுத்து உளார் - நன்றாகக் கண்டங் கறுத்துள்ளவரும் [நனி களங்கு அறுத்து உளார் - நன்றாக (மனத்தின்) குற்றத்தைத் தீர்த்தருளியுள்ளவரும்], கை விளங்கு குன்றும் - கையில் விளங்குகிற மேருமலையையும், மன்றும் - வெள்ளியம்பலம் பொன்னம்பலங்களையும், (முறையே), கோவில் ஆ குனித்துளார் - பெரிய வில்லாக வளைத்துள்ளவரும் [கோவில் ஆ குனித்துளார் - (தாமுகக்கும்) ஆலயமாகக் கொண்டு (அவற்றில்) நடனஞ்செய்துள்ளவரும்], கன்னிநாடர் - பாண்டியநாட்டை யுடையவரும், மதுரைவாணர் - மதுரையில் வாழ்பவரும், கயிலை வெற்பர் - கைலாசகிரியை யுடையவருமாகிய சிவபிரானது, வெற்பு - மலையை, அனீர் - ஒத்துச் சிறந்த மகளிரே! கொவ்வை வாய் விளர்ப்ப - கொவ்வைப்பழம்போலச் சிவந்துள்ள (உமது) அதரம் வெளுக்கவும், மை கருங் கணும் சிவப்பவே-மையிட்ட கரிய கண்களுஞ் சிவக்கும்படியும், குளிர் தரங்கம் வைகை நீர் - குளிர்ந்த அலைகளையுடைய வையையாற்றின் நீரிலே, குடைந்து - மூழ்கி, உடன் - உடனே, திளைத்திர் - (அதில்) நீர்விளையாட்டுச் செய்கின்றீர்கள்; பை விரிந்த அல்குலீர் -

பாம்பின்படம்போலும் பரந்த அல்குலையுடையவர்களே! நும் அன்னைமார்கள் - உமது தாய்மார்கள், சங்கையில் படில் - (உம்விஷயத்திற்) சந்தேகப்பட்டால், அவர்க்கு - அவர்களுக்கு, வீணின் - வீணாக, நீவிர் - நீங்கள், பரிகரித்தல் - அச்சந்தேகத்தைப் போக்கடிக்கும்படியாகுதல், பாவமே - கொடுமையேயாம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இது, ஜலக்கிரீடைசெய்கிற சகிகளை நோக்கி ஒரு தலைவி கூறியது.

மான் என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - பெண்ணென்னும் மாத்திரமாய் நின்றது. களங்கு - களங்கமென்பதன் விகாரம். கோவில் - கோ இல்; கடவுளாலயம். கயிலை - வடசொற்றிரிபு. பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனத் தாய்மார் பலவகைப்படுவர். வாய்வெளுத்தலும் கண்சிவத்தலும் நீராடுதற்கும் தலைவனைப் புணர்தற்கும் உள்ள குறியாதலால், 'சங்கையிற் படில்' என்றாள். 'சந்தையப்படில்' என்ற பாடத்துக்கு, சந்தையம் - ஸந்தேஹமென்னும் வடசொல்லின் திரிபாம். 'கொழிதரங்கம்' என்றும் பாடம். கைவ்விளங்கு, பைவ்விரிந்த - எதுகைநயநோக்கிய விரித்தல்விகாரங்கள். மலயத்துவசபாண்டியன்மகளாகிய தடாதகைப்பிராட்டியால் அரசாளப்பெற்றமைபற்றி, பாண்டியநாட்டுக்குக் கன்னிநாடென்று பெயர்; கன்னியாகுமரியை எல்லையாகவுடைய நாடுமாம்.

இது - எழாஞ்சீரும் பதினான்காஞ்சீருங் கூவிளச்சீர்களும், மற்றைப் பன்னிரண்டும் மாச்சீர்களுமாகிய பதினான்குசீராசிரியச்சந்தவிருத்தம்.

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற் பார்வை மட்டோ, காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமையடைதல் கணக்கே யன்றோ, மாமிக்குக் கடலேழும் வழங்கினீ ரொருவேலை மகனுக் கீந்து, பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும் போக்கி னீரே.

(இ - ள்.) பாமிக்கு பயில் மதுரை - செந்தமிழ்ப்பாடல்கள் மிகுந்து வழங்குகின்ற மதுரையில் எழுந்தருளிய, பரம் சுடரே - (சூரியன்முதலிய எல்லா வொளிகளினும்) மேம்பட்ட ஒளிவடிவமாகவுள்ள கடவுளே! (நீர்), மாமிக்கு - (உமது) மாமியார்க்கு, கடல் எழும் வழங்கினீர் - ஏழு கடலையுங் கொடுத்தருளினீர்; ஒருவேலை மகனுக்கு ஈந்து - ஒருகடலை (உமது) மகனுக்குக் கொடுத்து [ஒருவேலாயுதத்தை (உமது) குமாரனை உக்கிரபாண்டியனுக்குத் தந்தருளி], பூமிக்குள் - பூமியிலே, கடலை—, வறிது ஆக்கினீர் - வற்றியதாகச் செய்தீர்; பவம் கடலும் போக்கினீர் - (அடியார்களது) பிறப்பாகிய கடல்களையும் ஒழித்தருளினீர்; (ஆதலால்), ஒருத்தி கயல் பார்வை மட்டோ - மீனாக்ஷியம்மையொருத்தியது கயல்மீன்போலுங் கண்ணொன்று மாத்திரமோ, காமிக்கும் மடந்தையர் கண் கயல் எலாம் - விரும்புகின்ற மகளிரது கண்களாகிய கயல்மீன்களெல்லாம், உமை அடைதல் - உம்மிடம் வந்து சேர்தல், கணக்கே அன்றோ - முறையேயாமன்றோ? (எ - று.)

மீன்களுக்கு ஆதாரமாகவுள்ள கடல்களையெல்லாம் நீர் ஒழித்துவிட்டீராதலால் மீன்களெல்லாம் உம்மைவந்துஅடைதல் முறையேயாமென்று ஒருதலைவி சாதுரியந்தோன்றக் கூறியது இது.

கௌதமமுனிவரது உபதேசத்தின்படி ஸமுத்திரஸ்நானஞ் செய்யவிரும்பிய மலயத்துவசபாண்டியன்மனைவியான காஞ்சனமாலையின்பொருட்டு, அவன்மகளுந் தமதுமனைவியுமாகிய தடாதகையின் விருப்பத்தின்படி,

சுந்தரபாண்டியரான கடவுள், மதுரைக்குக் கீழ்த்திசையிலுள்ளதொரு குளத்தில் ஏழுகடல்களையுந் தமது திவ்வியசக்தியால் வரவழைத்து அடக்கின ரென்பது, எழுகடலழைத்ததிருவிளையாடல் வரலாறும். உக்கிரகுமாரபாண்டியன் தனதுநகரத்தை அழிக்குமாறு இந்திரனேவலால் மதுரையின்மேற் பொங்கி வந்தசமுத்திரத்தைத் தனதுபிதா தனக்குத் தந்திருந்ததொரு வேலாயுதத்தை யெறிந்து வற்றச்செய்து வென்றா னென்பது, கடல்சுவறவேல்விட்ட திருவிளையாடலாம். காமிக்கும் - காமமென்னும் பெயரினடியாப் பிறந்த எதிர்காலப் பெயரெச்சம்.

இது - நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம்; மேலிற் கவியும் இது. (௯௦)

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்போடு நெட்டுயிர்ப்பு நெடுங் கண் ணீரிற், பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுயிரும் பெ ற்றா ளன்றே, காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர் நறை கமழ்பூங் கொன்றைத், தாரோடு மனஞ்செல்லத் தளையோடுந் தா ன்செல்லாத் தமிய டாளே.

(இ - ள்.) கார் ஓடும் - கரியவிஷம் பொருந்திய, மணி கண்டர் - நீலமணிபோலக் கறுத்த கழுத்தையுடையவராகிய, கடம்ப வனம் சொக்கர் - கடம்பாரணியத்திலெழுந்தருளிய சொக்கநாதரது, நறை கமழ் பூ கொன்றை தாரோடு - வாசனைவீசுகிற அழகிய கொன்றைப்பூவினாலாகிய மாலையுடனே, மனம் செல்ல - தனது மனம் போய்விட, தளையோடும் தான் செல்லா - தன்தாயுடனே தான் போகமாட்டாத, தமியள் - (அச்சொக்கரை யன்றி வேறுகதியில்லாமல்) தனியளாகிய இத்தலைமகள், நீர் ஓடு குறு வெயர்ப்பும் - ஒழுகுகிற சிறிய வேர்வைநீர்த்துளிகளையும், நெருப்பு ஓடும் நெடு உயிர்ப்பும் - நெருப்புப்போல வெப்பம்பொருந்திய பெருமூச்சையும், நெடுங் கண் நீரின் பீர் ஓடு வனம் முலையும் - பெரிய கண்ணின் நீருடனே பசலைநிறம் பரவிய அழகிய தனங்களையும், குறையோடு நிறை உயிரும் - குறையால் நிரம்பிய உயிரையும், பெற்றாள்—; (எ - று.)

இது - பாங்கி வார்த்தை; செவிலிவார்த்தையுமாம்.

வெயர்ப்புமுதலியன, தலைவனைப்பிரிந்த மகளிர்பால் நிகழும் மெய்ப்பாடுகளாம். குறையோடு-ஓடு உருபு, ஆலுருபின் பொருளில் வந்தது. மனம் பரவசமாய்விட்டதனால் தான் தாயுடனே செல்லமாட்டா ளாயினாள். தளை - தள்ளையென்பதன் இடைக்குறைவிகாரம்; இது - குட்டநாட்டார் வழங்குந் திசைச்சொல்லாம். 'தளையோடுந் தான்செல்லா' என்றது, காலில் விலங்குபூட்டப்பெற்றாற் போல இருந்தஇடம்விட்டுப் பெயர்ந்து சஞ்சரிக்கமாட்டாத என்றும் பொருள்படும். அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம். தான், ஏ - ஈற்றசை. ஒன்று இரண்டு நான்காம் அடிகளில் தொடைமுரணை காண்க. (௯௧)

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்று டடாதகா தேவியென் றொருபேர் தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ சவுந்தர மாறனானதுவுங், குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர் கொண்டதுந் தண்டமிழ் மதுரங் கூட்டுணு வெழுந்த வேட்கையா லெனிலிக் கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார், பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும் பனிமலர்க் குழலியர் பளிக்குப் பானிலா முன்றிற் றாநிலா முத்தின் பந்தரிற் கண்ணிமை யாடா, தமரர்நா டியரோ டம்மனை யாட

ஐயநுண் ணுசுப்பள வலவென் றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே.

(இ - ள்.) பமரம் - வண்டுகள், யாழ் மிழற்ற - வீணைப்பாடல்போல ஒலிசெய்ய, நறவு கொப்பளிக்கும் - தேனைச்சொரிகின்ற, பனி மலர் - குளிர்ச்சியான மலர்களையணிந்த, குழலியர் - கூந்தலையுடையரான மானிடமகளிர், பளிங்கு பால் நிலா முன்றில் - ஸ்படிகக்கற்களினாலாகிய வெண்மையான நிலாமுற்றத்திலே, தூநிலா முத்தின் பந்தரில் - பரிசுத்தமான சந்திரகாந்திபோலவெள்ளிய முத்துக்களினாலாகிய பந்தலிலே, கண் இமை ஆடாது - கண்கள் இமைத்தல் செய்யாமல், அமரர் மாதியரோடு - தெய்வப்பெண்களுடனே, அம்மனை ஆட - அம்மானையாடாநிற்க, ஐயம் நுண் நுசுப்பு அளவு அல என்று - சந்தேகம் நுட்பமான இடையினளவில் மாத்திரமே உள்ளதன்றென்று கருதி, அமரரும் - (மனிதர்மாத்திரமேயன்றித்) தேவர்களும், மருளும் - திகைக்கும்படியான, தெளி தமிழ் கூடல் - தெளிவான தமிழ் வழங்கும் மதுரையில் எழுந்தருளிய, அடல் அரா அலங்கல் வேணியனே - வலிமையுடையநாகங்களை மாலையாகச்சூடிய சடையையுடைய சோமசுந்தரக்கடவுளே! தமரம் நீர் - ஆரவாரத்தையுடைய கடனீரால் சூழப்பட்டுள்ள, புவனம் முழுது - பூமிமுழுவதையும், ஒருங்கு ஈன்றாள் - ஒருசேரப் பெற்றவளாகிய உமாதேவி, தடாதகாதேவி என்று ஒரு பேர் தரிக்க வந்ததுவும் - தடாதகைப்பிராட்டியென்று ஒரு திருநாமத்தைப் பெறுமாறு (மதுரையில்) வந்துபிறந்ததும், தனி முதல் ஒரு நீ - ஒப்பற்ற முதற்கடவுளாகிய நீ, சவுந்தர மாறன் ஆனதுவும் - சுந்தரபாண்டியனானதும், குமரவேள் - முருகக்கடவுள், வழுதி உக்கிரன் என பேர் கொண்டதும் - உக்கிரகுமாரபாண்டியனென்று பெயர்கொண்டு வந்துபிறந்ததும், தண் தமிழ் மதுரம் கூட்டுண எழுந்த வேட்கையால் - இனிய தமிழ்ப்பாஷையின் சுவையைக் கொள்ளைகொண்டு நுகர்தற்கு உண்டான விருப்பத்தாலேயாம். எனில் - என்றால், இ கொழி தமிழ் பெருமை - தெளிவுபடுத்தப்பட்ட இத்தமிழினது மகிமையை, யார் அறிவார் - எவர் அறிந்துசொல்லவல்லவர்? (எ - று.)

'தனி முதல்' என்றது - திரிமூர்த்திகளுக்குந் தலைமையான முதல்வனென்றவாறு. காமவேளை விலக்குதற்கு, 'குமரவேள்' என்றார். உக்ரன் - (பகைவர்க்குக்) கொடியவன். கூட்டுணற்குக் கொள்ளையிடலென்பது "நவமணி மகுடந், தேடிக் கண்டிலர் சிகரில கண்டிலர் திகைத்து, வாடிச் சிந்தைநோ யுழந்திது மாற்றலர் கூட்டுண், டோடிப்போயினது" என்பதனால் அறிக. பமரம் - ப்ரமரம் என்னும் வடமொழியின் சிதைவு. பால் - அதன் நிறத்தைக் குறித்தது. நிலாமுற்றம் - நிலாவில் விளையாடுதற்குரிய வீட்டின்வெளியிடம். பந்தர் - பந்தலென்பதன் இறுதிப்போலி. அமரரும், உம்மை - இறந்தது தழுவிய எச்சம்; உயர்வுசிறப்புமாம். நிலாமுற்றத்தில் மானிடமகளிரும் தேவமகளிரும் விரவிக் கண்ணிமையாமல் அம்மானையாடக் கண்டு மானிடருந் தேவரும் வேறுபாடறியமாட்டாமல் "'உண்டோ இல்லையோ' என்னுஞ்சந்தேகம் இவர்களது இடையளவில்மாத்திரமே முன்பு நமக்குஉள்ளது; இப்பொழுது 'மானிடமாதோ தெய்வமாதோ' என்னுஞ் சந்தேகம் இவர்களது வடிவுமுழுவதிலும் உளதாயிற்று" என்று எண்ணிப் பிரமிப்பாராயினரென்பது, கருத்தாம். இதனால், மதுரைமகளிரது அழகின் சிறப்பைக் கூறியவாறும். மனிதப்பெண்கள் கண்ணிமையாமை, அம்மானையாட்டத்தில் தமக்குஉள்ள ஊக்கத்தின் மிகுதியாலென்க. 'ஐய நுண்ணுசுப்பளவலவென்று' என்பதில், இம்மகளிரது அம்மானையாட்டத்தின் அயர்ச்சியை நோக்கி 'இவ்வாட்டம் இவர்களது உளதோ இலதோ என்று ஐயப்படும் நுண்ணிய இடையின் மென்மைக்கு ஏற்றதல்ல' என்று அமரரும் மருளு

கின்றனரென்றும் பொருள்படும். வண்டுகள் கூந்தலில் வந்துமொய்த்து ரீங்காரஞ்செய்வதனால் மானிடமகளிர்இன்னுரென்று அறிந்துகொள்ளலாகாதோ எனின், அம்மானையாட்டத்தின் அதிர்ச்சியினால் அப்பொழுது வண்டுகள் அகன்றன வென்க.

இது - நாற்பத்தாறுங்கவிபோன்ற பதினான்குசீராசிரியவிருத்தம். (கூஉ)

[இரங்கல்.]

அடுத்தங் குலவாக்கோட்டைசுமந் தளித்தீ ரொருவற் கதுநிற்சுத், தொடுக்குங் கணைவே டனக்குலவாத் தூணி கொடுத்தீர் போலுமா, லெடுக்குங் கணையைந் தெய்தகணை யெண்ணத் தொலையாதென்செய்கேன், றிடுக்கங் கொளமால் சிலைமதனைச் சினத்தீர் கடம்ப வனத்தீரே.

(இ - ள்.) மால் - திருமால், திடுக்கம் கொள - (புத்திரசோகத்தால்) துணுக்கத்தை அடையுமாறு, சிலை மதனை - (அவன்மகனாகிய) கருப்புவில்லையுடைய மன்மதனை, சினத்தீர் - கோபித்து எரித்தருளியவராகிய, கடம்பவனத்தீரே - கடம்பாரணியத்திலுள்ளகடவுளே! (நீர்), ஒருவற்கு - ஓர்அடியவனுக்கு, அங்கு - அக்காலத்தில், அடுத்து - (மனம்) பொருந்தி, உலவா கோட்டை சுமந்து அளித்தீர் - குறைதலில்லாத நெற்கோட்டையைக் கொணர்ந்துகொடுத்தீர்; அது நிற்க - அது இருக்க, (இப்பொழுது), தொடுக்கும் கணை வேள்தனக்கு - (பிராணிகளின்மேல்) தொடுக்கின்ற அம்புகளையுடைய மன்மதனுக்கு, உலவா தூணி கொடுத்தீர்போலும் - எடுக்க எடுக்கக் குறைதலில்லாத அம்பறாத்தூணியைத் தந்தருளினீர்போலும்; ஆல் - ஆதலால், எடுக்கும் கணை - (மன்மதன்) எடுக்கும் அம்புகள், ஐந்து - ஐந்தாம்; எய்த கணை - (என்மேல்) எய்த அம்பு, எண்ண தொலையாது - எண்ணிக் கணக்கிட அளவுபடாதாம்; என் செய்கேன் - (யான்) என்னசெய்வேன்!

இது - தலைவனைப்பிரிந்த தலைவியின் வார்த்தை.

மதுரையில் வேளாளனொருவன் தன்மனைவியுடனே சிவனடியார்பூசனையை இடைவிடாமற் காலந்தோறுஞ் செய்துவர, ஒருகாலத்திற் பரமசிவன் அவனது நற்குணத்தின் அருமைபெருமைகளை யாவர்க்குந் தெரிவிக்கக்கருதி அவனுக்கு வறுமையை வருவிக்க, அவன் அதனால் மிக வருந்தியும் விடாமல் தான்கொண்ட விரதத்தை அனுட்டித்துக்கொண்டுவந்து மிகக் கடன்பட்டு ஒருநாள் தானுந் தன்மனைவியும் பட்டினியாய்ச் சோமசுந்தரக் கடவுளையடைந்து பிரார்த்திக்க, அவர் எடுக்கஎடுக்கக்குறையாதிருக்கும்படியானதொரு நெற்கோட்டையை அவன்வீட்டிற் சென்றிருக்குமாறு அருளி, அவனது குறையைத் தீர்த்தன ரென்பது, உலவாக்கோட்டையருளிய திருவிளையாடலாம்.

தூணி - தூணீரமென்னும் வடமொழியின் சிதைவு. சினத்தீர் - சினந்தீரென்பதன் வலித்தல்.

இது - மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (கூங)

கடமுடையு நறுநெய்ங்குண் முழுகியெழு வதையொத்த கரடமத கரிபெற்றோர் பிடியேபோன், மடவநடை பயில்பச்சை மயிலொரு புறம்வைத்த மதுரையழ கியசொக்கர் வரைவேலோய், நடையுமெழு தாவைநிற்கு நிலையுமெழு தாவைசொற்கு ணலமுமெ

ழு துவைசித்ர ரதிபோல்வா, ளிடையுமெழு துவைமுற்று மிலதொ ர்பொரு ளையுமொக்க வெழுதிலெவ ருனைபொத்த பெயர்தாமே.

(இ-ள்.) கடம் உடையும் நறு நெய்க்குள் முழுகி எழுவதை ஒத்த - குடமுடைந்து வழிகின்ற நல்ல நெய்யிலே முழுகி எழுந்திருப்பதைப் போன்ற, கரடம் மத கரி - கன்னங்களினின்று ஒழுகுகிற மதநீரையுடைய யானைமுகக்கடவுளாகிய விநாயகரை, பெற்று - ஈன்று, ஓர் பிடியே போல் மடவம் நடை பயில் - ஒரு பெண்யானையேபோல அழகிய நடையைப் பழகுகிற, பச்சை மயிலை - பசுநிறமுடைய மயில்போன்ற உமாதேவியை, ஒரு புறம் வைத்த - வாமபாகத்திலே வைத்த, மதுரை அழகிய சொக்கர் - மதுரையில் எழுந்தருளிய அழகிய சொக்கநாதரது, வரை - மலையிலே யுள்ள, வேலோய் - (கையில்) வேலையுடைய தலைவனே! சித்ர ரதி போல்வாள் - அழகிய ரதிதேவி போல்பவளாகிய தலைமகளது, நடையும் - நடையையும், எழுதுவை - எழுதவல்லாய்; நிற்கும் நிலையும் எழுதுவை - (அவள்) நிற்கும் பலவகை நிலைமையையும் எழுதவல்லாய்; சொற்குள் நலமும் எழுதுவை - (அவளது) சொல்லினுள்ளேயுள்ள இனிமையையும் எழுதவல்லாய்; இடையும் எழுதுவை - (அவளது) இடையையும் எழுதவல்லாய்; (நீ), முற்றும் இலது ஓர் பொருளையும் - முழுவதும் இல்லாததொரு [அரூபமான] வஸ்துவையும், ஒக்க எழுதில்-உடன் எழுதினால், உனை ஒத்த பெயர்-உன்னைப்போன்ற மனிதர், எவர் - வேறுயாவர்? (எ-று.)

இது, தலைமகளது வடிவத்தைப் படத்திலெழுதிக் கையிற்கொண்டு மடலேறக்கருதிய தலைமகனுக்குத் தோழி 'அவளது நடையும் மொழியும் முதலியன எழுதமுடியாதனவாம்' என்று கூறி விலக்கியது; 'எழுதலரிதென விலக்கல்' என்னுந் துறையாம்.

கடம் - வடசொல். நெய்யுள்முழுகி எழுவது போன்ற தென்றது, யானையினது மதஜலப்பெருக்கும் நெய்ப்பும் பற்றி. 'எழுதுவை' முதலியன - பிறகுறிப்புவகையால், எழுதமாட்டுவாயல்லை யென்னுங் கருத்தைத் தந்தன. நடைமுதலியன வடிவமில்லாதனவா மாதலின், 'முற்றுமிலதொர் பொருளையும் ஒக்கவெழுதில்' எனப்பட்டது. ரதி - மன்மதன்தேவி. மடவம் - மடப்பம். தாம், ஏ - ஈற்றசை.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், மற்ற நான்கும் புளிமாங்காய்ச்சீர்களு மாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (கூச)

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல் விகிர்த கேண்மோ,வேதமினின் றிருவுருவொன் றிருருவாய் நின்றதினு மிறும்பூ தந்தோ, போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு பூவை மார்க்குக், காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு காட்சி தானே.

(இ-ள்.) மேதகைய பல கலை போர்த்து - மேன்மையை யுடைய பலகல்விகளை நிரப்பி, அறம் வளரும் - தருமம் வளர்கின்ற, தமிழ் கூடல் - தமிழ்வழங்கும் மதுரையில் எழுந்தருளிய, விகிர்த - (யாவரினும்) வேறுபாடுடையவனே! கேண்மோ - (யான்சொல்லும் இதனைக்) கேட்பாயாக: போது அலர் - மலர்கள் விரிந்த, பைந் துழாய் - பசிய திருத்துழாயினாலாகிய, படலை - மாலையை யணிந்த, புயல் வண்ணத்து - மேகம்போலும் நிறத்தையுடைய, ஒருவன் - ஒருவனாகிய திருமால், இரு பூவைமார்க்கு காதலன் ஆய்-(திருமகள் நிலமகள் என்னும்) இரண்டு மகளிர்க்குத் தான் கணவனாய், உனக்கு ஓர் காதலி ஆய் நிற்பது - உனக்கு ஒருமனைவியாகி நிற்பதாகிய, ஒரு

காட்சி-ஒருதோற்றம், ஏதம் இல் நின் திரு உரு ஒன்று ஈர் உரு ஆய் நின்றதினும் - குற்றமில்லாத உனது அழகிய வடிவமொன்றுதானே (பாதிபெண்ணும் பாதிஆணுமாய்) இரண்டுவடிவமாகி நிற்பதனினும், இறும்பூது - அதிசயத்தைவிளைப்பதாம்; அந்தோ - ஆச்சரியம்! (எ - று.)

சிவபெருமான் மிகவழகியதோர் ஆண்வடிவுகொண்டு தாருகவனத்திற் பிக்ஷாடனஞ்செய்யத்தொடங்கியபொழுது திருமால் மோகினியுருக்கொண்டு அவர்க்கு மனைவியாய்ச்சென்றனரென்னுஞ் சைவபுராணகதை, இங்கே அறியத்தக்கது. 'மேதகைய பலகலைபோர்த்து அறம்வளரும்'என்பதில்- சிறந்த பல ஆடைகளை மேலே போர்த்துக்கொண்டு தருமங் கண்வளர்கிற வென்னும் பொருளுந் தோன்றும். பின்னே கூறும் வேறுபாடு பற்றி, 'விகிர்த' என்றார். கேண்மோ, மோ - முன்னிலையசை. மற்று-வினைமாற்று.

இது - நான்காங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தம். (௬௫)

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்த
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக.

(இ - ள்.) அடியர் உள்ளத்து - அடியார்களது இருதயகமலத்தில், பூண்டு - (அவர்களைக் காத்தலை)மேற்கொண்டு, இருப்பீர் - எழுந்தருளியிருப்பவரே! காண் தகைய - (யாவராலும் விரும்பிக்)காணத்தக்க தன்மையையுடைய, செல்வம் - எல்லாச்செல்வங்களையுமுடைய, கடம்பவனத்து - கடம்பாரணியத்தில், ஆனந்த தாண்டவம் செய்து - ஆனந்தத்திருக்கூத்தாடி, ஆண்டவர் - (எல்லாவுயிர்களையும்) அடிமைகொண்டவர், நீர்தாம் அன்றே - நீரேயன்றோ? எம் உள்ளத்தையும் - எமது மனத்தையும், மெள்ள - மெதுவாக, உமது ஆ - உம்வசமாகும்படி, மிக - நன்றாக, திருப்பீர் - (தீயநெறியினின்று) மீட்பீராக; (எ-று.)—மெள்ள - மெல்ல. அன்றே-தேற்றம்.

இது, மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த இருவிகற்பநேரிசைவெண்பா. (௬௬)

[கார்.]

மிக்கார் முகத்தருள் கூடற் பிரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே.

(இ - ள்.) மிக்கார்முகத்து அருள் - பெரியோர்கள்பக்கல் அருள்செய்கின்ற, கூடல் பிரான் - மதுரைச்சொக்கநாதரது, கை விடம் நாண் துவக்கா கார்முகத்து - திருக்கையிலுள்ள விஷத்தையுடைய (ஆதிசேஷனாகிய) நாணியினாற் கட்டப்பட்ட வில்லாகிய மேருவை, அன்ன - ஒத்த, தேர் - தேரைச் செலுத்துதலில், வலவா - வல்லபாகனே! கை பரந்து செலும் - (ஆகாயத்தின்)இடத்திற் பரவிச்செல்லுகின்ற, இ கார் - இந்த மேகங்கள், எமது ஆவி என்ன தக்கார் - எமது உயிரென்று சொல்லத்தக்க தலைவியது, முகம் தட கண் - முகத்திலுள்ள பெரிய கண்களினின்று பெருகுகின்ற, நீர்-நீர்வெள்ளமாகிய, உக அந்த சலதியை - பிரளயகாலத்துப் பொங்கியெழுங் கடலை, முகக்க - மொண்டுகொள்ள, எழுந்தகொல் ஆம் - எழுந்தனபோலும்; (எ - று.)

இது, கார்காலத்துமீண்டுவருவேனென்று காலங்குறித்துத் தலைவியைப்பிரிந்து சென்ற தலைவன் மீண்டுவரும்பொழுது தனக்குமுன்னே மேகங்கள்செல்வதனை நோக்கி 'இவற்றைக் கண்டு தலைவி மிகவருந்துவளே' என்று கருதித் தனது பாகனுடன் சொல்லியது.

மிக்கார் - அருட்சத்திநிபாதமுடையவர். 'விடநாண்டுவக்காக் கார் முகம்' என்றது, மேருவினது வளைதலில்லாதபொழுதுள்ள இயற்கையுயர்ச்சியைக் குறித்தற்கு. கைபரந்து, கை - பொருளில்லாத உபசர்க்கமுமாம். உகாந்தம் - யுகாந்தம்; யுகமுடிவுகாலம். சலதி - ஜலதி: நீர்தங்குமிடம்.

இது - நேரசைத்தொடக்கத்துக் கட்டளைக்கலித்துறை. (கூஎ)

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்த மிசையே
மலராகி டந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலேசு மந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெரிவதே.

(இ - ள்.) ஆவி இன்றி உடலே சுமந்து திரிவார்கள் - உயிரில்லாமல் வெற்றுடம்பையே சுமந்து திரிபவர்களாகிய, சிலர் - சிலபேர், வெந்து விழ - உடம்பெரிந்து அழியும்படி, புலராத கங்குலிடையே - விடிதலில்லாத இராத்திரியிலே, ஓர் அங்கி - ஒரு நெருப்பு [சந்திரன்], புகையாது நின்று எரிவது - புகையாமல் நிலைநின்று எரிவதை, சலராசி தங்கு கணை ஏவு மொய்ம்பர் - (பாற்)கடலிலே தங்குகின்ற (திருமாலாகிய) அம்பை(த் திரிபுரத்தின்மேல்) எவிய திருத்தோளுடையவரும், சரண அரவிந்தம் மிசையே மலர் ஆகிடு - (தமது) திருவடித்தாமரைமலர்களின்மேல் அருச்சித்த மலர்களாகின்ற, அந்த நயன அரவிந்தர் - அத்திருமாலின் கண்மலர்களை யுடையவருமாகிய, மதுரா ஈசர் முன்பு - மதுரைச்சொக்கநாதர்சந்நிதானத்தில், புகலார் - (எவருஞ் சென்று) சொல்லுகின்றாரில்லை; (எ - று.)—சொல்வாராயின் அவர் விரைவில்வந்து அணைவர் என்றபடி.

இது - தலைவனைப்பிரிந்த தலைவி இரங்கிக்கூறியது.

ஜலராசி - நீரின்தொகுதியையுடையது. மலராக்கிடந்த என்பது எதுகைநோக்கி மலராகிடந்த என இயல்பாய் நின்றதாகக் கொண்டு, மலர்ந்து கிடந்த என்றலுமாம்; மலர் ஆகு இடந்த எனப்பிரித்து - மலராகிய பறிக்கப்பட்ட விழித்தாமரையையுடையவ ரெனவும் அமையும். 'ஆவியின்றி யுடலே சுமந்துதிரிவார்' என்றது - ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்த நாயகநாயகிகளை. ஓர் இராப்பொழுதுதானே விரகிகளுக்குப் பலயுககாலம்போலத் தோன்றுமாதலால், 'புலராதகங்குல்' எனப்பட்டது. அங்கி - அக்நி என்னும் வடமொழியின் சிதைவு. 'அங்கி' என்றது, தனக்குச் சுடுகின்ற சந்திரனை. புகையாது என்றது - இருள்கவியாமல் என்றவாறு. அக்கினியெரிதலைத் தணிக்குங் கருவியையுடைமை தோன்ற, ஜலராசியும் மலருங் கூறினர்போலும்.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் புளிமாங்காய்ச்சீர்களும், இரண்டு நான்கு ஆறாஞ் சீர்கள் தேமாச்சீர்களும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (கூஅ)

தேன்வ ழங்குக டுக்கை யார்கரு மான்வ ழங்குமு டுக்கையார்
திருவி ருந்தவி டத்தி னாருள் கருவி ருந்தந டத்தினார்
மான டங்கிய வங்கை யார்சடைக் கான டங்கிய கங்கையார்
வைகை யொன்றிய கூட லாரிவள் செய்கை யொன்றையு நாடலார்
கான வேயிசை கொல்லு மாலுற வான வேய்வசை சொல்லுமாற்
கன்றி யன்றிஇ ரங்கு மாலுயிர் தின்று தென்றனெ ருங்குமாற்

தீநி லாவனல் சிந்து மாற்கொல வேனி லான்மெல முந்துமாற்
றினமி டைந்திடை நொந்த போன்மகண் மனமி டைந்தது ணர்ந்துமே.

(இ - ள்.) வேய் - மூங்கிலினாலாகிய புள்ளாங்குழலின், கானம் இசை-இசைப்பாட்டு, கொல்லும் - (இத்தலைமகளை) மிகவருத்தும்; உறவு ஆன - உறவினராயிருக்குஞ் சனங்கள், வேய் வசை சொல்லும் - (இவள்மேல்) மூடைகின்ற பழிச்சொற்களைச் சொல்லும்; அன்றில் - அன்றிற்பறவை, கன்றி - (இவளை) வருத்தி, இரங்கும் - ஒலிக்கும்; தென்றல் - தென்றற்காற்று, உயிர் தின்று - (இவளது) உயிரை உண்டுகொண்டு, நெருங்கும் - அருகில் வரும்; தீ நிலா - கொடிய சந்திரகாந்தி, அனல் சிந்தும் - (இவள்மேல்) நெருப்புப்பொறியைச் சிதறும்; வேனிலான் - வசந்தகாலத்திற்குரியவனான மன்மதன், கொல- (இவளைக்)கொல்லும்பொருட்டு, மெல-மெல்ல, முந்தும்-முற்பட்டுவருவான்; மகள் - இத்தலைவி, இடை தினம் இடைந்து நொந்த போல் - இடை நாள்தோறுஞ் சிறிதுசிறிதாக இளைத்து வாடுதல்போல, மனம் இடைந்தது - மனம் மெலிந்ததை, உணர்ந்தும் - அறிந்தும்,—தேன் வழங்கு கடுக்கையார்-தேனைச்சொரிகின்ற கொன்றைப்பூமாலையையுடையவரும், கரு மான் வழங்கும் உடுக்கையார் - கரிய யானையினால் தரப்பட்ட அதன் தோலாகிய உடுக்கும்ஆடையையுடையவரும், திரு இருந்த இடத்தினார் - உமாதேவிதங்கிய வாமபாகத்தையுடையவரும், அருள் கரு இருந்த நடத்தினார் - கருணைகுடிகொண்டதிருநடனத்தையுடையவரும், மான் அடங்கிய அம் கையார் - மான் அடங்கியுள்ள அழகிய இடக்கையையுடையவரும், சடை தான் அடங்கிய கங்கையார் - சடாடவியில் தங்கிய கங்காநதியையுடையவரும்,வைகை ஒன்றிய கூடலார்-வையைநதிபொருந்திய மதுரையையுடையவரும் ஆகிய சோமசுந்தரர், இவள் செய்கை ஒன்றையும் நாடலார்-இவளது தொழிலொன்றையும் விரும்பி வந்தணைகின்றாரில்லை; (எ-று.)

இது - செவிலிஇரங்கல்; பாங்கிஇரங்கலுமாம்.

மான், ன் - சாரியை. திரு - அழகு; உடையவளுக்குப் பண்பாகுபெயர்: இது - இங்கே, உமாதேவியைக்குறித்தது; உவமவாகுபெயராக உரைத்தால் உமாதேவிக்குச் சிறப்பாகாது. அங்கை - அகங்கையுமாம். ஆன - பெயர். வேய் வசை - வினைத்தொகை. ஏய் வசை எனப் பிரித்து - பொருந்திய அல்லது இழிவான வசை யென்றுமாம். உறவான,வேய் - ஒற்றர் எனப் பொருளுரைப்பாரு முளர். இனி, 'உறவானவாய்' எனப் பாடங்கொள்ளுதலும் ஒன்று. அன்றில்-கிரௌஞ்சபக்ஷி. இது - மாலைக்காலத்திற் பேடையைக் கூவும் ஒலியும், மற்றை வேய்ங்குழலோசை முதலியனவும் பிரிந்தார்க்குவருத்தஞ்செய்யும். வேய் - குழலுக்குக் கருவியாகுபெயர். தீம் நிலா எனப்பிரித்து - (பிரியாதார்க்கு) இனிய நிலா வெனலுமாம். சித்திரைமாதமும் வைகாசிமாதமுமாகிய இளவேனிற்காலத்தே மன்மதனுக்குப் போர்த்தொழிலில் ஊக்கமுங் களிப்பும் மிகுதியாகஉண்டாதல்பற்றி, அவனுக்கு 'வேனிலான்' என்று பெயர். கொல்ல மெல்ல - கொன்று தின்ன எனினுமாம். நொந்த - நொந்தது என்பதன் விகாரம். 'மனமிடைந்ததுணர்ந்தும்' என்பதனை 'கொல்லும்' முதலிய முற்றுக்களோடுங் கூட்டலாம். 'ஆல்' ஆறும் - அசை; இரக்கமுமாம்.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்ற நான்குங் கூவிளச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும் வந்த பதினான்குசீராசிரியவிருத்தம். (கக)

உடையதோர் பெண்கொடி திருமுக மண்டல மொழுகுபெருங்கருணைக், கடலூத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள கடவு

ணெடும்பதியாம், புடைகொள்க ருங்கலை புனைபவள் வெண்கலை புனையுமோர் பெண்கொடியா,வடகலை தென்கலை பலகலையும்பொலி மதுரைவ ளம்பதியே.

(இ - ள்.) புடை கொள் - (எல்லாப்) பக்கங்களிலுஞ் சூழ்ந்துகொண்டுள்ள, கருங் கலை - கரிய கடலாகிய ஆடையை, புனைபவள் தரிப்பவளாகிய பூதேவி, வெள் கலை புனையும் ஓர் பெண் கொடி ஆ - வெள்ளைச்சேலையையுடுத்துள்ளவொரு பூங்கொடிபோலும் பெண்ணாகிய சரசுவதியாம்படி, வடகலை தென்கலை பல கலையும் பொலி-வடக்கில்வழங்கியமொழியாகிய ஸம்ஸ்கிருதமும் தெற்கில்வழங்கும்மொழியாகிய தமிழும் மற்றும் பலபாஷைகளும் விளங்குகிற, மதுரை வளம் பதி - பல வளங்களையுமுடைய மதுரையென்னுந் திருப்பதியானது, உடையது ஓர் பெண்கொடி-தாம் மனைவியாகவுடைத்தாயிருப்பதொரு கொடிபோலும் அம்பிகையினது,திரு முக மண்டலம்-அழகியசந்திரமண்டலம்போலும்முகத்திலுள்ள,ஒழுகு பெருங் கருணை கடல் உதவும்-வழிகிற பெரியதிருவருளாகிய கடலைச் சொரிகின்ற,சில கயல்-இரண்டுகெயல்மீன்போலுந் திருக்கண்கள், பொரும் - பாய்கின்ற, மொய்ம்பு உள - திருத்தோள்களையுடைய, கடவுள் - சோமசுந்தரக் கடவுளினது, நெடும் பதி ஆம் - பெரிய தலமாம்; (எ - று.)—இது, ஊர் என்னுந் துறை.

கடலாலுதவப்படுங் கயலன்றிக் கடலையுதவுங் கயல் என இக்கயல்களுக்கு விசேஷங்கூறினார்.பூமிமுழுதுங் கல்விமயமாம்படியென்று மூன்றாமடிக்குக் கருத்து; இனி, நிலவுலகமுழுவதும் புகழால் வெள்ளைப்படாம் போர்க்கும்படி யென்றுங் கருத்துக் கொள்ளலாம்.

இது - முதல் மூன்று ஐந்தாஞ் சீர்கள் கருவிளச்சீர்களும்,இரண்டு நான்காஞ் சீர்கள் கூவிளச்சீர்களும், ஆறாஞ்சீர் கூவிளங்காய்ச்சீருமாகிய அறுசீராசிரியச்சந்தவிருத்தம். (கoo)

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிந் தமர்ந்த மதரரிக் கண்ணியுநீயு மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி மடித்தலத் திருத்திமுத்தாடி,யுள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்தாங் குகந்தனி ரிருத்திரா னுலகமொருங்குவாய்த் தீருக் கொருதலைக் காம முற்றவா வென்கொலோ வுரையாய், வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம் வெஞ்சுடர்க்கடவுளுங் கிடைத்து வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட மீக்கொளத் தாக்கணங் கனையார், கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட காப்பென வேப்பலர் மிலைச்சுங் கைதவக் களிறே செய்தவக் கூடற் கண்ணுதற் கடவுண்மா மணியே.

(இ - ள்.) வெள்ளி வெள் நிலவு - வெள்ளிபோல வெண்மையான சந்திரகாந்தி, விரிந்த - பரவப்பெற்றுள்ள, கோடீரம் - சடைமுடியை, வெம் சுடர் கடவுளும் - உஷ்ணமான கிரணங்களையுடைய சூரியனும், கிடைத்து-(தனக்கு இடமாகப்) பெற்று, வீற்றிருந்து அனைய - (அம்முடியின்மேற்) சிறப்பாகப்பொருந்தியிருந்தாற்போன்ற, விடு சுடர் மகுடம் வீசுகின்ற ஒளியையுடைய கிரீடம், மீ கொள - முடியின்மேற் பொருந்த, தாக்கணங்கு அனையார் - இலக்குமியைப்போன்றவர்களான மகளிரது, கள்ளம் வாள் கருங் கண் ஏறு-வஞ்சனையையுடைய வாள்போன்ற கரிய கண்களின் பார்வையால் வந்த திருஷ்டிதோஷத்தை, காத்திட்ட - (தன்மேல்தாக்காதபடி) காவல் செய்த, காப்பு என - பாதுகாவல் போல,வேம்பு அலர்-வேப்பம்பூமாலையை, மிலைச்சும் - தரித்துள்ள, கைதவர் களிறே - பாண்டியர்களுள் ஆண்யானை

போலச் சிறந்த சுந்தரபாண்டியனானவனே! செய் தவம் கூடல் - (நீ எழுந்தருளியிருக்கும்படி) செய்த தவத்தையுடைய மதுரையில் எழுந்தருளிய, கண் நுதல் - கண்ணை நெற்றியிலுடைய, கடவுள் மா மணியே - தேவர்களுட் சிறந்த இரத்தினம் போன்றவனே! வள்ளை வாய் கிழித்து - வள்ளையிலைபோலுங்காதினது வாயைக்கிழித்து [காதையளாவியென்றபடி], குமிழ் மறிந்து - குமிழம்பூப்போன்ற மூக்கின்மேல் மீண்டு [மூக்கின் மேற்பக்கத்தையடுத்து என்றபடி], அமர்த்த - போர்செய்கின்ற, மதர் - களித்துச்செழித்த, அரி-சிவந்தஇரேகைகளையுடைய, கண்ணியும் - கண்களையுடையாளான உமாதேவியும், நீயும்—, மழலை நாறு அமுதம் - மழலைச்சொல்லாகிய தோன்றுகின்ற அமிருதத்தையுடைய, குமுதம் வாய் - செவ்வாம்பல்மலர் போலச் சிவந்த வாயையுடைய, குழவி - குழந்தையாகிய முருகக்கடவுளை, மடி தலத்து இருத்தி - மடியிடத்தே வைத்துக்கொண்டு, முத்து ஆடி - முத்தமிட்டு, உள்ளம் நெக்கு உருக - மனம் நெகிழ்ந்து கரையும்படி, உவந்து - மகிழ்ந்து, மோந்து - உச்சிமோந்து, அணைத்து - தழுவிக்கொண்டு, ஆங்கு - அவ்வாறே, உகந்தனிர் இருத்திர் - களித்திருக்கின்றீர்கள்; உலகம் ஒருங்கு வாய்த்தீருக்கு - உலகம் முழுவதையும் பெற்ற உங்களுக்கு, ஒரு தலை - ஒருகுழந்தையினிடத்தில், காமம் உற்ற ஆ - ஆசை பொருந்திய விதம், என்கொலோ - யாதோ? உரையாய் - சொல்வாயாக; (எ - று.)—ஆல் - அசை.

என்றது, உமையும் சிவனும் இடையே சுப்பிரமணியனும் பொருந்தியுள்ள ஸோமாஸ்கந்தமூர்த்தத்தை. வள்ளை, குமிழ் - உவமவாகுபெயர். அமர்த்த - அமர் என்னும் பெயரினடியாப் பிறந்த பெயரெச்சம். கண்ணி, இ - பெண்பால்விகுதி. கண்ணியும் நீயும் உகந்தனி ரிருத்திர் - முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாயிற்று. குழவி - இளமையையுடையது: குழ - பகுதி, இ - விகுதி. இரண்டாமடியில் - உலகமுழுவதையும் பெற்ற உங்களுக்குத் தலைவனுந் தலைவியுந் தனித்தனி ஒருவரையொருவர் அறியாது காமுற்று வருந்துங் காமம் உண்டான தென்னை யென்னும்பொருளும் சொற்போக்கினால் தோன்றும். கடவுளும், உம்மை - சந்திரன்மாத்திரமேயன்றி யென்னும் பொருளைத் தருதலால்,இறந்ததுதழுவியஎச்சம். தூக்கணங்கு - தீண்டிவருத்துந் தெய்வமாகிய மோகினியுமாம். ஏறு - முதனிலைத்தொழிற்பெயர். வேம்பு - கண்ணெச்சில்படாமற்காக்கும்.

இது - நாற்பத்தாறுங்கவிபோன்ற பதினாறுசீராசிரியவிருத்தம். (௧௦௧)

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னொடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரே ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ரூர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழும்பு கொலைமதக் களிற்றொடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்

காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியுமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவே லுழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்ம்முறை வாரிப் பெயும்பெய லல்ல
நெய்பா றயிர்முதற் பல்பெய றலைஇப்
பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட
லிருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னொடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
னின்பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாமென
மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
யினையநின் றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் றகவே
வாழியென் மனனு மணிநா வும்மே.

(இ - ள்.) கண் புலம் கதுவாது - கண்ணாகிய உறுப்புக்கு விஷயமாகாமல், செவி புலம் புக்கு - காதாகிய உறுப்பிலே புகுந்து, மனனிடை தங்கி - மனத்தினுள்ளே தங்கி, வாயிடை போந்து - வாயிலே வந்து, செம் நா முற்றத்து - சிவந்த நாக்காகிய முன்னிடத்தே, நல் நடம் புரியும் - நல்ல ஆட்டத்தைச் செய்கின்ற, பல வேறு வன்னத்து - பலவகைப்பட்ட வெவ்வேறு சந்தகுகளையுடைய, ஒரு பரி - ஒப்பற்ற வேதமாகிய குதிரையை, உகைத்தோய் - செலுத்தியவனே!—புள் கொடி எடுத்து - கருடப்பறவையாகிய கொடியை உயர்த்தி, ஒரு பூ கொடிதன்னொடு மண் கொடி தாழ்ந்த - புஷ்பக்கொடிபோல்வாளொரு திருமகளும் நிலமகளுந் தங்கிய, வான் கொடி - திருமாலாகிய பெரிய ரிஷபக்கொடியை, உயர்த்தோய் - உயர எடுத்தவனே!—ஓர் எழ் ஆழி சீர் பெற பூண்டு - ஒப்பற்ற ஏழுசமுத்திரங்களாற் சிறப்புப்பொருந்தச் சூழப்பட்டு, முடவு படத்த சுடிகையுள் கிடந்து - வளைந்த படத்தையுடைய ஆதிசேஷனுச்சியிற் பொருந்தி, நெடு நிலை பெயரா - மிகவும் நிலைத்துநிற்றலை விட்டுநீங்காத, நிலை - தன்மையையுடைய, தேர் - (பூமியாகிய) தேரை, ஊர்ந்தோய் - ஏறிநடத்தியவனே!—மீனவர் பெருமான் - மீனக்கொடியையுடையவர்களான பாண்டியர்களிற் சிறந்தவனாகிய உக்கிரபாண்டியனது, மானம் வேல் - பெருமையையுடைய வேலாயுதத்திற்கு, பிழைத்து - (இலக்காகாதபடி அஞ்சி) உய்ந்து, ஆங்கு - அம்மதுரையில், எழு பெருங்கடலும் - ஏழு பெரிய கடல்களும், ஒருவழி கிடந்த - ஓரிடத்தேவந்து சேர்ந்து கிடந்தன, என - என்று கருதி, விண்நின்று இறங்குபு - ஆகாயத்தினின்று இழிந்து, விரி திரை மேய்ந்த - (எழுகடல் என்னுங் குளத்திற்) பரவிய அலை

களையுடைய நீர்முதலியவற்றை மொண்டு பருகிய, கொண்மூ - மேகங்களை, குழும்பு கொலை மதம் களிற்றொடும் - திரளாகக்கூடிய கொல்லுந்தன்மையையுடைய மதயானைகளுடனே, வேற்றுமை தெரியாது - வேறுபாடறியாமல், உற்ற பாகு - வந்த பாகர்கள், மின்னு கொடி வளைத்து - மின்னற்கொடியாகிய கொடிகளினாற் சுற்றிக்கட்டி, ஆங்கு - அவ்விடத்தில், ஆற்றல் கொடு - (தம்)வலிமையினால், அலைத்தனர் - வருத்தி, பற்ற - பிடிக்க, (அம்மேகங்கள்), 'திரியும் எம்மை-சஞ்சரிக்கின்ற எங்களை, நீ சிறை படுக்க என-கடுங்காவலிற் பிடித்துவைக்க வென்று, பரிதி வேல் உழவன் - சூரியன்போன்ற வேலாயுதத்தில் வல்லவனாகிய பாண்டியன், பணித்தனன்கொல் - கட்டளையிட்டானோ?' என - என்று எண்ணி, மெய் விதிர்த்து - உடம்பு நடுக்கமுற்று, அலறுபு - அலறியொலித்து, வெரீஇ - அஞ்சி, பெயர்ந்து-விலகிச்சென்று, அம்ம - (யாவரும்) ஆச்சரியப்படும்படி, பெய் முறை - பெய்ய வேண்டும் முறைப்படியே, வாரி பெயும் - வாரிப் பெய்கின்ற, பெயல் அல்ல - நீர் மழைமாத்திரமேயல்ல, நெய் பால் தயிர் முதல் பல் பெயல் - நெய்யும் பாலும தயிரும் முதலிய பலவற்றின் மழைகளை, தலைஇ - பெய்தவிடுதலால், பெரு வளம் சுரந்த - மிக்க வளப்பம் மேன்மேலுஞ் செழித்த, விரி தமிழ் கூடல் - பரவிய தமிழ் வழங்கும் மதுரையிலே, இரு நிலம் மடந்தைக்கு ஒரு முடி கவித்து ஆங்கு - பெரிய பூமிதேவிக்கு ஒரு கிரீடத்தைக் கவித்தாற்போல, இந்திரன் அமைத்த - தேவேந்திரன் அமையச்செய்த, சுந்தர விமானத்து - அழகிய விமானத்திலே, அருள் சூல் கொண்ட-கருணையைக் கருக்கொண்ட, அரி - சிவந்த இரேகைகளையுடைய, இள - இளமையான, கயல் கண் - கயல்மீன்போலுங் கண்களையும், மின் நுழை மருங்குல் - மின்னல்போல நுட்பமான இடையையுமுடைய, பொன்னொடும் - பொன்போலரிய மீனாக்ஷியம்மையுடனே, பொலிந்தோய் - எழுந்தருளிவிளங்குகின்ற சோமசுந்தரக்கடவுளே!—துரியம் கடந்த - துரியாவஸ்தைக்கு அதீதமான, துவாதசாந்தம் பெரு வெளி வளாகத்து - துவாதசாந்தமென்னும் பெரிய வெளியிடத்திலே, ஒரு பெருங் கோயிலுள் - ஒரு பெரிய கோயிலிலே, முளை இன்று முளைத்த - முளையில்லாமல் முளைத்த, மூல லிங்கத்து - மூலலிங்க வடிவமாகவுள்ள, அளவையின் அளவா ஆனந்தம் மா கடல் - அளவுகருவியால்அளக்கப்படாத ஆனந்தம் நிரம்பிய பெரியகடல்போன்றவனே!—நின் பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாம் என - உனது பெருந்தன்மையை எடுத்துச்சொல்வோம் நாமென்று, வேதபுருடனும் - வேதபுருஷனும், விராட்புருடனுமே-விராட்புருஷனும் ஆகிய இவர்களே, மன் பெருஞ் சிறப்பின் - மிகவும்அதிகமான சிறப்பையுடைய, மதி நலம் - தமது நல்லறிவில், கொளின் - எண்ணினால், பெரிதும் பேதைமை பாலரே - மிகுதியும் அறியாமைத்தன்மையையுடையவரே யாவர்; இனைய நின் தன்மை - இப்படிப்பட்ட உனது பெருந்தன்மையை, எம் அனோரும் - எம்மைப்போன்ற எளியவர்களும், நினையவும் - தியானிக்கவும், சில சொல் புனையவும் - சிலசொற்களைத் தொடுத்துத் துதிக்கவும், புரிதலின் - (நீ)செய்தலினால், எம் பெரும- எமது தலைவனே! நின் தகவு - உனது அருட்குணம், வாழி - (கண்ணெச்சில்படாமற் காலதத்துவமுள்ளளவும்) வாழ்வதாக; என் மனனும் மணி நாவும் - (உன்னை எண்ணுதலுந் துதித்தலுஞ் செய்கின்ற) எனது மனமும் அழகிய நாக்கும், வாழி-வாழ்வனவாக; (எ-று.)—மற்று, மாதோ-அசைகள்.

வன்னம் - வர்ணம் என்னும் வடமொழியின் திரிபு. குதிரைக்கு ஏற்ப, வருணங் கூறினார். தாழ்ந்த - வணங்கிய எனவுமாம். தேர்க்கு ஏற்ப, ஆழியும் நிலையுங் கூறினார். 'நெடுநிலை பெயரா' என்றது, பூமி தான் சலித்தலில்லாமல் 'அசலா' என்று வழங்கப்படுதல்பற்றி. கிடந்தென - கிடந்தவென என்பதன் விகாரம்; கிடந்த - முற்று. மின்னு, உ - சாரியை.

பரிதி-பகையிருளையொழித்தலாலும், ஒளியாலும் உவமை. வேலுழவன்-வேலாகிய கலப்பையைக்கொண்டு பகைவருடம்பாகியநிலத்தை உழுது போராகியவிதையைவிதைத்து வெற்றியாகியபயிரைவிளைப்பவன். வெரீஇ-வெருவி. அம்ம-வியப்பிடைச்சொல். தலைஇ - சொரிந்து; இது இப்பொருளதாதலை "தலைப்பெயல் தலைஇ தண்ணறுங்கானத்து" என்னுந் திருமுருகாற்றுப்படையிலுங் காண்க. உக்கிரபாண்டியனால் மாமியாரின்பொருட்டுவரவழைக்கப்பட்டு எழுகடல்களும் ஒருங்கே ஒடுங்கியுள்ள எழுகடலென்னும் பொய்கையில் இறங்கி அக்கடல்களின் தயிர் பால் நெய் நீர் முதலிய வெழுபொருள்களையுங் குடிக்கின்ற மேகங்களோடு அதில் யானைகளும் வந்து இறங்கி நீர்பருக, யானைப்பாகர் இம்மேகங்களையும் யானைகளென்று மாறுபாடாக எண்ணி மயங்கி மின்னற்கொடிகளைக்கொண்டு கட்டிக் கொட்டகைக்குக் கொண்டுபோக, அம்மேகங்கள் 'முன்போல இப்பொழுதும் எம்மைப் பாண்டியன் சிறையிலிடும்படி ஏவினுனே' என்று எண்ணி அஞ்சி நடுங்கி அலறி இடித்து அங்கே நீர்முதலிய அனைத்தையும் மழைபொழிய, அதனாற் பல வளமுஞ்சுரந்த கூடலென்க. துரீயம்-நான்காம் அவஸ்தை; அதாவது - தியானத்தில்அசைவற்றிருத்தலாகிய அங்கசியயோகமென்கிற சமாதி. துவாதசாந்த மென்பது, பிரமரந்திரத்திற்குமேற் பன்னிரண்டுவிரற்கிடையிலுள்ளதோர் இடம்; மதுரையை உலகவடிவமாகிய விராட்புருஷனுக்குத் துவாதசாந்தஸ்தானமாக நூல்கள் கூறுகின்றன. 'முளையின்று முளைத்த'என்றது, சுயம்புமூர்த்த மாதலால். வேதபுருடன் - வேதத்திற்கு அதிதேவதை. நாவும்மே, மகரமெய் - விரித்தல். புருடனுமே, ஏ - உயர்வுசிறப்பு.

இது - முப்பத்தேழடியான் வந்த நேரிசையாசிரியப்பா. (௧0௨)

---

## மதுரைக்கலம்பகம் முற்றிற்று.

---

### நூலாசிரியர் சிறப்புப்பாயிரம்.

திருமக ளகலாப் பரமவை குந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசி
லேந்தெனும் பருவம் வந்துறு மளவு
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளா
லோதா துணர்ந்த போதனுய் முன்னர்க்
கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கலக்
குகன்றிரு முடிதனக் குசந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலை முதலாச் சால்பமை பிரபந்த
முந்நான் கியற்றித் தன்னுஞ் சமய
நிலையையுங் காட்டி யுலைவிலா தியாருந்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலு
மியற்றின னில்லறந் தியக்குறு மென்ன
விளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே.

# செய்யுண்முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அஞ்சேன்மட | ௫௫ | கடங்கால் | ௫௩ | நவ்வியங் | ௯௦ |
| அடுத்தங் | ௯௪ | கடமுடையு | ௯௪ | நீரோடு | ௯௨ |
| அடுத்ததோர் | ௪௬ | கன்னடமுங் | ௭௦ | பட்டிருக்க | ௨௧ |
| அடுத்தபத | ௮௩ | கண்முத்த | ௫௬ | பல்லாருயிர் | ௩௬ |
| அம்மகோ | ௨௯ | கரியகண் | ௭௪ | பாட்டுக்கு | ௮௧ |
| அம்மாநம் | ௬௬ | கரும்பொறி | ௫௮ | பாணரு | ௫௬ |
| அரங்குமை | ௫௧ | கருவிட்ட | ௮௫ | பாமிக்குப் | ௯௪ |
| அருநாம | ௪௯ | கரைபொரு | ௪௪ | புந்தித்தட | ௪ |
| அழகுற்ற | ௩௮ | காண்டகைய | ௯௬ | புயல்வண்ண | ௨௭ |
| அறந்தந்த | ௩௧ | குங்குமச் | ௭௫ | புழுகுநெய் | ௬௪ |
| ஆவமே | ௪௩ | குரும்பை | ௬௬ | பைந்தமிழ் | ௬௪ |
| ஆவாவென் | ௭௨ | குறுமுகை | ௬௫ | பொருளுன் | ௧௬ |
| ஆறுதலை | ௩௫ | குறுமுயலு | ௮௯ | போரானே | ௩௨ |
| இடங்கொண்ட | ௪௭ | கூடலம் | ௩௭ | மட்டறு | ௮௩ |
| இருநில | ௪௮ | கூடார்புரந் | ௫௨ | மணிகொண்ட | ௫ |
| இருவருக்குங் | ௨௮ | கேளார்புரஞ் | ௬௯ | மதுமலர் | ௬௩ |
| இன்னியந் | ௬௮ | கொங்குரை | ௭௭ | மாற்றொன்றி | ௧௮ |
| இன்னீ | ௭௫ | கொம்மைக்குவ | ௩௮ | மிக்கார் | ௯௬ |
| ஈரமதி | ௭௦ | சலராசி | ௯௭ | மீனேறுங் | ௧௭ |
| ஈரித்த | ௪௫ | சிலைசிலை | ௭௭ | முட்டாட் | ௮௭ |
| உடையதொர் | ௯௮ | சிலையோ | ௮௪ | மும்மைத்தமிழ் | ௫௦ |
| உண்ணமுத | ௨௩ | செல்விட்ட | ௮௦ | மேதகைய | ௯௫ |
| உண்பது | ௩௯ | தடமுண்டகங் | ௧௭ | மொழிக்கய | ௭௨ |
| உள்ளும்புற | ௫௧ | தமரநீர் | ௯௨ | வடகலை | ௮௦ |
| எய்யாது | ௩௪ | தருமுகத்து | ௭௯ | வரியளி | ௨௪ |
| ஏறிவே | ௩௦ | தழைத்திடுங் | ௩௭ | வரும்புண்ட | ௮௫ |
| என்போடு | ௮௬ | தனியிருப்பவ | ௨௨ | வலங்கொண்ட | ௨௦ |
| ஏடார் | ௬௮ | தானவெங்களி | ௫௪ | வள்ளைவாய் | ௯௯ |
| ஏமவெற் | ௮௨ | திருவைப் | ௭௬ | வாணிலாப் | ௬௨ |
| ஏனின்றி | ௬௦ | தேத்தந்த | ௬௦ | வாலவிர்த்த | ௭௩ |
| ஐயமணி | ௬௭ | தேன்வழங்கு | ௯௭ | வாழிமடக் | ௭௮ |
| ஒன்றேயுட | ௧௯ | தேனருத | ௬௧ | விற்கரும் | ௭௩ |
| கட்டுவார் | ௭௪ | தொடுத்தணி | ௪௦ | வீரம்வைத்த | ௫௩ |
| கட்புலங் | ௧௦௦ | நகையே | ௫௨ | | |
| கடங்கரை | ௪௧ | நம்பாகின | ௪௨ | | |

இவை, சென்னைத் திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள்கோவில் ௱௭௮ - ஆவது கிருகத்தில் (சென்னை ராயபேட்டை வெஸ்லி காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்) சே. கிருஷ்ணமாசாரியரிடத்திற் கிடைக்கும்.

## கம்பராமாயணம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆரணியகாண்டம் முழுவதும் உரையுடன் .. . . | ௫ | 0 |
| பாலகாண்டம் கையடைப்படலவுரை ... ... . .. | 0 | ௨ |
| ஷை மிதிலைக்காட்சிப்படலம்.குலமுறைகிளத்துபடலம்உரையுடன் | 0 | ௧௨ |
| ஷை எதிர்கொள்படலம்முதல் காண்டமுடிவுவரையில்உரையுடன் | ௧ | ௬ |
| அயோத்தியாகாண்டம் முதல்நான்குபடலம் உரையுடன் ... | ௨ | 0 |
| சுந்தரகாண்டம் முதலிரண்டுபடலம் உரையுடன் ... | ௧ | ௮ |
| ஷை உருக்காட்டுபடலம், சூளாமணிப்படலம் உரையுடன் . | ௧ | 0 |
| ஷை இறுதிநான்குபடலம் உரையுடன் .. | ௧ | ௪ |
| யுத்தகாண்டம் இரணியன்வதைப்படலம் உரையுடன் .. .. | 0 | ௮ |
| ஷை நாகபாசப்படலம் உரையுடன் .. ... ... ... | ௧ | ௮ |
| ஷை மீட்சிப்படலம் உரையுடன் ... ... ... ... | ௧ | ௮ |
| உத்தரகாண்டம் இராவணன்பிறப்புப்படலம்,வரையெடுத்தபடலம் இவற்றின் உரை .. ... . .. .. | 0 | ௬ |

## வில்லிபுத்தூரார் பாரதம்.

| | | |
|---|---|---|
| அருச்சுனன்தீர்த்தயாத்திரைச்சருக்கம் உரையுடன் ... . | 0 | ௬ |
| காண்டவதகனச்சருக்கம் உரையுடன் . ... .. | 0 | ௮ |
| இராயசூயச்சருக்கம் உரையுடன் . | ௧ | 0 |
| சூதுபோர்ச்சருக்கம் உரையுடன் .. .. | ௧ | ௪ |
| நிரைமீட்சிச்சருக்கம் உரையுடன் ... .. .. | 0 | ௧௨ |
| வீட்டுமபருவம் உரையுடன் .. ... ... | ௧ | 0 |
| பதினான்கு பதினைந்து பதினாறும் போர்ச்சருக்கங்கள் உரையுடன் | ௧ | 0 |
| பதினெட்டாம்போர்ச்சருக்கம் உரையுடன் .. | ௧ | 0 |

## பாகவதம்.

| | | |
|---|---|---|
| முதலிரண்டுகந்தம் உரையுடன் ... . ... .. | ௧ | 0 |

## கந்தபுராணம்.

| | | |
|---|---|---|
| திருவிளையாட்டுப்படலம் உரையுடன் ... ... ... ... | 0 | ௮ |
| தகரேறுபடலம்முதல் படையெழுபடலம்வரை உரையுடன் ... | 0 | ௮ |
| தாரகன்வதைப்படலம் உரையுடன் ... ... ... ... | 0 | ௧௨ |
| வழிநடைப்படலம் முதல் திருச்செந்திப்படலம்வரை உரையுடன் | 0 | ௮ |
| மார்க்கண்டேயப்படலம் உரையுடன் .. ... . . ... | ௧ | 0 |
| விந்தகிரிப்படலம்முதல் ஐந்துபடலங்கள் உரையுடன் .. | 0 | ௮ |
| இந்திரன்கரந்துறைபடலம், காவிரிநீங்குபடலம், இந்திரனருச்சனைப்படலம் உரையுடன் ... .. ... ... | 0 | ௧௨ |

## பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தம்.

| | | |
|---|---|---|
| திருவரங்கத்தந்தாதி உரையுடன் .. ... ... ... | 0 | ௰ |
| திருவரங்கக்கலம்பகம் உரையுடன் .. ... ... ... | 0 | ௮ |
| திருவரங்கத்துமாலை முற்பாதி உரையுடன் ... ... .. | 0 | ௬ |
| திருவேங்கடமாலை உரையுடன் ... .. | 0 | ௮ |
| திருவேங்கடத்தந்தாதி உரையுடன் .. .. . ... | 0 | ௰ |
| அழகரந்தாதி உரையுடன் ... ... ... ... | 0 | ௰ |

| | | |
|---|---|---|
| குருபரம்பராப்ரபாவம் குருபரம்பராவிவரணத்துடன் ... | ௨ | 0 |
| சடகோபரந்தாதி உரையுடன் ... | 0 | ௧0 |
| அழகர்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) ... | 0 | ௮ |
| மதுரைக்கலம்பகம் உரையுடன் (இரண்டாம்பதிப்பு) ... | 0 | ௮ |
| நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம் விரிவுரையுடன் ... | 0 | ௧௨ |
| முதுமொழிக்காஞ்சி உரைகளுடன் ... | 0 | ௮ |
| ஆழ்வார்கள்சரித்திரம் (இரண்டாம்பதிப்பு) ... | 0 | ௪ |
| பட்டர்வைபவம் ... | 0 | ௮ |
| அபயப்ரதாநஸாரம் ... | 0 | ௮ |
| தண்டியலங்காரம் பொருளணியியல் விசேடவுரையுடன் ... | 0 | ௪ |
| ஷை பொருளணியியல் விசேடவுரையுடன் ... | 0 | ௮ |
| சிலப்பதிகாரம் காடுகாண்காதை உரைகளுடன் ... | 0 | ௮ |
| சூளாமணி முதல்நான்குசருக்கத்துக்குத் தெளிவான உரை ... | 0 | ௧0 |
| ஷை அரசியற்சருக்கத்தில் கருடு - செய்யுளுக்குத் தெளிவான உரை | 0 | ௬ |
| துருவசரித்திரம் ... | 0 | ௨ |
| விசாரசருயர் வரலாறு ... | 0 | ௧ |
| பன்னூற்றிரட்டு கல்வியதிகாரம் உரையுடன் ... | 0 | ௮ |
| இராமாயணவெண்பா வனம்புகுகாண்டம் உரையுடன் ... | 0 | ௮ |
| ஷை போர்புரிகாண்டம் உரையுடன் ... | 0 | ௮ |
| ஷை முடிபுனைகாண்டம் உரையுடன் ... | 0 | ௮ |
| மணவாளமாமுனிநூற்றந்தாதியும், நூற்றெட்டுத்திருப்பதியகவலும் | 0 | ௨ |

---

| | | |
|---|---|---|
| மாறன்கோவை ... | 0 | ௬ |
| திருவேங்கடவுலா ... | 0 | ௩ |
| ஆண்டாள் பிள்ளைத்தமிழ் ... | 0 | ௩ |
| ஆண்டாள் சந்திரகலாமாலை ... | 0 | ௧ |
| அழகர் கிள்ளைவிடுதூது ... | 0 | ௧ |

*திருக்குறளிலும், நாலடியாரிலும், பாரதவெண்பாவிலும் சிற்சில பகுதி உரையுடன் கிடைக்கும்.*

---

| | | |
|---|---|---|
| நன்னூற்காண்டிகை ... | ௧ | 0 |
| நான்காவது ஐந்தாவது பாரம் ரீடர் ... | 0 | ௬ |
| ஷை உரை ... | 0 | ௪ |
| மெட்ரிக்யுலேஷன் தமிழ்ப்பாடபுத்தகவுரை ... | 0 | ௧0 |
| யப்-ஏ, தமிழ்ப்பாடபுத்தகம் உரையுடன் | | |
| பி-ஏ, தமிழ்ப்பாடபுத்தகம் உரையுடன் | | |

---

| | | |
|---|---|---|
| கம்பராமாயண வசனம். புதியபதிப்பு. 100-விசித்திரப்படங்களுடன் ஏழுகாண்டமும். ... | ௪ | 0 |
| ஷை உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டது ... | ௬ | 0 |
| தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிருதிருமுறைத்திரட்டு ... | 0 | ௮ |
| நீதிநூற்கோத்து ... | 0 | ௬ |
| சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கோத்து ... | 0 | ௩ |

---